
# கலாசுரபி

## KALASURABI

தூண்டல் - 1 துலங்கல் - 10

2010

10 வது ஆண்டுச் சிறப்பிதழ்




## JAFFNA NATIONAL COLLEGE OF EDUCATION

# கலாசுரபி

தூண்டல் - 01

துலங்கல் - 10

சிந்தனை சொல் செயல்

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**

**கோப்பாய் - யாழ்ப்பாணம்.**

2010

# சஞ்சிகை விபர அட்டவணை


| | | |
|---|---|---|
| சஞ்சிகை | : | கலாசுரபி |
| வெளியீடு | : | மலர்க்குழு<br>யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி |
| ஆலோசனை | : | திரு. S. K. யோகநாதன் (பீடாதிபதி) |
| பதிப்பு | : | 2010 தூண்டில் 01 துலங்கல் 10 |
| பக்க அளவு | : | A4 |
| பக்கம் | : | xii + 160 |
| எண்ணிக்கை | : | 900 |
| கடதாசி | : | 70 GSM பாங் |
| அச்சுப்பதிப்பு | : | குரு பிறிண்டேர்ஸ், 39/2, ஆடியபாத வீதி, திருநெல்வேலி. |
| முகவரி | : | யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய். |

| | | |
|---|---|---|
| Name | : | Kalasurabi |
| Published by | : | Magazine Conmmittee<br>Jaffna, National College of Education. |
| Adviser | : | Mr. S.K. Yoganathan (President) |
| Edition | : | 2010 Vol - 01 Publi - 10 |
| Size | : | A4 |
| No., Pages | : | xii + 160 |
| No., Copies | : | 900 |
| Printers | : | Guru Printers, 32/9, Adiyapatha Road, Thirunelvely. |
| Address | : | Jaffna Nationals College of Education, Kopay.<br>www. jncoe.net |


**முகப்பு அட்டை**

நல்லாசிரியர்களை உருவாக்கும் எமது கல்லூரியின் 10 வது ஆண்டு நிறைவிற்காக கல்லூரி முன்வாசலில் சித்திரத்துறை முகிழ் நிலை ஆசிரியர் திரு. S. சோபனராஜ் வடித்த "நல்லாசிரியர் சிலை" முகப்பு அட்டையை அலங்கரிக் கின்றது. அத்துடன் நல்லாசிரியர் சிலை வடித்த சிற்பி, கல்லூரி பீடாதிபதி S.K. யோகநாதன், ஆலோசனைச் சபை சிரேஸ்ட உறுப்பினர் லயன். வை. தியாகராஜா, முகிழ்நிலை ஆசிரியர்களுடன் கல்லூரியில் முதன் முதல் கட்டப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் வி. தர்மலிங்கம் ஞாபகார்த்த மண்ட கட்டடத் தொகுதியினையும் காணலாம்

# OUR PRESIDENT



**Mr. S. K. YOKANATHAN**

B. A. (Hon), Dip. in. Edu., M. A. in. Teacher Education
Cert. in Professional English (Malaysia)

# கலாசுரபியின் உள்ளே....


- Blessing Message from the Chief Commissioner V
- யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் உயர்திரு. K. கணேஸ் அவர்களின் வாழ்த்துச் செய்தி VI
- யாழ். தே. க. கல்லூரி பீடாதிபதி உயர் திரு. S. K. யோகநாதன் அவர்களின் வாழ்த்துச் செய்தி VII
- யாழ். தே. க. கல்லூரியின் 1 வது பீடாதிபதி கலாநிதி தி. கமலநாதன் அவர்களின் வாழ்த்துச் செய்தி VIII
- மலர்க்குழுவினரின் இதயத்திலிருந்து.... IX
- செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி X
- Teacher Educators XI
- Non Academic Staff XII
- யாழ். தே. க. கல்லூரியின் பீடாதிபதி உயர் திரு. S.K. யோகநாதன் அவர்களின் அறிக்கை 01
- தேசிய கல்வியற் கல்லூரிகள் ஊடாக நவீன ஆசிரியர் கல்விக் கலாச்சாரமும் – பிரயோகங்களும் 09
- அபிவிருத்தியும் கல்விச் செலவும் தொடர்புகளும் அறைகூவல்களும் 13
- கற்றற் குறைபாடுகளுடன் விளங்கும் மீத்திறன் மாணவர்கள் 22
- ஆற்றல்கள் பற்றிய ஓர் அறிமுகம் 25
- கல்வி நிர்வாக சேவையில் பால்நிலைசார் சமத்துவம் பற்றிய ஒரு சர்வதேச நோக்கு 30
- சமகாலத்தில் அனர்த்தங்களுக்குப் பின்னரான சமூக உள நெருக்கீட்டினை எதிர்கொள்ளல் 35
- இலங்கையில் தமிழ் மொழ மல ஆசிரியர் கல்லூரிகளில் குடாநாட்டு ஆசிரியர் கல்லூரிகள் 40
- யாழ்ப்பாணம் தேசிய கல்வியற்கல்லூரியின்தோற்றமும் வளர்ச்சியும் – அனுபவப்பகிர்வு 48
- Action Research: A Guide to Process and Procedure 52
- எமது கல்லூரி பீடாதிபதி : உயர்திரு S. K. யோகநாதன் 61
- பெண்களுக்கான கல்வியும் பொருளாதார வளர்ச்சியும் 64
- அன்றாட வாழ்வில் கணிதம் 67
- எழுந்திடுங்கள் சாதனை படைக்க 68
- ஆசிரியர்கள் பேசும் போது........ 69
- தமிழ் இலக்கியங்களிலே புதுக்கவிதைகளின் வளர்ச்சியும் சமூக பண்பாட்டுத் தாக்கமும் 70
- முதுசொம் 72
- நாட்டிய சாஸ்திரம் கூறும் ரஸக் கோட்பாடு 81
- நாடகத்தின் சமூக முக்கியத்துவம் 83
- சங்கீதத்தின் பெருமையும் பயனும் 85
- The Good Teacher 86
- மகிழ்ச்சிகரமான கற்றலும் பிள்ளை நேயப் பாடசாலையும். 87
- Global Warming 90
- விஞ்ஞானக் கற்றலில் கட்டுருவாக்க வாதம். 91
- Time Management 96
- மனப்பாங்குகளை விருத்தி செய்வதனூடாக நன்னடத்தைப் பண்புகளை உருவாக்குதல் 97
- விழிப்புணர்வு 102

- நாடகமும் அரங்கியலும் ஆசிரியர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் 103
- "டெங்கே" அடங்கு! 104
- கட்டுருவாக்கவாதம் கற்பித்தல் கற்றல் பிரயோகங்கள் 105
- அரங்கின் அழகியல் 110
- தென்மகாணமும் திராவிடக் கலாசார மரபுகளும் 111
- இலங்கையில் நாட்டியக்கலை வளர்ச்சி 115
- நாம் இனிக்கலங்கிட மாட்டோம் 117
- மாற்று ஆற்றலுடையோரின் சவால்களும் சாதனைகளும் 118
- நிஜமாகிப்போன நிழல்கள் 121
- Stress 122
- Some Strategies to improve English 123
- நற்பணியாற்றிட விரைந்திடுவீர் 125
- தத்தெடுக்கப்பட்டோம் 126
- கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் இடையில் காணப்படும் தொடர்புகளும் காரணிகளும் 128
- Conceptmap 130
- வகுப்பறை முகாமை, பொது முகாமை என்பவற்றில் நேரமுகாமைத்துவத்தின் அவசியம் 132
- ஸப்த ஜால வாயலின் சிறப்பம்சங்கள் 135
- நவீன கலைத்திட்ட வடிவமைப்பின் போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் பற்றிய நோக்கு 136
- வாழ்க்கைப் பயணத்தில் செபத்தின் முக்கியத்துவம் 142
- எல்லோருக்குமான கல்வியின் இலட்சியம் உட்படுத்தல் கல்வி 143
- இயற்கையை சுத்தமாகப் பேணுவோம் 147
- The Rabbit, the Weasel and the Cat 148
- இந்துமா மன்றம் 149
- கிறீஸ்தவ மன்றம் 150
- கலாச்சார மன்றம் 151
- English Union 152
- விஞ்ஞான மன்றம் 153
- IT Union 154
- உடற்கல்வி மன்றம் 155
- விசேட கல்வி மன்றம் 156
- Maths Union 157
- தமிழ் மன்றம் 158
- ஆரம்பக் கல்வி மன்றம் 159
- நுண்கலை மன்றம் 160
- விளம்பரங்கள் 161 - 170

දුරකථන /தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister } 2784832 Fax: 2784825

ලේකම් / செயலாளர் / Secretary } 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50 Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ........................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.

'இசுருபாயா'
பத்தரமுல்ல.

"Isurupaya"
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. } ජස/01/19/4/1/2(1)

දිනය / திகதி / Date } 02-05-2010



# Blessing Message from the Chief Commissioner

I am very pleased to express my heartiest blessings to greet Jaffna National College of Education on the eve of 10th Anniversary .

I am very glad to wish the release of the Annual Magazine, "Kalasurabi" which has been publishe with various useful contributions of scholars, teacher educators and prospective teachers.

This is also one of the great achievements of this College of Education. This Special Annual Magazine brings various information not only to the teachers but also to the students. The Annual Magazine, "kalasurabi - 2010" is well appreciated by the Ministry of Education.

I am very pleased to commend the valuable service which has been rendered by the President of Jaffna National College of Education, Mr. S. K .Yokanathan who has been leading the College very successfully.

I, as a matter of fact, wish everybody for the keen interest in releasing this Special Magazine, "kalasurabi - 2010" on the eve of the 10th Anniversary and congratulate Jaffna National College of Education to be successful forever like this in future.

Thank You Very Much

**Y.A.N.D. Yapa**
Chief Commissioner

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය / தொலைபேசி / Telephone: 021-222 2235

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 021-222 2355

E-mail: gajaffna@sltnet.lk

දුරකථන අංක / பொது தொலைபேசி / General Telephone: 021-222 2233, 021-222 2234

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

මගේ අංකය / எனது எண் / My No.: GA/JF/02

ඔබේ අංකය / உமது எண் / Your No.:

දිනය / திகதி / Date: 02-05-2010

---



## யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர்
## உயர்திரு. K. கணேஸ் அவர்களின்
## வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி ஒரு தசாப்தத்தை நிறைவு செய்து சிறந்த வளர்ச்சி கண்டுள்ளது. இவ் வளர்ச்சிக்கு தம்மையே அர்ப்பணித்துள்ள பீடாதிபதி, கல்வியியலாளர்கள், கல்விசார ஊழியர்களைப் பாராட்டுகின்றேன்.

இன்றைய சிறார்களே நாளைய உலகத்தை உருவாக்கப் போகிறவர்கள். இச்சிறார்களின் விருத்தியானது பொருத்தமான வகையில் மேம்பாடடைய உதவுவது பெரியவர்களாகிய எமது கடமையாகவும், பொறுப்பாகவுமுள்ளது. இவர்கள் பாடசாலைக்குச் செல்லத் தொடங்கிய காலம் முதல் வழிகாட்டல்களை வழங்கும் பொறுப்பு ஆசிரியர்களையே சார்ந்துள்ளது. படிப்பு என்ற அறிவுத் தேடலுக்கு அப்பால் அன்பு, அரவணைப்பு, ஆதரவு போன்ற உணர்ச்சித் தேவைகளை வழங்குவதிலும் ஆசிரியர்களின் பங்கு முக்கியமானது.

அனேகமான சிறார்கள் தங்கள் ஆசிரியர்கள் மீது பற்றும் அவர்களது சொல் - செயல் என்பவற்றின் மீது அதீதமான நம்பிக்கையும் வைக்கத் தொடங்குவார்கள். ஆசிரியர்களது கூற்றையே வேத வாக்காகவும், முடிந்த முடிவாகவும் எண்ணத் தலைப்படுவார்கள். இதிலிருந்து ஆசிரியர்கள் பிள்ளைகள் மீது செல்வாக்கு செலுத்துவதைப் புரிந்து கொள்ளலாம். இவ்வாறான புனிதமான ஆசிரியப்பணிக்கு இளைஞர்களைப் பயிற்றுவிக்கும் உயர்ந்த பொறுப்பு யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரிக்கு உண்டு. இப் பொறுப்பைக் கடந்த பத்து வருடங்களாக சிறப்பான முறையில் இக்கல்லூரி நிறைவேற்றி வருகின்றது. இக்கல்லூரியின் பீடாதிபதி S. K. யோகநாதன் அவர்கள் நாள் முழுவதும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றார். இக்கல்லூரி தொடர்ந்தும் பல சாதனைகளையும், புகழையும் பெற இறைவனை வேண்டுகின்றேன்.

**திரு. K. கணேஸ்**
அரச அதிபர்
மாவட்ட செயலகம்
யாழ்ப்பாணம்.



## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி
## உயர் திரு. S. K. யோகநாதன் அவர்களின்
## வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி கலாசுரபி மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பேருவகையடைகின்றேன்.

ஆரோக்கியமான ஆசிரியர் கல்விச் சூழலை எமது கல்லூரியில் அமைத்து சிறந்த நல்லாசிரியர்களை கடந்த பத்து வருடங்களாக உருவாக்கி வருகின்றோம். இதற்காக நாம் பட்ட கஷ்டங்கள், அர்ப்பணிப்புக்கள், தியாகங்கள் ஏராளம். பல்வேறு சவால்களை தன்னந்தனியே ஏற்று கல்லூரி சார்ந்த பல கருமங்களை எனக்கு ஆற்ற நேர்ந்தது. ஆனாலும் நான் சளைக்கவில்லை. எமது எதிர் காலச் சந்ததிகள் வளமாக வாழ எம்மிடமிருக்கும் ஒரே ஒரு சொத்து கல்வியே ஆகும். அதனை எம் பிள்ளைகளுக்கு வழங்க நான் இன்னும் பல தியாகங்கள் செய்யத் தயாராக இருக்கிறேன். அதற்கு அனைவரது ஒத்துழைப்பும் தேவையாக இருக்கின்றது.

ஆசிரியர்கள் தொடர்ச்சியாகத் தமது கற்றலைத் தொடர வேண்டும். அதற்கான வழிகாட்டல்கள், ஆலோசனைகள், வாண்மைத்துவ ஆக்கங்கள் இக்கலாசுரபி சஞ்சிகையில் உள்ளன. எல்லோருடைய ஆக்கத் திறன்களும் விருத்தியாகும் சந்தர்ப்பங்கள் இச் சஞ்சிகையினூடாகக் கல்லூரிச் சமூகத்தினருக்கு வழங்கியுள்ளோம். இன்றைய சமகாலத்தில் பிள்ளைகளின் நல்வாழ்வுக்கான வளர்ச்சியும், அபிவிருத்தியும் மேம்படுவதற்கு பக்கபலமாக இருப்பது ஆசிரியர்களது அன்பும் அரவணைப்பும் தான்.

பெற்றோர்களின் அன்பான பாதுகாப்புக்குள் இருந்த பிள்ளைகள் மாற்றுச்சூழலான பாடசாலைச் சூழலில் அடி எடுத்து வைக்கும்போது ஆசிரியர்களது ஆதரவு, அரவணைப்பை எதிர்பார்த்தே நடைபயில்வார்கள் ஆசிரியர்களது கற்பித்தல் செயற்பாடுகள் கரிசனையுடனும், மாணவர்களுக்குப் பொருத்தமாகவும் அமையும் போது மாணவர்களுக்கு கற்றலில் ஊக்கமும் ஈடுபாடும் உருவாகும். மாறாக இவை கிடைக்காவிடின் கற்றலில் வெறுப்பும், அசிரத்தையும் நிரந்தரமாக ஏற்படும். இவ்வகையிலேயே இவ்வருடம் எம் கலாசுரபி மலரின் ஆக்க எண்ணக்கருக்கள் எல்லாம் நல்லாசிரியரைப் பற்றியதாகவுள்ளது. இவ்வேளை மலரைச் சிறப்பாக வெளிவர ஆசிச் செய்திகளைத் தந்தவர்களுக்கும், மலர்க்குழுவினர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கலா சுரபி தொடர்ந்து வெளி வர இறை அருள் வேண்டி நிற்கின்றேன்.

**திரு.S.K. யோகநாதன்**
பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி.



# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 1 வது பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் பத்தாவது ஆண்டு நிறைவை ஒட்டி வெளிவரும் கலாசுரபி மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதை இட்டு பேருவகை அடைகின்றேன். இக்கல்லூரியின் தோற்றமும், வளர்ச்சியும் மிக விரைவானதாகவுள்ளது. இவ் விரைவான வளர்ச்சிக்கு தம்மை அர்ப்பணித்த அனைவரையும் இவ்வேளை நினைவு கூறுகின்றேன்.

சமகால - எதிர்கால சவால்களுக்கு எம் மாணவச் செல்வங்கள் முகம் கொடுக்கக்கூடிய தேர்ச்சிகளைப் பெற கல்வி முறையில் விரைவான அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இக்கல்வியே மனித வாழ்க்கைக்கும், தொழிலுக்கும் ஆயத்தக்கருவியாகவுமுள்ளது. மாணவர்களிடம் இருக்கின்ற எல்லாத்திறன்களையும், ஆற்றல்களையும் இசைந்து வளர்ச்சி பெறச் செய்வதும் கல்வியே ஆகும். இன்றைய அறிவுமைய - தகவல்மைய நவீன சமுதாயத்தில் கல்வியேபிரதானமுதன்மை வளமாகவும், செல்வமாகவும் விளங்குகின்றது.

இக் கல்வியை வளங்குவோராக ஆசிரியர்களே உள்ளனர். இவர்களை வதிவிட முன் சேவைப்பயில்வினூடாக உருவாக்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி கடந்த பத்து வருடங்களாக நல்லாசிரியர்களை உருவாக்கி வருகின்றது. கல்லூரியை ஆரம்பித்த காலத்திலிருந்து அதன் இன்றைய வளர்ச்சிவரை தன்னையே அர்ப்பணித்த தனது பொருள், செல்வாக்கு எல்லாவற்றையும் கல்லூரிக்கு வழங்கி வரும் கல்லூரி ஆலோசனைச்சபை உறுப்பினர் டாக்டர் லயன். வை. தியாகரஜா அவர்களை இவ்வேளை போற்றுகின்றேன். அத்துடன் என்னைத் தொடர்ந்து கல்லூரியை பாரமரித்து இன்றுவரை சிறப்பாக இயக்கிவரும் பீடாதிபதி S.K யோகநாதன் அவர்களையும் கல்வியியலாளர்களையும் கல்விசாரா ஊழியர்களையும் பாராட்டுகின்றேன்.

மேலும் பத்தாவது ஆண்டு கலாசுரபி சிறப்பு மலராக வெளிவருவதை இட்டு மகிழ்வதுடன் மலர்க் குழுவினர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி மேலும் பல கட்டங்களில் பல்வேறு வளர்ச்சிகளைக் காண வித்தக விநாயகனை வேண்டுகின்றேன்.


**கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்**
முதலாவது பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி.
(அவுஸ்ரேலியாவிலிருந்து)

## மலர்க்குழுவினரின் இதயத்திலிருந்து.................

ஒரு சஞ்சிகையை உருவாக்கப்பட்ட பிரசவ வேதனையையும், அதன் மலர்வில் எல்லோருடைய மகிழ்வையும் அனுபவித்தபடி; கலாசுரபி 10வது ஆண்டு மலரைச் சிறப்பாக உருவாக்க முழுமையான வழிகாட்டல்களையும், ஆலோசனைகளையும், ஆதரவுகளையும் வழங்கிய பீடாதிபதி உயர்திரு எஸ்.கே. யோகநாதன் அவர்களுக்கு எமது நன்றிகளை முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலாசுரபி 10வது மலருக்கு ஆசிச்செய்திகளையும், ஆய்வுக்கட்டுரைகளையும், சிறப்புக் கட்டுரைகளையும் ஏனைய ஆக்கங்களையும் தந்துதவிய அனைவருக்கும் எமது நன்றிகள்

குறிப்பாக முகிழ்நிலை ஆசிரியர்களை வழிப்படுத்தி ஆக்கங்களை உருவாக்க வழிகாட்டிய கல்வியாளர்கள் மற்றும் விளம்பரங்களைத் தந்த விளம்பரதாரர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் இவ்வேளை நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

மேலும் இம்மலர் சிறப்பாக வெளிவர படங்களை எடுத்துத்தந்துதவிய தரன் போட்டோ நிறுவனத்தினருக்கும் எம் நன்றிகள் உரித்தாகுக.

கட்டுரை ஆக்கங்களைத் திருத்தித் தந்த கல்வியாளர்கள், மலர்க்குழுவினருக்கும் பல்வேறு வகையில் உதவிகள், விளம்பரங்களை எடுத்துதவிய அன்பு நெஞ்சங்களுக்கும் நன்றிகள்

இவ் இதழ் சிறப்பாக வெளிவர உதவிய குரு பிறிண்டேஸ் நிறுவன முகாமையாளர், ஊழியர்கள் அனைவருக்கும் எம் இதயபூர்வமான நன்றிகள் உரித்தாகட்டும்.

இம் மலரின் ஆக்கங்களை அனைவரும் பயின்று பயனடைய வேண்டும். எமது கல்லூரியின் பெருமையை எல்லோரும் அறிய வேண்டும். அதனூடாக எமது பிரதேசத்தில் கல்வி விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி எம் எதிர்கால நற்பிரசைகளான இளம் சிறார்களுக்கு நல்ல கல்வியை வழங்க அனைவரும் இணைந்து உறுதியாகச் செயற்படுவோமாக.

**மலர்க்குழுவினர்.**

**பீடாதிபதி: S.K யோகநாதன்**

**கல்வியியலாளர்கள்:** திரு. பா. தனபாலன், திரு. M. பிரபாகரன்,
திருமதி. ஞா. கணேசநாதன், திருமதி. C. நாகேந்திரன்.

**முகிழ்நிலை ஆசிரியர்கள்:** செல்வி இ.கேதுசா, செல்வன் A. டினோஷன்.



## செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி

யாழ் குடா நாட்டிலுள்ள உயர்கல்வி ஸ்தாபனங்களில் முதன்மை நிலையில் ஆசிரியர்களை உருவாக்கும் யாழ் தேசிய கல்வியற் கல்லூரி தனித்துவமானது. கடந்த பத்தாண்டுகளாக நல்லாசிரியப் பெருமக்களை உருவாக்கிய ஒப்பற்ற நிறுவனத்தின் "கலாசுரபி" சிறப்பு மலருக்கு ஆசி வழங்குவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன்.

கல்வித்துறையில் வியத்தகு சாதனைபடைத்து வரும் தேசிய கல்வியியற் கல்லூரி உருவாவதற்கு வித்திட்டவர்களைப் போற்றுகின்றேன். கல்லூரி அமைவதற்கு நிழல் கொடுத்த அமரர் வி. தர்மலிங்கம் (முன்னாள் பாரளுமன்ற உறுப்பினர்) குடும்பத்தினரின் பேருவகாரச் செயலை நீளநினைந்து வணங்குகின்றேன். கல்லூரி உயர்வு பெற உழைத்த முதலாவது பீடாதிபதி கலாநிதி. தி. கமலநாதன் அவர்களின் அர்ப்பணிப்பான சேவையை நன்றியோடு வாழ்த்துகின்றேன். இன்று கல்வியற் கல்லூரியை உன்னதமான நிலையில் வளர்த்து வருகின்ற மதிப்பார்ந்த பீடாதிபதி உயர். திரு. S.K. யோகநாதன் அவர்களின் சேவையை வாழ்த்துகின்றேன். கல்வியியற் கல்லூரி ஆரம்பித்த நாள் முதல் அதன் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் உழைத்த கல்வியியலாளர்கள் அனைவரையும் வாழ்த்த நாம் கடமைப்பட்டுள்ளோம்.

கடமைஉணர்வு, கடவுள்பக்தி, கல்விமேன்மை, கருணைஉணர்வு எனக் கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவரை நேசிக்கும் பண்பாடு தனித்துவமானது. யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்து உருவாக்கப்பட்ட ஆசிரியர்களிடையே மகோன்னதமான பண்புகளைக் கூறுவது நோக்கத்தக்கதாகும். இத்தகைய வித்தியாபீடம் என்றும் சிறக்க எனது இதய பூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் சமர்ப்பித்து அமைகிறேன்.

**திரு. ஆறு. திருமுருகன்**
தலைவர் - ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.
தலைவர் - சிவபூமி அறக்கட்டளை.
அதிபர் - யா/ஸ்கந்தவரோயாக்கல்லூரி.

# Jaffna National College of Education

## Teacher Educators

| | | | |
|---|---|---|---|
| 1. | Mr. S. K. Yoganathan | (President) | B.A. (Hon), Dip in Ed, M.A. in Teacher Education, Cert in Professional English (Malaysia) |
| 2. | Dr. Ms. N. Nalliah | (V.P- Adm & Fin) | B.A (Hon 1st Class), PGDE (Merit), M.Philin Ed, Ph.d in Ed, Cert in Professional English (Malaysia) |
| 3. | Mrs. J. Thiyagalingam | (V.P Academic) | B.A, Dip in Ed, M.Phil in (Ed) |
| 4. | Mrs. S. Sivapatham | (V.P Con. Ed) | Sp. Trd (English), B.A, Dip in Ed (Merit), Dip in E.L.T, M.A.in EID (London) |
| 5. | Mr. S. R. Sathiyendrampillai | (Lecturer Coordinator) | B.A., B.Com, HNDA, Dip in Ed (Merit), Cret in Disaster mangement (India), MEd |
| 6. | Mr. B. Thanabalan | (Lecturer Coordinator) | B.A.(Cey),PGDE(Mrrit), M.Phil (Ed), Cret in vocational Guidance (Singopore) |
| 7. | Mr. K. Kamalanathan | (Lecturer Coordinator) | B.Sc (Sp in Maths), Dip in Ed, M.A. in Teacher Education |
| 8. | Mr. K. Baskaran | | B.Sc., Dip in Ed (Merit), M.Sc (Science Education) |
| 9. | Ms. K. Kandasamy | | Sp. Trd (Phy.Ed), B.A |
| 10. | Mrs. V. Narendra | | Dip in Music, Dip in Ed, Kalavithagar, M.A (Culture) |
| 11. | Mr. K. Ratneswaran | | Sp.Trd (Art) B.A, Teacher Grade (NCFA), Dip in Education. |
| 12. | Mrs. G. Ganeshanathan | (Dean) | B.A., Dip in Dance, PGDE (Merit) M.A in (Culture) MEd (Merit) |
| 13. | Mrs. C. Nagendran | | B.Sc. (2nd Class), Dip in Ed, M.Phil in (Ed) |
| 14. | Mr. T. Mohan | (Dean) | Sp. Trd (English), B.A (Hon)Eng, PGDE (Merit), M.A. in Teacher Education (International), Master Trainer (EFLU, India) |
| 15. | Mr. K. R. Kamalanathan | | Sp.(Trd) Primary, Drama Kalaviddage, B.A , Dipin Ed, M.A in (Culture) |
| 16. | Mr. M. Pirabakaran | | Sp. Trd (English), B.A, Dip in Ed, M.A. in Teacher Education (International) |
| 17. | Mr. K. Krishnayogan | | Sp. Trd. (Maths), B.Sc., Dip in Ed (Merit), MEd |
| 18. | Mrs. J. Uthayakumar | | Sp.Trd (Primary), B.A., Dip in Ed (Merit), M.A(Culture), MEd |
| 19. | Mrs. P. Velnithy | | Dip in Dance, 2nd Class, B.F.A Dance, (2nd uper) Dip in Ed, |
| 20. | Mrs. S. Kuganesan | | Dip in Music, Dip in Ed |
| 21. | Mr. S. Thivakaran | | B.Sc, Dip in Edu (Merit), MEd (Merit) |
| 22. | Mr. K. Thilaganathan | | B.A, (Hon), Dip in Ed, M.Phil (Drama and Theater) |
| 23. | Mr. S. Mugunthan | | B.A, Dip in English, Dip in Ed, MEd |
| 24. | Mr. A. Raveendran | | B.A, Dip in Ed, MEd |
| 25. | Mrs. B. Mariathasan | | Sp. Trd (Art), B.Com. (Hon), Dip in Ed (Merit), MEd |
| 26. | Mr. T. Thevathayalan | | Sp. Trd (English), B.A, Dip in Ed (Distinction) |
| 27. | Mr. T. Sivakumar | | National Dip. in. Teaching, B.A |
| 28. | Mrs. J. Tharmajeelan | | SP Trd (Phy Education)B.A. PGDE, M.A Devl (Merit) |
| 29. | Mr. A. Gugan | | Bsc, PGDE (Merit), MSC |
| 30. | Mr. T. Thavanesan | | Bsc (Hons),PGDE (Merit) |
| 31. | Mrs. G. Vinayagamoorthy | | Dip in Teaching, B.A PGDE, MEd (Merit) |
| 32. | Mrs. S. Thayaparan | | Dip in Dance(1st Class), BFA(2nd upper) PGDE |
| 33. | Mr. N .Gnanavel | | Na Dip in Teacher B.A PGDE (Merit), MEd. |
| 34. | Mr. B. Balaganesan | | B.A, M.A (Tamil Distinction), Dip in Ed |
| 35. | Mrs. Antony Thavachelvem | | B.A(Hon), PGDE (Merit), MEd. |
| 36. | Mr. K. Tharmarajah | | SP Trt Tamil, B.A, PGDE, MEd, M.A Tamil (Distinction) |
| 37. | Mr. M. Soosaithasan | | B.A (Hon), PGDE (Merit) MEd. |
| 38. | Ms. I. Selvanayagam | | Sp. Trd (Pri), B. A(Hon), Dip in Ed(Merit), MEd., Dip in sp Ed. |
| 39. | Mr. P. Sathiyanathan | | B.A (Hon), PGDE, MA in Teacher Ed. |
| 40. | Mr. V. Nanthakumar | | B.Sc, PGDE |
| 41. | Mr. C. Kularathan | | B.A (English), Dip in Eng, PGDE, MEd. Master. Trainer EFLU (India) |

# Jaffna National College of Education

## Non Academic Staff

Mr. S. Sivanathan. B.B.A(Hons)
(Registrar)
Mrs. S. Vaasavan. B.Sc (Spe), PGDE
Mrs. V. Joseph Gnananthan

Mrs. B. Mary Jesilda
Mr. S. Manivannan
Mr. A. Chandrasegaran
Mrs. S. Nishantha
Mrs. B. Kirubananda
Mrs. C. Saseethar
Mr. T. Sivabalan
Mr. S. Vishnukumar
Mrs. T. Mercy Logambigai
Mr. A. Ratnam
Mr. M. Yasinthan

Mr. P. Veerasingam
Mr. S. Thusyanthan
Mr. P. Yogalingam
Mr. S. Vijavarathan
Mr. A. Pushpamalar
Mr. S. Santhalingam
Mr. S. Jeyaram
Mr. S. Ravishankar
Mr. R. Nanthakumar
Mr. S. Selvavinayagam
Mr. T. Vajeesan
Mr. N. Nagarajah
Mr. K. Yoheswaran
Mr. S. Kajan

## Advisory Board

President (Chairman)
Chief Commissioner - NCOEE
Dr. Lion V. Thiyagarajah -MJF, J.P
(Senior Advisory Board Member)
Rev. Fr. Dr. Justin Gnanapiragasam (Vicar General)
Prof. A. Sanmugadas (University of Jaffna)
Dr. T. Kalamani (Senior Lecturer, University of Jaffna)
Mr. V. Selvaratnam (Adl. Provincial Director of Education)
Mr. C.A. Mohanras (D.S Kopay)
Mr. Aru. Thirumurugan (Principal, Skanthavarothaya College)

# Academic Staff




Non Academic Staff

# கல்லூரி கீதம்

**இராகம் : பிருந்தாவன சாரங்கா** **தாளம் : ஆதி**

**பல்லவி**

வாழ்க யாழ் கல்வியியற் கல்லூரி – என்றும்
சூழ்க நல் ஆசிரியர் கலைக் கல்வி பல்லூழி

**அனுபல்லவி**

ஆழ்கடலெனக் கல்வி அறிவு தரும் அன்னை
ஏழிசை பாடியே என்றும் துதிப்போம் – நாமே

**சரணம்**

தெய்வபக்தி தேசபக்தி தெய்வீக குருபக்தி
உய்யும் வழி காட்டிடவே உணர்ந்து வணங்கிடுவோம்
செய்வதெல்லாம் செம்மையுறச் செய்திடவே கற்றிடுவோம்
வையகத்தில் ஆசிரிய வளர் கல்வி நல்கும் அன்னை
(வாழ்க)

உளவியல் கல்வியியல் உயர்ந்த கற்பித்தல் முறை
வள நிறை விஞ்ஞானம் வரை சித்திரம் கணிதம்
அளவிலா நயம் நிறை ஆடலும் பாடலும்
விளையாடல் ஆரம்ப விதிக் கல்வி தரும் அன்னை
(வாழ்க)

பாங்கான கணனியும் பாலிக்கும் நூலகவியல்
ஆங்கிலம் தொழிற் கல்வி அழகுறத் தரும் அன்னை
நீங்காத பாசத்துடன் நிறைகல்வி நல்கும் மாதா
நாம் காணும் கலைத் தேவி நானிலத்தில் பல்லாண்டு
(வாழ்க)

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்
பழுத்த செந்தமிழின் பழச்சுவை ஊட்டுவான்
செழித்திடும் ஆசிரியச் சீர்கல்வி தருவான்
வழத்தியே வாழ்த்துவோம் வளமார் கல்லூரி அன்னை
(வாழ்க)

தாமரை நாயகன் உதித்தே எழுந்தான்
தண்கலை கல்வியில் தாமரை விரித்தான்
நாமகள் வந்துறையும் கோவிலும் சமைத்தான்
நலம்பெறக் கல்வியிற் கல்லூரி வளர்த்தான்
(வாழ்க)

ஆக்கம்: "கலாரத்னா" கலாபூஷணம் முத்தமிழ் கலாநிதி, "மஹா வித்துவான்"
பிரம்மஸ்ரீ மா.த.ந. வீரமணி ஐயர் எம்.ஏ.ஜே.பி.
யாழ்ப்பாணம்.

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் பீடாதிபதி உயர் திரு. S.K. யோகநாதன் அவர்களின் அறிக்கை

கல்விக்குத் தெய்வ உருவம் கொடுத்து; தெய்வமாகப் போற்றுகின்ற மரபு தமிழர் மரபு. அவ்வகையில் கல்வியை வழங்கும் ஆசிரியர்களை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கடந்த பத்து வருடங்களாக உருவாக்கி வருகின்றது. இவ்வேளையில் கல்லூரித்தாய் தனது பத்தாவது அகவையைக் கொண்டாடுவதையிட்டு பேருவகை அடைகின்றேன். உலகளாவிய ஆசிரியர் கல்விச் செல்நெறிகளின் அடிப்படையில் ஆசிரிய சேவைக்கு முன்னரான முன் சேவைப்பயில்வைப் பெற்றபின்பே ஆசிரியர்கள் வகுப்பறைக்குள் செல்லவேண்டும். இதற்கான வழியை எமது பிரசேதத்தில் முதல் முதலாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 02.05.2000 ஆம் ஆண்டிலிருந்து ஆற்றி வருகின்றது.

நீண்ட தொரு ஆசிரியர் கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட எமது யாழ்ப்பாண மண்ணில் கல்வியியல் கல்லூரி தொடக்கப்பட்டமை ஆக்கபூர்வமான செயற்பாடேஆகும். இவ்வேளை இக்கல்லூரியை ஆரம்பிக்கவும், வளர்ச்சியடையச் செய்யவும் தம்மை அர்ப்பணித்தவர்களின் சேவைகளை நினைவு கூறுகின்றேன். போற்றுகின்றேன். பல சவால்கள், தடைகள், நாட்டுப் பிரச்சினைகளுக்கு மத்தியில் இன்றைய வளர்ச்சியைக் கண்டுள்ள எமது கல்லூரியின் முதலாவது பீடாதிபதி கலாநிதி தி. கமலநாதன் அவர்களையும் இவ்வேளை நினைவு கூறுகின் றேன்.

எமது சமூகத்தின் இருப்பிற்கும், எதிர்கால நல் வாழ்வுக்கும் முழு நிறைவான கல்வி இன்றியமையாதது ஏனெனில் கல்வியினால் உருவாக்கப்படும் மனித வளமே ஒரு சமூதாயத்தின் பெறுமதி மிக்க வளமாகும். இக் கல்வியை வழங்கும் மிகப்பெரிய பொறுப்பு பாடசாலைகளினூடாக ஆசிரிய சமூகத்திடமே உள்ளது. இவ் ஆசிரியர்களை உரிய முறையில் பயிற்றுவித்து வழங்கும் பொறுப்பு எம்மிடம் வழங்கப்பட்டுள்ளது. கல்விப்பிரச்சினைகளையும் தீர்வுகளையும், தேவைகளையும் இனம் கண்டு கொள்ளவும் அதன் மூலம் மாணவர்களும், சமூகமும் கல்வியின் இலக்குகளை அடைவதற்குக் கடுமையான வதிவிடப்பயிற்சி பெற்ற ஆசிரியர் களினாலேயே காத்திரமான பங்களிப்பை ஏற்படுத்தமுடியும். இதற்கு எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி எனைய எல்லாக் கல்லூரிக ளுக்கும் முன் மாதிரியாகச் செயலாற்றி வருவதாக இவ்வருடம் எமது கல்லூரிக்கு விஜயம் செய்த கல்வியமைச்சின் செயலாளர், தேசிய கல்விநிறுவக பணிப்பாளர்கள், அதிகாரிகள் கூறி எமது சேவையைக் கணிப்பிட்டுப் போற்றினார்கள். கடந்த 5 வருடங்களாக இருபத்தி நான்கு மணி நேரமும் இக்கல்லூரிககுள்ளேயே இருந்து பல சவால் களுக்கு மத்தியில் எனது சேவையைத் தொடர்ந்து ஆற்றிவருகின்றேன்.

2005 ஆம் ஆண்டு நாட்டுப்பிரச்சினை - யுத்தத்தாக்கங்களால் கல்லூரி மூடப்பட வேண்டிய நிலையில் கடுமையாக உழைத்து ஏனையவர்கள், சமூகத்தவர்களின் ஆதரவுடன் கல்லூரியைத் தொடர்ச்சியாக இயங்கவைத்தமை,

வெளிமாவட்ட மாணவர்களை நானே பல நெருக்குவாரங்களுக்கு மத்தியில் சென்று திருகோணமலையிலிருந்து கப்பல் மூலம் கல்லூரிக்கு அழைத்து வந்து இறுதிப்பரீட்சை எடுக்க வைத்தமை,

யுத்த நெருக்கடிகளால் மாணவர்களுக்கான உணவு நெருக்கடி மிக மோசமான நிலையை அடைந்தது. அதனை அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் சமாளித்தமை, மாணவர்களுக்கான அதிஉயர் நலன்புரிச்சேவைகளை வழங்குகின்றமை,

கல்வியாளர்களதும், கல்விசார ஊழியர்களினதும் தொழில் சார் அபிவிருத்திகளை மேற்கொண்டமை,

சமூகம் - பாடசாலை சார்ந்த கல்வியியல் செயற்திட்டங்களையும் ஆய்வுகளையும் முகிழ் நிலை ஆசிரியர்களினூடாக நடாத்தி வருகின்றமை,

எமது கல்லூரியிலிருந்து மாற்றப்பட்ட நாடகமும் அரங்கியலும் பாட நெறியை மீண்டும் எமது கல்லூரிக்கே கொண்டு வந்தமை.

இவ்வருடம் எமது கல்லூரியில் அதிக அளவாக 296 1ஆம் வருட மாணவர்களை பல சவால்களுக்கு மத்தியில் உள்வாங்கி எம் பிரதேச இளைஞர்களின் எதிர்கால தொழில் வாழ்க்கைக்கு வழிகாட்டியமை,

என பல விடயங்களை நிறைந்த சாவல்க ளுக்கு மத்தியில் வெற்றி கொண்டேன். இதற்கு உதவியவர்களுக்கும் இந் நேரத்தில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சம காலக் கல்வியில் பல மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்ற போதிலும், கல்விக் கோலமா னது பாடவிடயங்களை மனனம் செய்து பரீட்சை வினாத்தாள்களுக்குப் பொறிமுறை ரீதியில் விடையளிப்பதற்கு மாணவரைப் பயிற்றுவிக்கும் ஒன்றாகவே அமைந்தது. நாட்டின் சமூக, பொருளாதாரத் தேவைகளுக்கு ஏற்றவாறு தமது அறிவைப்பிரயோகிக்கின்ற ஆக்கத்திறன்களைக் கொண்ட நற்பிரசைகள் கல்வித் தொகுதியினூ டாக உருவாக்கப்படவில்லை எனக் கல்வியியல் ஆய்வாளர்களால் விமர்சனங்கள் முன் வைக்கப் படுகின்றன. இதிலிருந்து விலகி தேசத்தைக் கட்டியெழுப்பும் கைங்கரியத்திற்குக் கைகொடுக் கும் தேர்ச்சியுள்ள அர்ப்பணிப்பும், நேர்மையும் கொண்ட இளைஞர்களை உருவாக்க நாமனை வரும் அணிதிரள்வோமாக.

எமது பிள்ளைகள் பிறந்து வாழ வேண்டிய. தலை நிமிர வேண்டிய மண் இதுவாகும். அவர்களுக்கு வாழ வழிகாட்டி, வாழ்க்கைப் பாதையிலிருக்கும் தடைகளை அகற்றி ஏற்படுத்தும் அழகிய பாதை யூடாகவே எமது மாணவர்களை அழைத்துச் செல்லவேண்டி இருக்கின்றது. ஆசிரியர்கள் இப்பணியை ஆற்றியே தீரவேண்டும். ஏனெனில் எம்மை விட இன்னுமொரு தலைமுறையினர் எம் மண்ணைக் கட்டி எழுப்புவார்கள் என மனக்கோட்டை கட்டலாகாது. சமுதாயத்தை வளப்படுத்த உயிர்த்துடிப்பான ஆசிரிய செயற்பாடுகள் அவசியம். இதற்கு ஏற்ப புதிய ஆசிரியத் தலைமுறையினருக்குப் பின்வரும் மனப்பாங்கு களை ஏற்படுத்த வேண்டியிருக்கின்றது. அவை ஒழுக்கம், தியாகம், அர்ப்பணிப்பு, அன்பு, தீர்மானங்களை மேற்கொள்ளுதல், குழுவாக இயங்குதல், பரோபகாரம், கல்வியின் ஞானத்தை அடையும் அவா, சமூக நோக்கு, விழுமிய செயலற்றுகை என்பவையாகவுள்ளன. இவற்றைப் பெற்றுக் கொடுக்கும் இலட்சியக் கோவிலாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி தொடர்ந்தும் அர்ப்பண சேவையாற்றும்.

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆரம்பித்த காலத்திலிருந்து பயிற்சி பெற்று வெளியேறிய முகிழ்நிலை ஆசிரியர்கள் விபரம்**

| Course | 2000 | | 2001 | | 2002 | | 2003 | | 2004 | | 2005 | | 2006 | | 2007 | | 2008 | | 2009 | | 2010 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Subject | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M |
| Primary | 18 | 08 | 22 | 14 | 40 | 10 | 65 | 20 | 29 | 01 | 19 | 01 | 25 | - | 17 | 06 | 18 | 05 | 09 | 11 | 22 | 12 |
| Science | 18 | 08 | 13 | 16 | 26 | 08 | 25 | 12 | - | - | 15 | 02 | 08 | 03 | 04 | 02 | 08 | 01 | 09 | 03 | 13 | 01 |
| Maths | 03 | 03 | 13 | 20 | 09 | 30 | 14 | 23 | - | - | 14 | 05 | 12 | 05 | 06 | 04 | 07 | 02 | 06 | 01 | 11 | 08 |
| Art | 01 | - | - | 02 | 01 | 03 | 05 | 13 | 03 | 14 | 06 | 13 | 03 | 13 | 03 | 09 | 05 | 05 | 01 | 08 | 10 | 15 |
| Dance | 03 | - | 04 | 01 | 06 | - | 11 | 01 | 18 | 01 | 20 | - | 20 | - | 17 | - | 10 | 01 | 11 | - | 23 | - |
| Music | 05 | - | 09 | - | 13 | 01 | 30 | - | 19 | 01 | 18 | 02 | 18 | 02 | 20 | - | 11 | - | 11 | - | 27 | 01 |
| English | - | - | 04 | - | 03 | 05 | 10 | 04 | 24 | 08 | 18 | 06 | 20 | 02 | 09 | 01 | 17 | 03 | 15 | 02 | 39 | 03 |
| Libr. | - | - | 04 | 02 | 14 | - | 33 | 14 | 12 | 04 | 10 | 06 | 06 | 02 | 10 | 02 | 07 | - | - | - | - | - |
| Drama Thre | - | - | - | - | - | - | 25 | 05 | 15 | 06 | 11 | 09 | 15 | 04 | 12 | 05 | 05 | 05 | 05 | 05 | 12 | 04 |
| Spe. Educat | - | - | - | - | - | - | - | - | 02 | 13 | 06 | 14 | 08 | 10 | 03 | 05 | 09 | 10 | 11 | 06 | 14 | 05 |
| | 48 | 19 | 69 | 55 | 102 | 57 | 218 | 92 | 122 | 48 | 137 | 58 | 135 | 41 | 101 | 34 | - | - | - | - | - | - |
| Science -Ta | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 03 | 03 | 11 | 02 | 07 | 01 |
| Maths - Ta | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 07 | 03 | 06 | 09 | 06 | 12 |
| Hindusium | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 17 | 08 | 16 | 06 |
| Christianily | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 19 | 01 | 24 | 04 |
| Total | 67 | | 124 | | 169 | | 310 | | 170 | | 195 | | 176 | | 135 | | 145 | | 187 | | 296 | |

*02-05-2008* - கல்லூரி ஆரம்பித்து எட்டாவது வருடப் பூர்த்தியை முன்னிட்டு நல்லூர் கந்தசுவாமி கோவிலிலும், வித்தக விநாயகர் ஆலயத்திலும் விசேட பூசைகள் நடை பெற்றன. கிறீஸ்தவ நல்லாயன் ஆலயத்தில் நன்றிப் பூசை வழிபாடும் இடம் பெற்றது.

*31-05-2008* கல்லூரியின் 8 வது ஆண்டு நிறைவையொட்டி பேராசிரியர் அ. துரைராசா நினைவுப் பேருரை யாழ் பல்கலைக்கழக விவசாய பீட, விவசாய உயிரியல் துறை தலைவர் கலாநிதி கு.மிகுந்தன் அவர்களால் **"இனி ஒரு பசுமைப் புரட்சி செய்வோம்"** என்ற தலைப்பில் பேருரை ஆற்றப்பட்டது.

*04- 06-2008* கியூடெக் ஹரிதாஸ் நிறுவன இயக்குநர் அருட் தந்தை ஜெயகுமார் அவர்கள் மாணவர்களுக்கான ஒரு தொகுதி உணவுப் பொருட்களை வழங்கினார். *05-06-2008* - உலக சுகாதார தினம் கொண்டாடப்பட்டது.

*06-06-2008* முதலாம் வருட முகிழ் நிலை ஆசிரியர்களுக்கான முதற்கட்ட ஆசிரியர் பயிற்சி *26.05.2008* இருந்து *06.06.2008* வரை நடை பெற்றது.

*16-06-2008* - முத்தமிழ் கலாநிதி ந.வீரமணிஐயர் நினைவு பேருரையை யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலை நடனத் துறைத் தலைவர் திருமதி. சுகந்தி ஸ்ரீமுரளீதரன் அவர்களால் **"திருக்கோவில்களில் கலைகள்"** என்ற தலைப்பில் பேருரை ஆற்றப்பட்டது.

*17- 06-2010* - கலாநிதி சொக்கன் நினைவுப் பேருரையை யாழ் பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் திரு. சி. சூரியகுமார் **"தரணி போற்றும் தமிழிசை"** என்ற தலைப்பில் பேருரை ஆற்றினார்.

*19-06-2008* பேராசிரியர் கைலாசபதி நினைவுப் பேருரையை யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்களால் **"காலம் தோறும் தமிழ்க் கவிதைகள்"** என்னும் தலைப்பில் பேருரை ஆற்றப்பட்டது.

*20-06-2008* பேராசிரியர் ப. சந்திரசேகரம் நினைவுப் பேருரையை யாழ் பல்கலைக்கழக கல்வியியற் துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜெ.இராசநாயகம் அவர்களால் **"ஆரம்பக்கல்வியும் எதிர்கால நோக்கும்"** என்ற தலைப்பில் நினைவுப் பேருரை ஆற்றப்பட்டது.

*23-06-2008* பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரையை யாழ் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி திரு. K.தேவராஜா அவர்களால் **"பாடசாலைத் தலைமைத்துவம்"** என்ற தலைப்பில் நினைவுப் பேருரை ஆற்றப்பட்டது.

*25-06-2008* - ஆங்கில மொழி தினம் இடம் பெற்றது. பிரதம விருந்திராக கியூடெக் - ஹிதாஸ் நிறுவன இயக்குநர் அருட்தந்தை ஜெயகுமார் அடிகளார் கலந்து சிறப்பித்தார்.

*26-06-2008* கல்லூரி வளாகத்திலுள்ள விவசாயம் செய்யக்கூடிய நிலப்பகுதி முகிழ் நிலை ஆசிரியர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டு பசுமைப்புரட்சி விவசாய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

*02-07-2008* - முகிழ் நிலை ஆசிரியர் T.ஆயவன் எழுதிய *Introdudion of Library Science* என்ற நூல் வெளியிடப்பட்டது.

*07-07-2008* - குழந்தை அரங்க சிறுவர் நாடக குதூகலிப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி த. கலாமணி கலந்து சிறப்பித்தார்.

*12-07-2008* - இந்து மாமன்றத்தினரால் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு **"அண்ணைக்கோர் ஆராதனை"** என்ற அஞ்சலி நிகழ்வு இடம் பெற்றது.

*12-07-2008* - கல்லூரியின் கலாசுரபி சஞ்சிகை வெளியிடப்பட்டது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஆ.சிவசுவாமி அவர்கள் பங்குபற்றினார்.

*29-07-2008* - முத்தமிழ் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திரு. வ.செல்லராஜா அவர்கள் பங்குபற்றினார்.

*13-09-2008* - கல்லூரி முன் வளாகத்தில் போர் வீரன் சிலை என்னால் திறந்துவைக்கப் பட்டது. இதனை அமைக்க செல்வி த. உதயராஜி அனுசரனை வழங்க, சித்திரத்துரை திரு. S. கிருபாகரன் வடிவமைத்தார்.

*19-09-2008* - எமது கல்லூரி உடற்கல்வித் துறைக்கு இணைக்கப்பட்ட விரிவுரையாளராக திருமதி ஜானகி தர்மஜீலன் இணைந்து கொண் டார்.

*27-09-2008* **"வித்தக விநாயகர் பாமாலை"** இறுவட்டு, நூல் வெளியிடப்பட்டது. முகிழ் நிலை ஆசிரியர் செந்தூரனால் வரையப்பட்ட சுவரோவியம் என்னால் திறந்து வைக்கப் பட்டது.

*06-08-2010* - ஆசிரியர் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பிரதம விருந்தினராக சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அ.பிரேம்சங்கர் தம்பதியினர் கலந்து சிறப்பித்தனர்.

*24-10-2008* - படி ஆசிரியர் தின சிறப்புச் சஞ்சிகை வெளியிடப்பட்டது.

*01-11-2008* - சித்திரத்துரை முகிழ் நிலை ஆசிரியர்கள் த.ஜனனி, து.சர்மிலா, யோ. ஜீவிதா, ஆகியோரால் **"புதிய கணினி விகாரை ஓவியங்கள்"** என்ற தலைப்பிலான இறுவட்டு வெளியிடப் பட்டது.

*05-11-2008* நடனத்துறை முகிழ் நிலை ஆசிரியை நி.மதிவதனி **"ஈழத்து நாட்டியக் கலைஞர்களின் புலர்வு"** என்ற நூலையும், இசைத்துறை முகிழ் நிலை ஆசிரியை த. செல்வதுளசி இசையாசிரியர் செல்வி. சந்திரிகா கணேஸ்பரனின் **"இசைப்பணி"** என்னும் நூல்களை வெளியிட்டனர்.

*10-11-2008* - கல்லூரி முகிழ் நிலை ஆசிரியர்கள், கல்வியியலாளர் கல்வி சாரா ஊழியர்கள் யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்ததானம் செய்தனர்.

*12-11-2008* - வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தினால் *HIV/AID* தொடர்பாக செயலமர்வு முகிழ் நிலை ஆசிரியர்களுக்கு நடைபெற்றது.

*13-11-2008* ஒளி விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பிரதம விருந்தினராக யாழ் மறை மாவட்ட கத்தோலிக்க மன்றத்தின் இயக்குநர் *S.A.*ஜோர்ஜ் அடிகளார் அவர்கள் கலந்து கொண்டார்.

*14-11-2008* - கல்லூரியில் சிறந்த ஒழுக்க விழுமியமுடைய நன் முகிழ் நிலை ஆசிரியர் களுக்கான விருது வழங்கப்பட்டது. ஆரம்பக் கல்வி *S.* உமாதரன், ஆங்கிலம் *B.* சிந்துஜா, உள்ளகப் பயில்வில் *K.* கலைமாரன் ஆகியோர் இவ் விருதினைப் பெற்றனர். இந்துமாமன்றத் தினரால் **"வித்தகர்"** என்ற நூல் வெளியிடப் பட்டது.

*15-11-2008* - இரண்டாம் வருட முகிழ் நிலை ஆசிரியர்களுக்கான பிரிவுபசார வைபவம் நடைபெற்றது. பிரதம விருந்தினராக வடமாகாண பிரதி தபால் அதிபர் திரு. வீ. குமரகுரு அவர்கள் கலந்து சிறப்பிததார்.

*24-11-2008* - நிஷாப்புயல் கடும் மழை பெய்தது. கல்லூரி மரங்கள் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்பட்டது.

*10-12-2010* - ஆசிரிய கல்வியியலாளர் சேவை *III* இற்கு திரு. *S.R.* சத்தியேந்திரம் பிள்ளை (தொழில் சார்கல்வி) திரு. *A.* ரவீந்திரன் (தொழில் சார் கல்வி) திரு. ரீ. தவநேசன் (கணிதம்), திரு. ஏ.குகன் (கணிதம்) திரு. கே. ஹரிகரசக்தி (தமிழ்) ஆகியோர் எமது கல்லூரியில் நியமனம் பெற்றனர்.

*01-01-2009* கல்லூரியின் உபபீடாதிபதி களாக செல்வி நி.நல்லையா (நிதி நிர்வாகம்) திருமதி *J.* தியாகலிங்கம் (கல்வியும் தர மேம்பா டும்) திருமதி *S.* சிவபாதம் (தொடருறு) கடமைகளைப் பெறுப்பேற்றனர்.

*06.-01-2009* - கல்லூரியின் விரிவுரை இணைப்பாளர்களாக திரு. *S.R.* சத்தியேந்திரம் பிள்ளை (நிதி நிர்வாகம்) திரு. பா. தனபாலன்

(கல்வி. தர மேம்பாடு) திரு. *K.* கமலநாதன் (தொடருறு) கடமைகளைப் பெறுப்பேற்றுக் கொண்டனர்.

*10-01-2009* - முகிழ் நிலை ஆசிரியர்களின் உணவு மற்றும் கல்வி அபிவிருத்தி ஒழுக்கம் பற்றி பெற்றார்களுடனான கலந்துரையாடல் மேற் கொள்ளப்பட்டது.

*14-01-2009* - கல்லூரியில் அமைத்துள்ள வித்தக விநாயகர் ஆலயத்தில் பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றல்.

*06-02-2009* - திருமதி வி. ஞானச்செல்வி அவர்கள் அட்டாளைச்சேனை கல்வியியற் கல்லூரியில் இருந்து மாற்றலாகி கல்வியியலாளார் சேவை III இல் விரிவுரையாளராக இணைத்து கொண்டார்.

*12-02-2009* - அமைச்சர் கௌரவ டக்லஸ் தேவானந்தா அவர்களால் மாணவர் உதவுத் தொகை, விசேடகல்வி உபகரனங்கள் வழங்கப் பட்டது.

*23-02-2009* - சிவராத்திரி விழா கல்லூரி வித்தக விநாயகர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

*09-03-2009* - சர்வதேச மகளிர் தின விழா நடைபெற்றது. பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக விவசாயபீட பீடாதிபதி திருமதி. சி. சிவச்சந்திரன் கலந்து சிறப்பித்தார்.

*10-03-2009* - கல்லூரியின் இசைத்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் திருமதி நரேந்திரா அவர்களின் தயாரிப்பில் **"பட்டாம் பூச்சி"** ஒளி - ஒலி இறுவட்டு வெளியீட்டு விழா நடைபெற்றது. பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக முன்னால் துணைவேரந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்களும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ப. விக்கேஸ்வரன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

*27-03-2009* - உலக நாடக விழா நாடகத் துறை கல்வியியளாலர் திரு. க.இ. கமலநாதன் நெறியாழ்கையில் கொண்டாடப்பட்டது. பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக் கழக கல்வியியற் துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி பங்கு கொண்டார்.

*30-03-2009* - இரண்டாம் வருட மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சை பரீட்சைத் திணைக்களத்தினால் ஆரம்பித்து நாடாத்தப் பட்டது.

*21-04-2009* - ஆசிரிய கல்வியியலாள் சேவை *III* இற்கு திரு. பா. தனபாலன் (தொழில்சார் கல்வி) திரு. *K.* பாஸ்கரன் (தொழில் சார் கல்வி) திருமதி *C.* நாகேந்திரன் (தொழில் சார் கல்வி) திருமதி. *M.E.B.* மரியதாசன் (தொழில் சார் கல்வி) திருமதி. வேல்நிதி (நடனம்) திரு. *K.* கிருஸ்ணயோகன் (ஆரம்ப கணிதம்) திருமதி *J.* உதயகுமார் (ஆரம்பக்கல்வி) திரு. *T.* மோகன் (ஆங்கிலம்) திரு. *M.* பிரபாகரன் (ஆங்கிலம்) திரு. *S.* முகுந்தன் (ஆங்கிலம்) திரு. K. திலகநாதன் (நாடகம்) ஆகியோர் எமது கல்லூரியில் நியமனம் பெற்றனர்.

*27.04.2008* திருமதி சுபாதினி தயாபரன் அவர்கள் இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை *III* இல் விரிவுரையாளராக இணைத்து கொண்டார்.

*30-04-2009* - பாரம்பரீய - சுதேச விளையாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. வைத்திய கலாநிதி லயன் வை. தியாகராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

*04-05-2009* - திரு. N. ஞானவேல் அவர்கள் இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை *III* இல் விரிவுரையாளராக இணைந்து கொண்டார்.

*18-05-2009* - வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்து மாற்றலாகி திரு. *B.* பாலகணேசன் அவர்கள் இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை *III* இல் விரிவுரையாளராக இணைத்து கொண்டார்.

*27-05-2009* - *2009* ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு நடைபெற்றது. பிரதம விருந்தினராக யாழ்

பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ந.சண்முகலிங்கன் கலந்து சிறப்பித்தார்.

13-06-2009 - 1 ம் வருட மாணவர்களுக்கான வரவேற்புபசார விழா நடைபெற்றது. பிரதம விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் வருகை தந்து சிறப்பித்தார்.

.15-06-2009 **"பேசும் தூரிகை"** ஒவியக் கண்காட்சி சித்திரத்துறை முகிழ்நிலை ஆசிரியர்களினால் நடாத்தப்பட்டது.

24-06-2009 - டெங்கு - மலேரியா தொற்று நோய்கள் பரவாமல் தடுத்தல் என்னும் தொனிப் பொருளில் கோப்பாய் சுகாதாரப்பணிமனையால் முகிழ் நிலை ஆசிரியர்களுக்கு செயலமர்வு நடைபெற்றது.

27-06-2009 - வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 10 வது தடவையாக வீர சங்கிலியன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. கரவெட்டி பிரதேச செயலர் திரு. S. சத்தியசீலன், திருமதி இராஜேஸ்வரி சத்தியசீலன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும். தொழிலதிபர் திரு. ESP நாகரத்தினம் அவர்கள் சிறப்பு விருந்தினர் ஆகவும் பங்குபற்றிச் சிறப்பித்தனர்.

03-07-2009 - சிவத்தமிழ் செல்வி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் முதலாவது குருபூசை நிகழ்வு நடைபெற்றது.

09-07-2009 - குழந்தை அரங்கக் குதூகளிப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. பிரதம விருந்தினராக கௌரவ அமைச்சர் உயர்திரு. டக்லஸ் தேவானந்தா அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

29-07-2009 முத்தமிழ் விழா நடைபெற்றது. பிரதம விருந்தினராக கல்லூரியின் முன்னால் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் அவர்களும் பாரியாரும் கலந்து சிறப்பித்தனர்.

04-08-2009 - கல்லூரியின் 9 வது ஆண்டு நிறைவை ஒட்டி பேராசிரியர் ப. சந்திரசேகரன் நினைவுப் பேருரையை யாழ் பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி அ.சத்தியசீலன் **"21 ஆம் நூற்றாண்டில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் இடர்களும் சவால்களும்"** என்னும் தலைப்பில் பேருரையாற்றினார்.

06-08-2009 ஆங்கில மொழி தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பிரதம விருந்தினராக வடமாகாண தகவல் தொழில் நுட்ப பணிப்பாளர் திரு. ப. மகேந்திரன் அவர்கள் பங்கு கொண்டார்.

07-08-2009 - பேராசிரியர் வித்தியானந்தன் நினைவுப் பேருரையை IIS நிறுவன இயக்குநர் திரு. ஆ. விக்னேஸ் அவர்கள் தகவல் தொழில் நுட்பம் இலங்கையின் இன்றைய நிலை என்ற தலைப்பில் பேருரையாற்றினார்.

10-09-2009 - பேராசிரியர் கைலாசபதி நினைவுப் பேருரையை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மொழியியல் ஆங்கிலத்துறைத் தலைவர் திருமதி சுபதினி ரமேஸ் அவர்கள் பேருரை ஆற்றினார்.

16-09-2009 ஆங்கில மொழி விருத்தி பயிற்சி நெறிக்கு இந்தியாவிலுள்ள ஹதராபரத் EFLU பல்கலைக்கழகத்திற்கு ஆங்கிலத்துறை விரிவுரையாளர் திரு. T. மோகன் அவர்கள் சென்றார்.

26-09-2009 - வாணி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பிரதம விருந்தினராக தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் டிலானி அமரசிங்க கலந்து சிறப்பித்தார். விசேட விருந்தினராக ஹவாய (அமெரிக்கா) தொண்டு நாதசுவாமிகள் கலந்து ஆசிர்வதித்தார்.

**03-10-2009 - முகிழ் நிலை ஆசிரியர் S.அஜந்தரூபனின் "சமாதானக் காற்று" என்ற CD வெளியிடப்பட்டது.**

05-10-2009 - உலக ஆசிரியர் தின நிகழ்வு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

14-09-2009 - பிரதிக் கல்வியமைச்சர் ஆ.சச்சிதானந்தன் அவர்கள் கல்லூரிக்கு விஜயம் செய்தார்.

28-10-2009 - சித்திரத்துறை முகிழ் நிலை ஆசிரியர் திரு. வ.சிவா அவர்களின் **"ஆரம்ப சித்திரக் கலை"** என்னும் நூல் வெளியிடப்

பட்டது. பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட நீதிபதி திரு. இரா. வசந்தசேனன் கலந்து சிறப்பித்தார்.

*28-10-2009* - பேரறிஞர் சொக்கன் நினைவுப் பேருரை ஸ்கந்தவரோதயா கல்லூரி அதிபர் திரு. ஆறு. திருமுகன் அவர்களால் **"ஈசுறு பாடசாலைச் செயற்திட்டபிரயோகங்கள்"** என்னும் தலைப்பில் நினைவுப் பேருரை ஆற்றப்பட்டது.

*03-11-2009* - ஆரம்பக் கல்வி மன்ற கண்காட்சி பொறுப்பு விரிவுரையாளர் திருமதி. J. உதயகுமார் அவர்கள் வழிகாட்டலில் இடம் பெற்றது.

*04-11-2009* - விஞ்ஞான மன்றத்தினரால் விஞ்ஞான பாட இறுவட்டு வெளியிடப்பட்டது.

*05-11-2009* - தகவல் தொழில் நுட்ப மன்றம் வாசிப்பு மாதத்தில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வை நடாத்தியது. கணித மன்றப் பொறுப்பு விரிவுரையாளர் K. பாஸ்கரன் அவர்களின் வழிகாட்டலில் கணித தினம் நிகழ்வில் கற்பித்தல் சாதன உபகரணக் கண்காட்சி நடாத்தப்பட்டது.

*06-11-2009* - பேராசிரியர் துரைராஜா நினைவுப் பேருரையை எமது கல்லூரி நிதி நிர்வாக உப பீடாதிபதி செல்வி. நி. நல்லையா ஆரம்பக் கல்வியில் தரமேம்பாடு என்ற தலைப்பில் நிகழ்த்தினார்.

*11-11-2009* - கிறீஸ்தவ மன்றத்தினரால் ஒளி விழா சிறப்பாக நடைபெற்றது. பிரதம விருந்தினராக அதி மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

*18-11-2009* - டெங்கு நுளம்பு ஒழிப்பு செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டது. நுளம்பைக் கட்டுப்படுத்தும் மருந்து அடிக்கப்பட்டது.

*21-11-2009 - (APPRECIATION CEREMONY - 2009)* கல்லூரிக்கு உழைத்த மாணவர்களை கௌரவிக்கும் விழா இடம் பெற்றது. பிரதம விருந்தினராக மாவட்ட நீதிபதி திரு. K.அரியநாயகம், திருமதி பிறேமாவதி அரியநாயகம் கலந்து சிறப்பித்தனர்.

*26-11-2009* - இரண்டாம் வருட முகிழ் நிலை ஆசிரியர்களுக்கான பிரிவுபசார விழா இடம் பெற்றது. பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி. உமா. வசந்தகுமார் கலந்து சிறப்பித்தார்.

*03-12-2009* கல்லூரி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் தேசிய கல்வியியற் கல்லூரி பிரதம ஆணையாளர் *YAND* யப்பா, பிரதம கணக்காளர், தேசியகல்வி நிறுவக பணிப்பானர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

*12-12-2009* - புதிதாக *SLTES III* நியமனம் பெற்ற கல்வியியலாளர்கள் திசைமுகப்படுத்தல் செயலமர்வுக்கு சியன தேசிய கல்வியியற் கல்லூரிக்குச் சென்றனர்.

*18-12-2009* - கல்வியமைச்சிவிருந்து கணக்காளர் கல்லூரிக்கு விஜயம் செய்து நிதி தொடர்பான செயலாற்றுகைகளை கணிப்பீடு செய்தார். கணக்குகள் திருப்தியாக உள்ளதாகவும் பதிவாளர் திரு. *S.* சிவநாதன் சிறப்பாகச் செயலாற்றுவதாகவும் பாராட்டினார்.

*04-01-2010* - கல்லூரியின் 2010 ம் ஆண்டிற்கான முதலாம் தவணை ஆரம்பமானது. மாணவர்களுக்கான குறித்த ஆண்டின் செயற்பாட்டுத் திட்டங்கள் பற்றிய கலந்துரையாடல் இடம் பெற்றது.

*10-01-2010* - கல்விமைச்சின் செயலாளர் திரு. *M.M.N.D.* பண்டார கல்லூரிக்கு விஜயம் செய்து கல்லூரிக்கு செயலாற்றுகைகளை அவதானித்து சிறப்பாகக் கல்லூரி இயங்குவதாகப் பாரட்டினார்.

*14-01-2010* - தைப்பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது பிரதம விருந்தினராக சமூக சேவைகள் அமைச்சர் டக்லஸ் தேவானந்தா அவர்கள் பங்கு பற்றிச் சிறப்பித்தார்.

*18-01-2010* - கற்பித்தல் பயிற்சிக்காக இரண்டாம் வருட முகிழ் நிலை ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டார்கள்.

*08-02-2010* இவ்வாண்டுக்கான புதிய மாணவர்களைப்பதிவு செய்யும் ஆரம்ப விழா நடைபெற்றது. மதத்தலைவர்கள் மேலதிக

அரசாங்க அதிபர் திருமதி. ரூபினி வரதலிங்கம், வைத்திய கலாநிதி லயன் வை. தியாகராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

10-02-2010 - இன்று தொடக்கம் 10 நாட்கள் புதிய மாணவர்களுக்கான திசைமுகப் படுத்தல் நிகழ்வு நடைபெற ஒழுங்கு செய்யப் பட்டது. இணைப்பாராக நிதி நிர்வாக இணைப் பாளர் திரு. S.R. சத்தியேந்திரம்பிள்ளை அவர்கள் நியமிக்கப்பட்டார்.

20-02-2010 முதலாம் வருட மாணவர் களுக்கான திசைமுகப்படுத்தல் இறுதி நாள் நாடகப்பட்டறை செயலாற்றுகையுடன் சிறப்பாக நிறைவடைந்தது.

06-03-2010 - 2 ம் வருட முகிழ் நிலை ஆசிரியர்கள் கல்வி சுற்றுலாவிற்குச் சென்றனர். உப பீடாதிபதி திருமதி. ஜெ. தியாகலிங்கம் கல்வியியலாளர்கள் திரு. மா. பிரபாகரன், திருமதி. J. உதயகுமார், திருமதி பப்சி மரியதாசன், திரு. S.சூசைதாசன், திரு. K. திலகநாதன், திரு. சி.திவாகரன் ஆகியோர் மாணவர்களை அழைத்துச் சென்றனர்.

08-03-2010 - கல்வியமைச்சின் கல்வியியற் கல்லூரிகளின் பணிப்பாளர் திருமதி W.P.R. சில்வா அவர்கள் கல்லூரிக்கு விஜயம் செய்தார். சர்வதேச மகளிர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

11-03-2010- கல்வியமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட பேராசிரியர் கைலாசபதி நினைவுப் பேருரை இடம் பெற்றது. நினைவுப் பேருரையை தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரை யாளர் கலாநிதி M. ரவீந்திரன் நிகழ்த்தினார். தலைமை உரையை யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் N.சண்முகலிங்கன் நிகழ்த் தினர். இந்நிகழ்வுக்கு இணைப்பாளராக விரிவுரை இணைப்பாளர் திரு. பா. தனபாலன் செயற்பட்டார்.

13-03-2010 - ஊவா தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களும் கல்வியியலா ளர்களும் பீடாதிபதியும் கல்விச் சுற்றுலா ஒன்றிற் காக வந்திருந்தனர்.

12-03-2010- தேசிய கல்வி நிறுவகத் திலிருந்து அனர்த்த முகாமைத்துவ செயலமர்வை நடாத்த பணிப்பாளர் திருமதி டிலானி அமரசிங்க குழுவினர் வந்திருந்தனர். 3 நாள் நடைபெறும் நிகழ்விற்கு GTZ நிறுவனம் அனுசரணை வழங்கி இருந்தது.

24-03-2010- முதலாம் வருட மாணவர் களுக்கான வரவேற்புபசார விழா நடைபெற்றது. பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற கல்விப்பணிப் பாளர் திருமதி புவனா இராமகிருஸ்ணன் பங்கு பற்றிச் சிறப்பித்தார்.

31-03-2010 - கல்லூரியின் 11 வது இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நடைபெற்றன. பிரதம விருந்தினராக வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் திரு I. இளங்கோவன் கலந்து சிறப்பித்தார்.

22-04-2010 - வன்னியிலிருந்து இடம் பெயர்ந்த மாணவர்கள் 19 பேருக்கு கியூடெக் கரிதாஸ் நிறுவனத்தால் 2000 ரூபா வீதம் வழங்கப்பட்டது. இந் நிகழ்வில் அருட்தந்தை C.G.ஜெயக்குமார் அவர்கள் கௌரவிப்பப் பட்டார்.

28-04-2010 - பீடாதிபதியின் பிறந்த தின நிகழ்வு காலை 9.00 மணிக்கு கிறீஸ்தவ ஆலயத்திலும், வித்தக விநாயகர் ஆலயத்திலும் இறை ஆராதனையுடன் நடைபெற்றது. பகல் 12.00 மணிக்கு கலாச்சார மன்றத்தினரால் பிரதான மண்டபத்தில் சிறப்பாகப் பிறந்த தின விழா முகிழ் நிலை ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள், கல்வி சாரா ஊழியர்களால் கொண்டாடப்பட்டது.

02-05-2010 - இன்று கல்லூரியின் 10 ஆவது ஆண்டு நிறைவாகும். காலை 5.30 மணிக்கு கல்லூரியின் கல்விசாரா ஊழியர் அமரர் சு.சோதிரூபன் கல்லூரி வளாகத்தில் இறைபதம் எய்தினார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அன்றயதினம் மாலை கல்லூரி வித்தக விநாயகர் ஆலயத்தில் பிரார்த்தனை நிகழ்வு இடம் பெற்றது.


சுவையகம்
JAFFNA


Batch
Ceremony
2010
ஆரம்ப சித்திரக்கலை
2009
2010.03.11

# தேசிய கல்வியற் கல்லூரிகள் ஊடாக நவீன ஆசிரியர் கல்விக் கலாச்சாரமும் – பிரயோகங்களும்



திரு. S.K. யோகநாதன்,
பீடாதிபதி,
யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற் கல்லூரி.

இன்றைய உலகும், சமூகங்களும் விரைவாக மாற்றமடைந்து வருகின்றன. இம் மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கும் பொறுப்பு பாடசாலைகள் ஊடாக ஆசிரியர்களையே சார்ந்துள்ளது. எனவே இன்றைய சமுதாயத்தையும், உலகத்தையும் வளப்படுத்த உயிர்த்துடிப்பான ஆசிரியர் பரம்பரை ஒன்றை உருவாக்க வேண்டியுள்ளது. நவீன ஆசிரியர் கல்விக்கலாச்சாரத்தில் ஆசிரியர் முன் சேவைக்கல்வி (Pre - Service Education) ஆசிரியர் தொடருறு கல்வி (Continuing Teacher Education) சேவையுள் பயிற்சிக்கல்வி (In service Training Education) என்பதற்கு தற்போது கல்வியமைச்சும், தேசியகல்வி நிறுவகமும் இணைந்து 2045 ஆம் ஆண்டு வரை எதிர்நோக்கும் நவீன ஆசிரியர் கல்விக்கலைத் திட்டத்தை வடிவமைத்து வருகின்றன.

### தேசிய கல்வியியற் கல்விகளின் ஆசிரிய முன் சேவைப் பயிற்சி

1980 - 81 கல்விச்சீரமைப்பு வெள்ளை அறிக்கையில் ஆசிரியர் ஆட்சேர்ப்பு முறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். எதிர் காலத்தில் அனைத்து ஆசிரியர்களுக்கும் நியமனத்துக்கு முன்னரான முன் சேவைத் தொழில் சார் பயிற்சியை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் தேவை என எடுத்தியம்பப் பட்டது. மேலைத்தேய குறிப்பாக பிரித்தானி நாட்டுக்கல்வியியற் கல்லூரிகளில் வழங்கப்படும் ஆசிரிய முன் பயிற்சித் திட்டங்களை உதாரணமாகக் கொண்டு 1985 ஆம் ஆண்டு ஐப்பசி 1 ம் திகதி ஆறு தேசிய கல்வியற் கல்லூரிகள் இலங்கையில் தொடக்கப்பட்டன.

1986 ஆம் ஆண்டு 30 அம் இலக்கம் இலங்கைக்கல்வியியற் கல்லூரிச் சட்டத்தின் மூலம் இவற்றின் அமைப்பிற்கு பாராளுமன்றச் சட்டம் அங்கீகாரம் வழங்கியது. தொடர்ந்து கல்வியமைச்சினதும் தேசிய கல்வி நிறுவனத்தின் அனுசரனையுடன் தேசிய கல்வியியற் கல்லூரிகள் இலங்கையில் சிறப்பாக ஆசிரிய முன் சேவைப்பயிற்சியை வழங்கி வருகின்றன.

தற்போது 17 தேசிய கல்வியியற் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இவை சுயாதீனமுடைய உயர் அதிகார பெறுமானம் கொண்ட முடிவுகளை நிறைவேற்றக்கூடிய பலத்தைக் கொண்டுள்ள A தர திணைக்களங்களாகவுள்ளன. இதன் முழுமையான நிறைவேற்று அதிகாரி பீடாதிபதியாவார். இருவருட வதிவிடப்பயிற்சியும் ஒரு வருட உள்ளகப்பயிற்சியும் உள்ளடக்கிய இக்கல்லூரிகளின் பொது நோக்கங்கள்.

I. ஆசிரியர் ஆட்சேர்ப்பு முறையில் பயன் தரு மாற்றத்தை ஏற்படுத்தல்.

II. சமகாலவகுப்பறையில் கற்கும் மாணவமைய கற்றல் முறைகள் நவீன முறையில் பிரயோகிக்கும் தேர்ச்சிகளை ஆசிரியர்களுக்கு வழங்குதல்.

III. முழு நேர வதிவிடத்துடன் கூடிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மூலம் ஆசிரிய தொழில் பற்றிய ஆக்க பூர்வமான மனப்பாங்கினை ஏற்படுத்தல்.

IV. கல்விப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் ஆய்வுகள் மூலமான காரண - காரியத் தொடர்புடன் கூடிய செயலாற்றுகைகளை மேற் கொள்ளல்.

V. ஆசிரியர் தொழிலில் ஈடுபாட்டையும் தொழில் அபிவிருத்தியையும் ஏற்படுத்தல்.

VI. தற்போதைய இளம் ஆசிரியர்கள் தம் கல்வியை கோல் நிலைச் சமூகத்தின் (Global Society) பரிமாணங்களோடு ஒன்றினைந்து செயற்பட வழிகாட்டல்.

VII. வகுப்பறையில் பிரவேசிக்கு முன்னர் நல்ல ஆசிரியருக்குரிய பண்பையும் தேர்ச்சி களையும் கல்விப் பரீட்சியத்தினூடாக (Educational Practice) வழங்குதல்

என்பதற்கமைய சர்வதேச மொழிகளின் பயில்வு, தகவல்புரட்சி, சமூகமயமாதல் செயற்திட்டப் பிரயோகங்கள் மூலம் கல்வியின் உலகளாவிய வியாபகமான இலட்சியங்களை அடையவும் பயில்வுகள் வழங்கப்படுகின்றன. கற்பவர் மைய தந்திரோபாயங்கள், கற்கக்கற்றல் - கணிப்பீட்டுத் தேர்ச்சிகள், கற்போரின் சுறுசுறுப்பான பங்குபற்றல், மனப்பாங்கு அடிப்படையில் சுயமாக பொறுப் புணர்வாக நடத்தல், ஏனையோருக்கு உதவுதல், நல்லொழுக்க விழுமியங்களுக்கு முன்னோடிகளாகத் திகழ்தல், ஆசிரியத் தொழில் தொடர்பான அர்ப்பண சேவை, ஆகிய செயலாற்றுகைகள் மூலம் பாடசாலை மாணவர்களின் தனியாள் பிரச்சினைகளையும் இடர் களையும் இனம் கண்டு முறையாக மகிழ்ச்சிகரமாகக் கற்பிக்கும் தேர்ச்சிகள் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயிலும் முகிழ் நிலை ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்றன.

## தரமான கல்விக்குத் தகுதியான ஆசிரியர் –

சமகாலத்து மாணவர்களுக்கு முறையான வழிகாட்டலை மேற்கொள்ளக்கூடிய ஆளுமை உள்ள வராக ஆசிரியர்கள் இல்லை என விமர்சனங்கள் செய்யப்படுகின்றன. இவற்றிலிருந்து ஆசிரியர்களை விடுவிக்க முதன் முதலாகப் பெறுகின்ற முன் சேவைப்பயிற்சி உயர்ந்த வாண்மைத்துவ முள்ள தாக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்வகையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயிலும் ஆசிரியர்கள் :

| | | |
|---|---|---|
| சுய மதிப்பீடு | - | Self Evaluation |
| மீள் நோக்கு சிந்தனை | - | (Reflection) |
| செயல் நிலை ஆய்வு | - | Action Research |
| ஆய்வுகள் | - | Survey |
| புதிய செயற்திட்டங்கள் | - | New Projects |
| புத்தகங்கள் | - | Innovations |

ஆகிய செயல் முறைகளில் ஈடுபடுத்தப் படுகின்றார்கள் மேலும் ஒப்படைகள் வெளியீடுகள், கள வேலைகள், கல்விச்சுற்றுலாக்கள், பரிசோதனை கள் தகவல் தொடர்பாடல் செயன் முறைகளுக்கும் வழிகாட்டப்படுகின்றது. இச் செயன் முறைகள் மூலம் அவர்களின் தரம் உயர்த்தப் படுகின்றது. இதனால் அவர்கள் சவால்களை எதிர் கொள்ளும் வல்லமை யுடையவர் களாகவும், புதுமை படைப்பவர்களாகவும் ஏனையவர் களுக்கு முன்னுதாரணமாகவும் நடந்து கொள்கின் றார்கள். தாம் கற்கும் பாடப்பரப்புக் கோட்பாடுகள் (தொழில் சார் வாண்மைப் பாடங்கள், விசேட துணை பொதுப் பாடங்கள்) மூலம் நடைமுறைக் கல்விப் பிரச்சினை களுக்குத் தீர்வுகாணும் தேர்ச்சி இவர்களுக்குக் கற்பித்தல் பயிற்சியினூடாக வழங்கப்படுகின்றது. இரண்டுவருட வதிவிடக்கற்கைக் காலத்தில் நான்கு முறை இடையிட்ட கற்பித்தல் பயிற்சியும் (8 வாரங்கள்) உள்ளகப்பயிற்சிக் காலத்தில் (ஒரு வருடம்) கற்பித்தல் பயிற்சியும் இவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இதன் நோக்கங்களாக;

முகிழ் நிலை ஆசிரியரின் கற்பித்தல் தேர்ச்சியை விருத்தியடையச் செய்து மாணவர்கள் கற்றலில் உடல் - உள - சமூகமனவெழுச்சி சார்ந்த இயல்புகளையும், தனியாள் வேறுபாடுகளையும் இனம் கண்டு கற்பிக்க.

- ☆ பாடசாலை மாணவர்களின் பல்வேறுபட்ட குண நலன்கள் தேவைகள், விருப்புக்கள், இரசனைகள் பற்றிய நிபுணத்துவ அறிவைப் பெறல்.
- ☆ பாடத்திட்டமிடல், கற்பித்தல் முறைமைகள், நுட்பங்கள், உத்திகளை இனம் காணல், கற்பித்தல் சாதனங்கள், தர உள்ளீடுகளை முறையாகப்பயன்படுத்தும் ஆற்றலை அதி கரித்தல்.
- ☆ குறிப்பிட்ட நேரத்தில் கற்பித்தலில் ஈடுபட்டு நேரமுகாமையையும் (Time Managemunt) வேலை நெறிமுறைகளையும் (Wovk Ethics) பழகிக் கொள்ளல்.
- ☆ மாணவர்களை முறையாகக் கணிப்பீடுகளுக் கும், மதிப்பீடுகளுக்கும் உட்படுத்தும் ஆற்றல் களை பெறல்.
- ☆ கற்பித்தலிலும், இடைவிடாது கற்றலிலும் ஆர்வம் காட்டல், புத்தாக்கத்திறன்களையும் விருத்தி செய்து கொள்ளல்.
- ☆ பாடசாலைகளில் கற்பித்தலுடன், காலைப் பாடசாலைக் கூட்டம், சமய வழிபாடுகள், இணை பாடவிதமான செயற்பாடுகள், போன்றவற்றில் விருப்பத்துடன் பங்குபற்றும் பண்புகளை வளர்த்துக் கொள்ளல்.

- ☆ பாடசாலையில் ஒழுக்கமும் மாணவர்களிடையே குணபண்புகளும் விருத்தியாகும் சமூகச் சூழலை ஏற்படுத்தல்.
- ☆ பெற்றார் - ஆசிரியர் - அதிபர் தொடர்புகளை வலுவூட்டல், சிரமதானம், பொது வேலைகளில் ஆர்வத்துடன் ஈடுபட வைத்தல்.

என்பவற்றின் மூலமாக சிறந்ததோர் ஆசிரியரை உருவாக்கவல்ல பண்புகள் கற்பித்தல் பயிற்சியினூடாக வழங்கப்படுவதுடன் மாணவர்கள் இலகுவாக - மகிழ்ச்சியாக கற்று கிரகித்துக் கொள்ளக் கூடிய விதத்தில் கற்பிக்கவிருக்கும் பாட உள்ளடக்கத்தை அமைப்பாக்கி, ஒழுங்குபடுத்தி இலகுவாக்கி வழங்குவதன் மூலம் சிறந்த நல்லாசிரியர் பண்புகள் வளர்க்கப்படுகின்றது. மேலும் மாணவர்களைத் தற்பேறு சுய கற்றலில் ஈடுபடுத்தும் செயன் முறைகளில் ஈடுபடுத்தவும் வேண்டியுள்ளது. இதன் மூலம் பின்வரும் நல்லாசிரியர் பண்புகள் ஏற்படுத்தப்படும்.

- ☆ மாணவர்களிடம் சிநேகத்தன்மையுடனும் கருணையுடனும் நடந்து கொள்பவராக இருத்தல்
- ☆ சகிப்புத்தன்மையுடன் நீதியாகவும் நியாயமாகவும் நடத்தல்.
- ☆ நகைச் சுவையை விரும்புபவராகவும் கற்றல் தொடர்பான பிரச்சினைகளுக்கு உதவுபவராக இருத்தல்.
- ☆ பிள்ளைகளை முழுமையாக விளங்கிக் கொள்ளும் தன்மையுள்ளவாரக செயற்படல்
- ☆ மாணவர்களுக்கு வழிகாட்டல் ஆலோசனை வழங்கும் தேர்ச்சியுள்ளவராக இருத்தல்.
- ☆ வகுப்பறையிலும் பாடசாலையிலும் ஒழுக்கத்தைப் போணுபவராக இருத்தல்.

இவ்வாறான நல்லாசிரியர் பண்புகளை அதிகாரத்தினாலோ, கட்டாயப்படுத்தலினாலோ, வற்புறுத்தலினாலோ, பலாத்காரத்தினாலோ, நீண்ட காலம் வினைத்திறனுடையவராகச் செயலாற்றுகைக்கு உட்படுத்த முடியாது முதலில் அவருக்குக் கற்பித்தலில் விருப்பையும் - ஈடுபாட்டையும் (Invopment) ஏற்படுத்த வேண்டும். அதற்கான சூழ்நிலைகளை, சந்தர்ப்பங்களை முன் சேவைப் பயிற்சியினூடாக வழங்குவதன் மூலம் சாதனை மட்டத்தை அடைய முடியும். தரமான கல்வியை மாணவர்களுக்கு வழங்க முடியும். இதற்கு முன் சேவைப்பயிற்சிக் காலத்திலும் ஆசிரியராக இருக்கும் காலத்திலும் முறையான ஒழுக்கக் கோவை ஒன்றைப் பின்பற்றல் அவசியமாகும்.

## ஆசிரியர்களுக்கான ஒழுக்கக் கோவையும் – அர்ப்பணிப்பும்

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் வழங்கப் படுகின்ற முன்சேவை ஆசிரியர் பயிற்சியில் ஆசிரியர்களுக்குரிய ஒழுக்கம் முதன்மை நிலையில் பேணப்படுகின்றது. ஆசிரியத் தொழில் ஒரு வாண்மைத் தொழிலாக வளர்ச்சியடைய அவர்களுக் கான ஒழுக்க நெறிக் கோவை அவசியமாகும். ஆசிரியத்துவத்தின் செயலாற்றுகையும் தகுதிப் பிரமானங்களும் ஒழுக்கக் கோவையினூடாகவே உறுதிப்படுத்தப்படுகின்றது. பின்வரும் காரணங் களுக்காக ஆசிரியர்களுக்கு ஒழுக்கக் கோவை அவசியமாகும்.

- ☆ மாணவர்கள், பொதுமக்கள் விரும்பும் சமூக நன்நடத்தைகளை உருவாக்கிக் கொள்ளவும், மக்கள் ஊழியனாக தியாகத்தினூடாகச் சேவை செய்யவும், தனது கடமைகளை நிறைவேற்றுவதில் ஆழ்ந்த - அகன்ற பொறுப்புக் களுடன் ஈடுபட,
- ☆ மாணவர்களின் கற்றல் அபிவிருத்திக்காகத் தம்மை அர்ப்பணிக்க,
- ☆ ஆசிரியர் தொழில் கௌரவத்தைப் புனிதமாகப் பாதுகாக்க,
- ☆ சிந்தனை - சொல் - செயல் ஆகியவற்றில் நேர்மையாக இருந்து தனது தொழிலுக்குக் களங்கம் ஏற்படாதவாறு செயற்பட,
- ☆ சுய ஒழுக்கம், பண்பாடு, கலாச்சாரம், ஏனையோரை மதிக்கும் பண்புகளைக் கடைப்பிடிக்க,
- ☆ ஆசிரியத் தொழிலின் மகிமையை நிலை நாட்ட,

பயிற்சிக் காலத்தில் செயல் ஒழுங்கு, கட்டுபாடு, ஒழுக்கம் என்பவற்றைக் கடைப்பிடிக்க

ஒழுக்கநெறிக் கோவை மிக அவசியமாகவுள்ளது. எல்லாத் தேசிய கல்வியியற் கல்லூரிகளும் தம் பயிலுநர் களுக்கான ஒழுக்க நெறிக் கோவையை சத்தியப்பிரமாணம் செய்து கடைப்பிடித்து வரு கின்றன. இக்கடைப்பிடிப்பு ஆசிரியத்துவத்தில் அர்ப்பணிப்புச் செயலாற்றுகையை (Dedication Performance) உறுதிப்படுத்துகின்றது.

இங்கு அர்ப்பணிப்பு என்பதை கட்டாயமாகச் செய்ய வேண்டி கடமைகளுக்கு அப்பால் சேவை செய்யும் தன்மையை அர்ப்பணிப்பு எனலாம். இதில் திடசங்கற்பம், பக்தி, வலுவான விருப்பு என்பன அடங்கும். இது முழு நிறைவான ஆசிரியராக இருப்பதற்கு ஆத்மீக ரீதியில் ஏற்படுத்தும் ஒரு தூண்டுதலாகும். இது வகை கூறலுடன் தொடர்பு உடையது. அசிரியர் தன் சேவை மூலம் உச்ச இயலுமையைப்பிரயோகிக்க உடன்படுதலையும் அர்ப்பணிப்பு எனலாம். அதனை ஆற்ற முடியாத நிலை தோன்றும் போது அதனைக் கைவிடாது தான் சேவையாற்றும் விடயத்தைக் கைவிடாத நிலையில் சுய நன்மையை கருதாது செயற்படுபவரே அர்ப் பணிப்புள்ள ஆசிரியராவார். இதில் மாணவர் களின் தேவைகளுக்கே ஆசிரியர் முன்னுரிமை அளிப்பார். மாணவர்களுக்கு எப்போதும் ஏதோ ஒன்றை வழங்கத் தயாராக இருப்பார். இவ்வாறான இயல்புகளைத் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் முன் சேவை பயிற்சிக் காலத்திலிருந்தே பெறும் செயலாற்று கைகள் முன்னெடுக்கப் படுகின்றன.

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி பெறும் முகிழ் நிலை ஆசிரியர்கள் தமது ஆசிரியப் பணி கடினமாயினும் கைவிடாது தொடர்ந்து செயற் படுத்துவார். மாணவர் தொடர்பாக அன்பு நெறியைப் பின்பற்றுவார்கள். அவர்களது உச்ச மேம் பாட்டிற் காகத் தமது செயற்பாடுகளை ஒழுங்கிணைப் பார்கள். புதிய கருத்துக்களைத் தனது செயற்பங்கை நோக்கித் தீர்மானம் எடுத்து கல்விசார்ந்த தத்துவங் களை தூர நோக்குடன் கடமையாற்றும் வல்லமை யைப் பெறுவர். இதற்கு ஏற்றது போல் தேசிய கல்வியியற் கல்லூரி களின் முகாமைத்துவமும் கல்விச் செயற்பாடுகளும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

□□□

# அபிவிருத்தியும் கல்விச் செலவும் தொடர்புகளும் அறைகூவல்களும்


பேராசிரியர் மா.சின்னத்தம்பி,
தலைவர், சட்டத்துறை,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.




கல்வி அபிவிருத்தி தொடர்பு பற்றிய எண்ணக்கரு நடைமுறையில் பொருளாதார நிபுணர்களின் கவன ஈர்ப்புக்குரிய விடயங்களில் முதன்மையானதாகி வருகிறது. நாட்டின் மொத்த உற்பத்தியைப் பெருக்குவது மக்களின் வாழ்க்கைத் தர உயர்ச்சிக்கேற்றதாக அவற்றைப் பங்கிடுவது உலக ரீதியில் கிடைக்கத்தக்க வாய்ப்புக்களைப் பயன்படுத்தி தேசிய முன்னேற்றத்தை மேலும் அதிகரிப்பது போன்ற பொருளியல் ரீதியிலான அவர்களது குறிக்கோள்களை அடைவதில் கல்வி சிறப்பான வகிபங்கைக் கொண்டிருத்தல் அவசியம் என தேசிய மற்றும் சர்வதேசிய பொருளியலாளர்கள் வலுவாக நம்புகின்றனர்.

அவ்வாறு கல்வியின் வகிபங்கு என்பதை அதிகரிப்பதனால் கல்வித்துறை தன்னளவில் அபிவிருத்தியடைவதும் அவசியமாகிறது. கல்வித்துறை அபிவிருத்தியை நிர்ணயிக்கும் காரணிகளில் முதன்மையானது கல்வித்துறைக்கு எந்தளவு வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. என்பதாகும். அவ்வாறு வளங்களை ஒதுக்கீடு செய்தல் என்பது எந்தளவுக்கு கல்விச் செலவுகளை அதிகரிக்கமுடியும் என்பதிலேயே தங்கியுள்ளது. இதன்படி அபிவிருத்திக்கான கல்விச் செலவின் வகிபங்கு மற்றும் செலவினப் போக்கு தொடர்பான அம்சங்கள் முக்கியமானவை.

### நோக்கங்கள்

இவ் ஆய்வுக்கட்டுரையானது பின்வரும் ஆய்வு வினாக்களுக்கு விடைகாணும் முயற்சியாக அமையும் என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

- கல்வி - பொருளாதார அபிவிருத்தி தொடர்புகள் எவ்வாறமைகின்றன.
- பல்வேறு கல்விமட்டங்களில் செலவிடுவதன் முக்கியத்துவம் யாது?
- கல்விச் செலவின் பல்வேறு வகைகள் யாவை?
- கல்விச் செலவினைப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் யார்?
- கல்விச் செலவினை அதிகரிப்பதில் உள்ள தடைகள் மற்றும் பிரச்சினைகள் யாவை?
- இலங்கையின் கல்விச் செலவினப்போக்கு எவ்வாறமைகிறது?

### கல்விச் செலவு பற்றிய ஆய்வுகள்

சர்வதேச ரீதியில் கல்வியில் செலவிடுவதன் முக்கியத்துவம் பற்றி வெவ்வேறு பொருளியலாளர்களும் கல்வியியலாளர்களும் வெவ்வேறு காலப்பகுதிகளில் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

புதுப்பழம் பொருளியலாளரான ஃபிஷர் (1930) (*Irving fisher*) இது பற்றிய அடிப்படை எண்ணக்கருவை உருவாக்க அடித்தளமிட்டார் எனினும் வைசி (*Vaizey 1958*) வைஸ்மன் (*Wiseman 1959*) சுல்ட்ஸ் (*Shultz 1967*) பெக்கர் (*Becker 1964*) போரத் (*Porath 1967*) ஹலே (*Haley 1973*) பிளாக் (*Blaug 1976*) போன்றவர்கள் கல்வி மீதான முதலீடு செலவு அதற்கான வருமான விளைவுகள் என்பன பற்றிய அகன்ற ஆய்வு ரீதியான நோக்கினை உருவாக்க முனைந்தனர் டெனிசின் (*Denision 1957*) என்பவரது ஆய்வுகள் நவீன பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக கல்வியின் வகிபங்கினை உற்பத்தி மாதிரியில் நோக்குவதற்கு வழிவகுத்தது 1950களில் உள்ளீட்டு வெளியீட்டு மாதிரியிலான நோக்கு பிரபல்யம் பெற்றபோது றொபின்சன் போன்றவர்களின் அணுகுமுறைகளும் கல்வி பொருளாதார தொடர்பை வலுப்படுத்த உதவின.

பல்வேறு பௌதீக நிதி முதலீடுகளினால் பொதுவாக ஏற்படக்கூடிய அபிவிருத்திக்கு மேலதிகமான அபிவிருத்தியொன்று கல்வி முன்னேற்றத்தினால் ஏற்படுகிறதென்றும் கல்வி முன்னேற்றத்தினால் ஏற்படுகிறதென்றும் அதனை எச்சவிளைவு என்றும் அது தொழில்நுட்ப மாற்றங்

களினூடாக வெளிப்படலாம் என்னும் கருத்தை வலியுறுத்துவதில் டெனிசன் *(1957)* சோலோ *(Solow 1957)* போன்றோர் ஈடுபட்டிருந்தனர். உற்பத்தி தொழிற்பாட்டு அணுகுமுறையினை ஹிக்ஸ் *(Sir John Hicks)* கடுமையாக விமர்சித்த போது அவற்றையும் கவனத்திற் கொண்டு அக்ரஸ்ட் *(Arkrut Denision Solow 1965)* டெனிசன் சோலோ போன்றவர்கள் விளக்கமளித்தனர்.

ஜப்பான் நாட்டில் புடவைக் கைத்தொழி லில் வெளிப்படையாகத் தென்பட்ட அசாதாரண உற்பத்திப் பெருக்கம் கல்வியினால் உயர்த்தப் பட்ட ஊழியர் தரத்தின் விளைவு என்று இனங் காணப்பட்டது இதனை ரணிஸ் *(Ranis 1957)* தெளிவுபடுத்தியிருந்தார்

கல்வி மனித மூலதனமாக *(Human capital)* ஏற்றுக்கொள்ளப்பட்டு அது எவ்வாறு பௌதீக அபிவிருத்தியை உயர்த்திவிடுகிறது என்பது பற்றிய ஆய்வுகள் வளர்ச்சியடையலாகின *1900*லும் *1957*லும் ஐக்கிய அமெரிக்காவில் கல்வி வளர்ச்சி யினால் ஏற்பட்ட மனித மூலதனத்தின் இருப் பினை *(Human Capital Stock)* சுல்ட்ஸ் *(Sultz 1961)* அளவிட்டார் இத்தகைய ஆய்வுமுறையின் முன்னோடியாக சுல்ட்ஸ் அங்கீகரிக்கப்பட்டி ருந்தார் பொவ்மனின் *(Mary John Bowman 1962)* ஆய்வுகள் பாடசாலை செல்லும் வருடங்கள் எவ்வாறு ஒரு நபரின் உற்பத்திறனைப் பாதிக்கிற தென்ற ஆய்வு அணுகுமுறையை விருத்தி செய்யப் பெரிதும் உதவிற்று. கல்வியிலான உள்ளீடு அதற்கான செலவு அதனால் பெறப்படும் வருமானம் வெளியீடு என்பனவற்றை அளவீடு செய்வதற்கான அடிப்படைகளை அவர் வழங்கி யிருந்தார். நுகர்ச்சி முதலீடு வேலையின்மை சந்தர்ப்பச் செலவு குறைவானகல்வி *(under Education)* போன்ற பல அம்சங்கள் பரிசீலனைக் குரியவாகின.

எனினும், கெரிபெக்கர் *(Gary Becker 1962)* வேறுபட்ட வகையில் கல்வித்தரவுகள் வயது உழைப்புத் தொடர்புகள் போன்றவற்றை அடிப் படையாக வைத்து பொதுக் கோட்பாட்டை உருவாக்கினார். அவர் கல்வியும் பயிற்சியும் எப்படி ஒருவரது உற்பத்திதிறனுடன் தொடர்பு படுகிறதென விளக்கமுனைந்தார் எனினும் எக்கஸ் *(Eckaus R.S 1962)* கல்விசார்நுகர்வு பற்றிய கருத்தின் அடிப்படையில் மனித மூலதன எண்ணக்கரு அர்த்தமற்றதென விவாதித்தார்.

கல்வி மீதான செலவு தேசிய உற்பத்தியில் ஏற்படுத்தும் மேலதிக பெருக்கம் எச்சவிளைவு என இனங்காணப்பட்டது. ஒருநாடு கல்வி, பயிற்சி, ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் என்பவற்றுக்கு செலவிடுவதன் விளைவாக தேசிய உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பை இது குறிப்பிடுகிறது. டெனிசனும் ஏனையோரும் இதனை கல்வியின் விளைவு அல்லது பயன் என்று அழைத்தனர்.

இதனடிப்படையில் சுல்ட்ஸ் 1900 - 1957 காலப்பகுதியில் கல்வியினால் மனித மூலதனமான இருப்புமட்டம் அமெரிக்காவில் 540 சதவீதத் தினால் அதிகரித்ததாக தெளிவுபடுத்தினார் மனித மூலதன கல்விதொடர்பை உறுதிப்படுத்துவதற்கு கல்வியினால் கிடைக்கும் வருமான விகிதம் *(Rate of return)* முக்கியமானதென விளக்கப்பட்டது. சுல்ட்ஸின் விளக்கங்கள் நாடுகளின் அபிவிருத் திக்கு கல்வியில் அதிகநிதி செலவிட வேண்டியதன் முக்கியத்துவத்தை வற்புறுத்தின. ஆக்ரஸ்ட் உள்ளீட்டு வெளியீட்டு விகித அணுகுமுறையைக் கையாண்டு உலக யுத்தத்திற்கு பிற்பட்ட காலத்தில் நோர்வே நாட்டின் அபிவிருத்தியிலான கல்வியின் பங்களிப்பை மதிப்பிட்டு ஒரு நாட்டின் அபிவிருத் திக்கு பௌதீக மூலதனத்தை விட மனித மூலதன மான கல்வி அதிக பங்களிப்பை வழங்கமுடியும் என்பதை நிறுவினார்.

டெனிசனும் 1929 - 1957 காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்காவின் தேசிய வருமானக் கணிப்பீட்டுத் தரவுகளின் அடிப்படையில் பயிற்சி கல்வி தொழில்நுட்பம் என்பவற்றின் தேசிய வளர்ச்சியிலான பங்களிப்பை விளக்கினார் கல்வி யின் பாதிப்பை வெளிப்படையான காரணியாக காட்டும் நோக்கம் அவரிடம் இல்லாத போதிலு ம் கல்வியினால் வளர்ச்சி ஏற்பட்டதென்பதைத் தெளிவுபடுத்தியிருந்தார் கல்வி ஊழியப் படையின் வினைத்திறனை அதிகரிப்பதன் மூலம் உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவும் என்பதை ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சிப்

புள்ளிவிபரங்களின் மூலம் தெளிவுபடுத்தியிருந்தார் கென்டிரிக் இன் உதவியுடன் அளவிடக்கூடிய உள்ளீடாக கல்வியைக் காட்ட முனைந்திருந்தார்.

கேரிபெக்கர் தனது ஆய்வுகள் மூலமாக மனித மூலதன கோட்பாட்டிற்கு வழிவகுத்திருந்தார் தொழிற்சாலைகளில் பயன்படும் இயந்திரங்களில் முதலீடு செய்வதைப் போலவே மனிதர்களில் முதலீடு செய்வதாலும் உற்பத்திப் பெருக்கத்தை உறுதிப்படுத்த முடியும். எதிர்கால வருமான அதிகரிப்புக்கு கல்விச் செலவும் வழி வகுக்கும் என்றார். மனித மூலதனக் கோட்பாடு ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு கல்வி எவ்வகையில் பங்களிப்புச் செய்து வருகிறதென்பதை விளக்கும் முக்கியமான கோட்பாடாக இன்றுவரை ஏற்றுக்கொள்ப் பட்டுள்ளது.

கல்வி வழங்குவதால் இருவகை மனித மூலதனம் உருவாகிறதென்றும் அவை வெவ்வேறு மாதிரிகளில் பங்களிக்கின்றதென்றும் விளக்கப் படுகிறது. தொழிலாளர் எங்கு பணிபுரிந்தாலும் அவரது அறிவும், திறன்களும் அவரது உற்பத்தித் திறனை உயர்த்தும் போது அது பொதுவான மனிதமூலதனமாகிறது. முறைசார் கல்விமுறையிலான எழுத்தறிவு எண்சார் தேர்ச்சி போன்றவற்றினால் இத்திறன் ஏற்படுகிறது. ஆனால் சிறப்பான மனிதவளம் என்பது ஊழியர் ஒருநிறுவன ஒழுங்கமைப்புக்குள்ளே நெருக்கமான தொடர்புகளைக் கொண்டவராகவும் குறித்த நிறுவனத்திற்கு மாத்திரம் பெறுமதிமிக்க பங்களிப்பை வழங்கக் கூடியவராகமிருப்பதைக் குறிப்பிடுகிறது. ஒரு நிறுவனம் தொழிற்சந்தையில் தனியுரிமை கொண்டிருக்கும் நிலைமைகளில் சிறப்பான மனிதவளம் கூடியளவு வினைத்திறனை வெளிப் படுத்தும்.

கல்வியினால் ஊழியர் வினைத்திறனில் ஏற்படும் பாதிப்பு பற்றிய எண்ணக்கரு கல்வித் துறையிலும் ஊழியப் பொருளாதாரத்திலும் பெரிய பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.

**கல்விச் செலவும் வருவாய்களும்**

மனிதர் களுக்கிடையில் அடிப்படை மதிநுட்பத்தில் வேறுபாடுகள் உண்டு சிலர் இயல்பாகவே நுண்மதிமிக்கவர்கள் அவர்களால் அதிகம் கற்கமுடியும். அவர்களது வினைத்திறன் உயர்வாக இருக்கும் இதன்கருத்து அவர்களது உயர்ந்த வேதனம் தனியே அவர்களது உயர்ந்த கல்வி அடைவுக்காக வழங்கப்பட்டதல்ல என்று விளக் கப்படுகிறது. கல்வி அடைவின் அடிப் படையில் திறமையானவர்களை தொழில் வழங்குபவர் இனங்காணமுடியும். இவர்களுக்கு கூடிய வேதனத்தை வழங்குதலும் சுலபமாகும். ஒரே வேலையில் ஈடுபடுகின்றபோதிலும் ஏனையோரை விட இவர்கள் கூடிய வேதனம் பெறுவர்.

இதனால் மதிநுட்பம் கூடியவர்கள் அதிகம் கற்பதால் அதிக வேதனம் பெறுவது எளிதாகிறது. இங்கு கல்வி ஒரு சமிக்ஞையாக கருதப்படுகிறது. இது சமிக்ஞை மாதிரி எனப் படுகிறது.

ஒரு நிறுவனம் ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளைச் செய்வதற்காக ஊழியரை தொழிலில் அமர்த்துவதுண்டு. சில வேலைகளுக்கு ஏனைய வேலைகளைச் செய்வதற்கு தேவைப் படுவதிலும் பார்க்க கூடியவளவு திறமை தேவைப்படும் அந்த நிலையில் குறைந்த ஆற்றல் உடையவர்கள் அதிக சவால்கள் உள்ள தொழில் களில் அமர்த்தப்படுவர். இதில் எதிர் பார்க்கப் படும் விளைத்திறனை அவர்கள் பெறுவதற்கு கல்வி உதவுகிறது. இதன்படி பல் வேறு வேலைகளுக்கும் ஏற்ற தொழிலாளர்களை வகை தெரிந்தெடுக்கும் கல்வித்தகைமை உதவு கிறது. இது தெரிந்தெடுக்கும் மாதிரி எனப் படுகிறது.

இதில் முதலாவது மாதிரியில் கல்விச் செலவானது சமூகரீதியில் பயனுடையதாக இருக்கவில்லை கல்வி கற்றவர்களை முன்னேற்றி ஏனையவர்களை பாதித்துவிடுகிறது இரண்டாவது மாதிரியில் கல்வி வினைத்திறனை அதிகரித்து விடுகிறது. தேசிய உற்பத்தி உயர்ந்து விடுவதற்கும் கல்விச்செலவு பங்களிப்புச் செய்கிறது. கல்வி கற்ற தனிநபரிடையே ஏனையோரிடையிலும் வேறு பாட்டை ஏற்படுத்துவதற்கு கல்வி அடைவு

வேறுபாடுகள் காரணமாகின்றன. லயாட்டும் சாக்ரபோலஸ்சும் கல்வி அடைவுக்கும் அதனடிப் படையிலான வேலை மற்றும் கூலி, சம்பள வேறுபாடுகளுக்கு இடையிலான தொடர்புபற்றி விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

பல்கலைக்கழக கல்வி கற்றவர்களுக்கும் பல்கலைக்கழக கல்வி பெறாதவர்களுக்கு மிடையிலான உழைப்பு வேறுபாடுகள் மிகவும் தெளிவாக இருப்பதையும் தனியே கல்வித் தேர்ச்சிக்காக கிடைக்கும் வருமானம் பற்றியும் இங்கிலாந்தில் வில்லியமும் கோடனும் *(William and Gordan 1981)* ஆய்வு செய்துள்ளனர். பட்டம் பெற்றவர்கள் ஏனையோரைவிட கூடிய சம்பளம் பெறமுடியுமென்றும் அதில் 30% அவர்களது இயல்பான திறன், சமூக, உளவியல் மாறிகளுக்குரிய தென்றும் மிகுதி 70% அதிகரிப்பு உயர்கல்விக்கான தென்றும் விளக்கியுள்ளார். இத்தகைய பட்டப்படிப்பினால் அதில் பணம் செலவு செய்ததால் ஏற்பட்ட மனிதவள அனுகூலம் 65%-97% வரை காணப்படுமென்றும், இடைநிலைக்கல்வி பெற்றவர்களைப்பொறுத்து இது 40%-88% வரையிலேயே காணப்படுமென்று சாக்ரபோலஸ் *(Psacharopoulos 1975)* தனது ஆய்வு மூலம் தெளிவுபடுத்தியுள்ளார்.

### புதிய கல்விப்பொருளியல் ஆய்வாளர்

கல்விப்பொருளியலாளர்கள் பலர் இன்று கல்வியிலான செலவு பற்றியும் அவற்றுக்கு எதிராக பெறப்படும் வருமானங்கள் பற்றியும் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். இதில் ஆண்கள், பெண்கள் மீதான கல்விச் செலவுகளும் கிராமிய நகர பாடசாலைகளிலான கல்விச் செலவுகளும் அரசாங்கம் மற்றும் மாணவர் பெற்றோர் கல்விச் செலவுகளும் பற்றிய ஆய்வுகளில் உலகவங்கி அதிக கவனம் செலுத்தி வருகின்றது. இத்தகைய ஆய்வுகளில் சாக்ரபோலஸ் சிறப்பாக கவனம் செலுத்தி வருகின்றார். எனினும் மேலும் பல கல்விப் பொருளியலாளர்கள் இத்துறையில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தியாவில் பல்வேறு மட்டங்களிலான கல்வி தொடர்பான செலவுகள், அவற்றின் தாக்கங்கள் பற்றி விரிவான ஆய்வுகள் பலவற்றை பேராசிரியர் திலக் *(Jandhyala B.G.Tilak)* மேற்கொண்டு வருகின்றார். இலங்கையிலும் இத்தகைய ஆய்வுகளில் கலாநிதிகள் அத்துருபான *(Harsha Atrupane)* அத்தநாயக்கா *(Nimal Attanayakke)* பேராசிரியர் குலரட்னா *(W.G.Klaratna)* போன்றோர் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். தமிழ்மொழி மூலமான இத்தகைய ஆய்வுகளில் பேராசிரியர் சந்திரசேகரம் *(S.Sandirasegaram)* கூடிய ஈடுபாடு காட்டி வருகின்றார்.

அட்டவணை 1.1

கல்விச் செலவு – நிறுவன அடிப்படையில் 1999

| நாடுகள் | கல்வி நிறுவனங்களுக்கான செலவு பொது மற்றும் தனியார் துறை (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக) |
|---|---|
| அவுஸ்திரேலியா | 5.46 |
| கனடா | 6.16 |
| பிரான்ஸ் | 6.24 |
| ஜேர்மனி | 5.55 |
| இத்தாலி | 5.01 |
| ஜப்பான் | 4.72 |
| கொரியா | 7.03 |
| மெக்சிக்கோ | 4.75 |
| நெதர்லாந்து | 4.61 |
| ஸ்பெயின் | 5.30 |

*மூலம் : OECD Indicators 2002*

### கல்விச் செலவுகளின் போக்கு

உலக ரீதியில் வளர்ச்சியடைந்த நாடுகள் தமது நாடுகளின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக அதிக நிதியை செலவிட்டு வருகின்றன. கல்வி நிறுவன ரீதியாகவும் தலா மான் ரீதியாகவும் இச் செலவுப் போக்கினை பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக் கான நிறுவனம் *(OECD : 2002)* கணித்து வழங்கி யுள்ளது.

இதன்படி மிகவும் முன்னேறிய நாடுகள் தமது தேசிய உற்பத்தியில் கணிசமான சதவிகிதத்தை கல்வி நிறுவனங்களுக்கு ஒதுக்கி யிருப்பதைக் காணமுடிகின்றது.

இவ்வாறே தலா மாணவனுக்குரிய வருடாந்த கல்விச் செலவினையும் இந்நிறுவனம் கணித்துள்ளது. இவை ஆரம்பக்கல்வி இடைநிலைக்கல்வி மூன்றாம் நிலைக்கல்வி மட்டங்களைப் பொறுத்து வேறுபடுகின்றன.

அட்டவணை 1.2

கல்விச் செலவு – தலா மாணவருக்குரிய வருடாந்த செலவு

(ஐ. அமெரிக்க டொலர்) 1999

| நாடுகள் | ஆரம்பக் கல்வி | இடைநிலைக் கல்வி | மூன்றாம் நிலைக் கல்வி |
|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | 3981 | 5830 | 11,539 |
| கனடா | - | - | 14,579 |
| பிரான்ஸ் | 3752 | 6605 | 7226 |
| ஜேர்மனி | 3531 | 6209 | 9481 |
| இத்தாலி | 5653 | 6458 | 6295 |
| ஜப்பான் | 5075 | 5890 | 9871 |
| கொரியா | 2838 | 3544 | 6356 |
| மெக்சிக்கோ | 868 | 1586 | 3800 |
| நெதர்லாந்து | 3795 | 5304 | 10757 |
| ஸ்பெயின் | 3267 | 4274 | 5038 |
| ஐக். இராச்சியம் | 3329 | 5230 | 9699 |
| ஐக். அமெரிக்கா | 6043 | 7764 | 19802 |

மூலம் : *OECD Indicators 2002*

மிகவும் வளர்ச்சியடைந்த நாடுகளில் மூன்று மட்டங்களிலும் தலா மாணவனுக்குரிய வருடாந்த செலவு அதிகரித்துள்ளது. அவுஸ்திரேலியா ஐக்கிய அமெரிக்கா ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு இத்தகைய செலவின அதிகரிப்பும் உதவியுள்ளது. மெக்சிக்கோ நாட்டின் வளர்ச்சிக் குறை நிலையுடன் அதற்கான தலா கல்விச் செலவின் குறைந்த மட்டமும் தொடர்புபட்டிருப்பதும் ஒப்புநோக்கத்தக்கதாகும். போதியளவு நிதி செலவிடுவதற்கு பொருளாதார குறை வளர்ச்சி இடம் தருவதாயில்லை என்பதும் மறுபுறமாக குறைந்தளவான கல்விச் செலவு கூடிய சதவீத பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்க முடியாது என்பதையும் கவனத்திற் கொள்ள முடியும்.

கூடியளவு நிதியை கல்விக்காக செலவிடுகின்ற நாடுகள் மாணவர் அதிக வருடங்கள் பாடசாலைக்கல்வி பெறுவதற்கு உதவமுடியும். அவ்வாறு இயன்றளவு கூடிய வருட பாடசாலைக் கல்வி பெறுபவர்கள் அதற்கேற்ப வருமானங்களையும் பெற்றக்கொள்ள முடியும். இதனை வறிய நாடுகள், பொருளாதார ரீதியில் மிகவும் வளர்ச்சியடைந்த செல்வந்த நாடுகள் என்ற வகையீட்டின் படி ஒப்பிட முடியும்.

பெரும்பாலான நாடுகளில் ஆரம்பக் கல்வியைப் பொறுத்து தனிநபர் வருவாயும் சமூக வருவாயும் இடைநிலைப்பாடசாலைக்குரியதை விட அதிகமாக இருப்பதை சாக்கிரபோலஸ் கணித்தார். இதனடிப்படையில்தான் எல்லா நாடுகளிலும் ஆரம்பக்கல்விக்காக செலவிடப் படும் நிதியை அதிகரிக்க வேண்டுமென வற்புறுத்தி வருகிறார்.

மிகவும் வளர்ச்சியடைந்த நாடுகளை விடவும் வறிய - பின்தங்கிய நாடுகளில் தனிநபர் வருவாய் சமூக வருவாய் என்ற இரண்டுமே உயர்ந்த அளவில் உள்ளன. வறிய நாடுகளில் கல்வி வாய்ப்புக்கள் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. இதனால் தகுதி மிக்க ஊழியர் நிரம்பல் - கிடைப்புத் தன்மை குறைவாயுள்ளது. இது உயர்ந்த வருவாய்க்கு அடிப்படையாயுள்ளது.

பல்வேறு நாடுகளிலும் இடைநிலைக் கல்விக்கு உரியதை விடவும் உயர் கல்விக்கான தனிநபர் வருவாய் வீதம் (Private rate of return) உயர்ந்ததாயுள்ளது. உயர்கல்விக்கு பெருந் தொகையான உதவி மானியம் வழங்கப் படுவதால் தனியார் வருவாய் உயர்ந்ததாயுள்ளது. சமூக வருவாய் வீதம் (Social rate of return) இடைநிலைக் கல்வியை விட உயர் கல்வியில் குறைவாகவே உள்ளது.

வளர்ச்சியடைந்த நாடுகளில் இடைநிலைக் கல்விக்கான சமூக வருவாயை விட, உயர் கல்விக் கான சமூக வருவாயை விட உயர் கல்விக்கான சமூக வருவாய் உயர்ந்ததாகவே காணப்படுகிறது. பலநாடுகளில் உயர்கல்வி வாய்ப்பு நியாய பூர்வமாக ஒதுக்கீடு செய்யப்பட்டு வருவது இதற்குக்காரணமாகும்.

வறிய நாடுகளில் உயர் கல்வியிலிருந்து வளங்களை வெளியே எடுத்து ஆரம்பக்கல்விக்கு மறுஒதுக்கீடு செய்வதால் சமூக நன்மைகளை அதிகரித்துக்கொள்ள முடியும்.

| | தனிநபர் வருவாய் வீதம் | | | சமூக மட்ட வருவாய் வீதம் | | |
|---|---|---|---|---|---|---|
| தொகுதிவாரியாக நாடுகள் | ஆரம்பக் கல்வி | இடைநிலைக் கல்வி | உயர் கல்வி | ஆரம்பக் கல்வி | இடைநிலைக் கல்வி | உயர் கல்வி |
| **வறிய நாடுகள்** | | | | | | |
| எதியோப்பியா | 35 | 23 | 27 | 20 | 19 | 17 |
| கானா | 25 | 17 | 37 | 18 | 13 | 17 |
| கெனியா | 28 | 33 | 31 | 22 | 19 | 9 |
| இந்தியா | 33 | 20 | 13 | 29 | 14 | 11 |
| மெக்சிக்கோ | 32 | 23 | 29 | 25 | 17 | 23 |
| **செல்வந்தநாடுகள்** | | | | | | |
| ஐக்கிய அமெரிக்கா | - | 19 | 15 | - | 11 | 11 |
| ஐக்கிய இராச்சியம் | - | 11 | 23 | - | 9 | 7 |
| ஜப்பான் | 13 | 10 | 9 | 10 | 9 | 7 |
| பிரான்ஸ் | 16 | 12 | 10 | - | 10 | 11 |
| கனடா | - | 16 | 20 | - | 12 | 14 |

மூலம் : *Psacharopoulos (1985) Table 1. and A-1*

அபிவிருத்தியும் கல்விச் செலவும் :

தொடர்பு அறைகூவல்களும்

*அட்டவணை 1.4*

*பொதுக் கல்வியிலான அரசாங்க செலவு*

*1980-2000*

| வருடம் | அரச பாடசாலைகள் | மாணவர்கள் (மில்லியன்) | மொத்தச் செலவு (மில்லியன் ரூபா) |
|---|---|---|---|
| 1980 | 9052 | 3.13 | 1206 |
| 1990 | 9864 | 4.11 | 9571 |
| 2000 | 9976 | 4.19 | 30929 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை அட்டவணை 5.4

தனிநபர் வருவாய் எப்போதுமே சமூக வருவாயை விட உயர்ந்ததாயிருப்பது வெளிப்படையாகத் தெரிகிறது. ஏனெனில் அதில் சந்தர்ப்பச் செலவு *(Opportunity Cost)* என்பது கல்வியிலான அரசின் முதலீடு தொடர்பாக இடம் பெறுவதில்லை. அரசு பொதுமக்களின் வருமானங்களை சமூகத்தின் பல தேவைகளுக்கும் ஒதுக்கீடு செய்யும் போது சமூக வருவாய்களையே அவை அதிகம் பாதித்து விடுகின்றன.

இவ்வாறு கல்விச் செலவு ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர் கல்வி என்ற மூன்று மட்டங்களிலும் மேற்கொள்ளப்படும் போது அவற்றுக்கெதிராக பெறக்கூடிய வருவாய்கள் - தனிநபர் மற்றும் சமூக வருவாய்கள், நாடுகளின் பொருளாதார வளர்ச்சி நிலைகளுக்கேற்ப வேறுபடும் என்பதை உலக வங்கியின் கல்விப் பொருளியலாளர் சாக்ரபோலஸ் தெளிவுபடுத்தியுள்ளார்.

**இலங்கையில் கல்விச் செலவு**

இலங்கையில் பொதுக்கல்வி எனப்படும் பாடசாலைக்கல்வி மற்றும் பல்கலைக்கழக மட்ட உயர் கல்வி என்பவற்றை இலங்கை அரசாங்கமே தனது செலவில் (1945 இலிருந்து) வழங்கி வருகின்றது. நலன்புரி அரசு என்ற முறையில் இலவசக்கல்வி, சுதேசிய மொழிக்கல்வி, கட்டாயக்கல்வி போன்ற கல்விக் கொள்கைகளினால் கல்விக்கான அரசாங்கச் செலவு தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

இன்று உலகமயமாதலின் பின் கல்வியும், தனியார், இலாப நோக்கில் போட்டிமுறையில் முதலீடு செய்யும் துறையாக வளர்ச்சி பெற்றுள்ளதால் அரசு மாத்திரமே பாடசாலைக்கல்விக்குச் செலவிட வேண்டிய தேவையில்லை. பல்வேறு துறையினரின் பல மாதிரிப்பாடசாலைகள் தொழிற்படுகின்றன. அட்டவனை 1.5 இதனைக் காட்டுகின்றது.

இவ்வாறு பல்வேறு மாதிரி தனியார் வகைப்பாடசாலைகள் வளர்ச்சியடைவதால் அரச பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை குறைவடைந்து பல பாடசாலைகளும் படிப்படியாக மூடப்பட்டும் வருகின்றன.

அரசின் கல்விச் செலவுகளில் பாடசாலைக்கான கல்விச் செலவில் ஆசிரிய சம்பளங்களை உள்ளடக்கிய நடைமுறைச் செலவு 2002ஆம் ஆண்டில் 23,794 மில்லியன் ரூபாவாயிருந்தது. கட்டிடம், தளபாடம், ஆய்வுகூடக்கருவிகள் போன்றவற்றின் கொள்வனவு பராமரிப்புக்கான செலவு 7,135 மில்லியன் ரூபாவாக காணப்பட்டது.

அரச பாடசாலைகளின் கல்வித் தரம் வீழ்ச்சியடைவது தனியார் மற்றும் சர்வதேசப் பாடசாலைகளின் கல்வித் தரம் உயர்வது போன்ற காரணங்களினால் அரசு இத்துறைக்கான செலவினைக் குறைக்க முடியும். ஆனால் 381 "நவோதய" பாடசாலைச் செயற்திட்டம், 999 மில்லியன் செலவிலான இலவசப் பாடநூல் வழங்குதல், 220 பாடசாலைகளுக்கான கணனி பயில் நிலையங்களை நிறுவுதல் போன்ற செயற்திட்டங்களினாலும் பாடசாலைக் கல்விச் செலவைக் குறைக்க முடியாது அரசாங்கம் திண்டாடிக் கொண்டிருக்கின்றது.

பல்கலைக்கழக கல்வி தொர்டபான செலவுகளும் இலங்கை அரசாங்கத்தினை நிதி ரீதியாக பாதித்து வருகின்றன. 2002ம் ஆண்டில் 13

அட்டவணை 1.5

இலங்கையில் தொழிற்படும் பலவகைப் பாடசாலைகள் (2002 இறுதியின் படி)

| பாடசாலை வகை | மாணவர் தொகை | பாடசாலை எண்ணிக்கை |
|---|---|---|
| அரச பாடசாலை | 40262333 | 10,505 |
| தனியார் பாடசாலை | 96,917 | 80 |
| பிரிவேனாப் பாடசாலை | 54,968 | 599 |
| சர்வதேசப் பாடசாலை | 60,000 | 90 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி அறிக்கை, 2002.

பல்கலைக் கழகங்கங்களில் 3241 விரிவுரையாளர்கள் மூலமாக 48,296 மாணவர்களுக்கு இலவச உயர்கல்வி வழங்கி வருகிறது. வாழ்க்கைத் தொழில் வழிகாட்டல், தர உறுதிப்பாடு, சுய அபிவிருத்தி, பட்டப்பின் படிப்புப் பயிற்சி, ஆராய்ச்சி போன்ற பல்வேறு நடவடிக்கைகளுக்கும் ஊக்கமளித்து வருகிறது. தகுதிமிக்க பல்வேறு தனியார் நிறுவனங்களும் பட்டப் படிப்பு டிப்பிளோமா, பட்டப்பின் படிப்பு முயற்சிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளன. எனினும், அரசாங்கம் உயர்கல்வி தொடர்பான தன் செலவுகளைக் குறைக்க முடியவில்லை.

உயர்கல்வி வாய்ப்புக்கள் போதியளவில் விரிவுபடுத்தப்படாவிட்டால் பலவகைப்பட்ட பொருளாதார, சமூக மற்றும் அரசியல் பிரச்சனைகளை உருவாக்கி இளைஞரிடையே அமைதி இன்மையையும் உருவாக்கி விடுமென்று கருதியே அதிகநெருக்கடிகளுடன் உயர் கல்விச் செலவுகளை விரிவுபடுத்தி வருகிறது.

இவ்வாறு, பொதுக்கல்வி மற்றும் உயர் கல்வி என்பவற்றில் செலவு தொடர்ந்து அதிகரித்து வருவது தவிர்க்க முடியாததாயுள்ளது. எனினும் கல்விக்கான மொத்தச் செலவு இலங்கையின் உயர் கல்விச் செலவு வருமாறு

அட்டவணை 1.6

உயர்கல்விச் செலவு 1980-2000

| வகை | 1980 (மி.ரூபா) | 1990 (மி.ரூபா) | 2000 (மி.ரூபா) |
|---|---|---|---|
| உயர்கல்விச்செலவு | | | |
| நடைமுறைச்செலவு | 137 | 956 | 3925 |
| மூலதனச்செலவு | 142 | 423 | 1440 |
| மொத்தச்செலவு | 278 | 1379 | 5365 |
| பல்கலைக்கழக கல்விச் செலவு | | | |
| நடைமுறைச்செலவு | 119 | 785 | 3810 |
| மூலதனச்செலவு | 138 | 277 | 1256 |
| மொத்தச்செலவு | 256 | 1061 | 5066 |

மூலம் : Expenditure on Education 1980 – 2000 Table 05 – 01 srilanka University Statistics 2001, UGC

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நோக்குமிடத்து படிப்படியாக வீழ்ச்சிய

டைந்தே வருகிறது. இதனைத் தேசிய அபிவிருத்திக்கு பாதகமானதாகவே ஆய்வாளர் கருதுகின்றனர்.

கல்வியிலான மொத்தச்செலவு படிப்படியாக அதிகரித்துச் சென்றாலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக செலவு வீழ்ச்சியடைந்து செல்வதை அட்டவணை 1.7 தெளிவுபடுத்துகிறது.

### அரசாங்கம் – வெளியேறும் உபாயத்துடன்

உலகின் எல்லா நாடுகளிலும் அரசாங்கங்கள் முழுமையாக கல்விப்பொறுப்பிலிருந்து விலகிவிட முடியாது. ஜனநாயக அரசியல் கோட்பாடு அதற்கு இடமளிப்பதில்லை. எனினும் இயன்றளவு கல்வியிலான தனது செலவினத்தைக் குறைப்பதில் அரசாங்கங்கள் அதிக கவனம் செலுத்தி வருகின்றன. உலக வங்கி எல்லா நாடுகளிலும் கல்வியைத் தனியார் மயப்படுத்துதல், கல்வியை சந்தைப்படுத்துதல் என்ற இரு வழி உபாயத்தை வற்புறுத்தி வருகின்றது. முதலாளித்துவ நாடுகள் மட்டுமன்றி சமவுடைமை நாடுகளும் இதில் ஆர்வம் காட்டுமாறு ஊக்குவிக்கப்படுகின்றன. 1995ம் ஆண்டில் யுனெஸ்கோ (Unesco) நிறுவனம் மற்றும் உலகவங்கியினால் வெளியிடப்பட்ட கொள்கை ஆவணம் (Policy paper 1995) பின்வருவனவற்றை வற்புறுத்தின.

- செலவுக்கு ஏற்ற விளைவை - விளைதிறனை உறுதிப்படுத்துதல் வேண்டும். நிதி விரயம் ஏற்படுதல் தவிர்க்கப்படல் வேண்டும். செலவிடப்படும் நிதிக்கேற்ற பயன்களை உறுதிப்படுத்த வேண்டும்.
- தனியார் துறையை ஊக்குவித்தல், தனியார் நிறுவன முயற்சியாண்மையை ஊக்குவித்தல், கற்பிப்பதற்கு ஏற்றதாக மாணவர் மற்றும் பெற்றோரிடமிருந்து கட்டணங்களை அறவிடுதல்.

1998ல் வெளியிடப்பட்ட உயர்கல்வி உலக மகாநாட்டுப் பிரகடனம் பொதுத் துறையும் தனியார் துறையும் கல்விக்கான நிதியிடுதல் ஈடுபட வேண்டும் என வற்புறுத்தியது.

மலேஷிய நாட்டின் அனுபவத்தின்படி பல்கலைக்கழக உயர்கல்விக்கான நிதி பின்வரும் வழிகளில் திரட்டப்பட முடியும். என சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

- நிதியை கடனாகத் திரட்டுதல்.
- வியாபார முயற்சிகளில் ஈடுபட்டு வருவாய் பெறல்.

அட்டவணை 1.7

இலங்கையின் மொத்தக் கல்விச் செலவின் போக்கு

1960 – 2000

| வருடம் | கல்விச் செலவு (மி. ரூபா) | கல்விச் செலவு (மொ.உ.நா.உ/தியின் %) |
|---|---|---|
| 1960 | - | 4.40 |
| 1970 | - | 3.53 |
| 1980 | 1799 | 2.77 |
| 1990 | 9696 | 2.97 |
| 2000 | 32334 | 2.50 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி அறிக்கை 2902 அட்டவணை 05

- கம்பனிகளை நிறுவுதல்.
- முதலீட்டுக்கான பங்குகளைக் கொள்வனவு செய்தல்.
- படிப்பிற்குரிய கட்டணங்களை அறவிடுதல்.

இத்தகைய புதிய அணுகுமுறைகள் கல்வித் துறையில் அரசாங்கம் செலவிடுவதைக் குறைத்து படிப்படியாக தனியார் இலாபகரமாக வருவாய் உழைக்கும் மாதிரியில் நிதியிடுவது வரவேற்கப் படுகிறது. போட்டி முறையில், விளம்பரம் செய்து கவர்ச்சிகரமாக மாணவர்களைக் கவர்ந்து, போதிய கட்டணங்களையும் அறவிட்டு, கல்வி வழங்க வேண்டும் என்பதே தற்போதைய அணுகு முறையாக உள்ளது.

மறுபுறம், செலவு குறைந்த கற்றல் கற்பித்தல் முறைகள் மின்னியல் தொடர்பில் ஊக்குவிக்கப்படுகின்றன. நிகர்நிலைப் பல்கலைக் கழகம் (Virtual University) கரைநீங்கு வளாகம் (Off – Shore Campus) போன்ற நடைமுறைகளும் அதிகரித்து வருகின்றன.

இவை அனைத்தும் கல்விக்கான செலவை இயன்றளவு பயனாளிகளிடமே விட்டுவிட்டு அரசாங்கம் தப்பித்துக்கொள்ளும் உபாயங்களாகவே விளங்குகின்றன.

முடிவுரை

எல்லா நாடுகளும் கல்வியில் அதிக தொகையைச் செலவிடுவதன் மூலம் தேசிய மனித வளத்தின் வினைத்திறனை உயர்த்தித் தேசிய உற்பத்தியைப் பெருக்க முடியுமென்பதை நம்புகின்றன.

ஆனால் யார் எவ்வாறு செலவிடுவது என்பது தொடர்பான கருத்தியல்கள் படிப் படியாக மாறிவந்துள்ளன. யாருக்காக எந்தக் குறிக்கோளுடன் அரசுகள் கல்வியில் செலவிட வேண்டும் என்பது தொடர்பாக மாற்றுக் கருத்துக்கள் வளர்ச்சியடைந்துள்ளன. ஆனால் பிரச்சினை என்னவெனில் வளர்முக நாடுகளில் மக்கள் வறியவர்களாக உள்ள போது அரசு செலவிடுவதைக் குறைத்தல் தகுதி குறைந்த மனிதவள நிரம்பல் ஏற்பட்டு மீண்டும் குறை விருத்தி வலுவடைந்துவிடும். தரமான கல்விக் காகப் பெருந் தொகை செலாவணியை செலவிட்டு வெளிநாடுகளுக்கு கல்வி கற்க இடம் பெயர்ந்து விடும் அபாயம் உள்ளது. இலங்கை அனுபவம் இதனை உறுதிப்படுத்துகிறது. 2002ம் ஆண்டில் மாத்திரம் கல்வி நோக்கங்களுக்கென வெளி நோக்கிய வெளிநாட்டுச் செலாவணிப் பணவனுப் பல்கள் 'ஏறக்குறைய 16மில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்டன. இந்தியா கல்விசார் வெளியோற்றத்தினால் ஐந்து மில்லியன் டொலர்களை வருடாந்தம் இழந்து வருகிறது.

ஒழுங்கு முறையான கல்வியை வழங்கியதன் மூலம் தகைமைப்படுத்திய ஊழியர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதால் நன்மைகளையும் நாடுகள் பெற்றுள்ளன. வளர்முக நாடுகள் இவ்வகையில் 2003ம் ஆண்டில் 93,000 மில்லியன் அமெரிக்க டொலர்களை உலகின் பல பாகங்களிலுமிருந்து உழைத்திருப்பதை தொடர்பு படுத்திப் பார்த்தல் வேண்டும்.

எதிர்காலத்தில் நிதிச்சந்தையை கல்வி நிறவனங்களுடன் இணைத்து சொந்தச் செலவில் கல்வி கற்பதை ஊக்குவித்து உயர் தகுதி வாய்ந்த மனித வளத்தை விருத்தி செய்வதன் மூலமே பொருளாதார அபிவிருத்தியை நாடுகள் அதிகரித்துக் கொள்ள வேண்டும். உலகமயமாதல் செயல்முறையின் கீழ் இத்தகைய அணுகுமுறையில் வளர்முக நாடுகள் எவ்வாறு தப்பித்துக் கொள்ளப்போகின்றன என்பதை மதிப்பிட மற்றொரு தசாப்தத்திற்குக் காத்திருக்க வேண்டும்.

## Footnotes

1. vaizey, john, keith Norris, johnsheehan, lynch - and Leita,(1972)
THE POLITICAL ECONOMY OF EDUCATION, Duck worth & Company, LONDON,p,15.
2. Ibid, p, 16
3. Ibid, p, 19
4. Ibid,
5. Ibid, p, 20
6. Ibid, p, 22
7. Ibid, p, 23
8. Ibid, p, 25
9. Ibid, p, 30
10. Ibid, p, 32
11. Ibid, p, 33
12. Ibid, p, 34
13. Ibid, p, 37

**அபிவிருத்தியும் கல்விச் செலவும் : தொடர்புகளும் அறைகூவல்களும்**

14. Ibid,
15. johns, Geraint (1993), The Economics of Education, McMilan press Ltd, Londan, p.6.
16. Ibid,
17. Ibid,p,15
18. Ibid,p,18
19. Ibid,p,19
20. Ibid,
21. fhz;f, Ibid,pp,20-21
22. Ibid,p,21
23. Ibid,
24. Blaug, Sicherman, Levin, Layard, Dolton, Makefeace, Inchley, Wills, Moghadam, Hiromitsu, Muda, power போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள்
25. johns, gwraint,op,cit,pp.34-35
26. இலங்கை மத்திய வங்கி (2002) ஆண்டறிக்கை கொழும்பு, ப. 172.
27. Ibid,pp.173-174.
28. Ibid,p.174.
29. Ibid,p,176
30. Sussmuth, Rita (2004) Interview with Evolving transitional Communities Development and cooperation (D+C) 10/2004, vol.31, oct.2004, Frank Furt,p,364.

# கற்றற் குறைபாடுகளுடன் விளங்கும் மீத்திறன் மாணவர்கள்
## Giffed Children with Learing Disabilities


கலாநிதி த. கலாமணி
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.




ஆசிரியத்தொழில் இன்று ஒரு உயர் வாண்மையாக (Profession) ஓர் உயர் தொழிலாக மதிக்கப்படுகிறது. ஓர் உயர்தொழில் எப்போதும் அறிவை அடித்தளமாகக் (Knowledge based) கொணடிருப்பதோடு, தனது வாடிக்கையாளரை முதன்மைப்படுத்துவதாகவும் (Client centred) அமையும். எனவே, ஆசிரியர்கள் தமது, மாணவர் களை அவர்களின் இயலுமைகள், இயலாமைகள் என்பவற்றோடு நன்கு அறிந்திருக்கவேண்டும். அத்தோடு அவர்களின் தேவைகளையும் நிறைவேற்றக் கூடியவர்களாக இருக்கவேண்டும்.

வகுப்பறைகளில் தமது மாணவர்களைத் தொடர்ச்சியாக அவதானிப்பதற்குரிய சந்தர்ப்பம் ஆசிரியர்களுக்குண்டு. இந்த அவதானிப்புகளுக் கூடாக அம்மாணவர்களுடைய தனியாள் தேவைகள் பற்றிய பெறுமதிமிக்க தகவல்களை ஆசிரியர்கள் பெற்றுக்கொள்ள முடியும். இந்த அவதானிப்பை நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு சரியீட்டுப்பட்டியலுடன் (Checklist) மேற்கொள்ள முடியுமாயின் ஒழுங்குமுறையிலமைந்த தகவல் களைக் கொண்ட இச்சரியீட்டுப் பட்டியல் விசேட தேவைகளையுடைய மாணவர்களை இனங்காண் பதற்கான பெறுமதிமிக்க ஒரு கருவியாக அமையும். அதேவேளை, மாணவர்களிடத்து அவதானிக்கப் பட்ட இடர்ப்பாடுகளை அல்லது விசேட இயல்பு களைக் கவனத்திற் கொள்வதற்கும் இது அடிப் படையாக அமையும்.

மாணவர்களின் கற்றல் சார்பான அல்லது நடத்தை சார்பான இடர்ப்பாடுகள் குறித்த தகவல் களையும் மாணவர்களின் தேவைகள் குறித்த தகவல்களையும் முறையாகப் பெற்றுக்கொள் கின்றபோதே அவர்களுக்கான கற்றல் நிகழ்ச்சித் திட்டங்களைப் பொருத்தமாக வகுத்து, வகுப்பு நடைமுறைகளில் நெகிழ்ச்சிக்கு இடமளித்து, அம்மாணவர்கள் தொடர்பான கற்றல் கற்பித்தற் தீர்மானங்களை மேற்கொள்ள முடியும். விசேட தேவைகளையுடைய மாணவர்களின் தேவை களின் அடிப்படையில் அவர்களை வகுத்து நோக்குகின்றபோது, அவ்வகுதிகளுள் அடங்கு வோரின் இயல்புகளிடையே பல ஒற்றுமை களையும் காணமுடியும்.

இலங்கையைப் பொறுத்தவரை பல் வகைத் தேவைகளையுடைய பிள்ளைகளின் தேவைகள் பின்வரும் பதின்மூன்று (13) வகுதி களுள் அடக்கப்படுகின்றன.

- மீத்திறனும் விசேட ஆற்றலும் - Gifted and talented
- கற்றல் இயலாமைகள் அல்லது குறைபாடுகள் - Learning disabilities
- மொழிதலும் மொழிக்குறைபாடுகளும் - Speech and language impairment
- மெதுவான உளவளர்ச்சி Mental retardation
- உக்கிரமான மனவெழுச்சிப்பிரச்சினைகள் - Emotional disturbance
- பல்வித இயலாமை Muitiple disabilities
- உடலியற் குறைபாடு Orthopedic impairment
- கேட்டல் குறைபாடு Hearing impairment
- பார்வைக் குறைபாடு Visual impairment
- பூரணமான பார்வைக்குறைபாடும் கேட்டல் குறைபாடும் - Deaf blindness
- வேறு சுகாதாரக்குறைபாடுகள் - Other health impairment
- தற்சிந்தனை Autism
- மூளைப்பாதிப்பு Brain injury

இவ்வகைப்பாட்டின் பிரகாரம் மீத்திறன் மிக்க மாணவர்களும் விசேட தேவைகளை உடைய மாணவர்களாகவே இனங்காணப் பட்டுள்ளனர். பிள்ளைகள் கொண்டு விளங்கும் பல்வேறு ஆற்றல்களைப் பொறுத்தவரை, சராசரியான பிள்ளைகளைவிட சிறப்பான நிலையில் காணப்படும் பிள்ளைகளே மீத்திறன் மிக்க பிள்ளைகளாகக் கருதப்படுகின்றனர். இப் பிள்ளைகளிடத்தே உயர்நுண்மதியும் படைப் பாற்றலும் சிறப்பான தலைமைத்துவ ஆற்றலும் கட்புலக்கலை மற்றும் ஆற்றுகைக் கலைகளில் சிறப்புத்தேர்ச்சியும் தொழில் நுட்பத்திறன்களில் சிறப்புத்தேர்ச்சியும் காணப்படும்.

இவ்வாறான விசேட ஆற்றல்களுள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ கொண்டுள்ள மீத்திறன்மிக்க பிள்ளையாக இனங்கண்டுள்ள நிலையில், மீத்திறன்மிக்க பிள்ளையொன்றிடத்தும் கற்றல் குறைபாடுகள் (அல்லது இயலாமைகள்) காணப்படலாம் என்ற கருத்து, சொல்முரணணியை (Oxymoron) ஒத்ததாய் நம்பத்தகாத ஒன்றாக சிலரால் உணரப்படக்கூடும். இதன்பேறாக, சிலவழிகளில் மீத்திறன் மிக்கவர்களாகவும் ஏனையவற்றில் குறைபாடுள்ளவர்களாகவும் விளங்குகின்ற பிள்ளைகள் பாடசாலைகளால் கண்டுணரப் படாமலும் கவனிக்கப் படாமலும் விடப்பட்டு விடுகிறார்கள்.

பொதுவாக செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல், எழுதுதல், காரணங்காணல் அல்லது கணித்தல் போன்ற திறன்களை அடையும்போதும் பயன்படுத்தும்போதும் ஏற்படும் குறிப்பிடத்தக்க சிரமங்களின் பல்வேறு கூட்டுமொத்த வெளிப்பாடுகளே கற்றல் குறைபாடு அல்லது இயலாமை (learning disability) எனக் குறிப்பிடப்படுகின்றது. புலன்களில் ஏற்படும் குறைபாட்டினை புலன் ஊனம் (Sensory handicap) என்றும் நுண்மதியில் ஏற்படும் குறைபாட்டினை நுண்மதி ஊனம் (Intellectual Handicap) என்றும் குறிப்பிடப்படும் வேளை இவற்றிலிருந்து வேறுபட்ட ஒன்றாகவே கற்றல் குறைபாடு என்பது கருதப் படுகின்றது.

இருபதாம் நூற்றாண்டின் பெருமைக்குரிய விஞ்ஞானிகளுள் ஒருவராகக் கருதப்படும் அல்பேர்ட் ஐன்ஸ்ரீன் மரபுரீதியான விஞ்ஞான எடுகோள்களை தொடர்ச்சியாக மீள் பரிசீலனைக்கு உட்படுத்தி, எவருமே அதுவரை எய்தாத நேர்மையான நேர்த்திமிகு முடிவுகளை வெளிப்படுத்தியமைக்காகப் புகழ்பெற்றவர். அவர் ஒளியின் சக்திச்சொட்டுப் பண்பை விளக்கியதோடு, மூலக்கூற்று இயக்கம் பற்றி விபரித்து, சார்பியக்கம் குறித்த விசேட கொள்கையையும் அறிமுகம் செய்தார். ஆனால் இப்புத்திக் கூர்மைக்கும் அப்பால், பாடசாலைக் காலத்தில், ஓரிடத்தில் அமைதியாக இருக்காமையினாலும் கலந்துரையாடல்களின்போது அருவநிலைச் சிந்தனைகளுக்குத் திசைமாறிச் சென்றமையாலும் நெறிமுறைகளை அனுசரித்துப் போகாமையாலும் மெல்லக்கற்கும் ஒரு மாணவனாகவே ஐன்ஸ்ரீன் கருதப்பட்டார். ஐன்ஸ்ரீனின் ஆரம்ப பாடசாலைக் கால நடத்தைகள் பற்றிய குறிப்புகளைக் கருத்திற்கொண்டு நோக்கும்போது, இன்றைய நவீன காலத்திலான அவர் பற்றிய ஆய்ந்தறி மதிப்பீடு, கவனக் குறைபாட்டுடன் கூடிய மிகைச்செயற் பாட்டுக்கோளாறு (ADHD) உள்ள ஒருவராகவே அவரை இனங்காட்டும்.

இத்தகு நிலைமையை ஒத்ததாகவே "கற்றல் குறைபாடுகளுடன் விளங்கும் மீத்திறன் மாணவர்கள்" என்ற கருப்பொருள் இங்கு எடுத்தாளப்படுகின்றது. ஒரே பிள்ளையில் பரந்தளவு வேறுபாடுள்ள நிலைமைகள் இடம் பெறுகின்ற நிலைமையில் அப்பிள்ளையைக் கையாளக்கூடிய வகையில் பாடசாலைத் தொகுதி வடிவமைக்கப் பட்டிருக்காமையினால், கற்றல் குறைபாடுகளுடன் விளங்கும் மீத்திறன் மிக்க மாணவர்கள், அவர்களிடத்திற் காணப்படும் குறைபாடுகளினூடாக, அதலபாதாளத்தில் வீழ்ச்சியடையக் கூடியதாக ஏற்பட்டு விடுகின்றது, உண்மையில் அண்மைக் காலங்களில்தான் உயர் ஆற்றல்களும் கற்றல் இடர்ப்பாடுகளும் ஒன்றாக ஒருவரிடமே இடம் பெறலாம் என்பதைக் கல்வியியலாளர்கள் ஏற்றுக் கொள்ளத் தொடங்கியிருக்கிறார்கள்.

### கற்றல் குறைபாடுகளுடன் கூடிய மீத்திறன் மாணவர்களின் வகைப்பாடுகள்

கற்றல் குறைபாடுகளுடன் கூடிய மீத்திறன் நிலைமை குறித்து ஆய்வுகளை மேற்கொண்டோர், இரட்டைத்தன்மையான அசாதாரண இயல்புகளைக்கொண்ட இப்பிள்ளைகளை, மூன்று உபகுழுக்களாக இனங்கண்டுள்ளனர்.

1. முதலாவது குழு மீத்திறன் உள்ள, ஆனால் பாடசாலையில் கற்றல் இடர்ப்பாடுகளை வெளிக்காட்டுகின்ற பிள்ளைகளை உள்ளடக்குவதாகும். குறைந்த அளவிலான ஊக்கல், சோம்பல் அல்லது தாழ்மட்டத்திலான சுயகணிப்பு போன்றவை காரணமாக இக் குழுவில் அடங்கு வோர் குறைவாகவே வினையாற்றலைக் காட்டுவதோடு அநேக சந்தர்ப்பங்களில் குறைவான அடைவு கொண்டோராகவே (underachievers) இனங்காணப் படுகின்றனர். இதன் விளைவாக, இவர்களது கற்றல் இடர்ப்பாடுகள் உணரப் படாமலே இருப்பதோடு, தமது சகபாடி களைவிட மிகவும் தாழ்வான நிலைக்கு இவர்கள் வீழ்ச்சியடைந்து விடுகிறார்கள்.

2. இரண்டாவது குழுவில், கற்றல் குறைபாடுகளுடன் கூடியவர்களாக ஆய்ந்தறியப்பட்ட

போதும் அவர்களின் உயர் ஆற்றல்கள் ஒரு போதும் கண்டுணரப்படாதோர் அடங்குவர். இம்மாணவர்களின் உயர் ஆற்றல்கள் கண்டு ணரப்படாமல் இருக்கின்ற காரணத்தினால் மீத்திறன் மாணவர்களுக்கான கல்விநிகழ்ச்சித் திட்டங்களும் வகுக்கப் படாமல் அந்நிகழ்ச்சித் திட்டங் களினூடாக இம்மாணவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய பயனையும் இழந்து விடு கின்றார்கள்.

3. மூன்றாவது குழு, இயலுமைகளும் இயலாமை களும் (abilities and disabilities) ஒன்றையொன்று வெளித்தெரியவிடாமல் மறைக்கின்ற வகையி லான இயல்புகளைக் கொண்ட பிள்ளைகளை உள்ளடக்குவதாகும். உண்மை யில், ஏனைய குழுக்களுடன் ஒப்பிடும் போது இக்குழுவிலே யே அதிக எண்ணிக்கை யானோர் காணப் படுவர். இவர்கள் சராசரி மாணவர் களாகவே கருதப்படுவதோடு, கற்றல் இடர்ப் பாடுகளைக் கொண்டிருப்பவர்களா கவோ அல்லது விசேட தேவைகளை உடைய வர்களாகவோ கண்டு ணரப்படுவதே இல்லை. இப்பிள்ளைகள் நன்றாகத் தொழிற்படுவது போலத் தோன்றி னாலும், உண்மையில் இவர்கள் தமது முழுவலுவுடன் தொழிற் படுவதே இல்லை. பாடசாலை உயர்கல்விக் காலத்தில் கல்விச் செயன்முறை இவர்களுக்குக் கடினமாக அமைவதோடு இவர்களின் உண்மை யான முழுவலு (true potential) உணரப்படாமலே போய்விடுகிறது.

இம்மூன்று குழுக்களிலுமுள்ள மாணவர் கள் யாவருமே, அவர்களின் முழுவலுவும் கற்றல் இடர்ப்பாடுகளும் நன்கு உணரப் படாதவரை, சமூக மனவெழுச்சிப் பிரச்சினைகள் தொடர் பாக ஆபத்து விளிம்பிலுள்ளோர் ஆவர். கற்றல் குறை பாடுகளுக்காகவோ அல்லது மீத்திறனுக் காகவோ மாணவர்களைத் தெரிவு செய்வதற் கான செயல் நடவடிக்கைகள் ஒன்றையொன்று புறந்தள்ளு வனவாக அமைய முனைவதால், மாணவர் களை இனங்காணும் செயன்முறை காரணமாக இப் பிரச்சினை மேலும் சிக்கலாகி விடக்கூடும். இதன் விளைவாக, பாடசாலைகளில் விசேடதேவை களை உடைய மாணவர்களாக இனங்காணப் படும் எந்தவொரு வகைக்குள்ளும் இவர்கள் அடக் கப்படாமற்போகின்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டு விடுகின்றது.

**இனங்காணுவதிலுள்ள இடர்ப்பாடுகள்**

விசேட திறனாற்றல்களுடனும் கற்றல் இடர்ப்பாடுகளுடனும் கூடிய பிள்ளைகளை சரியாக இனங்காண்பதற்கான அளவீட்டு நடவடிக்கைகளைக் கண்டறிவதில் இன்றுவரை ஆய்வாளர்கள் வெற்றிபெற்றார்களில்லை. அறிவாற்றல்சார் மீத்திறனையும் கற்றல் இடர்ப் பாடுகளையும் கொண்ட சாத்தியமான சேர்மானங் களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருத்தலால் நம்பகமான அளவீடுகளைக் கொண்ட ஒரு தொகுதியை (battery of measurements) வடிவமைக் கும் முயற்சி வெற்றியளிக்குமென ஆய்வாளர்கள் ஒருபோதும் இணங்கியதில்லை. ஆனாலும் இவ்வாறான ஓர் அளவீட்டுத் தொகுதியில் அடைவுச்சோதனைகள், நுண்மதிச்சோதனை, அறிகைச்செயற்பாட்டு முறைமைகளை வெளிக் காட்டும் காட்டிகள், நடத்தைசார் உற்றுநோக்கல் கள் என்பன உள்ளடக்கப்பட வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடில்லை. எவ்வாறாயினும் கற்றல் குறைபாடுகளோடு கூடிய மீத்திறன் மாணவர் களை நேரகாலத்திலேயே இனங்கண்டு அவர் களின் தேவைகளையும் திறமைகளையும் ஆசிரியர் கள் உணர்ந்து பொருத்தமாக செயற்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்படவேண்டிய தாகும்.

கற்றல் குறைபாடுகளுடன் கூடிய மீத்திறன் மாணவர்களுக்கு உதவும் உபாயங்கள் பல இன்று கல்வியாளர்களால் முன்வைக்கப்படுகின்றன. இவற்றுள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலும், மாணவர்கள் தமது சொந்தக் கற்றலுக்கான பொறுப்பை ஏற்கச் செய்தலும் முக்கியமானவை. மாணவர்கள் தமது குறைபாடுகளை வெற்றி கொள் வதற்குத் தொழில்நுட்பம் உதவும். அதே வேளை, தமது சொந்தக் கற்றலுக்கான பொறுப்பை மாணவர்களே ஏற்கச்செய்யும் உபாயங்கள், இம் மாணவர்கள் தமது திறமைகளைத் தாமே உணர்ந்து தமது குறைகளை நிவர்த்தி செய்வதற்கு வழிகோலும். இன்று பாடசாலை ஆசிரியர்கள் யாவருமே இவ்வாறான உபாயங்களை அறிந்திருத் தல் அவசியம் என்பது அவர்களின் வாண்மைத் தேவையுமாகும்.

## References:

1. *Bley N.S. & Thornton, C.A.(1994) Teaching mathematics to student with Learning disabilities. Austin, TX: PRO-ED.*
2. *Mxtherss. W, Dewendra, T.o, & Piyaruma. K (1977). Special education in Srilanka Makaragama, Srilanka. Notional institute education*

# ஆற்றல்கள் பற்றிய ஓர் அறிமுகம்
## An Introduction to Abilities



திரு. க. கணேசநாதன்,
உடற்கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**எ**ந்தவொரு பெறுபேற்று விடயம் தொடர்பாகவும் பணி இலக்கு தொடர்பான ஆற்றல்கள் என்பது சிக்கலானதாகக் காணப்படும். ஒரு வாண்மைத்துவப் பணிக்குத் தேவைப்படும் ஆற்றல்களிலிருந்து மற்றொரு வாண்மைத்துவப் பணிக்குத் தேவைப்படும் ஆற்றல்கள் வேறுபடும். எனவே, ஒவ்வொரு மனிதனும் குறித்த பணி தொடர்பில் தேவைப்படும் ஆற்றல்களை முழுமையாகக் கொண்டிருக்க முடிவதில்லை. இதனால் குறித்த பணிக்குத் தேவைப்படும் ஆற்றல்களை பயிற்சியின் மூலம் விருத்தி செய்ய வேண்டியிருக்கும். அத்துடன் "பொருத்தமான வரை பொருத்தமான பணியில் அமர்த்துதல்" *(Write Man for the Write Job)* என்ற முகாமைத்துவ எண்ணக்கருவுக்கு அமைவாகப் பணியிலக்குகளை நிறைவு செய்யக்கூடிய ஆற்றல்களைக் கொண்டிருப்பவரை அல்லது எவரொருவருக்குத் தேவைப்படும் ஆற்றல்களை பயிற்சியின் மூலம் இலகுவாக வரவழைக்கமுடியுமோ அத்தகைய ஒருவரை குறித்த பணியில் ஈடுபடுத்துவதற்கு ஆற்றல்கள் தொடர்பான அறிவு இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. இதனால் இக்கட்டுரை ஆற்றல்கள் தொடர்பான அடிப்படைகளை அறிமுகம் செய்யும்வகையில் இடம்பெறுகின்றது.

### ஆற்றல் என்பதன் வரைவிலக்கணம்
**(Definition of Ability)**

ஆற்றல் என்பது பணியிலக்கு, நடத்தை, நடவடிக்கை தொடர்பில் தனிநபர் கொண்டிருக்கும் இயலளவாகும். இயல்பாக உள்ள திறன்களும் இதற்குள் அடங்கும். இவ்வாற்றல்களில் சிலவற்றை ஒருவருக்கு வகுத்து ஒதுக்கிக் கொடுக்கப்படும் பணியிலக்குகள் தொடர்பில் அவர் பயன்படுத்தவேண்டியிருக்கும். இவ்வாற்றல்களை இருவகையாக வகுத்து நோக்கலாம்.

1. அறிகை ஆற்றல் *(Cognitive Ability)*
2. உள இயக்க ஆற்றல் *(Psycho Motor Ability)*

### அறிகையாற்றல்

என்பது ஆய்வு உணர்வுத்திறன் அல்லது அறிவுக்கூர்மையினைக் *(Intellectual)* கருதும். இது ஒருவர் தனது பணியிலக்குத் தொடர்பாக என்ன?, எப்படி?, எங்கு?, ஏன்? செயற்படவேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளும் ஆற்றலையும், தனது பணி இலக்குகளுக்கு இடையிலான தொடர்புறவுகளையும், ஏனையோரது பணியிலக்குகளையும், அமைப்பின் பணியிலக்கு களையும் விளங்கிக்கொள்ளும் ஆற்றல்களையும் உள்ளடக்குவதாக அமையும். அத்துடன் சிறந்த தீர்மானங்களை மேற்கொள்ளும் ஆற்றலும் அறிகையாற்றலாகவே அமையும். உள இயக்க ஆற்றல் என்பது பணியிலக்குகளை நிறைவேற்று வதுடன் தொடர்புறும் சில இயல் அளவுகளாக அமையும். இது ஒருவரது செயற்பாடுகளுடனும், செயற்பாட்டு மட்டங்களுடனும் தொடர்புறு வதாக அமையும்.
உதாரணம்:

பாடசாலை - அதிக பௌதிக செயற்பாடுகள்

பல்கலைக்கழகம் - அதிக அறிகைத் தொழிற்பாடுகள்

### ஆற்றல் தொடர்பான சர்ச்சைகள்
**(Issues over Abilities)**

பொதுவாக ஆற்றல் என்பது பணியிலக்கை நிறைவேற்றுவதற்காகக் கொண்டிருக்கக்கூடிய இயலளவாகக் கருதப்படுகின்றது. இது ஒருவரது தனித்துவம் வாய்ந்த ஆற்றலாக அமையும். முன்னர் புத்திக்கூர்மை என்பது ஒருவரது பிறப்பின் மூலம் அவருக்குக் கிடைக்கப்பெற்ற விசேட ஆற்றலாகக் கருதப்பட்டது. எனினும், தற்போதுள்ள மதிப்பீட்டு முறைகள் தனிநபரது தற்போதைய அல்லது சமகால ஆற்றல்களை

அளவிடுவதாகவே காணப்படுகின்றது. இது ஒருவர் வெவ்வேறு மூலங்களிலிருந்து பெற்றுக்கொண்ட கற்றலின் விளைவாக கருதப்படுகின்றது.

பிறப்புரிமை அல்லது மரபுரிமை மூலம் பெறப்படும் ஆற்றல் என்ற கருத்துக்கு மாறான கருத்து நிலவுகின்றது. அதாவது ஒருவர் தனது கற்றல் அனுபவங்கள் வாயிலாக ஆற்றல்களை விருத்திசெய்கின்றார் எனவும், இது பிறப்பின் மூலம் கிடைக்கப்பெற்ற உள்ளார்ந்த ஆற்றல் அல்ல எனவும் கூறப்படுகின்றது.

ஆற்றல் தொடர்பான உயிரியலாளர்களின் கருத்து யாதெனில் மரபணுக்கள் மூலம் ஆற்றல் கடத்தப்படுவதாகக் கருதப்படுகின்றது. இது தனிநபர் வேறுபட்ட ஆற்றல் மட்டங்களுடன் பிறக்கின்றனர் எனக் கருதுகின்றது. அனுபவங்கள் ஆற்றல் விருத்திக்கு உதவுகின்றன எனவும் உயிரியலாளர்களது கருத்துக்கள் வலியுறுத்து கின்றன.

எனினும், இவ்வாறான வேறுபட்ட மாற்றுக் கருத்துக்களுக்கிடையில் ஏற்பட்ட ஒரு இணக்கப் பாடு யாதெனில் ***ஆற்றல்கள் என்பது உயிரியல் மற்றும் சூழல் காரணிகளின் செல்வாக்கிற்கு உட்படுவதாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.*** இது பிறப்பின் மூலம் கிடைக்கப்பெற்ற ஆற்றல்களை ஒரு குறித்த அளவுக்குப் பயிற்சி மற்றும் கற்றல் மூலம் விருத்தி செய்யலாம் எனக் கூறுகின்றது. சில ஆற்றல்கள் இலகுவில் பயிற்றுவிக்கப்பட முடியாதவை (தெறிவினை நேரம் - *reaction time*). சில ஆற்றல்கள் இலகுவில் பயற்றுவிக்கக்கூடியவை (தசைநார்களின் தாங்கும் திறன் - *muscular endurance*).

ஆய்வாளர்கள் ஒருவரது இளமைப்பருவத் தில் சூழலின் செல்வாக்கு அதிகம் காணப்படும் எனவும், வளர்ந்தோரில் சூழலின் செல்வாக்கு குறைவாகவே இருக்கும் எனவும், இளமைப்பருவம் குறுகிய காலம் என்பதையும் குறிப்பிடுகின்றனர்.

வளர்ந்தோர் தொடர்பில் அவர்களது நிரந்தர நடத்தைப்பண்புகளை அவர்களது ஆற்றல்கள் தீர்மானிப்பதையும், அதற்கேற்பவே அவர்களது குணாம்சங்கள் இருப்பதையும் முகாமைத்துவம் கருத்தில் கொள்ளவேண்டும்.

பொது ஆற்றல்கள், விசேட ஆற்றல்கள் என செயற்பாடுகள் தொடர்பில் ஆற்றல்கள் காணப்படினும் சிலர் பிறப்பின் மூலம் இத்தகைய பொது ஆற்றல்களைக் கொண்டுள்ளனர் என்ற கருத்தும் நிலவுகின்றது. எனினும், ஒருவர் எல்லா ஆற்றல்களையும் இயல்பாகவே மரபுரிமை மூலம் பெற்றுக்கொள்வதில்லை. ஒருவர் வேகம் என்ற ஆற்றலை இயல்பாக கொண்டிருக்கலாம் எனினும் பலம் என்ற ஆற்றலை கொண்டிருக்காமல் இருக்கலாம் இது மாறுதலாகவும் அமையலாம்.

குறித்த செயற்பாடுகளுக்குத் தேவையான ஆற்றல்களை இனங்கண்டு அதனை தனிநபரிடத்தில் விருத்தி செய்தல் முகாமையின் கடமையாகும்.

**அறிகை ஆற்றல் (Cognitive Ability)**

ஏற்கனவே நோக்கியவாறு பல சிறப்பு ஆற்றல்கள் காணப்படுகின்றன. இச்சிறப்பு ஆற்றல்கள் வெவ்வேறு வகையானவையாக அமைவதுடன் அவற்றிற்கான விபரிப்புக்களும் வேறுபடுகின்றன. 120 வகையான விசேட ஆற்றல்கள் ஆய்வாளர்களினால் பட்டியல் படுத்தப்பட்டு விபரிக்கப்பட்டுள்ளது. பொது வாக ஆற்றல்களை 10 - 20 வகையாக வகுத்து விபரிப்பது நடைமுறையாகவுள்ளது. இவ்வாற்றல் கள் கோட்பாட்டு ரீதியானவை. இவை நேரடி யாகவே முகாமையாளர்களுக்கு உதவிட முடியாது. முகாமையாளர்கள் தமது அனுபவ அறிவின் மூலம் குறித்த செயற்பாடுகள் வேண்டிநிற்கும் ஆற்றல்களை இனங்கண்டு கொள்வதன் மூலம் மனிதசக்தி பிரயோகத்தினை மேற்கொள்ளமுடியும்.

பொதுவாக இனங்காணப்பட்ட அறிகை ஆற்றல்களும் அவை தொடர்பான விபரிப்புக் களையும் பின்வரும் பட்டியல் புலப்படுத்து கின்றது.

| ஆற்றல்கள் Abilities | விபரிப்புக்கள் Description |
|---|---|
| நெகிழ்ச்சியும் வேகத்தின் முடிவும் Flexibility & Speed of Closure | அகக்காட்சி காணும் ஆற்றல் அகக்காட்சிக் களத்தை விரைவாக முழுமையாக தோற்றுவிக்கும் ஆற்றல் |
| சரளமாகப் பேசும் ஆற்றல் - வாக்கு வன்மை Fluency | • சொற்களை கருத்துச் செறிவாகத் தோற்றுவித்தல் *(Associative)*<br>• எண்ணங்களுக்குப் பொருத்தமான மொழி வெளிப்பாடு *(Expressional)*<br>• விரைவாக எண்ணங்களை உற்பத்தியாக்குதல் (Ideational)<br>• ஒரு தோற்றம் அல்லது விபரிப்புத் தொடர்பாக பொருத்தமான சொற்களை விரைவாக உபயோகித்தல் *(Word)* |
| விதிவருமுறை *Inductive reasoning* | கூறுகளாக வகுத்து எண்ணக்கருக்களைத் தோற்றுவித்து அவற்றை சோதித்து அறிந்து விதிகளை ஆக்கி கூறுகளின் தொடர்புறவுகளை இனங்காணும் ஆற்றல். |
| விதிவிளக்குமுறை *Deductive reasoning* | விதிகள் நடைமுறைகளுக்கமைவாக தனிப்பட்ட விடயத்தை நியாயம் கண்டு விதிவிலக்கானவற்றை நீக்கி விதிவழி முடிவு களுக்கு வரும் ஆற்றல். |
| இணைவு நினைவாற்றல் *Associative memory* | தொடர்பற்றவிடயங்களை ஞாபகப்படுத்திக்கொள்ள அவற்றின் சில அம்சங்களை நினைவில் பேணும் ஆற்றல். |
| நினைவாற்றலின் விசால அளவு *memory* | காலத்தொடர்பு சம்பவங்களை ஒருமுறை கிரகித்து அவற்றை *Span* மீண்டும் நினைவுபடுத்தி சமர்ப்பிக்கும் ஆற்றல். |
| இலக்கம் தொடர்பான வசதி *Number facility* | விரைவாக எண்கணிதத்தில் இலக்கங்களை இலாவகமாகக் கையாண்டு கணிப்பீடுகளை மேற்கொள்ளும் திறன் - மனக்கணிதம். |
| புலக்காட்சி வேகம் *Perceptual Speed* | இலக்கங்களை விரைவாகக் கண்டறியும் திறன், ஒப்பிடும் திறன். புலக்காட்சியாகப் பெறுபவற்றை வேகமாக அகக்காட்சியாக்கும் ஆற்றல். |
| பகுதி ஆற்றுப்படுத்தலும் கட்புலக் காட்சியும் *Spatial Orientation & Visualization* | பகுதியாக உள்வாங்கி ஆற்றுப்படுத்திப் பராமரிக்கும் விடயத்தை ஏனையோருக்கு புலக்காட்சியாக காட்சிப்படுத்தும் ஆற்றல். |
| வாய்மொழிப் புரிந்துகொள்கை Verbal Comprehension | விவாதத்துடன் தொடர்புறும் சொற்கள், அவற்றின் அர்த்தங்கள் மற்றும் பிரயோகம் தொடர்பாகப் புரிந்துகொள்ளும் திறன். |
| வாய்மொழி முடிவுகள் *Verbal Closure* | சொற்கள் தொடர்பாக சில எழுத்துக்கள் இல்லாதபோதும், எழுத்துக்கள் இடம்மாறித் தரப்படும் போதும், வேறு எழுத்துக்களுடன் கலந்து காணப்படும் போதும் அவற்றை சரியாகக் கையாண்டு தீர்க்கும் ஆற்றல். |
| கட்புலக்காட்சி நினைவாற்றல் *Visual memory* | உருவம், வடிவம், அமைவிடம் என்பன தொடர்பாகவும், உருவ ஆற்றுப்படுத்தல் விடயங்களையும் மீள நினைவுபடுத்தும் ஆற்றல். |

மேற்படி அறிகையாற்றல் வகைகளையும் அவற்றின் விபரிப்புக்களையும் அறிந்திருப்பதன் மூலம் குறித்தவொரு பணியிலக்குடன் சம்பந்தப் படும் இவ்வாற்றல்களின் தேவைகளுக்கேற்ப பயிற்சிகள் மூலம் பணியிலக்கை நிறைவு செய்ய முற்படும் மனிதசக்திகளை வலுப்படுத்த முடியும்.

**உள இயக்க ஆற்றல் (Psycho Motor Ability)**

அநேக பணியிலக்குகள் அறிகை ஆற்றலு டன் உள இயக்கஆற்றலையும் வேண்டி நிற்கின்றன. முகாமைத்துவத்துறையும் உளவியக்க ஆற்றலை அதிகம் வேண்டிநிற்கின்றது. மேலும், ஆய்வுகள் பணியிலக்குகள் நிறைவேற்றப்

படுவதற்கு உளவியக்க ஆற்றல்களும், உடலியக்க ஆற்றல்களும் தேவைப்படுவதாக எடுத்தியம்புகின்றன. இவ்வாற்றல்களைப் பொதுவாக பின்வருமாறு பட்டியல்படுத்தி விபரித்துக் கொள்ள முடிகின்றது.

| ஆற்றல்கள் Abilities | விபரிப்புக்கள் Description |
|---|---|
| நிலையான பலம் *Static Strength* | இவ்வாற்றலானது உயர்ந்த தடைக்கெதிராகப் பிரயோகிக்கப்படும் இழுத்தல், தள்ளுதல், உயர்த்துதல் போன்ற வற்றை உள்ளடக்கும். |
| திடீர் எழுச்சிப் பலம் *Explosive Strength* | திடீரென வெளிப்படுத்தும் பலமாக இது அமையும். உதாரணம்: ஓட்டப்பந்தய ஆரம்பம் |
| விசையியக்கப் பலம் *Dynamic Strength* | மீண்டும் மீண்டும் செய்யும் உடல் அசைவுகள், தசைகளின் தாங்கும் ஆற்றல், தசைநார் அப்பியாசங்கள் என்பவற்றை உள்ளடக்கும். |
| தாங்கும் பலம் - சகிக்கும் பலம் *Stamina Strength* | இதயம், சுவாசத் தொகுதி தொடர்பான தாங்கும் ஆற்றல். இது உடலின் தாங்கும் நேரத்தை நீடிப்பதாகும். இது பயிற்சியின் மூலம் விருத்திசெய்யப்படும். |
| நெகிழ்ச்சியை விரிவாக்குதல்- நெகிழ்ச்சியை நீடித்தல் *Extent flexibility* | உடலை வளைக்கும் ஆற்றல். விரைவாக மீண்டும் மீண்டும் உடற் செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் தொடர்புறும் ஆற்றல்கள். |
| விசையிக்க நெகிழ்ச்சி *Dynamic Flexibilty* | இது விரைவாக அல்லது வேகமாக உடலை வளைக்கும் ஆற்றலாகும். அதாவது உடலின் தசைகள் விரைவாக விரிதல் அல்லது சுருங்குதலில் இருந்து மீளும் இயலளவாகும். |
| முழு உடல் சமநிலை - பூரண உடல் சமநிலை *Gross Body Equilibrium* | இது சமநிலையைப் பாதிக்கும் விசைக்கெதிராக சமநிலையைப் பேணும் ஆற்றலாகும். இது உடலை சுயமாக சமநிலையில் பேணுவதைக் கருதும். உதாரணம்: கயிற்றில் நடக்கும்போது தடியினை பயன்படுத்தாது உடற்சமநிலையினைப் பேணுதல். |
| புதிய சூழ்நிலைக்குப் பிரதி பலித்தல்- திசை முகப்படுத்தல் *Response Orientation* | பொருத்தமான பிரதிபலிப்பை சூழ்நிலைக்கேற்ப தெரிவுசெய்து வெளிப்படுத்தும் ஆற்றல். இது பிரதிபலிப்பை தெரிவுசெய்து நிறைவேற்றும் ஆற்றலாகும். |
| தெறிவினை நேரம் *Reaction time* | இது குறித்த தூண்டலிற்கு உடனடியாக பிரதிபலிப்பை வெளிப்படுத்தும் ஆற்றலாகும். அதாவது தூண்டி அல்லது துலங்கல் தெரிவுகளுக்கு இடம் இல்லாது தரப்பட்ட தூண்டிக்கு விரைவாகத் துலங்கும் தன்மையாகும். உதாரணம்: தடியொன்றை கையிலிருந்து விழவிட்டு மீண்டும் உடனடியாகப் பிடித்தல். |
| அவயவங்களின் வேகமான அசைவு*Speed of limb movement* | இது கை, கால்களை விரைவாக அசைக்கும் ஆற்றலாகும். இது அசைவில் இசைவாக்கம் அல்லது திருத்தத்தன்மை என்பதை விட வேகமாக அசைத்தலைக் கருதும். உதாரணம்: நீச்சல் |
| மணிக்கட்டு - விரல்கள் என்பவற்றின் வேகம் *Wrist – Finger speed* | இது மணிக்கட்டு மூட்டு, கை, விரல்கள் என்பவற்றை விரைவாக அசைக்கும் ஆற்றலைக் குறிக்கும். உதாரணம்: தட்டச்சு |
| உடலின் முழுமையான இயைபாக்கம் *Gross boy coordination* | உடல் முழுவதும் அசைவில் ஈடுபடும் போது முண்டம், அவயவங்கள் என்பவற்றின் இசைவுடைய அசைவுகளைத் தோற்றுவிக்கும் ஆற்றல். உதாரணம்: நடனம் |

| | |
|---|---|
| வெவ்வேறு அவயவங்களின் இசைவாக்கம் *Multi Limb Coordination* | முண்டம், ஒய்விலுள்ள போது ஒன்றுக்கு மேற்பட்ட அவயவங்களின் அசைவில் இசைவாக்கம் பேணும் ஆற்றல். உதாரணம்: வாகனம் செலுத்துதல் |
| விரல்கள் இலாவகமாக அசைதல் *Finger Dexterity* | விரல்கள் திறனுடன் கூடிய இயைபாக்கப்பட்ட இலாவகமாக அசையும் ஆற்றல். உதாரணம்: வீணை மீட்டல் |
| கையின் செயல்களில் இலாவகம் *Manual Dexeterity* | புயங்கள் கைகள் என்பவற்றின் திறன் மிகு இயைபாக்கப்பட்ட அசைவு ஆற்றல். உதாரணம்: ஏந்திப்பிடித்தல் *(Catching)* |
| புயம் - கை என்பவற்றின் உறுதித்தன்மை *Arm – Hand Steadiness* | இது புயம் கை என்பவற்றை உறுதியாகப் பேணும் பலம் வேகம் என்பவற்றைக் கருதும். உதாரணம்: துப்பாக்கி சுடுதல், ஈட்டி எறிதல் |
| கட்டுப்பாட்டு வீதம் *Rate Control* | எதிர்வுகூற முடியாத வேகம் திசை என்பவற்றுடன் நகரும் பொருளுக்கேற்ப இயக்கத்தை சீர் செய்யும் ஆற்றல். உதாரணம் : அறைந்து அனுப்பப்படும் ரெனிஸ் பந்தை எதிர்த்து ஆடுதல் *(receiving a smash in tennis)* |
| துல்லியமான கட்டுப்பாடு *Control precision* | எதிர்வுகூறத்தக்க வேகம் திசை என்பவற்றில் இயங்கும் பொருட்களுக் கேற்ப இயந்திரம் அல்லது உபகரணங்களை நிலைப்படுத்தும் ஆற்றல். உதாரணம்: கத்தி சாணை பிடித்தல் |

மேற்படி உடல் மற்றும் உளவியக்க ஆற்றல்களை அறிந்து கொள்வதன் மூலம் பணியிலக்குகளை மேற்கொள்ளும் போது தேவைப்படும் இவ் ஆற்றல்களின் அளவுகளுக் கேற்ப மனிதசக்தியை பயிற்சியின் மூலம் தயார்படுத்தி பெறுபேறுகளை உயர்வடையச் செய்ய முடியும்.

ஆற்றல்களை இனங்காணுதல் என்பது மனித வளத்தினை முகாமை செய்வதில் இன்றியமையாத கருமமாகும். இதற்கு ஆற்றல்கள் பற்றிய அடிப்படை அறிவு முகாமையாளருக்க அவசியமாகும். ஒரு குறித்த பணியிலக்கை நிறைவு செய்வதற்குத் தேவைப்படும் ஆற்றல்களையும் அது தொடர்பாக ஒருவர் கொண்டிருக்கும் ஆற்றலையும் ஒப்பீடு செய்து ஆற்றல் இடை வெளியினை நன்கு திட்டமிட்ட பயிற்சியின் மூலம் விருத்தி செய்து தேவைப்படும் ஆற்றலை வரவழைப்பது என்பது மிகச்சிறந்த முகாமைத்துவ நுட்பமும் கலையும் ஆகும். இதன் மூலம் மனிதவளம் ஆர்வத்துடனும் திருப்தியுடனும் பணியிலக்குகளில் ஈடுபடுவதற்கு உதவ முடியும்.

எனவே, மனிதவள முகாமையில் ஆற்றல்கள் என்பது தனிநபர் வேறுபாடுகளுடன் தொடர் புறும் ஒரு முக்கிய விடயமாகக் காணப்படுவ தனால் இதனை அறிவு பூர்வமாகக் கையாள்வதன் மூலம் பெறுபேற்று உயர்வுக்கு வகைசெய்ய முடியும்.

**Reference**

1. Meyer, J.P., & Allen, N.J. (1997). Commitment in the workplace: Theory, research, and application. Thousand Oaks, CA: Sage Publications Inc.
2. Shapiro, G.L., & Farrow, D.L. (1988), Mentors and others in career development. In S. Rose & L. Larwood (Eds.), Women's careers: Pathways and pitfalls. New York: Praeger.
3. Sonnenfeld, J.A., & Peiperl, M.A. (1988). Staffing policy as a strategic response: A typology of career systems. Academy of Management Review, 13, 588 - 600.
4. Steckel, R., & Simons, R. (1992). Doing best by doing good. New York: Penguin Books.
5. Storey, J. (1995). Human resource management: Still marching on, or marching out? In J.Storey(Ed.), Human resource management (pp.3-32). London: Routledge.

□□□

# கல்வி நிர்வாக சேவையில் பால்நிலைசார் சமத்துவம் பற்றிய ஒரு சர்வதேச நோக்கு



கலாநிதி
திருமதி ச. குகமூர்த்தி,
விரிவுரையாளர், கல்விப்பீடம்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

அறிமுகம்

பாால்நிலைசார் சமத்துவ நோக்கு பெண்களுக்கும் ஆண்களுக்கும் சம உரிமை இருத்தல் வேண்டுமென்றும் இருபாலாருக்கும் சமவாய்ப்புக்கள் வழங்கப்படல் வேண்டுமென்றும் கூறுகின்றது. கல்வியில் பால்நிலைசார் சமத்துவம் என்பது கல்வி நடவடிக்கைகளின் போது, பெண்களும் ஆண்களும் ஒரே மாதிரியான நன்மைகளை அனுபவித்தல் மற்றும் அவர்களைக் கையாளும்முறை மற்றும் விளைவுகள் பயன்கள் என்பன ஒரே மாதிரியாக இருத்தல் வேண்டுமென்பதைக் குறிக்கின்றது. ஆனால் யூனிசெப் (2006) தனது அறிக்கையில் "பால்நிலைசார் பாரபட்சங்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் ஊடுருவி நிறைந்துள்ளது என்றும் பெண்களுக்கு கல்வி மற்றும் தொழில்வாய்ப்பில் ஒரு வரையறைக்குட்பட்ட வாய்ப்புக்கள் வழங்கப்படுவதின் வாயிலாக இது வெளித்தெரிகின்றது." எனவும் குறிப்பிட்டுள்ளது.

2000ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட மில்லேனியம் அபிவிருத்தி இலக்குகள் ஏட்டில் "பால்நிலை சமத்துவத்தை முன்னெடுப்போம் பெண்களை வலுவூட்டுவோம்" என்பதை ஒரு இலக்காகக் குறிப்பிட்டு இருப்பினும் இக்குறியிலக்கு ஒரு வரையறைக்கு உட்பட்ட விதத்திலேயே கல்வித்துறையில் பால்நிலைசார் வேறுபாட்டினை ஒழிப்பது தொடர்பாக செயற்படுகிறது எனலாம்.

பால்நிலைசார் சமத்துவமின்மைப் பிரச்சினையானது சமூகக்கட்டமைப்பு சார்ந்தது என்பதால் கொள்கைகள் வழியாக இதனைத் தீர்த்தல் இயலாது. சமூக அமைப்பின் பல செயற்பரப்புகளில், பெண்களுக்கும் ஆண்களுக்குமிடையே சமத்துவமற்ற நிலை இருக்கிறது. பதவி உயர்வு விவகாரங்கள், ஒரே தன்மையான பணிகளுக்கு வெவ்வேறான ஊதியங்கள் வழங்கப்படுதல் போன்றவற்றில் வெவ்வேறு விதமான கணிப்புகள் செயற்படுகின்றன.

இப்பிரச்சினைகள் ஒரு நாட்டினுள்ளேயே வெவ்வேறு சமூகப்பிரிவினர் மத்தியில் வெவ்வேறு அளவுகளில் நிலவுகின்றன. இனத்துவக் குழுக்கள், பொருளாதார வர்க்கப்பிரிவுகள், சமூக அந்தஸ்த்துக்களைப் பேணும் குழுக்கள், பூகோளவியற் பிராந்தியங்கள், வயதுக்குழுக்கள், பல்வேறு கல்வித்தரங்கள் கொண்ட குழுக்கள், தொழிற் பிரிவுகள் என்பவற்றில் இப்பாரபட்சம் உள்ளது. பெண்கள் தேசிய மட்டத்திலும் உள்ளூர் மட்டங்களிலும் அவ்வளவாக உயர் பொறுப்புக்களை வகிக்கவில்லை என்பதோடு உலகில் அரசதுறைசார்ந்த உயர்பதவிகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவாகவே உள்ளது.

சமூக வகிபங்கு கோட்பாடு, ஆண்களும் பெண்களும் வெவ்வேறான வகிபங்குகளை நிறைவேற்றுவதால் அவை, அவர்கள் மீது வெவ்வேறான சமூக, உளவியல் தேவைப்பாடுகளை சுமத்துகின்றதெனக் குறிப்பிடுகின்றது. அலெக்ஸ் ஏக்லி (Alice Eagly) என்பவரால் முன்வைக்கப்பட்ட சமூக வகிபங்கு கோட்பாடு, நாம் எதற்காக பால்நிலை மாறாமரபு (Gender Stereotype) வழக்கங்களை ஏற்று நடக்கின்றோம் என்பதற்கான விளக்கத்தை வழங்குகிறது. பால்நிலை மாறாமரபு வழக்கங்களை ஏற்று நடப்பதற்கான முக்கிய காரணம் ஆண்களும் பெண்களும் தத்தமக்கான சமூக வகிபங்குகளின் படி செயற்படுவதும் அந்த வகிபங்குகள் பால்நிலையை அடிப்படையாக கொண்டு வகுக்கப்பட்டமையும் ஆகும் (ஏக்லி, 1987). இவர் இவ்விதம் பெண்களும் ஆண்களும் பால்நிலை சார்ந்த நடத்தைகளையே வெளிப்படுத்துவர் என்றும் இதற்கான காரணமாக அவர்கள் நிறைவேற்றிவரும் சமூக வகிபங்குகள் வெவ்வேறு எதிர்பார்ப்புகளுடன் இணைந்தவையாகவும் வெவ்வேறு நடத்தைப்போக்குகளை தேவைப்படுத்துவனவாகவும் உள்ளமையினாலாகும் எனவும் கூறியுள்ளார். இந்த சமூக வகிபங்குகள் இளைய சந்ததியினராலும் உள்வாங்கப்

படுகின்றன. காரணம் இளையோரும் வளர்ந்தோர் மத்தியில் அவர்களின் கலாசார பின்னணியில் சமூகமயப்படுத்தப்படுகின்றனர்.

இத்தகைய ஒரு கண்ணோட்டத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை கல்வி நிர்வாகச் செயற்பாடுகளில் நோக்கின் இங்கும் ஆசிரியர் சேவையில் இருக்கின்ற பிரதிநிதித்துவத்தை பிரதிபலிக்கும் வகையில் அங்கத்துவம் இல்லை என்பதால் பால்நிலைசார் சமநிலையற்ற போக்கை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

**உயர் கல்வியில் பெண்கள்**

1975ஆம் ஆண்டு தொடக்கம் சமூகத்தில் பெண்களின் நிலை தொடர்பாக ஆராய்வதற்காக நடாத்தப்பட்ட சர்வதேச மகளிர் மகாநாடுகள் உலகில் பிரதேசரீதியாகக் காணப்படும் வேறுபட்ட அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளாலும் குறித்ததொரு பிரதேசத்தின் கலாசாரம் சார்ந்த காரணிகளாலும் பெண்களின் சமூக அந்தஸ்த்தில் பால்நிலைசார்ந்த ஏற்றத்தாழ்வுகள் பொதுவாகக் காணப்படுவதாகக் குறிப்பிட்டு பாற்சமநிலையின்மையை நீக்குவதற்காக ஒரு வலுவான கருவி பெண்களின் கல்வித்தரத்தை அதிகரிப்பதே என்பதையும் சுட்டிக்காட்டுகின்றன. இதற்காக உலகளாவிய ரீதியில் எடுக்கப்பட்ட "சகலருக்கும் கல்வி" என்ற செயற்றிட்டம் சிறந்ததொரு எடுத்துக் காட்டாகும்.

சர்வதேச சமூகம் பெண்களுக்கான உயர் கல்வி வாய்ப்பினை அதிகரித்தல் பெண்களின் சமூக அந்தஸ்த்தை அதிகரிப்பதற்கான ஒரு உபாயமாக உணர்ந்துள்ளது. இதற்கமைய சர்வதேச ரீதியில் பெண்கள் உயர்கல்வியில் பங்குபற்றும் வீதம் அதிகரித்துள்ளது. ஐக்கிய அமெரிக்கா, கனடா, கிழக்கு ஐரோப்பா, அவுஸ்திரேலியா, நியுசிலாந்து, கொங்கொங், மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளின் பட்டக்கல்விச் செயற்பாடுகளில் அண்ணளவாக 50% இற்கு மேற்பட்டவர்களாக பெண்கள் உள்ளனர் (ஜெய இந்திரேசன் -2007).

இந்தியாவின் பல்கலைக்கழக மானியங் கள் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை (2006) பெண்கள் உயர்கல்வியில் பங்குபற்றுதல் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளதென சுட்டிக்காட்டியுள்ளது. 1950-1951 ஆம் ஆண்டுகளில் 10% ஆக இருந்த பெண்களின் உயர்கல்வி பங்குபற்றுதல் வீதம் 2006 ஆம் ஆண்டில் 40% ஆக அதிகரித்துள்ளது. ஏறத்தாழ 45 இலட்சத்திற்கு மேற்பட்ட பெண்கள் உயர்கல்வியில் ஈடுபடுவதாக இவ் அறிக்கை குறிப்பிடுகின்றது.

இலங்கையில் பெண்கள் கல்வியை நோக்கின் படித்த மத்தியதர வர்க்கத்தினரிடையே எழுந்த "தேசிய கல்வி" சிந்தனைகளும் அதன் விளைவாக அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்வி மற்றும் கிராமப்புறங்களுக்கான கல்வி விருத்திச்செயற்பாடுகளும், அதனைத் தொடர்ந்து காலத்திற்குக்காலம் இலங்கை அரசாங்கங்களினால் செயற்படுத்தப் பட்ட புலமைப்பரிசில் திட்டங்கள், இலவச பாடநூல் விநியோகம், பாடசாலைகளுக்கான விசேட போக்குவரத்து சேவை, மதிய உணவுத் திட்டங்கள், இலவச சீருடை போன்ற கல்வி நலன்பேண் திட்டங்கள் பெண்களுக்கான கல்விவாய்ப்பிலும் எழுத்தறிவு வீதத்திலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தின. கீழ்வரும் அட்டவணை பெண்களின் எழுத்தறிவின் வளர்ச்சி வீதத்தை எடுத்துக் காட்டுகின்றது.

அட்டவணை 1

பால்நிலைசார் அடிப்படையில் எழுத்தறிவு வீதம் – இலங்கை

| ஆண்டு | 1963 | 1971 | 1981 | 1991 | 1994 | 96/97 | 2001 | *03/04 |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண் | 85.7 | 85.6 | 91.1 | 91.1 | 92.5 | 94.3 | 92.3 | 94.9 |
| பெண் | 55.5 | 70.9 | 83.2 | 83.2 | 87.9 | 89.4 | 89.2 | 91.3 |
| மொத்தம் | 77.0 | 78.5 | 87.2 | 86.9 | 90.1 | 91.8 | 90.7 | 93.0 |

Source;Gunqwarena, C.(2005)
*WWW.Cbls.gov.lk

அட்டவணை 2 இல் தரப்பட்டுள்ள தரவுகளை நோக்கின் பொறியியல், நில அளவை, கணினி விஞ்ஞானமும் தகவல் தொழில் நுட்பமும் போன்ற கற்கைநெறிகளில் பெண்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவும், கலைத்துறை சார்ந்த கற்கைநெறிகளில் பெண்களின் எண்ணிக்கை மிகக் கூடுதலாகவும் இருக்கின்றமை பால்நிலைசார் சமநிலையற்ற தன்மையின் வெளிப்பாடு எனலாம். பொதுவாக நோக்கின் 1990/1991 ஆம் ஆண்களில் 47.7% ஆக இருந்த பங்குபற்றுதல் 2001/2002 ஆண்டுகளில் 53.8% ஆக அதிகரித்து உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அட்டவணை 2

பால்நிலைசார் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி - இலங்கை

| ஆண்டு | ஆண்டு | | ஆண்டு | | ஆண்டு | | ஆண்டு | | ஆண்டு | | ஆண்டு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| துறை | மொ | பெ% | மொ | பெ% | மொ | பெ% | மொ | பெ% | மொ | பெ% | மொ | பெ% |
| கலை | 2387 | 63.3 | 3101 | 64.4 | 3993 | 69.7 | 3865 | 69.8 | 3794 | 71.4 | 4039 | 73.03 |
| முகாமைத்துவம் | 638 | 43.6 | 845 | 41.3 | 1433 | 50.9 | 1425 | 51.9 | 1598 | 46.6 | 1531 | 53.2 |
| வர்த்தகம் | 804 | 47.6 | 882 | 49.5 | 924 | 50.8 | 935 | 51.6 | 887 | 52.8 | 837 | 54.4 |
| சட்டம் | 189 | 59.5 | 198 | 61.1 | 210 | 58.1 | 193 | 78.7 | 201 | 7.6 | 200 | 79.5 |
| விஞ்ஞானம் | 1256 | 42.6 | 1108 | 44.8 | 2764 | 39.1 | 2671 | 35.9 | 2660 | 37.6 | 2665 | 38.3 |
| மருத்துவம் | 828 | 43.1 | 876 | 40.9 | 893 | 44.0 | 896 | 51.1 | 881 | 47.6 | 871 | 53.3 |
| பல் மருத்துவம் | 73 | 43.8 | 76 | 51.3 | 78 | 52.6 | 91 | 46.2 | 87 | 58.4 | 86 | 45.3 |
| மிருகமருத்துவம் | 45 | 75.8 | 70 | 52.8 | 82 | 48.8 | 91 | 56.0 | 76 | 57.9 | 87 | 37.9 |
| விவசாயம் | 289 | 46.4 | 273 | 47.9 | 670 | 54.5 | 646 | 52.8 | 721 | 54.9 | 624 | 50.5 |
| பொறியியல் | 636 | 10.5 | 722 | 0.2 | 738 | 17.7 | 875 | 14.7 | 926 | 16.3 | 985 | 18.1 |
| கட்டிடக்கலை | 46 | 54.4 | 45 | 68.9 | 58 | 55.2 | 56 | 69.6 | 76 | 59.6 | 102 | 74.5 |
| கணினி விஞ்ஞானமும் தகவல் தொழில் நுட்பமும் | | | | | | | | | | | 106 | 27.4 |
| மொத்தம் | 7238 | 47.7 | 8464 | 48.1 | 11896 | 52.4 | 11805 | 51.5 | 11962 | 52.1 | 12144 | 53.8 |

Source : University Statistical Handbook

வளர்ச்சி அடைந்த சர்வதேச நாடுகளுக்கு ஒத்தவகையில் இலங்கையிலும் உயர்கல்வியில் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்தமை குறிப்பிடத்தக்க ஒரு முன்னேற்றகரமான குறிகாட்டி எனினும் கல்வி நிர்வாக சேவையில் இவர்களின் பிரதிநிதித்துவம் குறைவான நிலையில் உள்ளது.

## கல்வி நிர்வாகத்தில் பெண்கள்

சர்வதேச ரீதியில் ஆசிரிய சேவையில் பெண்களின் பிரதிநிதித்துவத்திற்கு பொருந்தக் கூடிய வகையில் கல்வி நிர்வாக சேவையில் பெண்களின் பங்களிப்பு இல்லை என்ற குற்றச்சாட்டு பரவலாகப் பல நாடுகளினாலும் முன்வைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சர்வதேச தொழிலாளர் அமைப்பின் 2003 ஆம் ஆண்டிற்கான வருடாந்த தொழிற் புள்ளி விபரங்களின்படி ஆண்டு 2000 தொடக்கம் 2002 வரையிலான காலப்பகுதியில் பொதுவாக நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சேவையில் பெண்களின் பங்களிப்பு ஐக்கிய அமெரிக்காவில் உலகில் மிக உயர்ந்தவீதமாக 45.9% ஆகக் காணப்படுவதாகவும் இது ஜப்பானில் 8.9% பாகிஸ்தானில் 8.7% வங்களாதேசத்தில் 8.5% சவுதிஅரேபியாவில் 0.9% ஆகக் காணப் படுவதாக எடுத்துக்காட்டு கின்றது.

அட்டவணை 3: உலக நாடுகளின் பல்கலைக்கழகங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம்

| நிறுவனங்கள் | அங்கத்தவா் | பெண்தலைவா்களைக் கொண்டுள்ள நிறுவனங்கள் (எ/வீ) |
|---|---|---|
| ஆபிரிக்க பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பு | 120 | 6 |
| அரேபிய பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பு | 103 | 2 |
| பொதுநலவாய பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பு | 463 | 37[1] |
| பிரான்சிய மொழி பேசும் பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பு | 270 | 5- 7% |
| ஐரோப்பிய பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பு | 497 | 6-8% |
| ஆசிய பசுபிக் பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பு | 140[2] | 5% |
| அமெரிக்காவுக்கான உயர்கல்விக்கான நிறுவனம் | 350 | 5%[3] |
| லத்தீன் அமெரிக்காவுக்கான பல்கலைககழகங்களின் ஒன்றியம் | 177 | 47 |

சர்வதேச ரீதியில் பல்கலைக்கழகங்களில் பெண் தலைமைத்துவத்தின் பிரதிநிதித்துவ நிலைமையினை அட்டவணை 3 எடுத்துக் காட்டுகின்றது.

[1] 10 in non ACU Member Universities
[2] founding Member Universities
[3] 14% in Brazil
Source Highter Education and Woemen: Issues and Perspectives, UNESCO Secreteriat, August, 1998.

அட்டவணை 4
இந்திய பல்கலைக்கழக
உயர்பதவிகளில் பெண்களின் பிரதிநிதித்துவம்

| பதவிகள் | எண்ணிக்கை | | பெண்களின் |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | பிரதிநிதித்துவ வீதம் |
| உபவேந்தர் | 70 | 9 | 11 |
| பீடாதிபதி | 367 | 50 | 12 |
| பதிவாளர் | 77 | 6 | 7 |
| பிரதிப் பதிவாளர் | 298 | 27 | 8 |
| உதவிப் பதிவாளர் | 504 | 67 | 12 |
| பரீட்சைக் கட்டுப் பாட்டாளர் | 57 | 5 | 8 |
| நிதி அலுவலர் | 66 | 3 | 4 |
| நூலகர் | 51 | 9 | 15 |

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அட்டவணை 5 எடுத்துக்காட்டுகின்றது.

அட்டவணை 5
இலங்கைப் பல்கலைக்கழக கல்விசார் பதவிகளில்
பால்நிலைசார் அடிப்படையில் பிரதிநிதித்துவம்

| பதவி | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| பேராசிரியர் | 210 | 77.8 | 60 | 22.2 |
| இணைப்பேராசிரியர் | 189 | 88.7 | 24 | 11.3 |
| சிரேஸ்ட விரிவுரையாளர் | 957 | 66.9 | 474 | 33.1 |
| விரிவுரையாளர் (தகுதிகாண்) | 745 | 60.5 | 486 | 39.5 |

இலங்கை அதிபர் சேவையில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அட்டவணை 6 எடுத்துக் காட்டுகின்றது.

அட்டவணை 6
இலங்கை அதிபர் சேவையில் பால்நிலைசார்
அடிப்படையில் பிரதிநிதித்துவம் - 2001

| சேவை வகுப்பு | ஆண் (%) | பெண் (%) | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| வகுப்பு I | 61.7 | 38.3 | 281 |
| வகுப்பு 2I | 67.7 | 32.3 | 4,008 |
| வகுப்பு 2 II | 61.5 | 38.5 | 1,548 |

இந்திய உயர்கல்வி நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை நோக்கின் 90 பல்கலைக் கழகங்களில் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் உபவேந்தர் பதிவாளர் போன்ற உயர் பதவிநிலைகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவாக உள்ளதென ராஜ்புட் (2002) குறிப்பிட்டுள்ளார் அட்டவணை 4 இந்தியாவில் கல்விநிர்வாகப் பதவிகளில் பெண்களின் பிரதிநிதித்துவ நிலையை எடுத்துக் காட்டுகின்றது.

இலங்கை கல்விநிர்வாக சேவையில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அட்டவணை 7 எடுத்துக்காட்டுகின்றது.

அட்டவணை 7
இலங்கை கல்வி நிர்வாக சேவையில் பால்நிலைசார்
அடிப்படையில் பிரதிநிதித்துவம் - 2001

| சேவை வகுப்பு | ஆண் | பெண் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| வகுப்பு I | 33.3 | 67.7 | 09 |
| வகுப்பு II | 66.7 | 33.3 | 156 |
| வகுப்பு III | 57.3 | 42.7 | 157 |

மேலே எடுத்துக் காட்டப்பட்ட தரவுகளின் அடிப்படையில் நோக்கின் விதிவிலக்காக இலங்கை கல்விநிர்வாக சேவை வகுப்பு 1 இல் 67.7% ஆக பெண்களின் பிரிதிநிதித்துவம் உயர்வாக இருக்கின்ற நிலைமையைத்தவிர ஏனைய உயர்பதவி நிலைகளில் இலங்கை, இந்தியா மற்றும் உலகின் பல நாடுகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவாக இருக்கின்றமை தெளிவாகின்றது.

### பெண்களின் தொழில்விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

சர்வதேச ரீதியாக நடாத்தப்பட்ட ஆய்வு முடிவுகளின்படி பெண்களின் தொழில் விருத்தியில் பல காரணிகள் விசேடமாக பால்நிலைசார் காரணிகள் பல செல்வாக்குச் செலுத்துவதாக இனங்காணப்பட்டுள்ளது. பால்நிலைசார் வார்ப்பு எண்ணங்கள் இன்றும் பெண்களின் தொழில் விருத்தியில் செல்வாக்குச் செலுத்துகின்றன. பெண் நிலைச் சிந்தனையாளர்கள் பின்வரும் வார்ப்பு எண்ணங்கள் பெண்களின் தொழில் விருத்தியில் செல்வாக்குச் செலுத்துவதாக இனங் கண்டுள்ளனர்.

1. பெண்கள் பாரம்பரியமற்ற தொழில்களுக்கு பொருத்தமற்றவர்கள்
2. முகாமைத்துவம் சார்ந்த வகிபங்குகளை பெண்களால் சிறப்பாக செய்யமுடியாது
3. முகாமைத்துவ செயற்பாடுகளில் ஈடுபட முடியாதவகையில் மனப்பாங்கு ரீதியிலான தடைகள் பெண்களுக்கு உள்ளன.

4. அரசியல் விழிப்புணர்வு குறைவு
5. விளக்கமான சிறந்த தொழில் வடிவமைப்பு இல்லை
6. தொழில்நுட்ப, முகாமைத்துவத் திறன்கள் குறைவு
7. பெண் என்ற அடிப்படையிலான சிறுபராய வளர்ப்புமுறையினால் பிரச்சினைகளையும் சவால்களையும் சரியான முறையில் கையாளத் தெரியாமை
8. பொறுப்புக்களை உரியமுறையில் நிறைவேற்ற முடியாதவர்கள்

மேற்குறித்த சமூகத்தின் பால்நிலைசார்ந்த எண்ணங்கள் மட்டுமல்ல லுயிக் என்பவர் 2002 இல் "கோளமயமாக்கலும் தென்கிழக்காசி யாவின் உயர்கல்வி முகாமைத்துவத்தில் பெண்களும்" என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவின்படி கலாசார ரீதியாகக் காணப்படும் கண்ணுக்குப்புலப்படாத தடைகள் *(glass ceiling)* பெண்களின் தொழில் முன்னேற்றத்திற்கு தடைகளாக இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார். இதனை சர்வதேச தொழிலாளர் அமைப்பு (2004) அறிக்கையும் உறுதிப்படுத்துகின்றது. சர்வதேச தொழிலாளர் அமைப்பு (2000) மட்டுப்படுத்தப் பட்ட தொழில்வாண்மைக்கான பயிற்சி மற்றும் முகாமைத்துவ பயிற்சிகள் பெண்களின் தொழில் விருத்திக்கு தடையாக இருப்பதாக சுட்டிக்காட்டு கின்றது. இத்தடைகளைத் தாண்டி தமது தொழிலில் முன்னேறுவதற்கு பெண்கள் தமது குடும்ப வாழ்க்கை, தொழில் வாழ்க்கை இரண்டை யும் சமநிலைப்படுத்தும் வகையில் பொருத்தமான இலக்கு, திட்டம் என்பவற்றை சரியான முறையில் வடிவமைத்தல் வேண்டும்.

## நிறைவுரை

பால்நிலைசார் சமநிலையை அதிகரிக்கும் வகையில் பெண்கள் தமது தலைமைத்துவ குணவியல்புகளை அதிகரித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் தலைமைத்துவ இயல்புகள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படுதல் வேண்டும்.

1. பிரச்சினை தீர்த்தல் திறனை வளர்த்தல்
2. மாற்றங்களை ஏற்றுக்கொள்ளலும் அதனை முகாமைசெய்தலும்
3. சவால்மிக்க விடயங்களை கையிலெடுத்தலும் அவற்றை சரியானமுறையில் கையாளலுதலும்
4. நேர் மனப்பாங்கான வகிபங்குகள்
5. என்னால் முடியுமென்ற ஆவல்மிக்க ஈடுபாடு
6. அரசியல் சூழ்நிலையை விளங்கிக்கொள்ளும் ஆற்றல்
7. பரந்தமனப்பாங்குடன் கூடிய தூரநோக்கு
8. நேரத்தை முகாமைத்துவம் செய்யும் திறன்
9. குடும்பம்சார் தொழில்சார் வகிபங்குகளை சமநிலைப்படுத்தும் ஆற்றல்
10. தாம் ஈடுபடும் துறைசார்ந்த நிபுணத்துவம்
11. தோல்வி ஏற்படாதென்ற பதட்டமற்ற துணிவு
12. கிரகித்தல் மற்றும் சிறந்த தொடர்பாடல் திறன்
13. சரியான முடிவை உரியநேரத்தில் எடுக்கும் ஆற்றல்
14. தன்னம்பிக்கையும் மேற்கொள்ளப்பட வேண் டிய எதிர்காலத் திட்டங்கள் தொடர்பான தெளிவும்

தலைமைத்துவம் என்பது தனித்து மதிநுட் பம் சார்ந்த *(Intelligence)* விடயமன்று. இதன் வெற்றிக்கு மனவெழுச்சிசார் மதிநுட்பமும் *(Emotional Intelligence)* ஆன்மீகம்சார் மதிநுட்ப மும் *(Spiritual Intelligence)* தேவை என்பதை உணர்ந்து பெண்கள் பல்வேறுவகைப்பட்ட திறன்களை வளர்ப்பதில் நாட்டம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

## உசாத்துணைகள்


1. *Eagly.A (1987) sex Difference in Social Behaviour: a Social role Interpretation Lawrence Erlbanum Associates, Hillsdale, NJ*
2. *Gunawardena, C (2005) Not Adding Up: Looking Beyond Number Gender Equity in Higher Educational in Sri Lanka, The Open University press, Sri Lanka*
3. *International Labour Oraganization (2000) Gender, A Partnership of Equals, Bureau for Gender Equality ILO Publication, France*
4. *International Labour Oraganization (2003) Key indicators of the Labour Market*
5. *International Labour Oraganization (2004) Breaking through the Glass ceiling Women in Management*
6. *Jaya Indiresan (2007) Capacity Building of women Managers in Higher Education Women and Leadership Manual III, University Grants Commission New Delhi*
7. *Luke Carmen (2002) Globalization and women in Southeat Asian Higher Education Management Teachers College record v104 n3 Apr 2002*
8. *UNESCO (1998) Higher Education and Women: Issues and Perspectives*
9. *United Nations Children's Fund (2006) The State of the World's Children 2007, UNICEF, New York.*

# சமகாலத்தில் அனர்த்தங்களுக்குப் பின்னரான சமூக உள நெருக்கீட்டினை எதிர்கொள்ளல்



வைத்திய கலாநிதி
சி. யமுனாநந்தா.
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

**த**மிழ் மக்கள் மிகப் பெரிய சமூக உள நெருக்கீட்டினை தற்போது அனுபவித்துக் கொண்டு உள்ளனர். இதனை ஐந்து விதமாக அறிந்து கொள்ளலாம்.

முதலாவதாக இடம்பெயர்ந்து அல்லல் உறும் மக்கள் வாழும் நலன்புரி நிலைகளை மேலோட்டமாகப் பார்வையினைச் செலுத்தி *(Birds Eye View)* நோக்கும் போது அவர்களது சமூக நெருக்கீடுகள் தெரியவரும். இதனைச் செய்மதிப் படங்கள் மூலமும் பார்க்கலாம்.

இரண்டாவதாக அவர்களது வாழுமிடங் களுக்குக் குறுக்காகச் சென்றுவரல் *(Community Cross Walk)* மூன்றாவதாக அவர்களுடன் கலந்துரையாடித் தகவல்களைப் பெறல். நான்கா வதாக அவர்களுக்கு தேவைப்படும் சேவைகளை வழங்கல் மூலம் அறிதல். ஐந்தாவதாக சமூக உளநெருக்கடிகள் பற்றிய மாய உண்மை மாதிரிக் கற்கைகள் மூலம் *(Virtual Reality in Psychosocial Crisis)* அறிதல் எது எவ்வாறு நடைபெறினும் விஞ்ஞான உலகில் உண்மைகளை மறைத்தல் கடினம். கற்றவர்கள் மௌனமாக இருத்தல் கடவுளை ஏமாற்றும் செயலாகும்.

அழிவுக்குப் பின்பாக சூழலில் காயங்கள், போசாக்கின்மை, நோய்த்தொற்று என்பன அதிக அளவில் காணப்படும். எனவே அத்தகைய சமூகத்தினை மீளக்கட்டி எழுப்புவது என்பது சம்பூரணமாக கவனிப்புடன் கூடியதாக அமைய வேண்டும். இதில் உள ஆரோக்கியத்துடன் இணைந்த தேவைகளும் ஏராளம்.

சமூக உளத்தேவைகளை நிறைவேற்றும் போது தரவுசேகரிப்பு, பொருள் உதவி, மனிதப் பணி என்பன இடம்பெறுகின்றன. அனர்த்தங் களிற்கு முகம் கொடுத்தவர்களிற்கு உணர்வு பூர்வமான ஆதரவினை அளிக்கும்போது அழிவு களில் உயிரிழப்பு, சொத்துக்களின் இழப்பு, வதிவிட இழப்பு உள இழப்புக்களிற்கு ஏற்ப துன்பம், கவலை, பதகளிப்பு, கோபம் என்பன ஏற்படும் என்பதனை அவதானிக்க வேண்டும். இத்தகையவர்களிற்கு ஆறுதல் அளித்து அவர் களது மாற்றம் சாதரணமனது எனக்கூறி அதனை அவர்கள் உணரப்பண்ணல் வேண்டும். அழிவுகள் இருவகையில் ஏற்படுத்தப்படலாம். முதலாவது தனிமனிதனுக்கு ஏற்படும் வன்தாக்கம் இரண்டா வது சமூகத்தின் மீது நிகழ்த்தப்படும் கூட்டான வன்தாக்கம்.

தனிமனிதன் மீது நிகழ்த்தப்படும் வன் தாக்கங்கள் அவனிற்கு மன அழுத்தத்தினையும் கவலையையும் அளிக்கும். சமூகத்தின்மீது நிகழும் கூட்டான வன்தாக்கங்கள் சமூக பந்தங்களில் மாற்றத்தினை ஏற்படுத்தும். இதனால் சமூகத்தில் இயற்கையாகக் கிடைக்கும் ஆதரவு இல்லாது போகும். உதாரணமாக சாதாரண சூழலில் ஒரு கிராமத்தில் மரணவீடு என்றால் கிராமமக்கள் அனைவரும் ஒன்று கூடி உதவுவார்கள். ஆனால் கிராமம் முழுவதும் ஒரு கணத்தில் பல மரணங்கள் நிகழும்போது ஒருவருக்கு ஒருவர் உதவ முடியாத நிலை ஏற்படுகின்றது. இந்நிலையில் அவர்களிற்கு ஏற்படும் மனத்துயர் பன்மடங்காகக் காணப்படும். இதனை சமூக உளநல மேம்பாட்டாளர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

பெரும்பாலான மக்கள் அனர்த்தத்தின் போதும் பின்பும் ஒன்றாகச் செயற்படுகின்றனர். ஆனால் அவர்களது செயற்திறன் குறைவாகவே காணப்படும். இது அவர்களது தீர்மானம் மேற்கொள்ளும் தன்மையில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. ஆதலினால் அவர்களை மீளக் கொணரலில் விசேட படிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

அழிவுகளின்போது ஏற்படும் மன அழுத் தமும் துன்பமாற்றமும் அசாதாரண சந்தர்ப்பத்தில் ஏற்படும் சாதாரண மாற்றமே ஆகும். இதனை மக்கள் உணரும்போது அனர்த்த வன்தாக்கத்தில் இருந்து மீளல் இலகுவானதாக அமையும்.

**ஆதரவு நல்குதல்:-**

பெரும்பாலான உணர்வு ரீதியான பிரச்சினைகள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்படும். இவை அனர்த்தம் அவர்களது வாழ்வியல் தேவைகளில் ஏற்படுத்திய பாதிப்புகளால் ஏற்படுபவையே. பொதுவாக அவை உறைவிடம், உணவு, உடை என்பவற்றுடன் தொடர்பாக அமையலாம். நேரத்திற்குத் தகுந்த சரியான நிவாரணம் அவர்களிற்கு அளிக்கப்படுவதால் சில பிரச்சினைகளைக் குறைக்கலாம்.

அனர்த்தத்தின் பின்பான உள நலசேவை பாதிக்கப்பட்டவர்களது மத, கலாசாரத்திற்கு ஏற்றதாக அமைதல் வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் மிகவும் ஆர்வத்துடன் அதில் பங்களிப்பர். அவர்களது உணர்வுகளைப் பற்றிக் கதைப்பர். அனுபவங்களைப் பற்றிக் கதைப்பர். அவர்களது எண்ணங்களைக் கூறுவர்.

சமூக உளமேம்பாட்டாளர்கள் பாடசாலை ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டவர்களுடன் நேர்மையாக நடந்து அவர்களது அச்சத்தினை அகற்றி, ஆற்றுப்படுதல் வேண்டும். அவர்களது தனிப்பட்ட வாழ்வில் குறுக்கீடு செய்தல் ஆகாது. அனர்த்தத்தின் நிலைகளுக்கு ஏற்ப வழிகாட்டல் வேலைகள் அமைதல் வேண்டும். ஆரம்பத்தில் பாதிக்கப்பட்டவர்களிடம் சம்பவங் களைக் கேட்டல், ஆதரவு அளித்தல், அவர்களது மனம் ஆறுதல் அடைய உதவல், துன்பத்தினைக் குறைத்தல் என்பன மேற்கொள்ளப்படும். இறுதியில் அவர்களது விரக்தியினை நீக்கல், கோபத்தினைப் போக்கல், மாயப்பிரமையினை நீக்கல் என்பன மேற்கொள்ளப்படும்.

ஆதரவு அளிக்கும் செயன்முறை அனர்த்தத்தின் பின் அதன் பாதிப்புக்களில் இருந்து மீள மிகவும் இன்றி அமையாதது ஆகும். ஒரு தனிநபருக்கு மிகவும் முக்கியமான ஆதரவு அளிக்கும் அமைப்பு அவரது குடும்பமே ஆகும். எனவே சமூக உள மேம்பாட்டளர்கள் குடும்ப அங்கத்தவர்களை ஒன்றாக வைத்திருக்க உதவ வேண்டும். இதுவே அவர்களிற்கும் பாதிப்பில் இருந்து மீள உதவும் அண்மையில் ஒரே குடும்ப அங்கத்தவர்கள் வெவ்வேறு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு அவர்களிற்கு நலன்புரி நல்கும் சேவை நடைபெறுகின்றது. இது அவ்வளவு சரியானது அல்ல. மேலும் குடும்ப அங்கத்தவர்களை இழந்தவர்களிற்கு அவர்களது உறவினர்கள் அல்லது அயலவர்கள் உடன் இருத்தல் மீளலுக்கு உதவும்.

சமூகத்தின் மீளலுக்கு வெளியில் இருந்து உதவும் அமைப்புக்களும், பாதிக்கப்பட்டவர்களில் இருந்து அமைக்கப்படும் செயற்குழுவும் உதவுதல் வேண்டும்.

அனர்த்தம் பொதுவாக ஆழமான வடுவினை பாதிக்கப்பட்டவர்களில் ஏற்படுத்தி விடுகின்றது. இதன் போது ஏற்படும் உடல் ரீதியான பாதிப்புக் களாக முறிவுகள், காயங்கள், நோய்த்தொற்று, கர்ப்பம்தரித்தல் இனப்பெருக்கச் சுகாதாரப் பிரச்சினைகள், அங்கவீனமாதல் என்பன ஏற்படலாம். உளவியல் ரீதியான பாதிப்புக்களாக அதிர்ச்சி, பீதி, பயம், பதகளிப்பு, குற்ற உணர்வு, மீள மீளச்சம்பவங்கள் நினைவுக்குவரல், பயங்கரக் கனவு, அதிகமாக அழுதல், மனச்சோர்வு என்பன ஏற்படலாம்.

அனர்த்தத்தின் பின் சமூக ரீதியான பாதிப்புக்களாக வீடிழப்பு, கணவன்/மனைவி இழப்பு, இடம்பெயர்வும் தற்காலிகக் குடிசைகளில் வாழலும், தனிப்பட்ட/அந்தரங்க இடமின்மை, தனித்து ஒரு பெற்றோருடன் குடும்பம் உருவாதல், அநாதைகள் உருவாதல், இளவயதுத் திருமணம், புலம்பெயர்வு, கல்வியினைக் கைவிடல், பெண்கள் முதன்முதல் வீட்டிற்சுவர்களிற்கு வெளியே வாழல், சட்டரீதியான உதவிகளைப் பெற முடியாது இருத்தல், ஊழல் நடவடிக்கைகளால் பாதிக்கப்படல், வழிகாட்ட கிராமத் தலைவர்கள் இன்மை, வழிகாட்ட ஆதரவு இன்மை என்பன ஏற்படலாம்.

அனர்த்தத்தின் பொருளாதார ரீதியான பாதிப்புகளாக வாழ்வாதாரங்களின் இழப்பு, பொருட்களின் இழப்பு, வேலை இன்மை, மீள வாழ்க்கையினை நடத்தக்கடினமாக அமைதல் எனபன அமையலாம்.

ஆரம்பநிலையில் சமூக உளத்தேவைகளாக தற்காலிக உணவு, மருத்துவ வசதி, உடை சுகாதார வசதி, பாதுகாப்பான நீர் என்பன அமைகின்றன. பின் உளவளத்துணை, இழப்புகளிற்கும் சேதத்திற்கும் நட்டஈடுகள், வாழ்க்கைக்குத் தேவையானவற்றை பெறஉதவுதல், சமூக ரீதியாக மீள்வாழ்வு

அதிகரித்தல், சட்ட உதவிகள் வழங்கல், சமூக நீதி வழங்கல் என்பன கவனிக்கப் படல் வேண்டும்.

சமூக உள சேவை அளிக்கப்பட்டோர் அனர்த்தப் பாதிப்பில் இருந்து மீளல் சமூக உள சேவை அளிக்கப்பட்டோரை விட இலகுவான தாக அமையும்.

அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டோரில் ஏற்படும் உணர்வு மாற்றங்கள். அனர்த்தம் ஒருவரை மரணத்தின் வாசற்படியிற்கு அழைத்து செல்வதுடன் அவர்களது வாழ்க்கைக்கு அத்தியா வசியமான பொருட்களை இழப்பதுடன், அவர்களின் உணர்வுகளேயே ஆட்டம் காண வைக்கின்றது.

சாதாரண வாழ்க்கையின் குழப்பம், நிச்சயத் தன்மையற்ற எதிர்காலம், தனிப்பட்ட வாழ்வு, குடும்ப வாழ்வு, சமூக வாழ்வு என்ப வற்றினை மீள மேற்கொள்ள எதிர்கொள்ளப்படும் சிக்கல், உணர்ச்சிப்பிரச்சினைகளாக சினம் கொள்ளல், பயம், பதகளிப்பு, பீதி, மீளக்காட்சிகள் வரல், பயங்கரக்கனவுகள், துன்பம் என்பன பொதுவாகக் காணப்படும்.

**உணர்வு மாற்றங்களிற்கு அப்பால் சமூகக் கட்டமைப்பில் தாக்கங்களும் ஏற்படும்**

எல்லா மாற்றங்களும் ஒன்றுடன் ஒன்று இணைந்து காணப்படும். உணர்வு மாற்றங்களின் வெவ்வேறு அவத்தைகளில் மாறுபடும். எனவே இதனை நாம் அறிந்து உதவல் வேண்டும்.

**ஆரம்பத்தில் (சில மணித்தியாளங்களில்)**

1) பதட்டம், பதகளிப்பு, பீதி இருக்கும்.
ஆரம்ப நிலையில் என்ன நடக்கின்றது. எனசிந்திப்பதற்கே நேரம் இருக்காது. உடனடி மாற்றம் பாதுகாப்பு தேடி ஓடுவதாகும். பயமே பிரதான இயல்பாகக் காணப்படும்.

2) அதிர்ச்சி அல்லது விறைத்த நிலை.
அனர்த்த நிலையில் உண்மையை ஏற்றுக் கொள்ளும் தன்மை இல்லாது இருக்கும். பாதிக்கப்பட்டவர்கள் ஒன்றுமே நடைபெறா தது போல் இருப்பர். விறைத்த நிலையில் காணப்படலாம். மாறாட்டமும் உணவில் விருப்பமின்மையும் காணப்படலாம்.

3) மனநிறைவு, மனஎழுச்சி, சந்தோசம், மற்றவர் கள் இறந்தபோதும் நான் தப்பியது பற்றிச் சந்தோசம்.

4) குற்ற உணர்வு
மற்றவர்கள் இறந்த போது தான் தப்பியது.

5) குழப்பமடைந்து அலைதல்.
கண்டபாட்டிற்கு கதைத்தல் என்ன நடந்த தென்று விளங்காது.

6) மீள சம்பவங்கள் காட்சிக்கு வரல்
கனவுகள் வரல் சிறிய சம்பவங்கள் இவற்றினை அதிகரிக்கச் செய்யலாம். இரவில் அதிகம் ஏற்படும். புனர்வாழ்வு வேலைகளில் ஈடுபடுவதால் இவற்றின் தாக்கம் குறைவாக அமையும்.

**அனர்த்தம் ஏற்பட்டு ஒரு மாதத்தில் இருந்து ஆறு மாதங்கள் வரை ஏற்படக்கூடிய தாக்கங்கள்:**

**1. துன்பப்படல்**

ஒருவரை இழந்திருத்தல் ஏற்படும் விளைவு.
கவலை, அடிக்கடி அழுதல், சாப்பாட்டில் விருப்பமின்மை, நித்திரை இன்மை. சாக விருப்பம் எனக்கூறல், வேலைகளில் நாட்டமின்மை இழந்ததை எண்ணிக் கொண்டிருத்தல் என்பன காணப்படும்.

**2. உளத்தாக்கத்திற்கு பின்பான மனவடு**

- நோயின் ஆரம்ப அறிகுறிகள் காணப்ப்டும்.
- அனத்தங்கள் பற்றிய நினைவுகள்/கனவுகள் வரல்.
- அனர்த்தத்தின் நினைவுபடுத்தும் நிகழ்வுகளை தவிர்த்தல்.
- நித்திரை கொள்ள முடியாமை, பதற்றமாக காணப்படல்.
- பீதி ஏற்படல்.
- பதகளிப்புக்கு உரிய அறிகுறிகளான அமைதி யின்மை, படபடப்பு, வியர்த்தல்.
- ஒன்றும் செய்ய இயலாத நிலை.
- மாற்றங்களை சமாளிக்க முடியாத நிலை.
- வீட்டை விட்டு வெளியே வாழுதல். 40 – 50 % பாதிக்கப்பட்டவர்கள்.
- வீட்டில் வாழவிருப்பம் இன்மை.

உதாரணமாக ஒருவர் இறந்த பின் வேறு இடத்தில் வாழல்.

**3. 6 மாதங்களிற்கு பின்பான மாற்றங்கள்**

- நாட்பட்ட துன்பத் தாக்கம்.
- துன்பம் ஏற்படல் சாதாரணமானது. இயற்கையானது ஒரு இழப்பிற்குப்பின் துன்பப்படலை ஏற்றுக்கொண்டு அதில் இருந்து குணமடைதலை விரைவுபடுத்தல் அவசியமாகும்.
- இழப்பின் பின் உடனடியாகக் கவலைப்படல்.
- தாங்க முடியாததாக அமையும். இது பல உணர்வுகளின் நேர்மானமாகும்.

  அதாவது இழப்பு, பாதுகாப்பின்மை, ஆதரவு இன்மை, பயம் என்பவற்றினால் ஏற்படும் உணர்வுகளாகும்.
- துன்பப்படும்போது ஒருவர் இதனை அனுபவிப்பார். இதன் காலமும் இதன் செறிவும் ஆளுக்கு ஆள் வேறுபடும். இரு வாரங்களாக இருக்கலாம், மாதங்களாக இருக்கலாம், வருடங்களாகவும் இருக்கலாம். ஆனால் காலத்துடன் இதன் வேதனை குறைந்து கொண்டு வரும்.
- ஒருவர் துன்பப்படும் போது அவரது உணர்வுகளுடன் செயற்படாவிடின் துன்பப்படும் காலம் நீடிப்பதுடன் வேதனையின் அளவும் அதிகமாக இருக்கும். எனவே துன்பத்தினைக் குறைக்கும் படிகளை அறிந்து வேதனை குறைய உதவல் வேண்டும்.
- துன்பப்படும் போது ஏற்படும் நிகழ்வுகள்
  - கவலையாக இருத்தல்
  - சௌகரியம் இன்மை
  - இழந்ததை எண்ணிக் கொண்டு இருத்தல்
  - குற்ற உணர்வு
  - நித்திரை இன்மை
  - உணவில் விருப்பம் இன்மை
  - சினத்தல்
  - தற்கொலை செய்யும் முயற்சி
  - இழப்பினை ஞாபகப்படுத்தும்போது குழப்பமடைதல்
- மாறான செயல்கள்
  - வலிப்பு உடல் அசைவுகள், குறித்த நபர்கள் சந்திக்கும்போது, குறித்த இடத்திற்கு செல்லும் போது
  - நிறைவேறாத ஆசைகள் நிறைவேறுவதற்காக.
  - உளத்தாக்கத்திற்கு பின்பான மனவடு.
  - மனச்சோர்வு
  - பாரிய இழப்பு உணரப்படல்
  - மனம்மாற்ற மடைதல்
  - தனிமையில் இருக்க விருப்பம்
  - நித்திரை, உணவு என்பன பாதிப்பு
  - சக்தி இன்மை, கிரகிக்க முடியாது இருந்து அழுதல்.
  - தனிமை என எண்ணல், வெறுமை.
  - தனிமைப்படுத்தப்பட்டவர் தம்மைத் தாமே குறைத்துக் கொள்ளல்

    என்பன காணப்படும்.
- அதிர்ச்சியும் மறுப்பும் இல்லாதுபோக கவலையும், நம்பிக்கை இன்மையும் வந்து சேரும். இதனால் சாதாரண அன்றாட வேலைகளையே செய்யமுடியாது இருப்பர். அடிக்கடி அழுவர், ஆண்கள் மனச்சோர்வு அடைந்தாலும் அதிகம் அழுவதில்லை.

**நாட்பட்ட விளைவுகள்**

**மீளக்கட்டியெழும்பும் போது**

1. முயற்சி குறைதல், வேலை செய்யாது இருத்தல்.
2. போதைப் பொருள் பாவனை அதிகரித்தல்.
3. தற்கொலைகள்.
4. உடல்மாய நோய் / மெய்ப்பாட்டு நோய்கள்
5. திருமணப்பிணக்கு.
6. குடும்பத்தினைக் கொண்டு நடத்தல் கடினமாக இருத்தல்.
7. முறையற்ற பாலியல் உறவுகள். குடும்பத்தில் ஆண் உறவுகளை இழந்தவர்கள் இலகுவில் பாதிக்கப்படுவர்.

இவை எல்லாம் அசாதாரண சூழலில் நிகழும் சாதாரண நிகழ்வுகளே. வன்முறையை எதிர்கொண்டவர்களில் காணப்படும். வெவ்வேறாக அனர்த்தத்தின் பின் வேறுபட்ட அவத்தைகளில் நிகழும்.

எனவே புனர்வாழ்வும் மீளக்கட்டி எழுப்புதலும் நீண்ட நாட்களுக்கு உரியவை. அனர்த்தத்திற்கு பின்பான உணர்வு மாற்றங்கள் காலத்துடன் வேறுபடும். ஆளுக்கு ஆள் வேறுபடும். எனவே உளவியல் ஆதாரமானது தொடர்ச்சியான மாற்றத்துடன் கூடியதாக அமையும்.

- அனர்த்தத்தின் தன்மை.
- அனர்த்தத்தினை எதிர்கொண்ட அளவு.
- சமூக ஆதரவு கிடைக்கும் தன்மை.
- பால், வயது, திருமணநிலை, பிரிந்து இருத்தல், குடும்பச் சூழல், சொந்த இழப்புகள், அனர்த் தத்திற்கு முன்னைய மனநிலை என்பவற் றினைக் கொண்டே நெருக்கீட்டின் தாக்கமும் அதனை எதிர்கொள்ளலும் அமையும்.

**4. சமூக உளத்தேவைகளை விளங்கல்**

அனர்த்தத்தினால் வெவ்வேறு அவஸ்த்தைகளில் வெவ்வேறு நெருக்கீட்டினை எதிர்கொள்வர்.

### உணர்வு மாற்றங்களிற்கான காரணங்கள்

- வசிக்கும் இடம்
- பாதுகாப்பின்மை
- இழப்பினை எண்ணிக்கொண்டு இருத்தல்.
- தனிமை
- அழுத்தம்
- சந்தேசமின்மை
- பிரயோசனமான வேலைகளைச் செய்யமுடியாது இருத்தல்.

நெருக்கீட்டிற்கு உட்பட்டவர்கள் கூறமாட்டார்கள். ஆனால் அவர்களது நடத்தையில் இருந்து அறியலாம்.

### நடத்தை மாற்றம் :

1. வாழ்க்கையில் விருப்பமின்மை.
2. செயற்றிறன் குறைதல்
3. அமைதி இன்மை
4. கிரகிக்க முடியாமை
5. நித்திரை கொள்ள முடியாது இருத்தல்
6. போதை / தீங்கான மந்துகளை எடுத்தல்

### உடல் ரீதியான மாற்றங்கள்

1. உடல் நோ
2. தலையிடி
3. களைப்பு
4. தசைப்பிடிப்பு
5. படபடப்பு
6. உணவில் விருப்பமின்மை, வயிற்று நோ, வாந்திக் குணம்

### உணர்வு ரீதியானவை

1. சினத்தல்
2. பயம், பதகளிப்பு
3. ஆதரவின்மை, கவலை, நம்பிக்கை இன்மை.
4. குற்ற உணர்வு
5. திரும்பத்திரும்ப ஒரே எண்ணம் வரல்
6. தற்கொலை எண்ணம்
7. மறதி

### உறவுகளில் ஏற்படும் மாற்றம்

1. ஆதரவுக்கட்டமை இழக்கப்படல்
2. நம்பிக்கை இழக்கப்படல்.
3. பொறுப்பும் கடமையும் மாறல்.
4. தங்கிவாழும் தன்மை ஏற்படல்.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோரில் ஏற்படும் மாற்றங்கள்.

| சாதாரண மாற்றம் | அசாதாரண மாற்றம் |
|---|---|
| பயம், கவலை | உடனடி உணர்வுகள் |
| மறுத்தல் | பீதியடைதல், களைப்படைதல் |
| எண்ணங்கள் மீள வரல் | சம்பவங்களை மீள நினைவு படுத்தலை தவிர்த்தல் |
| உண்மையில் என்ன நிகழ்ந்தது என உணரல் | சம்பவங்கள் பற்றிய எண்ணங்கள், உருவங்கள் வரல் |
| உடல் முறைப்பாடுகள் நீக்கப்படல் வேண்டும். | அசாதாரண மாற்றங்கள் (உளவளத்துணையுடன்). |

இவ்வாறான நிலமைகளை சமூகத் தொண்டர்களும் உளவளத்துணையாளர்களும் பாடசாலை ஆசிரியர்களும் உணர்ந்து உளப்பாதிப்புக்கு உள்ளானவர் களுக்கு முறையான வழிகாட்டலை மேற்கொள்ளும் நல்ல மனப் பாங்கினைப் பெற வேண்டும். இதற்கு மேற்கூறிய விடயங்கள் தொடர்பான நிபுணத்துவ அறிவைக் கொண்டிருப்பதுடன் தமது மனப்பாங்கினை முறைமைப் படுத்தி சரியான வழிகாட்டல் ஆலோ சனை வழங்கல் செயற்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். இதற்கான ஆதரவுகளை எமது பிரதேசத்தின் அனைத்து மட்டங்களிலும் மேற் கொள்ள வேண்டி இருக்கின்றது. இவ்விடயம் தொடர்பான விழிப்புணர்வுகளும் எம்சமூக மட்டத்தில் போதுமானதாக இல்லை. பாடசாலைகளிலும் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் வேலைகளுக்கு முகம் கொடுக்கக் கூடிய நிலைமைகளே காணப் படுகின்றன. இவற்றிற்கு அப்பால் சமூக உள நெருக்கீட்டுக்குள்ளான பெரும்பாலான மாணவர்களுக்கு வழிகாட்ட வேண்டிய தேவை இன்று முக்கியம் பெறத் தொடங்கிவிட்டது.

□□□

# இலங்கையில் தமிழ் மொழி மூல ஆசிரியர் கல்லூரிகளில் குடாநாட்டு ஆசிரியர் கல்லூரிகள் – *ஒரு கண்ணோட்டம்*

திரு. மு. கௌரிகாந்தன்,
எம்.ஏ, எம்.எட்.
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரியர் கல்லூரி.



### அறிமுகம்

1985 ஆம் ஆண்டு காங்கேசன்துறைக் கல்வி வட்டாரம் அப்பகுதியில் உள்ள பாடசாலைகளின் வரலாற்றை உள்ளடக்கிய "காங்கேசன் கல்வி மலர்" என்னும் பயனுள்ள மலரை வெளியிட்டிருந்தது. இதனைப் போலவே யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் வரலாற்றைக் கூறும் 'சங்கமம்' எனும் கனதியான தொகுப்பு நூல் ஒன்று திருவாளர்களான த. சரத்பாபு, பா.தனபாலன் ஆகியோரால் 2005 இல் வெளியிடப்பட்டது. இவ்விரு நூல்களும் அண்மையில் எனது பார்வைக்கு எட்டியமையும் யான் கோப்பாய் ஆசிரியர் கல்லூரிக்குப் பணிபுரிய வந்ததும் "ஆசிரியர் கல்லூரிகள் விரைவில் மூடப்படலாம்" என்ற ஊகமும் தான் இக்கட்டுரையினை எழுதத்தூண்டின.

மிக நீண்டகாலமாக எமது மாணவர்கள் தரமான கல்வியைப்பெற பயிற்சிபெற்ற தரமான ஆசிரியர்களை வழங்கிய பெருமை ஆசிரியர் கலாசாலைகளுக்குரியது. க.பொ.த.(சா.த) வரை எத்தனை பட்டதாரி ஆசிரியர்கள் எமக்குக் கற்பித்தார்கள் என்று கேட்கும் அளவுக்கு எமக்கு ஆதரவு தந்து கற்பித்தவர்கள் ஆசிரியர் கலாசாலைகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள். க. பொ.த. (சா/த) வரை பயிற்றப்பட்ட ஓர் ஆசிரியரே பலபாடங்களைத் திறம்படக் கற்பித்த நிலை அக்காலத்தில் இருந்தது.

1955-1957 காலப்பகுதியில் இலங்கைப் பல்கலைக்கழகத்திலே தமிழ்த்துறை டிப்ளோமா கல்வி ஆரம்பிக்கப் பட்டுவிட்டதாக அறிகிறோம். 1958ஆம் ஆண்டிலேதான் பட்டதாரி ஆசிரியர்கள் முதல் முறையாக மேற்படி பல்கலைக்கழகத்திலே பயிற்றப்படுகிறார்கள். 1987இல் தான் கல்வியியற் கல்லூரிகள் தாபிக்கப் பட்டன. இவை போன்ற நிறுவனங்களின் செல்வாக்கினால் ஆசிரியர் கலாசாலைகள் பல மூடப்பட்டும் இருப்பவையும் தேய்வுற்றுச் செல்கின்ற நிலையும் காணப்படுகின்றன. இது அனுமதிக்கக் கூடியதொன்றல்ல. இக்கலாசாலைகள் தொடர்ந்தும் வினைத்திறன், விளைதிறன் உடையனவாக இயங்க எம்மால் முடிந்தவற்றைச் செய்ய வேண்டியுள்ளது. அத்துடன் இவற்றின் வரலாறு, செயற்பாடு, சாதனைகள் என்பன, வற்றைச் சரியாகவும் விரிவாகவும் தேடியறிந்து எழுதிக் கொண்டிருக்க வேண்டும்.தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்க எம்மாலானவற்றைச் செய்ய வேண்டும்

இலங்கை ஆசிரிய கலாசாலைகளின் ஆரம்பகால வரலாற்றை அறிய "இலங்கையிற் கல்வி நூற்றாண்டு விழா மலர் 1969" ஓரளவு துணைபுரிவதுபோல யாழ்ப்பாணத்து ஆசிரிய கலாசாலைகளின் ஆரம்பகால வரவாற்றை ஆறிய க.வேலுப்பிள்ளை அவர்கள் எழுதிய 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' எனும் நூலும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் *(Hindu board of Education)* 1930ஆம் ஆண்டு அறிக்கைப் புத்தகத்தில், சைவாசிரிய கலாசாலையின் அதிபராக இருந்த மயிலிட்டி சி.சுவாமிநாதன் எழுதிய *'The Hindu Education Movement and Jaffna Saiva Training Institute'* எனும் கட்டுரையும் துணைபுரியும்.

### இலங்கை ஆசிரியர் கல்லூரிகள்

1842ஆம் ஆண்டு மூன்று ஆண்டுகால ஆசிரியர் பயிற்சிக்கென கொழும்பில் ஒரு நியமப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதாகவும் பத்து ஆண்டுகளின் பின்னர் தமிழ் சிங்கள ஆசிரியர்களைப் பயிற்றுவதற்கான 'நியமப்பாடசாலை' ஒன்று திரு.செசன் என்பவர் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு சில காலத்தில் மூடப்பட்டதாகவும் கூறப்படுகிறது. பயிற்று முறைத் தத்துவங்களும் பயிற்சி முறையும், பாடக்கல்வியும் என்பன பாடத்திட்டத்தில் அடங்கின. மகரகம

வில் ஆரம்பிக்கப்பட்ட ஆங்கில மொழி மூலமான ஆசிரிய கலாசாலை பழைமை வாய்ந்தது. பண்டிதர் க. பொ. இரத்தினம், கலாநிதி வ. பொன்னையா ஆகியோர்அங்கே விரிவுரையாளர் களாகப் பணியாற்றியுள்ளனர்.

**தமிழ் மொழிமூல ஆசிரியர்களுக்கான கல்லூரிகள் – ஆரம்பகாலம்**

யாழ்ப்பாணத்திலே புரட்டஸ்தாந்து சமயத்தினரும் கத்தோலிக்க சமயத்தினருமே ஆரம்பகாலத்தில் பாடசாலைகள் மற்றும் பயிற்சிப் பாடசாலைகள் மூலம் தரமான நவீன கல்வியை வழங்கினர் என்று தெரிகிறது. *1860* களின் ஆரம்பத்தில் ஆண்களுக்கு தெல்லிப் பழையிலும் பெண்களுக்கு உடுவிலிலும் அமெரிக்க மிஷன் பயிற்சிப் பாடசாலைகளை அமைத்தது. (முது தமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி தெல்லிப்பளையில் *1914/15* பயிற்சி பெற்றவர்) உடுவில் சேர்ச்மிஷனரி ஆண்களுக்குக் கோப்பாயிலும் பெண்களுக்கு நல்லூரிலிலும் அமைத்தது. எஸ்.ஜெபநேசன் அடிகளார் "*1872* ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்பிக் கப்பட்டபொழுது வட்டுக்கோட்டையிற் செயற்பட்ட போதனா வித்தியாசாலை *(Training School)* தெல்லிப்பளைக்கு மாற்றப்பட்டது. இவ்வித்தியாசாலை S.S. எரேமியா என்னும் புலவர் அதிபராக இருந்தபொழுது அதன் புகழின் உச்சத்தை அடைந்தது. *1916*ஆம் ஆண்டு இப்போதனை வித்தியாசாலை கோப்பாய்க்கு மாற்றப்பட்டது." (காங்கேசன் கல்விமலர் பக். *151-152*) என்று குறிப்பிட்டுள்ளார். மேற்படி பயிற்சிப் பாடசாலை காரைநகர் சங்கரப்பிள்ளை அருணாசலம் அவர்களின் முயற்சியால் *1916* முதல் *1920* ஆம் ஆண்டு வரை கோப்பாய் நாவலடியில் ஐக்கிய போதனா பயிற்சிக் கலாசாலை எனும் பெயருடன் பயிற்சி அளித்து வந்ததாக க.சி. குலரத்தினம் குறிப்பிட்டுள்ளார் (இந்து போர்ட் இராசரத்தினம் காலமும் வாழ்வும் *2010* பக். *68*)

வெஸ்லியன் மிஷன் யாழ் கொட்டடி, மட்டக்களப்பு அரசடி, யாழ் வேம்படி என்ற இடங் களில் பயிற்சிப் பாடசாலைகளை அமைத்துக் கொடுத்தது. இவை இன்று இல்லை.

நாடு பூராவும் உள்ள ஆசிரியர் கல்லூரி களை குடாநாட்டுக்கு வெளியே உள்ளவை, குடா நாட்டுக்கு உள்ளே உள்ளவை என்று வகைப்படுத்தி நோக்குவது இலகுவானது.

**குடாநாட்டுக்கு வெளியே உள்ள ஆசிரியர் கல்லூரிகள்**

குடாநாட்டுக்கு வெளியே உள்ள தமிழ் மொழிமூல ஆசிரியர் கல்லூரிகள் எனும் வகையில் மட்டக்களப்பு, அட்டாளைச்சேனை, அளுத்கம, கொட்டக்கல என்பன குறிப்பிடத்தக்கன. மட்டக்களப்பு ஆசிரியர் கல்லூரி *1942* இல் அட்டாளைச்சேனையில் ஆரம்பிக்கப்பட்டது. *1946* மே முதலாந்தேதி தொடக்கம் மட்டக்களப்பில் நடைபெற்று வருகிறது. மட்டக்களப்பிலே St. Augustine's Training College எனும் பெயரிலும் ஒரு கலாசாலை இருந்துள்ளது. அங்கே *1937*இல் C.N. பிரான்சீஸ்சேவியர், C.நடராஜா ஆகியோர் விரிவுரையாளர்களாகப் பணியாற்றியிருக்கிறார்கள். இக்கலாசாலைபற்றி வேறெதுவும் தெரியாது. அட்டாளைச்சேனை ஆசிரியர்கல்லூரி *1941* இல் ஆரம்பிக்கப் பட்டது. அளுத்கம ஆசிரியர் கல்லூரி *1942* இல் ஆரம்பிக்கப்பட்டது. *1960*இல் இருந்துதான் சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் பதிவுண்டு. இவ்விரு கல்லூரிகளும் முறையே முஸ்லிம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் என ஆரம்பிக்கப் பட்டன. இன்று அட்டாளைச் சேனை ஆசிரியர் கல்லூரியில் இருபாலாரும் பயிற்சி பெறுகின்றனர். அளுத்கம *2001* முதல் தர்ஹாநகர் தேசிய கல்வியியற் கல்லூரியாக மாற்றப்பட்டது. கண்டியிலும் காலியிலும் முஸ்லீம்களுக்கு ஆசிரியர் கலாசாலைகள் இருந்து மூடப்பட்டன. கொட்டகல ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி *06.02.1979*இல் ஆரம்பிக்கப்பட்டது மலையக ஆசிரியர்களுக்கானது.

**குடாநாட்டு ஆசிரியர் கல்லூரிகள்**

இவ்வகையில் கொழும்புத்துறை யாழ் கன்னியர்மடம், இளவாலை, சாவகச்சேரி, நல்லூர், கோப்பாய், பலாலி, திருநெல்வேலி பரமேஸ்வரா, சுன்னாகம் என்பன குறிப்பிடத் தக்கன.

**கொழும்புத்துறை, இளவாலை ஆசிரியர் கல்லூரிகள்**

றோமன் கத்தோலிக்க மிஷன் *1881* ஆம் ஆண்டு பெண்களுக்காக யாழ்ப்பாணம் கன்னியர் மடத்திலும் ஆண்களுக்காக கொழும்புத்துறை

யிலும் ஆசிரியர் கல்லூரிகளை அமைத்தது. ஒவ்வொரு பயிற்சிப் பாடசாலையுடனும் அனாதை இல்லமும் செயற்பாட்டுரீதியான கற்றலுக்காகக் கைத்தொழிற்பாடசாலையும் அமைக்கப்பட்டன. யாழ்ப்பாண மேற்றிராணி ஆண்டவராகிய J.A. கியோமார் O.M.I.D.D. அவர்கள் கண்காணிப்பிலேதான் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இது அக்காலத்தில் சஞ். சூசையப்பர் ஆசிரியர் கலாசாலை எனவும் பின்னர் புனிதவளனார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி எனவும் அழைக்கப் பட்டது. இதன் முதல் குரு அதிபராக மகாவந். டாக்டர். J. எமிலியானுஸ்பிள்ளை O.M.I (1936) விளங்கினார். பிற்காலத்தில் வண. சுவாமி. L. A. சிங்கராயர் O.M.I (1949) சுவாமி டாக்டர் தியோகுப்பிள்ளை (1957), திருவாளர்கள் சி. விசுவலிங்கம், வேலாயுதபிள்ளை, இராசதுரை போன்றோர் அதிபராகப் பணியாற்றினர். பயிற்சி ஆசிரியர் களுக்கான வதிவிடம் நல்லூரில் இருந்தது. இக்கலாசாலையிலிருந்து ஆண்டு தோறும் 'கலைச்சுடர்' எனும் தரமான சஞ்சிகை வெளிவந்து கொண்டிருந்தது. 1975ஆம் ஆண்டிற்குப் பின்னர் கலைச்சுடரையான் காண வில்லை அவ்வாண்டிலும் தரமான பலகட்டுரை களைத் தாங்கி மலர் வெளிவந்தது. அவ்வாண் டிலே நான்கு அதிபர்களை அக்கலாசாலை கண்டதிலிருந்து அக்கலாசாலையின் நிலையினை ஊகித்துக் கொள்ள முடியும். திரு. வெ. சபாநாயகம் அவர்கள் இங்கு உபஅதிபராக இருந்துள்ளார். 1978இல் இது மூடப்பட்டது.

இக்கலாசாலையிலே திருவாளர்கள் V. E. நிக்கலஸ், சொக்கநாதன், செல்வநாதன், எம். எஸ். அலெக்சாந்தர், வித்துவான் ப. கணபதி, ச. வேலுப்பிள்ளை முதலான குறிப்பிடத்தக்க விரிவுரையாளர்கள் இங்கு பணியாற்றியுள்ளனர். திரு. R. S. நடராசா அவர்கள் இங்கிருந்துதான் பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு அதிபராகச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

புத்தளம் சாந்த மரியாள் மகா வித்தியாலயத்தில் அதிபர்களாக இருந்த திரு. ஞானரத்தினம், M.P. மோசஸ், வலன்டயன் மற்றும் ஆசிரியர்களான திரு. திருமதி. அ. எ. பெர்னாண்டோ (1957/58) திருநெல்வேலி ஆசிரியர் N. வேலாயுதம் (1973/74), உடப்பூர் கி.ஸ்ரீஸ்கந்தராசா இங்கு பயிற்சி பெற்று வெளியேறியவர்களாவர். இக்கலாசாலை இருந்த இடத்தில் தற்போது புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரி இயங்குகிறது.

இளவாலை ஆசிரியர் கலாசாலை புனித ஹென்றிஅரசர் பாடசாலையில் இருந்தது என்பதும் ஆசிரியமணி பண்டிதர் V.A. யோண்பிள்ளை அவர்கள் அதிபராக இருந்தார் என்பதும்தான் தெரியும். இக்கலாசாலை மற்றும் யாழ் கன்னியர் மடம் என்பனபற்றிய தேடல்கள் நடைபெற வேண்டும்.

புலோலி வித்துவான் க.முருகேசபிள்ளை அவர்கள் சாவகச்சேரி பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றவர். இக் கலாசாலை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இருந்ததாக அறிகின்றோம்.

**நல்லூர் ஆசிரியர் கல்லூரி**

1823ஆம் ஆண்டில் அங்கிளிக்கன் மிஷனரி மார் நல்லூரில் பழைய டச் சேட்ச் இருந்த இடத்தில் "நல்லூர் இங்கிலிஷ் செமினரி" எனும் பேரில் ஓர் ஆங்கில கல்வித்தாபனத்தைத் தொடங்கினர் என்று ச.அம்பிகைபாகன் அவர்கள் 'ஆங்கிலேயர் ஆட்சியிலே யாழ்ப்பாணத்தில் ஆங்கிலக் கல்வியின் வளர்ச்சி' எனும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதற்கும் நல்லூர் ஆசிரியர் கல்லூரிக்கும் தொடர்பிருந்திருக்கலாம். இக் கல்லூரி 1944 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டதாக எஸ். ஜெபநேசன் அடிகளார் அண்மையில் என்னிடம் தெரிவித்தார். இதுவும் வதிவிடத் துடன் கூடியது. இருபாலாருக்கும் உரியதாக இருந்தது. புரட்டஸ்தாந்து சமயத்தைச் சேர்ந்தவர் கள் மாத்திரம் இதில் பயிற்சி பெறலாம் என்றநிலை அரசு பொறுப்பேற்கும் வரை இருந்தது. இதனால் பல இந்துக்கள் இங்கே பயிற்சி பெறுவதற்காக சமயம் மாறி பயிற்சி பெற்ற பின்னர் இந்துக்களான சம்பவங்களும் நடந்திருக் கின்றன.

திருவாளர்களான அமரசிங்கம், ஜே. ஜி. அரசரத்தினம் முதலானவர்கள் அதிபராக இங்கு பணிபுரிந்துள்ளனர். ஏழாலையைச் சேர்ந்த திரித்துவாசன் க.முத்துச்சாமி(அதிபர்), திரு. சண்முகராசா ஆசிரியர், திருமதி. சுகிர்தம் தயானந்தன்(1952/53) புங்குடுதீவைச் சேர்ந்த

திரு.த.திருநாவுக்கரசு (நாவேந்தன்)(1953/54), சரவணையூர் கவிஞர் தில்லைச்சிவன் (1953/55) இணுவிலைச் சேர்ந்த திரு. ஆ. நாடராசா ஆசிரியர் (1963/64) என்போர் நல்லூரில் பயிற்சி பெற்றோரில் சிலராவர். இக்கலாசாலை 1974இல் மூடப்பட்டது.

### கோப்பாய் அரசினர் ஆசிரியர் கல்லூரி

அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டு இன்றளவும் நிலைத்திருக்கும் குடாநாட்டின் கலாசாலைகள் கோப்பாயும் பலாலியும் ஆகும் ஒப்பீட்டுரீதியில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு முக்கியமானதொரு இடமிருக்கிறது. 1923ஆம் ஆண்டு கோப்பாய் ஆசிரியர் கல்லூரி சேர் பொன். இராமநாதன் (1851-1930) அவர்களால் இருபாலையில் வாங்கி விடப்பட்ட காணியில் தனித்துவம் உடையதாக ஆரம்பிக்கப் பட்டது.

இக்கல்லூரி ஆரம்பத்தில் ஆண்களுக்காகவே தொடங்கப்பட்டது. வதிவிடத்துடன் கூடியது. பொதுப் பாடத்திட்டத்தைக் கொண்டது. இதுவரை பத்துக்கு மேற்பட்டோர் அதிபர்களாக இருந்திருக்கிறார்கள். இங்கே மிக நீண்டகாலம் அதிபராகப் பதவி வகித்த பெருமை திருமதி இரதிலஷ்சுமி ஆனந்தகுமாரசாமி (1963-1985) அவர்களையேசாரும். இவரின் அரியசேவையினை நினைவு கூருமுகமாகபிரதான மண்டபத்திற்கு **"ரதிலஷ்மி மண்டபம்"** என்று பெயர் வைத்திருக்கிறார்கள். முதல் அதிபர் மல்லாகம் பங்களா ஒழுங்கையைச் சேர்ந்த ஸ்ரீ. அ. பொன்னையா (1924-1936) அவர்களாவர். இவர் காலத்தில் உப அதிபராக இருந்தவர் ஸ்ரீ. சி. க. இராசசிங்கம் அவர்கள். இவர்கள் இருவரையும் அக்காலத்தில் *Superintendent, Asst. Superintendent* என்றுதான் அழைத்தனர் கலாவதி பொன்னம்பலம் அவர்கள் கூறுவதுபோல இவர்களிருவரும் கலாசாலையின் அக்கால குட்டிராசாக்கள். சி. க. இராசசிங்கம் அவர்கள் கல்வி நூல்(1932) எனும் அரிய நூலின் ஆசிரியர். திரு. ஆ. ஈ. சண்முகரத்தினம், செல்வி ஞானம் முருகேசு, செல்வி சத்தியமலர் சின்னப்பு, திரு. வை. கா. சிவப்பிரகாசம், திருமதி சிவா இராமநாதன், கலாநிதி. காரை. செ. சுந்தரம்பிள்ளை, திரு. மு. பரஞ்சோதி, திருமதி கலாதேவி பொன்னம்பலம், திரு. ஆ. சிறீஸ்கந்தமூர்த்தி, செல்வி மலர் சின்னையா என்போர் இங்கு அதிபர்களாகக் கடமை புரிந்தோராவர்.

இவர்களைவிட, காலந்தோறும் இக்கலாசாலையில் பணிபுரிந்த புகழ்பூத்த விரிவுரையாளர்களையும் பயிற்சி பெற்றுப் பணிபுரிந்து புகழ் பரப்பிய ஆசிரியர்களையும் குறிப்பிடுவது மேலும் தேடி எழுதுவதற்கு வழிவகுக்கும். விரிவுரையாளர்களில் ஆண்களை அக்காலத்தில் 'பேராசிரியர்' என்றும் பெண்களை 'பேராசிரியை' என்றும் அழைத்தனர். யான் இங்கு விரிவுரையாளர் என்ற சொல்லையே கையாள்கின்றேன். குறிப்பிடத்தக்க விரிவுரையாளர்களாக ஸ்ரீ.சி.தா. சிதம்பரப்பிள்ளை, குருகவி வே. மஹாலிங்கசிவம், பண்டிதர் வ. சு. இராஜஐயனார் (1899-1954) பண்டிதர். சோ. இளமுருகனார் (1908-1975) மகாவித்துவான் ந. வீரமணிஐயர் (1931-2003), செல்வி சௌந்தரம் சந்தன நங்கை கந்தப்பு, வித்துவான் க. கணபதிப்பிள்ளை, கல்வியங்காடு பண்டிதர் சு.இராசையா (1912-2003) வித்துவான் சி.குமாரசாமி (1923-1994), திரு. அ. யோ. பெனடிக்ற்பாலன் (1939-1997), திருமதி த. அரிராஜசிங்கம், திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் (1932-2006), சோ.சந்திரசேகரம் (பேராசிரியர்), திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்), முல்லைமணி வே.சுப்பிரமணியம், திருமதி புவனா இராமகிருஷ்ணா, சைவப்புலவர் பொன். தெய்வேந்திரன், திருமதி க.பொன்னம்பலம் திரு. பா. தனபாலன் என்போரைக் கூறலாம். (தற்போது இங்கு சேவையில் உள்ளோரைக் குறிப்பிட வில்லை) மேலே குறிப்பிடப்பட்டோரில் சி. தா. சிதம்பரப்பிள்ளை அவர்கள் கலாசாலை மாணவர் சங்க வெளியீட்டிலே கேத்திரகணிதம் தொடர் பாக எழுதியவர். செல்வி கந்தப்பு அவர்கள் "செந்தமிழ்ப் பயிற்சிமாலை" ஐந்து வகுப்புகளுக்கு எழுதியவர் யோ. பெனடிற்பாலன் "கல்வி உளவியல் அடிப்படைகள்" எனும் அரிய நூலைத்தந்தவர்.

### பயிற்சி பெற்று வெளியேறியோரிற் சிலர்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பெருமையினை அங்கு பயிற்சி பெற்று வெளியேறி பணிபலபுரிந்து புகழெய்திய ஒருவரின் பின்வரும் கூற்றின் மூலம் அறியலாம் **வெறும் பண்டிதராயிருந்தபோது சாதாரண உபாத்தியாயர் வேலையே வாயாத நான் பயிற்சி பெற்றதும் அந்தக்கணமே சைவாசிரிய கலாசாலையின் விரிவுரையாளர் பதவி கிடைக்கப்பெற்றேன்.** (குஞ்சிதபதம்-பண்டிதர்

*சி.கதிரிப்பிள்ளை நினைவுமலர், 1986)* இவ்வாறு கூறியவர் வேறு யாருமல்லர். எங்கள் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை (1899-1986) அவர்களேயாவர்.

வித்துவான் ந.சுப்பையபிள்ளை (1926/27) பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை (1927/28), சங்கநூற்செல்வர் த. அருளம்பலவனார், வித்துவான் ச. சபாபதி (1926/27) பண்டிதர் ச. கிருஷ்ணபிள்ளை, வேலணை அம்பலவாணர் செல்லையா (பெரிய உபாத்தியாயர்) (1926/28), பேராசிரியர் கலாநிதி கா.பொ.இரத்தினம் (1929/30), பண்டிதர் வித்துவான் க. கிருஷ்ணபிள்ளை, தமிழவேள் க.இ.கந்தசுவாமி (1936/37), பண்டிதர் க.சபா.ஆனந்தர் (1932/34), பண்டிதர் ச. பொன்னுத்துரை, வித்துவான் மூ. நவரத்தினம் (1943/45), திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம், திருமதி பசுபதியம்மா கணபதிப்பிள்ளை (1958/59), திருமதி சரஸ்வதி ஆறுமுகம் (1947/48), திருமதி பாலசுப்பிரமணியம் சிவபாக்கியம், பண்டிதர் ஏழாலை திருமதி கந்தசாமி ஆலங்கேணி ச. பவானந்தன், K. ஹரிகரசக்தி முதலானோர் கோப்பாய் ஆசிரியர் கல்லூரியின் உன்னதமான பணியின் விளைவுக்கு எடுத்துக்காட்டாகக் காட்டக்கூடியவர்கள். தற்போது இங்கு விரிவுரையாளர்களாகப் பணிபுரியும் திருமதி சாந்தினி சிவனேசன், திரு. சரா. புவனேஸ்வரன், திரு. V. கருணலிங்கம், திரு. S. குமாரசாமி, திரு. துரை. இளங்குமரன் ஆகியோர் இங்கு பயிற்சி பெற்றவர்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது. ஆண்டு தோறும் வெளிவந்து கொண்டிருக்கும் கலைமலரில் பயிற்சி பெற்று வெளியேறியோர் விபரமுண்டு.

கோப்பாய் ஆசிரியர் கல்லூரியின் உயர்வினை எடுத்துக்கூறும் ஆவணமாகத் திகழ்வது 'கலைமலர்' ஆண்டுச் சஞ்சிகை யாகும். எனது பார்வைக்கு எட்டியவரை 1929ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கிறது. இக்கலாசாலை 1999 ஆம் ஆண்டு "பவளவிழா சிறப்புமலர்" ஒன்றினையும் வெளியிட்டு அவ்விழாவைக் கொண்டாடியுள்ளது. யோகர் சுவாமிகள், சுவாமி விபுலானந்தர், கௌரவ மந்திரி C.W.W. கன்னங்கரா சுவாமி ஆத்மகணானந்தா போன்ற புனிதர்களின் பாதம் பதியப்பெற்ற கல்லூரி இது. சைவ பாரம் பரியங்களைப் பேணும் சிறப்புடையது.

தற்போது இக்கலாசாலையில் தமிழ், சமயம், ஆரம்பநெறி, சமூகக்கல்வி, சித்திரம், சங்கீதம், மனைப்பொருளியல் ஆகிய பாடநெறிகளைக் கொண்ட 360 மாணவர்கள் பயிலுகின்றனர். பதினான்கு விரிவுரையாளர்களும் நான்கு வருகை விரிவுரையாளர்களும் பயிற்சியை வழங்குகின்றனர். திரு.வே.கா.கணபதிப்பிள்ளை அவர்கள் 22.03.2010இல் கல்லூரியைப் பொறுப்பேற்றுத் திறம்பட நடாத்தி வருகிறார். தற்போது வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு. க. பேர்ணாட் அவர்களும் வாரத்தில் மூன்று தினங்கள் வந்து பணியாற்றிச் செல்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

**பலாலி அரசினர் ஆசிரியர் கல்லூரி**

1946ஆம் ஆண்டு கோப்பாய் அரசினர் ஆசிரியர் கல்லூரி பெண்களுக்காக ஒதுக்கப்பட, ஆண்களின் சிறப்புப் பயிற்சி நெறிகளுக்காக பலாலியில் ஆசிரியர் கலாசாலை ஆரம்பிக்கப் படுகிறது. கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், விவசாயம் போன்ற பாடநெறிகளுக்கு ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். இதுவும் வதிவிடத்துடன் கூடியது.

திருவாளர்கள் ஆர். ஈ. சண்முகரத்தினம், சீ. முத்துவேற்பிள்ளை, P. சவரிமுத்து, சி. கந்தசாமி, ஜோ. ந. எட்வேட், S. மகேசு, கரவெட்டி வ. கந்தசாமி, ஈ. கனகலிங்கம், பே. பரமேஸ்வரநாதன், ந. கனகேஸ்வரன், R.S. நடராசா, திருமதி த. அரிராஜசிங்கம், சோ. பத்மநாதன், கு. சதாசிவமூர்த்தி, த. காங்கேசபிள்ளை, ஆ. இளங்கோ என்போர் இக்கலாசாலையின் முன்னைய அதிபர்கள்.

நினைவில் நிற்கும் விரிவுரையாளர்கள் என்ற வகையில் பண்டிதர். பொ. கிருஷ்ணபிள்ளை (1903-1976), பண்டிதர்.க.சச்சிதானந்தன் (1921-2008), திருவாளர்கள், K. பரமானந்தம், K. நடராசா, இரத்தினசபாபதி, ஹென்ஸ்மன், கலாநிதி V. சித்திரவடிவேலு, திரு. ஆ. சிறீஸ்கந்தமூர்த்தி, பொன். முத்துக்குமாரு போன்றோரைக் குறிப்பிடலாம்.

வேலணை உபாத்தியாயர் பண்டிதர் கந்தையா கணபதிப்பிள்ளை (1946/47), பண்டிதர் க. உமாமகேஸ்வரன், கலைவாதிகலீல், வேலானந்தன், ரமணி, திக்வலைகமால் (1973/74), அன்புஜவகர்ஷா, ஜனாப்வாகீத், ஜவாத்மரைக்கார், வே. கா. கணபதிப்பிள்ளை, இராஜேஸ்வரி கொன்ஸ்ரன்ரைன் (1974/75), உடப்பூர் பெரி. சோமாஸ்கந்தர், இணுவில் த.தேவராஜா (1971/72), தம்பிலுவில் பா. பரமேஸ்வரன், சுப்ரமணியம் பரமானந்தம், புத்தளம் ரஜனி அன்ரன் செல்வகுமார் போன்றோர் இங்கு பயிற்சி பெற்று வெளியேறியோரிற் சிலராவர். இக் கல்லூரியின் ஆண்டுச்சஞ்சிகை யான கலாவதியில் விரிவுரையாளர், பயிற்சி பெற்று வெளியேறியோர் விபரமுண்டு.

1985இல் இராணுவத்தின் வருகையுடன் பலாலியில் இருந்து கோப்பாய் மற்றும் முத்துத்தம்பி வித்தியாசாலைக்கு இடம்மாற்றப் பட்ட இக்கல்லூரி இன்று மிகவும் வசதிகள் குறைந்த நிலையில் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலய (ஆரம்பப்பிரிவு) கட்டிடத்திலும் அதனருகிலும் இயங்கிக்கொண்டிருக்கிறது. தற்போது கணிதம், விஞ்ஞானம், றோ.க., ஆங்கிலம் ஆகிய பாடநெறி களில் அறுபதுபேர் பயிற்சி பெறுகின்றனர். 11விரிவுரையாளர்கள் பயிற்சியை வழங்கு கின்றார்கள். திரு. எம். இக்னேசியஸ் அதிபராக இருந்து பணியாற்றி வருகிறார். கல்லூரியிலிருந்து 'கலாவதி', 'சைவ விளக்கு', கத்தோலிக்க மன்ற வெளியீடான "ஒளி" ஆகிய ஆண்டு சஞ்சிகைகள் தரமான ஆக்கங் களைத்தாங்கி வெளிவந்து பலாலி ஆசிரியர் கல்லூரியின் பெருமைதனை பறை சாற்றிக் கொண்டிருக் கின்றன. இக்கலாசாலை இங்கிருந்து பழயைபடி பலாலிக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆசிரிய கல்விப் பணியாற்ற உரிய அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுப்பது நன்று.

### திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை

இதன் வரலாறு பெரியது. இங்கே தேவை கருதி சுருக்கித் தரப்படுகிறது. எமது சைவத்தமிழ் மாணவர்களுக்குத் தேவையான அளவு ஆசிரியர் களை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை வழங்க முடியாத நிலைதான் திருநெல்வேலி ஆசிரிய கலாசாலை விரைவாகத் தோன்றுவதற்கான காரணமென்று அறிகிறோம். ஸ்ரீமான் சு. இராசரத்தினம் அவர்களைக் காரியதரிசியாகக் கொண்ட சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் *(Hindu Board of Education)* பெருமுயற்சியால் 1828ஆம் ஆண்டு திருநெல்வேலியில் சைவாசிரிய கலாசாலை ஆரம்பிக்கப்படுகிறது. திரு. க. கிருஷ்ணபிள்ளை (1-ஆந்தர ஆங்கிலப் பயிற்சி பெற்ற ஆசிரியர்) அவர்கள் இதன் முதலாவது அதிபர். இவரின் கீழ் பண்டித வ. சு. இராஜஐயனார் (1899-1954) விரிவுரையாளராக (1928-1929) நியமிக்கப்பட்டார். இதன் பின் மயிலிட்டி ஸ்ரீமான் சி. சுவாமிநாதன், திரு. க.கந்தையா ஆகியோர் அதிபர்களாகவும் உபஅதிபரா ஸ்ரீமான் பொ. கைலாசபதி (1930- 1957) அவர்களும் விரிவுரையாளார்களாக பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை (1929/1959) K.S நடராசா, இடைக்காடு வே. கணபதிப்பிள்ளை (1951-1956), செ. சபாரத்தினம், க. சோ. நடராசா, சங்கீத பூஷணம் க. பொன்னையா, செல்வி. எஸ்.இராசா, நா. கந்தசாமிஐயர், நா. ஞானசம்பந்தன் முதலானோரும் கடமையாற்றினர்.

பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை (1894-1982), க. தி. சம்பந்தன், பண்டிதர் செ. துரைசிங்கம் (1912- 1979) மன்னவன் கந்தப்பு (1926-2004), க.சி. குலரத்தினம் (1916-1994) இலக்கண வித்தகர் பண்டிதர் இ. நமசிவாயதேசிகர் (1933/35) இரசிகமணி கனக.செந்திநாதன் (1937/38), ஆத்மஜோதி நா. முத்தையா, ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம், திரு. செ.சோதிப்பெருமாள்(1955/56) வே.தனபாலசிங்கம், பண்டிதர் சு.இராசையா (1912-2003), பண்டிதர் சு. வேலுப்பிள்ளை(1921-2007), பண்டிதர் த. சுப்பிரமணியம் (1934/36), பண்டிதர் வ. நடராஜன், பண்டிதர் வட்டு. க. மாணிக்கம், பண்டிதர்சைவப்புலவர் இ. நவரத்தினம், பண்டிதர் ஆ. சின்னத்தம்பி, வித்துவான் மு. சபாரத்தினம், புலவர் வை. க. சிற்றம்பலம் (1933/34) வித்துவான் க. கணபதிப்பிள்ளை (1945/47), இணுவையூர் க. ஆறுமுகம்(1918-2003)பண்டிதை பொன். பாக்கியம் (1956/57), பண்டிதை சரஸ்வதி,(1957/58), புலவர் தேவகி முதலானோர் இங்கு பயின்று வெளியேறி யோராவர்.

இக்கலாசாலையும் அரசினால் 1961 இல் பொறுப்பேற்கப்பட்டு 1963ஆம் ஆண்டு மூடப் பட்டது. சைவாசிரிய கலாசாலையின் மாணவர்

சங்கத்தினால் ஆண்டுதோறும் வெளியிடப்பட்டு வந்த "நாவலன்" சஞ்சிகை இதன் வரலாற்றையும் சாதனைகளையும் என்றும் உலகறியச் செய்து கொண்டிருக்கும். இச் சஞ்சிகையில் விரிவுரை யாளர்கள் மற்றும் பயிற்சி பெற்று வெளியேறிய மாணவர் அட்டவணை உண்டு.

### திருநெல்வேலி பரமேஸ்வரா பண்டித ஆசிரிய பயிற்சிக் கலாசாலை

இக்கலாசலை சைவாசிரிய கலாசாலையின் எதிர்க்கடை போலக் கருதப்பட்டதும் உண்டு. சைவாசிரிய கலாசாலையில் இரண்டு ஆண்டுகள் மிகவும் முயற்சி செய்து பயிற்றப்பட்ட தராதரப் பத்திரத்தைப் பெற பரமேஸ்வராவில் மூன்று ஆண்டுகளில் பண்டித மற்றும் பயிற்றப்பட்ட தராதரப்பத்திரத்தை எவ்வாறு பெறமுடியும் என்ற கேள்வி அக்காலத்தில் பலரால் கேட்கப்பட்டது. இந்த வாய்ப்பு அக்காலத்தில் சிங்கள மொழிமூல பயிற்சியாளர்களுக்கும் இருந்தது குறிப்பிடத் தக்கது.

1936இல் தொடங்கப்பட்ட இக்கலாசாலை யின் அதிபர்களாக கலாநிதி கு. சிவப்பிரகாசம், மு.ஞானப்பிரகாசம்(1911-1996) ஆகியோர் இருந் துள்ளனர். ச.சிதம்பரம்பிள்ளை பண்டிதமணி க. சு. நவநீதகிருஷ்ணபாரதியார் (1880-1954) வித்துவான் க. கார்த்திகேசு (1922-1996) நவாலி சோ. இளமுருகனார் (1908-1975) ஆகியோர் விரிவுரை யளார்கள். கலாநிதி சு. நடேசபிள்ளை (1895-1965) இக்காலசாலையின் மனேஜர். பரமேஸ்வரா பண்டித பயிற்சிக் இக்கலாசாலைக்கு ஒரு பெருஞ் சவாலாக ஆரம்பத்தில் பண்டிதமணியின் செயற் பாடுகள் அமைந்திருந்தன. முதலாவது தொகுதி மாணவர்களில் பலர் சித்தி பெறாமைக்கு இவர்தான் காரணம் என்று கூறப்படுகிறது. பண்டிதமணியால் வெளியிடப்பட்ட 'பண்டிதரின் படுகொலை'[1] என்ற துண்டுப்பிரசுரத்தை இதற்கு சான்றாகக் காட்டுவர். இத்துண்டுப்பிரசுரத்தில் எழுதப்பட்ட வற்றை இக்கட்டுரையின் இறுதியில் அடிக்குறிப்பாகத் தருகின்றேன்.

இங்கு பயிற்சிபெற்று வெளியேறியோரில் வித்துவான் க.வேந்தனார் (1937/39), தும்பளை பண்டிதர் வித்துவான் க. சந்திரசேகரம் (1917-1999), பண்டிதர் க. வைத்தீஸ்வரக் குருக்கள், பண்டிதர் க.நாகலிங்கம், பண்டிதர் க. மயில்வாகனம் (1939 /42), பண்ணாகம் பண்டிதர் அ.ஆறுமுகம் (1939/42), நயினை பண்டிதர் நா.கந்தசாமி, ஏழாலை பண்டிதர் வீ.செ.இராசையா, பண்டிதர் க.வீரகத்தி (1922-1996) நெடுந்தீவு பண்டிதர் பசுபதி, பண்டிதர் வித்துவான் இ. திருநாவுக்கரசு (1923-1996) முதலானோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

1945ஆம் ஆண்டின்பின் இக்கலாசாலை தனது செயற்பாட்டினை இழந்தது.

சேர். பொன். இராமநாதன், கலாநிதி சு.நடேசுபிள்ளை ஆகியோரின் ஆதரவில் நடைபெற்ற இன்னொரு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் இருந்ததாக அறிகிறேன்."இராமநாதன் சைவப் பெண்கள் ஆசிரிய கலாசாலை" என்பது இதன் பெயர். திரு. அ. சே. சுந்தரராஜன் அவர்கள் இங்குள்ளோருக்கு பயிற்சி வழங்கியவர்களில் முக்கியமானவராகக் கூறப்படுகின்றார். திரு. மு.ஆ. விஸ்வலிங்கம், திருமதி அழகமுத்து மயில்வாகனம் ஆகியோர் அதிபர்களாக இருந் துள்ளனர். இக்கலாசாலையின் இரண்டா வது அணிமாணவியாக வேலணை திருமதி. நாகரட்ணம் பொன்னுத்துரை ஆசிரியை (1914-2004) விளங்கினார். இவர் 1932 இல் வெளியேறி யுள்ளார். செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதை திருமதி சத்தியதேவி துரைசிங்கம்(1922-1986) ஆகியோரும் இந்தப் பயிற்சிக் கல்லூரியிலேயே பயிற்சி பெற்றமை குறிப்பிடத்தக்கது. 1926இல் தொடங்கப்பட்ட இக்கலாசாலை 1947இல் மூடப்பட்டது 120 பெண்கள் பயிற்சி பெற்று வெளியேறியுள்ளனர்.

### நிறைவாக


எமது இப்போதய இரு கலாசாலைகளும் நிலைபெற்றுயர ஆசிரியர் கல்லூரிகளின் செயற் பாடுகள் பலவற்றை நாம் மீட்டுப்பார்க்க வேண்டியிருக்கிறது. ஆரம்பகாலங்களில் பயிற்சி பெற்றோருக்குப் பல கட்டுப்பாடுகள் இருந்தன. அதாவது பயிற்சி பெறுவோர் திருமணம் முடிக்காதவர்களாக இருக்க வேண்டுமெனவும் விரிவுரை தவிர்ந்த காலை மாலை வேளைகளில் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபட


## ஆசிரிய கலாசாலைகளின் ஆண்டுச் சஞ்சிகைகளில் சில
































இலங்கையின்
வடபகுதி
பாடசாலை
வரலாற்றுத்
தொகுப்பு
ஆவணங்கள்






வேண்டுமெனவும் கட்டுப்பாடுகளுடன் கூடிய பயிற்சி முறைமை இருந்திருக்கின்றது.

கற்பித்தற் பயிற்சியினைப் பொறுத்தவரை தவணைக்கு இரண்டு வாரங்கள் பயிற்சியாளர் கற்பித்தற் பயிற்சியில் ஈடுபடுவர். (இன்றும் உண்டு) பயிற்சியில் ஈடுபடுவதற்கு முன்னதாக அருகில் உள்ள பாட சாலை மாணவர்கள் வரவழைக்கப்பட்டு அல்லது பயிற்சி பெறுபவர்கள் உரிய பாடசாலைக்குச் சென்று கற்பித்தலைச் செய்து காட்ட வேண்டும். இதன்பின்னர் கற்பித்தலின் போதான இடர் பாடுகள் முன்னேற்றம் குறித்து பயிலுனருக்கும் மேற்பார்வையாளருக்கும் இடையில் கலந்துரை யாடல் நடைபெறும் இவ்வாறான வகுப்புகள் 'கண்டன வகுப்புகள்' அல்லது 'விமர்சன வகுப்புகள்' என அழைக்கப் பட்டன. ஒவ்வொரு கலாசாலைகளுக்கும் உரிய பயிற்சிப் பாடசாலை கள் 'சாதனா பாடசாலைகள்' (Practicing Schools) என அழைக்கப்பட்டன. இவ்வகையான நடைமுறைகளில் இன்று மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் இன்று அனேகமான பயிற்சிக் கலாசாலைகள் தமது கவர்ச்சியையும் தகுதியையும் இழந்து வருகின்றன. மறுமலர்ச்சி பெறச் செய்வதற்காக கோப்பாய் ஆசிரியர் கல்லூரிச் சமூகம் எடுத்துவரும் முயற்சிகளைப் பாராட்ட வேண்டும்.

ஆசிரியர் கல்லூரிகள் எதிர்காலத்தில் உச்ச விழைவைக்காட்ட பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளன. அவற்றுட்சில வருமாறு,

1. உயர்கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப் படுகின்ற வளங்கள் ஆசிரியர் கல்லூரிகட்கும் வழங்கப்பட வேண்டும்.
2. வதிவிடத்துடன் கூடிய பயிற்சி வலியுறுத்தப் பட வேண்டும்.
3. விளையாட்டுப் பயிற்சிக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்.
4. உரிய பாடநெறிகளுக்குத் தேவையான விரிவுரை யாளர்கள் உடன் நியமிக்கப்பட வேண்டும்.
5. செயற்பாட்டு ரீதியான கற்றல் - கற்பித்த லுக்குக் கூடுதல் முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்.
6. புதுப்பிக்கப்பட்டு வளப்படுத்தப்பட்டு பயன் படுவதாக நூலகம் காணப்படவேண்டும்.
7. நவீன விஞ்ஞான தகவல் தொழில்நுட்பப் பாவனை ஆசிரியர் கல்லூரிகளிலும் இருத்தல் வேண்டும்.
8. உண்மை, நேர்மை, வலிமை, கருணை, தகுதி கொண்டதாக தலைமைப்பீடமும் நிர்வாக அமைப்பும் இருத்தல் வேண்டும்.
9. ஆளை ஆள் விமர்சிக்கின்ற – எதிர்மறை யான – தரக்குறைவான வார்த்தைப் பிரயோகங்கள் இலங்கையில் உயர்கல்வி நிறுவனங்களில் இன்று சர்வசாதாரணமாகக் காணக்கூடிய தொன்று. ஆசிரியர் கல்லூரிகளும் இதற்கு விதி விலக்கல்ல என்று கூறிச்செயற்படுவதும் ஆரோக்கியமானதல்ல.
10. ஆசிரியர் கல்லூரிகளை எவ்வாறு சிறப்பாக நடத்தலாம் என்றுதான் சிந்திக்க வேண்டும் மூடலாம் என்றல்ல.

இவை போன்றனவற்றைக் கவனத்தி லெடுத்து செயற்படுவதன் மூலமே சுபீட்சமுள்ள சமூகத்தைக் கட்டி யெழுப்பும் உன்னத நிறுவனங் களாக ஆசிரியர் கல்லூரிகள் திகழமுடியும்.

**அடிக்குறிப்பு**

**1. பண்டிதரின் படுகொலை – துண்டுப்பிரசுரம்**

"வாழைப் பூவை ப் புகையடித்து
பழமாக்கலாம்" என்ற நினைவோடு
ஆசிரியர் கலாசாலையை ஆரம்பித்தனர்.
அங்கு கற்பித்தவர்கள் யாரெனின்
ஒருவர் மேலைத் தேசக் கல்விகற்ற
கலாநிதி. மற்றையவர் பீ.ஏ.பி.எஸ்ஸி.
தமிழ் கற்பித்தவர் ஒரு பீ.ஏ.பட்டதாரி.
இவர்களிடம் கற்று தமிழ்ப்பண்டிதர்கள் ஆகலாம்
என்ற நப்பாசையில் வந்த மாணவர்களுக்கு
ஒரு பெரிய அடி!
இல்லை ஓர் இடி விழுந்திருக்கிறது!!

(பண்டிதர் க.நாகலிங்கம் அவர்கள் கூறக் கேட்டுத்தரப்பட்டது)

**உசாத்துணை**

1. யாழ்ப்பாண ஆசிரிய கலாசாலை மாணவர் சங்க வெளியீடு, கோப்பாய், 1929, 1930-31
2. சைவ வித்தியா விருத்திச் சங்க அறிக்கை - 1930
3. காங்கேசன் கல்வி மலர், 1985.

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியற்கல்லூரியின் தோற்றமும் வளர்ச்சியும் – அனுபவப்பகிர்வு

கருமத்திருதி லயன்.
Dr.V. தியாகராஜா MJF, J.P
சிரேஸ்ட ஆலோசனைச் சபை உறுப்பினர்,
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.



**கோ**ப்பாய்க் கிராமத்துக்குப்பல துறைகளிலும் வரலாற்றுப் பெருமை உண்டு. யாழ்ப்பாண இராச்சியத்தின் மந்திரிமார் மன்னனுக்கு ஆலோசனை கூறும் கல்வியாளர்கள், சான்றோர் வாழ்ந்த மண். சேனாதிராச முதலியார், சபாபதி நாவலர், வித்தகம் ச. கந்தையபிள்ளை ஆகிய ஆக்க இலக்கிய கல்விச் சான்றோர் கோப்பாய் மண்ணிலே உதித்தவர்கள். சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களுடைய காணியிலே கோப்பாய் ஆசிரிய கலாசாலை கட்டப்பட்டு இன்றுவரை பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வருகின்றார்கள். இவ்வாறு பெருமை பூத்த கோப்பாய் நகரில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 2000 ஆம் ஆண்டு மே 2 ஆம் திகதி தொடக்கப்பட்டது.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதியாக இருந்த கலாநிதி. திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள் 1999 ம் ஆண்டிலிருந்தே என்னுடன் தொடர்பு கொண்டு இக் கல்லூரியை ஆரம்பிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1 ஆம் திகதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதனும் அன்றைய கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் பா.தனபாலனும் என்னை நேரடியாகச் சந்தித்து கல்லூரியின் ஆரம்பம் தொடர்பான செயற்பாடுகள் பற்றி பல தடவைகள் உரையாடினர், அரசாங்கத்தின் எந்த உதவியும் கிடைக்கமுடியாத அந்த யுத்தகாலத்தில் இக்கல்லூரியை ஆரம்பிக்கபலரிடம் உதவிகளை நாடினோம். கோப்பாய் பிரதேச நலன்விரும்பிகள் உதவினார்கள் கல்வியமைச்சினால் பீடாதிபதியாக நியமிக்கப்பட்ட தனி ஒரு கடிதத்துடன் மட்டும் தற்துணிவுடன் வந்த கலாநிதி. தி. கமலநாதன் அவர்களுக்கு என்னாலான அனைத்து உதவிகளையும் செய்தேன். ஏனெனில் எமது தமிழர்தம் ஆசிரியர் கல்வி விருத்திக்குத் தேசிய கல்வியியற் கல்லூரிகளின் பங்கு முக்கிய மானது என்பதாலும் கல்வியில் பின்னடைவைச் சந்தித்த எமது இனம் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதாலும் ஆகும். 02/05/2000 இலங்கையில் ஏனைய நான்கு கல்லூரிகள் ஆரம்பித்ததிகதி அன்றே எமது கல்லூரியும் ஆரம்பித்தோம்.

இலங்கையின் ஆசிரியர் கல்வி வரலாற்றிலே தேசிய கல்வியியற் கல்லூரிகளின் தோற்றமானது புதிய தொரு சகாப்தத்தின் விடிவெள்ளி என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆசிரிய வாண்மையை முழுமையாக்கி இளமையும், துடிப்பும் ஆற்றலும் அமைந்தவர்களுக்கு ஒழுக்கம் - கட்டுப்பாடு - ஆசிரியத்துவம் தொடர்பாக நன் மனப்பான்மைகளுடன் சேவையாற்றுவதற்கான பயிற்சி தேசிய கல்வியியற் கல்லூரிகளில் வழங்கப்படுகின்றது. ஒரு புதிய ஆசிரியர் கல்விக்கலாசாரம் இக்கல்லூரிகள் மூலம் ஏற்படுத்தப்பட்டது. எனவேதான் யாழ்ப்பாணத்தில் கட்டாயமாக தேசிய கல்வியியற் கல்லூரியை உருவாக்கும் வேணவா எமக்கு அதிகரித்தது.

**முதலாவது பீடாதிபதி கலாநிதி. தி. கமலநாதன்.**



2000 ஆம் ஆண்டு திறந்த வெளிச்சிறைச் சாலையாக இருண்ட நிலையில் யுத்த சூழல் பயங்கரங்களால் உறைந்து போயிருந்த காலம்.... வசதி படைத்தவர்கள், புத்திஜீவிகள், கல்வியியலாளர்கள் கொழும்பு - வெளிநாடு என்று ஓடிக்கொண்டிருந்த அசாதாரண வேளை கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் தனது சொந்தவீடு அழிக்கப்பட்ட நிலையில் வசதிவாய்ப்புக்களை விடுத்து, குடும் பத்தை விட்டு தனி ஒருவராக கல்லூரிப் பீடாதிபதி பொறுப்பை ஏற்று வந்தார். பல சவால்கள் பல

தடைகள், பல பிரச்சினைகளை எதிர் கொண்டு எமது ஒத்துழைப்புகளுடன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியை கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஒரு பகுதியில் ஆரம்பித்தார்.

அன்றைய வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு. S. அழகரத்தினம், கல்வியமைச்சின் பிரதம ஆணையாளர் நிஹால் ஹோரத், கல்வியமைச்சர் ரிச்சட்பத்தரன, இன்றய அமைச்சரும் அன்றைய யாழ்மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, அன்றைய கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் மு. பரஞ்சோதி, விரிவுரையாளர்கள் பா. தனபாலன், கே. கணபதிப்பிள்ளை, எஸ். செந்தில் மணி அன்றய அரசாங்க அதிபர். க. சண்முகநாதன், நான் தலைவராக இருந்த கோப்பாய் புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்திக்கழகம், கோப்பாய் லயன்ஸ் கழகம் யாழ்ப்பாணம் லயன்ஸ்கழகம், கூட்டுறவு அமைப்புக்கள், கிராம சேவர்கள் பொதுமக்களின் உதவிகளைப் பெற்று 02-05-2000 அன்று ஓய்வு பெற்ற அதிபர் திரு. குமாரசாமி அவர்கள் கல்லூரிப் பெயர்பலகையை திரைநீக்கம் செய்ய கலாநிதி தி. கமலநாதன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கொடியை ஏற்றி மங்களகரமாகக் கல்லூரியை ஆரம்பித்து வைத்தார்.

பௌதீக மனிதவளப் போதாமைகளுக்கு மத்தியில் பல பிரச்சினைகளுக்கு கலாநிதி. தி. கமலநாதன் முகம் கொடுக்க வேண்டியிருந்தது. அவருக்குப்பக்கபலமாக என்னையே அர்ப் பணித்துப் பல காரியங்களை ஆற்ற வேண்டிய சூழ்நிலைகளுக்கு நான் பல தடவைகள் தள்ளப் பட்டேன். தளராது உதவி செய்தேன். பல சமூக சேவை அமைப்புக்களின் உதவிகளைப் பெற்றோம். கல்லூரி ஆரம்பித்த காலத்தில் திரு. பா. தனபாலன் (உப பீடாதிபதி கல்வியும் தர மேம்பாடும்) திரு. S. R. சத்தியேந்திரம்பிள்ளை (உப பீடாதிபதி நிதி, நிர்வாகம்) திரு. து. சந்திரபிரகாசம் உப பீடாதிபதி (தொடருறுகல்வி) விரிவுரையாளர்களாக திரு. க. ரட்ணேஸ்வரன். செல்வி. S. சுகந்தி, செல்வி. S. மீனலோஜினி, திருமதி. வி. நரேந்திரா, திருமதி ஞா. கணேசநாதன் செல்வி. K. கந்தசாமி, திருமதி. S. சிவபாதம், திருமதி. கௌரி சுரேசன் ஆகியோர் தம்மையே அர்ப்பணித்து பீடாதிபதி கலாநிதி. தி. கமலநாதன் அவர்களுடன் இணைந்து ஊரடங்கு வேளை யிலும் இரவு பகலாக உழைத்தார்கள்.



அவ்வாறே கல்விசாரா ஊழியர்களான பதிவாளர் ப. வைத்தியகுமார், திரு. S. மணிவண்ணன் திரு. A. சந்திரசேகரன், திரு. S. சோதிரூபன், திருமதி. S. நிஷாந்த திரு. B. கிருபானந்தா, திருமதி மேரிலோகாம்பிகை, திரு. S. விஸ்ணுகுமார், திரு. T. சிவபாலன் ஆகியோரும் 2000 ஆம் ஆண்டிலிருந்து கல்லூரியை வளர்க்க அரும்பாடுபட்டார்கள். குறிப்பாக பதிவாளர் திரு.V. வைத்தியகுமார் இரவு பகலாக தனது பணியை அர்ப்பணிப்புடன் செய்தார்.



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு மிக்க உயர்ந்த நிலையை மிக்க குறுகிய காலத்தில் ஏற்படுத்திய உயர் ஆளுமை கொண்ட வராக கலாநிதி. தி. கமலநாதன் திகழ்ந்தார். இதற்குக்காரணம் அவர் அடிக்கடி கூறும் சிந்தனை - சொல் - செயல் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த செயலாற்றுகையும் தியாகமுமே காரணம். அவரை நவீன காலத்துப்பகீரதன் எனப்புகழ்ந்தார். அவருடைய நல்லாசான் மூதறிஞர் சொக்கன் அவர்கள். ஆளுமைத்திறனும், வீரமும், கடமை

யுணர்வும், நேர்மையும் கொண்டு தனது நேரம், திறமை, செல்வாக்கு அனைத்தையும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு அர்ப்பணித்த பெருமகன் கலாநிதி. தி. கமலநாதன் என பேராயர் ஜெபநேசன் அடிகளார் புகழ்ந்தார்.

**காணியும், புதிய கட்டடமும் :-**

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களது உயர்வான கட்டுப்பாடு, ஆசிரிய கல்வியியலாளர்களின் கடமையுணர்வு, கல்வி சாரா ஊழியர்களின் கண்ணியமான செயற்பாடு களால் தேசிய ரீதியிலும், பிரதேச ரீதியிலும் மிக உயர்ந்த மதிப்பைப் பெற்றிருந்தது. இதற்கான அடிப்படைகளைப் பீடாதிபதி கலாநிதி. தி. கமலநாதன் ஏற்படுத்தினார். என்தலைமையிலான கோப்பாய் புனர்வாழ்வுக்கழகம் முன்னைய பாராளுமன்ற உறுப்பினர் திரு. த. சித்தாத்தனை அணுகி காணியை அன்பளிப்புச் செய்ய வேண்டி னோம். அவரும் செய்தார். இப்பின்னணியில் உலக வங்கி கல்வியமைச்சின் பிரதிநிதிகளுடன் பல சந்திப்புக்களை நானும் பீடாதிபதியும் ஏற்படுத்தி பல தந்திரோபாய நடவடிக்கைகளை மேற் கொண்டு அவர்களைக் கல்லூரிக்கு வரவழைத்து பாராளுமன்ற உறுப்பினர் திரு தர்மலிங்கம் சித்தார்த்தன் 14 ஏக்கர் காணியை அன்பளிப்புச் செய்தமையை நேரடியாகக் காட்டி கட்டடத்தின் அவசியத்தை வலியுறுத்தி உலக வங்கியினரை கட்டடம் அமைக்க சம்மதிக்க வைத்தோம். இது கல்லூரி வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும். இவ்வேளை காணியை அன்பளிப் புச்செய்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தாத்தன் அவர்களுக்கு நன்றி களைத் தெரிவிக்கின்றோம்.

பல்வேறு சவால்கள், பிரச்சினைகளுக்கும் மத்தியில் தற்காலிகக் கட்டடத்தை அமைத்து 19-01-2003 இல் சொந்தக்காணியில் சொந்தக் கட்டடத்தில் கல்லூரி இயங்க ஆரம்பித்தமை ஒரு வரவாற்றுச் சாதனையாகும். இதற்காக நான் பட்டபாடுகள் மிக அதிகம். எனது வாழ்விலேயே என்னையே அர்பணித்து தியாகம் செய்து பல செயற்பாடுகளை கல்லூரிக்காகச் செய்தேன். தொடர்ந்து உலக வங்கியின் 470 மில்லியன் ரூபாவில் மிகப் பிரமாண்டமான அழகிய கட்டடம் கட்டப் பட்டது. மேலும் கல்லூரிக்கு எனது தலைமை யிலான செயற் குழுவினரின் செயலாற்றுகையால் வீரசங்கிலியன் விளையாட்டு மைதானத்திற்கு பெற்றார்கள் சமூகத்தவர்களின் ஆதரவுடன் தனியான காணி வாங்கப்பட்டது. வேறு எந்தக் கல்லூரியிலும் இல்லாத ஒரு புதிய வரலாறாக இந்நிகழ்வு இடம் பெற்றது. ஒரு மிகக் குறுகிய காலத்தில் வேறு எந்த ஒரு நிறுவனமுமே சாதிக்க முடியாத சாதனையை எமது ஆதரவுடன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தினர் சாதித்தனர். இதற்கான அச்சாணியாக தன்னை அர்ப்பணித் தவர் 1 வது பீடாதிபதி கலாநிதி. தி. கமலநாதன் ஆவார். 2005 ஆம் ஆண்டு அவர் ஓய்வு பெற வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் உப பீடாதிபதியான திரு. S.K. யோகநாதன் அவர்கள் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் இரண்டா வது பீடாதி பதியாக பெறுப்பேற்றார்.

**2 வது பீடாதிபதி திரு.S.K.யோகநாதன்**



கல்லூரியை பொறுப் பேற்றது முதல் சுமுகமான முகாமைத்துவ செயலாற்று கையுடன் திரு.S.K யோகநாதன் அவர்கள் சிறப்பாகக் கல்லூரியை இயக்கி வருகின்றார். 2005 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடுமையானயுத்தம், போக்குவரத்துத் தடைகள், உணவுப் பொருட்களுக்கான கடுமையான தட்டுப்பாடுகள் நிலவிய காலகட்டம் அக் காலத்தில் கல்லூரியை மூட வேண்டிய சந்தர்ப் பங்கள் இருந்ததும். என்னுடனும். அரச - அரச சார்பற்ற நிறுவனங் களுடனும் தொடர்பு கொண்டு இரவு பகலாக செயலாற்றி பல்வேறு உதவிகளைப் பெற்று கல்லூரியை தொடர்ந்து வளர்ச்சியடையத் தன்னை அர்ப்பணித்தார்.

மாணவர்கள், கல்வியியலாளர், ஊழியர் களிடையே சுமுகமான உறவுகளை வலுப்படுத்தி எல்லோருடைய நலன்களில் அக்கறையுடன் செயற்பட்டும் வருகின்றார். சமகாலத்தில் வதி விடத்துடன் கூடிய ஒரு கல்லூரியை இயக்கு வது மிக்க கடினமானது. பல்வேறு அழுத்தங்கள், பிரச்சினைகள் சவால்கள், பௌதிக - மனித வளப்

போதாமைகளும் காணப்படுகின்ற நிலையிலும் கல்லூரியைச் சிறப்பாக நடாத்திவருகின்றார். கல்வியமைச்சு தேசிய கல்வி நிறுவக அதிகாரிகள் அவரது செயற்பாடுகளைப் பாராட்டியுள்ளனர். இவருடன் இணைந்து தற்போதைய பதிவாளர் திரு. S. சிவநாதன் அவர்களும் கல்லூரிக்காக அர்ப்பண சேவையாற்றி வருகின்றார். கல்லூரியின் 10 வது ஆண்டு வளர்ச்சி வரை இக்கல்லூரிக்காக அர்ப்பணித்து சேவையாற்றிய அனைவரது சேவைகளையும் நாம் கௌரவப்படுத்துகின்றோம். ஆசிரியர்களை உருவாக்கும் ஒரு புனிதமான நிறுவனத்தை தொடர்ந்து வளர்ச்சியடையச் செய்ய வேண்டியது எமது அனைவரினதும் கடமையாகும்.

திரு. S. K. யோகநாதன் முதலாவது பீடாதிபதி கலாநிதி. தி. கமலநாதன் அவர்களின் சேவையை கௌரவிக்க மிகச்சிறந்த மணிவிழா ஒன்றை நடத்தியதுடன் மணிவிழாக்குழுத் தலைவராக நின்று "காலத்தை வென்ற கமலம்" என்ற மிகத்தரமான மலர் ஒன்றையும் வெளியிட மூலாரணமாக இருந்தார். இச் செயலாற்றுகை அவரது உயர் பண்பைக் காட்டுகின்றது.



எமது சமூகத்தின் இயைபாக்கத்திற்கும், மீளாக்கம் செய்வதற்கும், மனித - பௌதீக வளங்களை வலுவடையச் செய்வதில் கல்விச் செயன் முறைகளே முதலிடம் வகிக்கின்றன. சமூகத்தின் வளமான பராமரிப்புக் காரணியாகவும் தொடர் நிலைவலுவூட்டும் காரணியாகவும் விளங்கும் கல்வி முறையின் நெறியாழ்கைக்கு ஆசிரியர்களே பொறுப்பாகின்றனர். கல்வித் தொகுதியின் குறியீடு ஆசிரியத்துவத்தினாலேயே புலப்படுத்தப்படுகின்றது. எனவே புதிதான ஆசிரியர்களை உருவாக்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு மிக அதிகமான பொறுப்புக்களும், வகை கூறல்களும் உள்ளன. இதை உணர்ந்து கல்லூரிச் சமூகத்தினர் மேலும் பல அர்ப்பணிப்புக்களையும் சேவைகளையும் எமது சமூகத்திற்கும் செய்ய வேண்டியது காலத்தின் கடமையாகும்.

□□□

# ACTION RESEARCH: A GUIDE TO PROCESS AND PROCEDURE

**Judy McKay**
School of Management IS
Edith Cowan University
Email: j.mckay@ecu.edu.au

**Peter Marshall**
School of Management IS
Edith Cowan University
Email: p.marshall@ecu.edu.au

## Judy McKay, Peter Marshall

## ABSTRACT

This paper grows out of concerns about the conduct of action research in the field of Information Systems (IS). While action research has many attributes that wo uld suggest it was ideally suited to an applied discipline such as IS, there are no well articulated processes or procedures to guide the action researcher. By virtue their rejection of many of the tenets of positivistic enquiry, action researchers also by definition reject the well-established processes and procedures that guide the conduct of quality, rigorous, positivistic research. This becomes problematic only when one considers that there is comparatively little available to take its place. This paper attempts to address this apparent vacuum in processes and procedures underpinning action research, and offers three elements to help build rigour and quality into an action research study. These three elements include developing a framework to support quality and rigorous action research, reconceptualizing action research as being comprised of both problem solving and research interests, and articulating a process model for action research to guide the action researcher. Using these three elements to support understanding and decision making is suggested to be the first step in articulating a process and procedures for the conduct of action research interventions.

## INTRODUCTION

For a number of years, action researchers have extolled the virtues of action research, particularly for an applied discipline such as information systems (West et al. 1995, Avison 1993, Baskerville and a and Wood-Harper 1996). Indeed, it is fair to say that the outcomes of action research studies have already had a significant impact on the understanding and practice of diverse aspects of the field of Information Systems (IS) (Avison et al 1999). Despite this, there is a sense in which action research has not been as widely embraced by other IS researchers as its proponents might have welcomed, if it is assumed that the comparative dearth of published action research cases provides a reasonable indication of its rate of uptake (Lau 1997). A number of reasons for this may be proffered. Stowell et al. (1997) and Lau (1997) point out that there is little guidance for the researcher on how to conduct action research. McKay and Marshall (1999) argue that there has been scant attention paid to the

reporting of the action research process itself (as opposed to the context and content of the action research study), and question whether there has been sufficient academic scrutiny of the action research process and its underpinning data collection and analysis techniques. If action research is to be accepted as a serious vehicle for the conduct of research in IS, then it would seem reasonable that steps are taken to improve the practice of action research. In this paper, the authors discuss some of the concerns and challenges underlying the conduct of action research studies, and consider reasons for these concerns. They identify three elements, which taken in concert, arguably provide considerable help and insights for the would-be action researcher. These three elements include developing a framework to support quality and rigorous action research, reconceptualizing action research as being comprised of both problem solving and research interests, and articulating a process model for action research to guide the action researcher. Prior to doing that, it seems appropriate to briefly define action research for the purposes of this discussion, as it tends to be a very broadly and loosely defined concept, encompassing a range of research and problem solving activity.


## DEFINING ACTION RESEARCH

Action research is, quite literally, a coming together of action and research, or rephrased, of practice and theory. Thus, there are two thrusts in action research: one is concerned with practical problem solving in real-world situations, of improving practice, and/or of ameliorating a situation in the realworld regarded by some stakeholders as being problematic. The other dimension to action research, however, is concerned with research, or the development of new knowledge. Thus, through the realworld intervention, the action researcher aims to gain further insights, or generate new theory or knowledge in a particular area (Elden and Chisholm 1993, Shanks et al. 1993). Action taken, however, should be guided and informed by some theoretical framework appropriate to the researcher's interest and also to the context in which it is to be applied (Checkland 1991, Baskerville and Wood-Harper 1996). Prior to the intervention, the respective roles, responsibilities, expectations and degree of involvement of both researcher and problem owner should be cle arly established. So too should issues concerning the scope of the intervention be resolved. Both researcher and problem owner are actively involved in the intervention (and indeed, in some action research interventions, may be the same person), each bringing a necessary set of knowledge and skills to the intervention (Hult and Lennung 1980). Action research should result in win-win outcomes: for the problem owner, the problematic situation should be better understood and in some way ameliorated at least, while for the researcher, new theories should be generated or tested (Susman and Evered 1978). Adopting action research as described, therefore, implies a rejection of many tenets of more traditional approaches to research which are embodied in the scie ntific method. The methods of natural science are viewed as both problematic and indeed, inappropriate, when applied in "human" disciplines such as IS, for intelligent human agents can (and tend to) take action which can effect both the phenomena under study and the outcomes of the research (Checkland 1991). "Facts" in a social context are viewed as being given existence by as well as interpreted within some socially constructed framework of understanding (Avison 1993). Hence, any scientific or systematic investigation of a social context cannot be regarded as value-free (Elden & Chisholm 1993), nor can it be divorced from the situational and historical context in which it is given meaning (Hult & Lennung 1980).

Rejecting the basic tenets of science does not seem, in itself, to be problematic. However it does mean that the clearly articulated guidelines, procedures and requirements associated with quality, rigorous positivistic inquiry are also rejected. While supporters of action research would have few qualms about this, the challenge they are confronted with is finding any sort of appropriate guidelines or processes with which to replace them (McKay and Marshall 2000). Establishing rigorous and appropriate procedures for action research, however, does seem important if action researchers are to respond to their critics both from within and outside of their own ranks. Concerns that action research is just like consultancy, that it lacks rigour and validity, and that it is impossible to generalise or replicate action research findings, for example, need to be addressed if it is to assume its place as an appropriate research method to advance the discipline of IS (McKay and Marshall 1999a). For action research to gain widespread respectability and acceptability, arguably there is a need to conduct and publish high-quality, rigorous action research studies (McKay and Marshall 2000). This remains a considerable challenge however, when one reflects on the fact that there are few guidelines on how to conduct action research, few published papers illustrating the action research process (as opposed to the content of an action research study), and few criteria by which to assess the merits of a particular action research study.


## THE CHALLENGE OF CONDUCTING ACTION RESEARCH STUDIES

Given the articulation of action research in the previous section, arguably there are two broad ways (and obviously many more possible variants) of approaching action research, and one approach which we would argue is totally unacceptable. In Figure 1 below, the research interest precedes, and possibly initiates, the search for the occurrence of a real-world problem. Through informed action and reflection, satisfactory problem solving and research outcomes are achieved.





## Figure 1: One Approach to Action Research

By contrast, in Figure 2 below, the opportunity of problem solving in the real world may initiate or shape research interests and questions, but once again through informed action and reflection, satisfactory problem solving and research outcomes are achieved.




## Figure 2: A Second Approach to Action Research

Both these approaches seem to have the potential to produce rigorous outcomes (given certain criteria discussed later in this section). However, of concern is the approach adopted in what we have called "post hoc action research", where action in the real-world completely precedes any research interest (see Figure 3 below).




## Figure 3: Consultancy Masquerading as Action Research

Rejecting this third model helps us to address those critics who assert that action research is just like consultancy. While Figure 3 bears all the trademarks of consultancy, Figures 1 and 2 imply a quite different approach. What emerges quite clearly in Figures 1 and 2 is the dual imperatives of the action researcher to improve real-life situations, ***and*** to generate or test new knowledge. By clearly and specifically acknowledging this duality, and taking account of both interests in the overall planning and design of an intervention, it arguably helps the action researcher to think more clearly and thus to act more carefully and reflectively, and also with more awareness of the essence of action research and its concomitant responsibilities (McKay and Marshall 1999b). So, the first element offered to help the would-be action researcher to clarify their thinking about action research is:

1. Reconceptualise action research as being composed of two interconnected cycles of interest: a problem-solving interest, and a research interest.

This notion is captioned below in the Figure 4.





**Figure 4: The Dual Imperatives of Action Research**

This seems important in that the adoption of this dual cycle view in both our thinking and practice of action research dispels the criticism that action research is just like consultancy. We would suggest that consultancy is not dissimilar to the problem solving interest in action research (see Figure 4(a)). Action research which is deemed to be just like consultancy may be found to be lacking in its attention to the research interest cycle (see Figure 4(b)). However, if we explicitly add and clearly acknowledge the research interest of action research, then action research is obviously not the same as consultancy, and the research interest cycle offers a mechanism for action researchers to clearly differentiate their activities from those of consultants. Furthermore, we would assert that thinking about action research as though it were composed of two cycles makes it a lot easier for the action researcher, partic ularly the less experienced researcher, to ensure that they are doing research, and are not inadvertently trying to masquerade consultancy or problem solving as research.

The second element proffered to improve action research practice is a framework designed to enhance quality and rigour in action research. The framework proposed (attached at the conclusion of this paper) has been constructed around the four categories suggested by Straub et al (1994) as being fundamental to quality considerations of any piece of research, positivistic or interpretivistic, and contains a number of questions to challenge the thinking of an action researcher.. These four categories are as follows:

- *Conduct of the research* – This is concerned with issues of quality related to how the research has been conducted, whether it is positivistic or interpretivistic research. Appropriateness of methods and techniques used for the research questions and research context would be included in this category.

- *Conceptual significance of the research* – This category is concerned with topic selection, the use of appropriate theory, coverage of the significant literature, and contributions to knowledge in the discipline. Also considered here would be future research initiatives growing out of the study in question.

- *Practical significance of the research* – This reflects the applied nature of the IS discipline, and is an assessment of whether the research can be linked to real-life issues and challenges facing IS practitioners. Being able to have some impact on practice is of importance in this category.

- *Presentation of the Research* – The category reflects the professionalism of the reporting of the research, and is concerned with elements of expression and structure, particularly as they affect the intended audience for the research. The categories actually embrace many of the criteria established for qualitative research (see Guba and Lincoln 1989), but add additional considerations as well. Each of these categories will be considered in turn, with an attempt to justify the inclusion of the various questions.

### Conduct of the Research

The criteria in this section reflect our concern that action research must be presented and judged to be rigorous research, without being forced into the pos itivist requirements of rigour. Influential in developing the questions in this section was the work of Eden and Huxham (1996) and Guba and Lincoln (1989). Given our concerns that above all else there must be transparency of process, with the process revealed adhering to the bulk of the characteristics (tenets) of action research, then this too was included in this section along with considerations of the credibility, transferability, dependability, and confirmability of the research. Justification of the choice of research method as an appropriate vehicle for the conduct of the research also seemed to need representation in this category. We also chose to include a criterion on researcher skill in this category. This seemed to be justified, given the direct involvement of the researcher in action research. Researcher skill, it was felt, would impact on the way the research was conducted, and hence at least to some extent on the research outcomes and quality.

### Conceptual Significance of the Research

The interest in this category revolved around the use and development of theory throughout the action research intervention. The criteria of the use of an explicit theoretical framework had already been captured in Conduct of the Research, so it was not repeated here. However, the new dimension included in this category was that the theoretical framework selected could be shown to be linked to the relevant academic literature in the field. In this category we also attempted to capture the development of new knowledge or theory from the action research intervention, and the fact that the action research study should lead on to future research and thus play a part in the development of a corpus of knowledge in a particular field.

### Practical Significance of the Research


This category (despite its small number of criteria) is regarded as being of great importance to both action research and the IS community. The problem solving interest of action research requires that the researcher (with the participants) attempts to ameliorate a real-world problem, and thus, being of some practical significance seems to be a fundamental requirement of action research. IS researchers have also been exhorted to acknowledge the applied nature of their discipline, and to engage in relevant research, research that makes a difference to practice (Keen 1987). So the criteria in this category were aimed to ensure that the action research intervention would potentially help practitioners and alleviate problems experienced in the IS discipline. We use the word 'potentially' deliberately, because the issue of whether practitioners choose to take up the ideas of the research seemed to us to lie outside the responsibilities of the action researcher, provided of course, that the researche r has made a reasonable attempt to disseminate the results of his/her research to appropriate audiences.

### *Presentation of the Research*

In some senses, potential criteria for this category have been subsumed into the proceedings categories in the framework. The category was retained to emphasise the need to identify various potential consumers of the research (IS practitioners, IS academics, etc.) and to make an effort to present and disseminate the research findings to these consumer groups in an appropriate way. It is acknowledged, however, that on some occasions, the full extent of the action researcher's effort to publish and talk about his/her results may be unknown. The framework is designed to help inform and shape the design of an action research study, and also to help the subsequent conduct of the research. Being cognisant of many of the issues and requirements of an action research intervention arguably would help to produce more rigorous and credible outcomes. Thus the second element offered to help the action researcher in improving the rigour and quality of the research is:


> 2. Adopt the framework for rigour and quality in action research. Use the questions to constantly challenge and reflect on your actions.

The third element offered to improve action research is a process model. Models of the process of scientific inquiry are relatively common (see Kumar 1996, for example). While there have been attempts to articulate a generic process for the conduct of qualitative research (Gorman and Clayton 1997, Berg 1998, for example), few attempts have been made to create a useful model of the action research process. While these models of the qualitative research process form an invaluable starting point for the scoping and design of action research study, important characteristics of action research, particularly the direct intervention of the action researcher, and the responsibility to facilitate or engage in real-life problem solving, means that some of these qualitative research models fail to capture the multifarious requirements of action research. Janesick (1994) likens qualitative research design to choreography, where specific "steps" emerge through complex movements amongst issues such as research interest, research questions, theoretical perspective, site (and participant) selection, and so on. In terms of action research, then arguably the "warm-up" phase of the dance involves fluid and recursive considerations of the following issues and activities (see Figure 5).



## Figure 5: The "Warm-up" Phase of Action Research Design

Figure 5 suggests that research questions and research design emerge through complex interactions between a number of considerations. Despite a temptation to regard the outcomes of these interactions as fixed and definite, Gorman and Clayton (1997) suggest they should be likened more to a broad research strategy, providing a framework or set of parameters which then delimit the subsequent research activity. A key consideration during the refinement of the research question, research design, site (and real life problem) selection and considerations of suitability, and so on, needs to be the very fundamental issue of whether action research is indeed an appropriate vehicle for the conduct of the research. Action researchers need to be clear and certain that given their interests, objectives and questions, and their theoretical perspective that their chosen approach is the most appropriate. Having established research questions and/or objectives and designed the research intervention, the action research project can be commenced. Throughout the process, the researcher needs to bear in mind the dual imperatives of action (to ameliorate a real-life problem situation) and research (to generate new understandings and insights). Figure 6 is an attempt to capture the richness of the action research process.




## Figure 6: A Process Model for Action Research

Essentially the process recognises the dual imperatives of action research, but attempts to emphasise the close interconnections between these two interests. It also tries to accommodate both the acceptable approaches to action research as illustrated in Figures 1 and 2. The model stresses the iterative nature of action research, arising from a careful evaluation of the process and actions undertaken. The emergent nature of action research is also recognised, as the model encourages reflection on a range of issues associated with the content and context of the problem, the nature of the problem solving process, the research questions and process, and from data gathered and observations made by the researcher as an active participant in the action research process. Thus, some of the anticipated objectives will be achieved and outcomes realised, but emergent outcomes from a range of concerns and possibilities will almost certainly result from an action research study. In addition, it must be acknowledged that complexities in the real world will almost certainly conspire to render some objectives unattainable. Figure 7 below (adapted from Mintzberg and Quinn 1996) illustrates this point.





**Figure 7: Outcomes from an Action Research Study**

The process model of action research is offered as a guideline, a suggestion on how a researcher might proceed. Perfectly acceptable varia tions are envisaged, and there is no intention here of limiting the creativity and resourcefulness of the researcher. Secondly, it is acknowledged that real-life is seldom as neat and predictable as this model might imply, nor is it as easily compartment alised. Inevitably, contingencies will arise which will serve to moderate the action research process as the intervention unfolds. This process model, then, is a tool to help structure thinking: it is a device to challenge the decision making of the researcher, and to try to help the action researcher cope with all the complexity and uncertainty of the real-world. It is not intended as a step-by-step approach which must be doggedly implemented. Thus, the third element offered to help the action researcher is:

3. Use the process model of action research to help you design rigorous research, and to support the management of complexity throughout the action research process.

## CONCLUSION

This paper has acknowledged the concerns of some authors about the conduct and the quality and rigour of action research. Indeed, of concern is the risk that action research will not enjoy the uptake that it deserves unless committed action researchers can clearly demonstrate the rigour and reliability, and achieve widespread acceptability of action research within the IS community. In response to these concerns, the authors have proposed three major elements, which a potential action researcher can adopt and apply to gain insights into the requirements of the action research process, and on those steps and considerations that can be taken in the design and conduct of action research in order to improve the quality and rigour of the research outcomes. First of all, researchers are encouraged to think of action research as composed, at a conceptual level, of two interconnected cycles of interest. Arguably this encourages greater awareness throughout the intervention of the need to attend to both the problem solving activity, and to activities more associated with the research process. Secondly, researchers are offered a framework of questions to challenge and support the decision making and actions with respect to the design and conduct of the research. Thirdly, a flexible process model of action research was suggested to help would be researchers to consider the intricacies of action research, and to make appropriate decisions therefore about the conduct of their research. The authors argue that these three elements in combination offer significant support and guidance to the action researcher, and are a step towards developing a widely accepted, well-articulated process and procedure for action research.

## BIBLIOGRAPHY

Avison, D. E. (1993) Research in IS Development and the Discipline of IS. Proceedings of the 4th Australasian Conference on IS, Brisbane, 28-30 September.

Avison, D. E., Lau, F., Myers M., and Nielson, P. A. (1999) Action Research. Communications of of the ACM, Vol. 42, No. 1, pp. 94-97.

Baskerville, R. L. and Wood-Harper, A. T. (1996) A Critical Perspective on Action Research As a Method for IS Research, Journal of Information Technology, Vol. 11, pp 235-246.

Berg, B.L. (1998) Qualitative Research Methods for the Scoail Sciences. 3rd ed. Allyn & Bacon, Massachusetts.

Checkland, P. (1991) From Framework through Experience to Learning: the Essential Nature of Action Research. In Nissen, H. E.et al (Eds.) IS Research: Contemporary Approaches and Emergent Traditions, Elsevier, Amsterdam.

Eden, C., and Huxham, C. (1996) Action Research for Management Research. British Journal of Management, Vol. 7, No. 1, pp. 75-86.

Elden, M. and Chisholm, R.F. (1993), "Emerging Varieties of Action Research: Introduction to the Special Issue," *Human Relations*, Vol. 46, pp. 121-142.

Gorman, G.E. and Clayton, P. (1997) Qualitative Research for the Information Professional: A Practical Handbook. Library Association Publishings, London.

Guba, E. G., and Lincoln, Y. S. (1989) Fourth Generation Evaluation. Sage, Newbury Park, CA., USA.

Hult, M. and Lennung, S. (1980) Towards a Definition of Action Research: a Note and a Bibliography. Journal of Management Studies, Vol. 17, pp. 241-250.

Janesick, V.J. (1994) The Dance of Qualitative Research Design: Metaphor, Methodolatry and Meaning, in Denzin, N.K. and Lincoln, Y.S. (eds.) Handbook of Qualitative research. Sage, Thousand Oaks, USA.

Keen, P.G.W. (1987) MIS Research: Current Status, Trends and Needs. In R.A. Buckingham et al. (eds.) IS Education: Recommendations and Implementation. Cambridge University Press, Cambridge.

Kumar, R. (1996) Research Methodology. Addison Wesley Longman, Melbourne. Lau, F. (1997) A Review of Action Research in IS Studies, in IS and Qualitative Research. Proceedings of the IFIP TC8 WG8.2 International Conference on IS and Qualitative Research, Philadelphia, USA, 31 May – 3 June.

McKay, J. and Marshall, P. (2000) Quality and Rigour in Action Research in Information Systems. Proceedings of 8th European Conference on Information Systems, Vienna University of Economics and Business Administration, Austria.

McKay, J. and Marshall, P. (1999a) The Poverty of Action Research in IS, Proceedings of the UKSS Conference, Lincoln Business School, Lincoln, UK, July.

McKay, J. and Marshall, P. (1999b) 2 x 6 = 12, or Does It Equal Action Research? *Proceedings of the 10th Australasian Conference on Information Systems,* University of Wellington, New Zealand, December 1-3, 1999.

Mintzberg, H. and Quinn, J.B. (1996) The Strategy Process: Concepts, Contexts and Cases. 3rd ed. Prentice Hall, Upper Saddle River, NJ.

Shanks, G., Rouse, A., and Arnott, D. (1993) "A Review of Approaches to Research and Scholarship in Information Systems," *in Proceedings of the 4th Australian Conference on Information Systems*, University of Queensland, Brisbane.

Stowell, F.A., West, D., and Stansfield, M. H. (1997) Action Research As a Framework for IS Research in Mingers, J. and Stowell, F. A. (Eds.) IS: an Emerging Discipline? McGraw-Hill, London.

Straub, D. W., Ang, S. and Evaristo, R. (1994) Normative Standards for IS Research, Data Base, pp. 21-34, February.

Susman, G.I. and Evered, R.D. (1978) "An Assessment of the Scientific Merits of Action Research," *Administrative Science Quarterly* , Vol 23, pp. 582-603.

West, D., Stowell, F.A., and Stansfield, M. H. (1995) Action Research and IS Research, in Critical Issues in Systems Theory and Practice, K. Ellis et al., Eds., Plenum Press, New York.

□□□

Primary - 2008




Drama & Theatre - 2008



Art - 2008



Dance - 2008



## Speacial Education - 2008




## Music - 2008



## Library Scince - 2008



## English - 2008



# எமது கல்லூரி பீடாதிபதி : உயர்திரு S. K. யோகநாதன்

முகிழ்நிலை ஆசிரியர் S. நிஷாந்தன்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நாம் முன் சேவை ஆசிரியப் பயிற்சியை முழு நிறைவாகப் பெற முழு முதற்காரணமாக எமது பீடாதிபதி உயர் திரு. S.K. யோகநாதன் அவர்களே எம் கண் முன் தோன்றாத் துணைவராக வருகின்றார். அவருடைய அர்ப்பணிப்பு, அன்பு நெறி, எளிமை, தூய்மை, வீரம் நெற்றிக்கண்ணைத்திறப்பினும் குற்றம் குற்றமே என நேரடியாகக் கூறும் வன்மை, இரக்கம், விட்டுக்கொடுத்தல், மனிதத்துவம், எல்லோரையும் மதிக்கும் பண்பு ஆகிய குணங்களை எல்லாம் நாம் பின்பற்ற அவர் முன்னுதாரணமாகத் திகழ்ந்து கொண்டிருக் கின்றார். ஒரு நல்ல அதிபர், ஒரு நல்ல ஆசிரியர், ஒரு நல்ல மனிதர் எவ்வாறு முன்மாதிரியாக இருக்க வேண்டும், நடக்க வேண்டும் செயற்பட வேண்டும், மற்றவர்களுக்கு உதவ வேண்டும். என்பதற்கு எமது பீடாதிபதியின் நடிபங்குகள் எடுத்துக் காட்டுகின்றன.



தரமான முன்சேவை ஆசிரியர் கல்வியை எமக்கு அளிப் பதற்காக அவர் பட்டபாடும் கஸ்டங்கள் சவால்கள் என்பவற்றையும் நாம் அறிந்து வைத்துள் ளோம்.

#### மாணவர் மைய நோக்கு

நவீன கல்வி முகாமைத்துவ எண்ணக் கருவின் பிரயோகமாக வாடிக்கையாளரைத் திருப்திப்படுத்தும் செயலாற்றுகை முதன்மை பெறுகின்றது. இவ் எண்ணக்கருவின் செயற் படுதன்மையை எமது பீடாதிதி S.K. யோகநாதன் அவர்களின் நடவடிக்கைகளில் பார்க்க முடியும். கல்வியியலாளர்களையும், கல்விசாரா ஊழியர்களையும் மாணவர்களாகிய எமது நலனோம்பலில் கூடுதலாக ஈடுபடுத்துபவர். தான் எம்முடனேயே எல்லாச்சந்தர்ப்பங்களிலும் இருந்து வழிகாட்டுவார். நாம் காலை எழுந்து கொடியேற்றுவதிலிருந்து உடற்பயிற்சி, காலை உணவு, காலை வணக்கம், வகுப்பறை, மதிய உணவு, பின்நேர வகுப்புக்கள் மாலை மன்றம் உடற்கல்விச் செயற்பாடுகள் கொடி இறக்கல், இரவு உணவு, நித்திரைக்குச் செல்லல், நடு இரவில் மேற்பார்வை எனவேறு எங்குமே காணமுடியாத தந்தையாக பெருமனிதராக, நண்பராக எமக்காக வாழ்ந்து கொண்டிருக்கும் ஒர் உயிராக எமது பீடாதிபதி எம் இதயத்தில் வாழ்ந்து கொண்டிருக் கின்றார். அவர் தன்னை எமக்காக அர்ப்பணிக் கின்ற இந்த மேலான சேவையை எண்ண, எண்ண வியப்பாக உள்ளது. தனது குடும்பத்தினரையும் வவுனியாவில் விட்டு 24 மணி நேரமும் எம் முடனே இருந்து வாழ்ந்து எம்மை வாழ வைக்கும் எம்பீடாதிபதி ஆசிரியத்துவத்தின் அற்புதம்.

மிகக்கடுமையான யுத்தகாலத்தில் பல இன்னல்களை எம்முடன் இணைந்து அனு பவித்தவர். வெளிமாவட்டமாணவர்களை லீவு நாட்களில் பெற்றார்களிடம் ஒப்படைப் பதிலிருந்து மீண்டும் அவர்களைக் கல்லூரிக்கு திருகோணமலை கப்பலில் தானே அழைத்து வந்த அர்ப்பணிப்பான மனிதர். எமது கல்லூரித் தாயின் காவியநாயகன். எமது உணவுக்காகவும், பல்வேறு வசதிகளை எமக்கு வழங்குவதற்காகவும் பல தொண்டு நிறுவனங்களை அணுகி அவர்களின் உதவிகளைப் பெற்றுத்தந்த செம்மல். நிஷா புயலின் போது பல்வேறு இழப்புக்களைக் கல்லூரி சந்தித்தது. அப்பயங்கரமான வேளை எம்முடனேயே இருந்து எமக்கு ஆறுதல் கூறி உணவுதந்து, தனது பிள்ளைகள் போல் எம்மைப் பராமரித்த பெரு மனிதர் எமது பீடாதி பதி அவர்கள். எந்தப் பிரச்சினைகள் என்றாலும் அவரை நாம் அனுகி எந்த நேரத்திலும் மனம் திறந்து கதைக்க முடியும். நாம் செய்த தவறுகளைக் கூறமுடியும், மன்னிப்புக்கேட்க முடியும். தேசிய கல்வியியற் கல்லூரி முகாமைத் துவத்தில் நீண்ட காலம் சேவையாற்றி அங்கு வதிவிடத்துடன்

கூடிய நிலையில் முகிழ்நிலை ஆசிரியர்கள் பல்வேறு வதைகளுக்கு உள்ளாவதை நேரடியாகக் கண்ட, அனுபவித்த எமது பீடாதிபதி அந்த நிலையை மாற்ற வேண்டும் என கல்வியமைச்சு செயலமர்வுகளில் அடிக்கடி கூறுவது மட்டுமல்ல, அதனை எமது கல்லூரியில் நடைமுறைப்படுத்திக் காட்டியவர். இந்நடை முறைப்படுத்தல் மிகக்கடுமையான முகாமைத்துவ மாகும். பலரும் விமர்ச்சித்தார்கள். பலரும் பல கூறினார்கள். பலர் பல பிரச்சினைகளைக் கொடுத்தாலும் நீதி - நேர்மை வழி நின்று இறைசிந்தனையுடன், மனச்சாட்சியுடன் மிருது நிலைத்திறன்கள் அடங்கிய நவீன மனிதவள முகாமைத்துவத்தை எமது கல்விக்காகப் புகுத்தி சாதனை செய்த புரட்சியாளராகவே எமது பீடாதிபதி எம் மனங்களில் உள்ளார். நாமும் நாளை ஆசிரியர்களானதும் எம்மிடம் பயிலும் மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளைப் புரிந்து அவர்களுடைய பிரச்சினைகளைக்கண்டு தீர்த்து வழிகாட்டுவோம் அதற்கு முன்னு தாரணமாக வேறு எந்தத் தேசிய கல்வியியற் கல்லூரிகளிலும் இல்லாத மனிதத்துவ அணுகுமுறை முகாமைத்து வத்தை தன்னை அர்ப்பணித்து தானே நேயாளி யாகியும் தளராது தொடர்ந்து கடைப்பிடிக்கும் எம் பீடாதிபதி மிக உயர்ந்த கனவான், உத்தமர்.

**முகாமைத்துவ ஆற்றல் :-**

எந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமோ அந்தக்காரியத்தை எப்போது செய்ய வேண்டுமோ அப்போது செய்கின்றவர்களே வெற்றிகரமான முகாமையாளர்" என்ற எண்ணக்கருவுக்கு எமது பீடதிபதி அவர்களே செயல் வடிவம் கொடுப்ப வராக உள்ளார். அவருடைய வெற்றி இந்த முகாமைத்துவ ஆற்றலில் இருந்தே பிறக்கின்றது. அதன்படியே எம்மையும் செயற்படத் தூண்டு கின்றார். தன்னோடு கடமையாற்றும் ஏனைய அனைவருக்கும் இதனையே இயம்பிக் கொண்டி ருக்கின்றார். முகாமையாளர்கள் தமது இலக்கில் வெற்றி பெற பிரச்சினைகளைக் கையாளும் திறன்களே முக்கிய காரணிகளாகவுள்ளன. எமது பீடாதிபதி அவர்களின் பிரச்சினை தீர்க்கும் தந்திரோபாய பாத்தைப் பின்வருமாறு என்னால் அனுமானிக்க முடிந்தது.

★ முதலில் பிரச்சினையை பல்வேறு தரப்பினர் ஊடாக இனம் காண்பார்.

★ பிரச்சினையைத் தீர்க்கும் தன்னம்பிக்கையைத் தான் கொண்டுள்ளதுடன் சில பல விட்டுக் கொடுப்புக்களுடன் ஏனையோரையும் தன் வழிக்கு ஆற்றுப்படுத்துவர்.

★ பிரச்சினையைத் தீர்க்க நடைமுறைச் சாத்திய மான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

★ விடா முயற்சி, நகைச்சுவை உணர்வு, கல்லூரி யை முதன்மைப்படுத்தல் பொறுப்புக்களை உணர்த்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

★ உரிமையுடன் எங்களோடு அணுகுதல்.

ஆகிய செயற்பாடுகள் மூலம் பல்வேறு பிரச்சினைகளையும் தீர்க்கும் ஆற்றல் கொண்ட வராக எமது பீடாதிபதி உள்ளார். அவருடைய மிக முக்கிய நடவடிக்கை பிரச்சினைகள் வருவதற்கு முன்பே அவற்றை வராமல் தடுக்கும் முகாமைத் துவ ஆற்றலாகும். இதற்கான சூழ்நிலைகளைச் சரியாக உருவாக்கியதால் தான் ஏனைய கல்லூரிகளை விட எமது கல்லூரி மிகச் சுமுகமாக இயங்குகின்றது. மிகக்கடுமைப் போக்குகள் கடும் தண்டனைகள் சட்ட நடவடிக்கைகளுக்கு அப்பால் ஒரு அன்புப்பிணைப்பு முகாமைத்துவ செயற்பாடுகள் மூலம் எமது கல்லூரியை ஒரு தனித்துவமான மனித மாண்பின் மகத்துவ நிலையமாக உருவாக்கியுள்ளார். மனிதத்துவ முகாமைத்துவ அணுகுமுறையில் நெகிழ்ச்சித் தன்மை இருக்கும் அதுவே எமது பீடாதிபதியின் பலம். அதைப்பலவீனமாகப் பார்ப்பவர்கள் இறுதியில் அவருடைய நடவடிக்கைகள் மூலம் உண்மையை உணர்ந்து கொள்வார்கள். அது மிக உயர்வான - உன்னதமான நவீன மனிதவள முகாமைத்துவத்தின் பிரதிபதிப்பாக இருக்கும். அதனுள் அனைவருமே அடங்கிப் போய்விடு வார்கள் இதற்காகத் தன்னையே தியாகம் செய்வது எமது பீடாதிபதியின் அடுத்த உயர் குணமாகும்.

**நடைமுறைச்சாத்தியமாக்குநர் :-**

எமது கல்லூரிக் கலைத்திட்டம் நடைமுறைப் படுத்துகின்றபோது இணைக்கலைத் திட்டம் மூலம் எம் ஒவ்வொருவரையும் ஆளுமை உள்ளவராக்கி எமது எந்த இலக்கு களையும் அடையும் நடைமுறைச்சாத்திய தந்திரோ பாயங்களைக் கற்பித்துவருபவராகவும் எமது பீடாதிபதி உள்ளனர். இதுவே ஆசிரியர் களுக்கு இன்று அவசியமான சமநிலை ஆளுமைப் பண்புகளை வளர்க்கின்றது. இங்கு சமநிலை ஆளுமை என்பது உடல் உள- சமூக - மனவெழுச்சி அம்சங்களிலே சமநிலையுடன் வாழ்பவர்கள் சமநிலை ஆளுமை உடையவர்களாகக் கொள்ளப் படுகின்றார்கள் சமநிலை ஆளுமை உடையவர்கள் சமூகத்திலுள்ள எல்லோருடனும் பொருத்தமான தொடர்பை மேற்கொண்டு சமூகத்திற்குப் பயனுடையவர்களாக வாழ் வார்கள். இவர்களது கருத்துக்களுக்கு மக்கள் உட்படுவர் இவர்களின் தலைமைத் துவத்தை ஏற்றுக்கொள்வர். இவர்கள் நாட்டின் நற்பிரஜை களாக வாழ்வார்கள் என்ற கருத்தை மீண்டும் மீண்டும் எமக்கு உணர்த்தி இணைக் கலைத்திட்ட செயற்பாடுகள் மூலம் ஆளுமை உடைய, நடைமுறைச்சாத்தியமான நல்லாசிரிய ராக வரு வதற்கு எம் பீடாதிபதி உதவி வருகின்றார்.

விளையாட்டுக்கள், சமய நிகழ்வுகள் சாரணீயம், பல்வேறு மன்றச் செயற்பாடுகள், பாடசாலைகளை மையங்களாகக் கொண்ட செயற்திட்டங்கள், செயல்நிலை ஆய்வுகள் சமூகம் நோக்கி சிரமதான செயற்பாடுகள் கல்விச்சுற்றுலா, மாலை கட்டுதல், கோலம் போடுதல் போட்டிகள், நாடகப்போட்டிகள், பேச்சு, கவிதை, வில்லுப் பாட்டு, நடனம் என எல்லா முகிழ்நிலை ஆசிரியர் களும் இவற்றில் கட்டாயமாகப் பங்கு பற்றி தமது ஆளுமைகளை வளர்க்க எமது கல்லூரியில் சிறந்த ஒரு சூழ்நிலையை எமது பீடாதிபதி ஏற்படுத்தி உள்ளார். எங்கும் காணாத இந்தச் சூழ்நிலையால் எமது ஆளுமைகளை நாம் பலபரிமாணங்களில் வளர்க்கக் கூடியதாகவுள்ளது. இவ்வாறு பயன் பெற்ற நாம் எமது பாடசாலை மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டலை மேற் கொள்ள முடிகின்றது. பாடசாலை முறைமையிலும் கல்வி முறைமையிலும் கூட இன்றைய மாணவர்கள் சார்பாகவும் பல விமர்சனங்கள் கூறப்படுகின்றன. கல்வியின் நோக்கு நற்பிரசைகளை உருவாக்குதலே ஆகும். ஆனால் இது சாத்தியமாகாதற்கு இணைபாட விதான விசேட செயற்பாடுகள் மூலமான செயற்திட்டங்கள் பாடசாலைகளில் எல்லா மாணவர்களுக்கும் வழங்கப்படாமையே காரண மாகும். இந்நிலையை நீக்க எமது பீடாதிபதி S.K. யோகநாதன் அவர்களின் மேலான வழிகாட்டல் சிறந்த வரப்பிரசாதமாக எமக்கு உள்ளது.

இவ்வகையில் எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பத்தாவது ஆண்டுப் பூர்த்தியில் எமது பீடாதிபதி உயர்திரு. S.K யோகநாதன் அவர்களுடைய மிக உயர்ந்த முகாமைத்துவப்பண்புகளை, மனிதத்துவ அணுகு முறைகளை நடைமுறைச்சாத்தியமான சிந்தனை களை, ஆற்றுப்படுத்தும் ஆற்றங்களை, அர்ப் பணிப்புக்களை தியாகங்களை மீட்டுரைக்க கூடியதாக இருந்தது. இம் மீட்டுணர்தல் இன்றைய சமகால கல்வி மற்றும் ஏனைய முகாமையாளர் களுக்குப் புதிய பாடங்களாக அமைகின்றன. இப்பாடங்களில் வெற்றிக்கான முகாமைத்துவ அணுகு முறைகள் பொதிந்து காணப்படுகின்றன. மிக உயர்ந்த மனிதப்பண்புகள் விருத்தியடைந்து காணப்படுகின்றன. முகிழ்நிலை ஆசிரியர்களான எமது நடத்தைகளில் பல நல்ல நடத்தை மாற்றங் களை ஏற்படுத்தியுள்ளன. எமது கல்லூரி கல்வி யியலில், கல்வி சாரா ஊழியர், கல்லூரியுடன் தொடர்புடையவர்களுடனான தொரடர் பாடல் கள் விருத்தியாகின்றன. புதிய ஆசிரியர் களான எமக்கு மிகுந்த பயன்களைத் தந்துள்ளன. எமது வாழ்வில் மறக்கமுடியாத மான்புடைய மனிதராக எமது பீடாதிபதி உயர் திரு S. K. யோகநாதன் அவர்கள் எம் இதயத்தில் வாழ்கின்றார்.

□□□

# பெண்களுக்கான கல்வியும் பொருளாதார வளர்ச்சியும்

திருமதி சுபாதினி தயாபரன்
கல்வியியலாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

**அறிமுகம்**

இன்றைய சமூக பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்களிப்பினை வழங்கும் பெண்கள் உலகின் மொத்த குடித்தொகையில் கணிசமானளவு இடத்தைப் பிடித்துள்ளனர். பெண்களின் சமூக அந்தஸ்து உயர்ந்து செல்வதற்கு கல்வி முக்கிய காரணியாக உள்ளது. ஒரு சமூகத்தின் துரிதமான வளர்ச்சிக்கு பெண் கல்வி அவசியமென்று கருதப்படுகின்றது. இன்று உலக நாடுகள் பலவற்றிலே பெண் கல்வி தொடர்பான சிந்தனை மேம்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆரம்ப கால சமூகத்திலே பெண்களுடைய கல்வி பல புறக்காரணிகளாலே நசுக்கப்பட்டது. இதனால் கற்கும் உரிமை அவர்களுக்கு கிடைக்கவில்லை ஆண்களிற்கு அடிமைப்பட்டு ஆண்களின் போகப் பொருளென காணப்பட்டாள். அண்மைக் காலங்களிலே பெண்ணியல் சிந்தனைகளில் உருவாகியுள்ள வளர்ச்சிப் போக்குகள் பெண்கல்வி தொடர்பான பல புதிய சிந்தனைகளை சமூதாயத்திலே தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

அறிவையும் தகவல்களையும் மையமாக கொண்டு அமைந்துள்ள இக் காலப்பகுதியில் ஒவ்வொரு தனிமனிதனும் நாட்டின் துரிதமாக மாற்றங்களோடு தன்னை பொருத்திக் கொண்டாலே ஒழிய சமுதாயத்தில் வாழ முடியாத நிலை ஏற்பட்டுவிடும். C.W.W கன்னங்கரா அவர்களின் சகலருக்கும் கல்வி, இலவசக் கல்வி, கட்டாயக் கல்வி, என்ற நிலைகளில் பெண்கள் கல்வி சமுதாயத்தில் முக்கியத்துவம் பெற்றது. உலகின் மொத்த குடித் தொகையில் பெண்களின் வீதம் அதிகமாக இருந்தாலும் கல்வி அறிவற்ற பெண்களின் வீதம் இன்னொரு புறம் உயர்ந்து கொண்டே செல்கின்றது. அவர்கள் தம் குடும்ப அங்கத்தவர்களின் திருப்திக்காகவும் தங்களது வாழ்க்கையை அர்ப்பணிக்கும் நிலையை காண முடிகின்றது. சமூக வாழ்வின் நம்பிக்கைகளும் இறுக்கமான மரபு வழி பழக்க வழக்கங்களும் பெண்களை சில இடங்களில் ஒரு படி கிழ் வைத்து நோக்கப்படுகின்றாள்.

பாலியல் இன்பத்தில் ஆணும் பெண்ணும் சம பங்கு தாரராக விளங்கிய போதும் தாய்மைக்கு அணிகலன் குழந்தை பேறு என்ற கருத்தை வலியுறுத்துகின்றனர். பெண்ணை மனித பொருளாதாரவள விருத்தியோடு தொடர்புபடுத்தாது குழந்தை பெறல், வளர்த்தல் குடும்பத்தில் முதியோரை பேணல் என்ற பல்வேறுபட்ட சமூக விருத்தியோடு பார்க்கும் தன்மை காணப்படுகின்றது. அவர்களது திறமைகளை வெளிஉலகிற்கு தெரியாத வகையிலே சில செயற்பாடுகள் மூடி மறைகின்றன. மத நம்பிக்கைகள், சமூக விழுமியங்கள் கலாச்சாரப் போக்குகள் போன்றவை ஆண்களை முன்னிலைப் படுத்தி பெண்களை அடிமைப் படுத்தும் போக்குடையதாக காணப்படுகின்றது.

வளர்ச்சி அடைந்த நாடுகளை காட்டிலும் வளர் முக நாடுகளில் பெண்கள் அடிமைகளாகவும் கீழ் நிலையில் உள்ளவர்களாகவும் பொதுவாக இருப்பதனைக் காண முடிகின்றது. அந்த வகையில் புதிய **21** ம் நூற்றாண்டில் மிலேனிய நோக்கங்களில் ஒன்றான பெண்கல்வி வழங்கப் படுவதோடு அது வலுவூட்டப்பட்ட வேண்டும் என்ற யுனெஸ்கோவின் கோரிக்கை எல்லா நாடுகளிலும் உன்னத குறிக்கோளாக்கப் பட்டுள்ளது.

**பெண் கல்வியின் முக்கியத்துவம்.**

உலகின் சமூக பொருளாதார அபிவிருத்தி செயன் முறைகளில் முக்கிய பங்களிப்பை பெண் மனிதவளம் வழங்கி வருகின்ற போதிலும் அதன் முக்கியத்துவம் சரியாக அங்கீகரிக்க படவில்லை உலக மொத்த சனத்தொகையில் பெண்களின் பங்கு அரைவாசியாக உள்ளது. பொருளாதார உற்பத்திகளில் ஊழிய வேலை மணித்தியாலங்

களில் 2/3 பங்கினை அவர்களே வழங்குகின்றனர். ஆனால் உலகின் மொத்த வருமானத்தில் பத்தில் ஒரு பங்கை தன்னும் அவர்கள் நுகர்வதில்லை. பெண்களின் மனித வள மேம்பாட்டினை இன்று உணர்ந்து அவர்கள் தமது வாழ்வை வாழ்வதற்குத் தேவையான அத்தியாவசிய கல்வியில் தொழில் நுட்ப கல்வியையும், தொழில் பயிற்சி கல்வி யையும் இன்று ஆணுக்கு பெண் நிகராக பெற்று கொள்ள கூடிய வகையில் ஆரம்ப இடை நிலை, மூன்றாம் நிலைக் கல்விகள் தமது சேவைகளை வழங்குகின்றன. ஒரு நாட்டின் முன்னேற்றத்தில் பெண் கல்வி முக்கிய பங்கு வகிக்கின்றது. சுவாமி விவேகானந்தரின் கருத்து படி ஒரு ஆண் கல்வி கற்பதால் அது அவனுக்கு மட்டுமே பயன்படு கின்றது. ஒரு பெண் கல்வி கற்றால் அது அவளது குடும்ப முழுவதையும் சென்றடைகின்றது.

இன்று சமூக வளர்ச்சியில் கணிசமான பங்களிப்பை வழங்குபவர்களாக பெண்களின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. பெண் களுக்கான கல்வி வாய்ப்புக்கள் பல சமூக முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக குடும்ப வாழ்க்கை சிறப்பாக அமைதல், பிள்ளைகளின் அறிவு வளர்ச்சியடைதல், சீதனப் பிரச்சனை ஒழிதல் வறுமை மூட நம்பிக்கை போன்ற குறைதல் போன்ற சமூக மாற்றங்களை குறிப்பிடலாம். அடிமைத் தனத்திலிருந்து பெண்களை விடுவிக்கவும், சமூகத்தில் பெண் களின் அந்தஸ்து உயர்வதற்கும் அவர்களுடைய கருத்துகட்கு மதிப்பளிக்கும் நிலைமையும் இப்போது சமூகத்தில் ஏற்பட்டிருப்பதனை காணமுடிகின்றது.

சமூக அபிவிருத்தி பற்றி பேராசிரியர் "அமாருத்திய சென்" குறிப்பிடுகையில் பெண் களின் கல்வி அறிவு அதிகரிக்கும் போது பிறப்பு வீதம் குறைகின்றது. என ஆதாரப் படுத்தியுள்ளார். பெண்களின் கல்வி உயர்வால் வேலை வாய்ப்புகள் அவர்கட்குகிட்டி உள்ளது. பிள்ளைகளின் போசுஷனை கல்வி முறை, பாரமரிப்பு போன்றவை அதிகரிப்பதால் சிசுமரண விதம், பிள்ளைகளின் இறப்பு வீதம் குறைவடைந் துள்ளது.

**பெண்கல்வியும் தொழில் உலகும் :–**

நவீன தொழில் உலகை நாம் பார்க்கும் போது மருத்துவம் பொறியியல், ஆசிரியத்துவம் விண்வெளி ஆய்வு விமானி போன்ற இன்னோ ரன்ன தொழில்களில் பெண்களில் கால் பதிக்கப் பட்டுள்ளது. சமூக சேவைகளான ஆசிரியர், தாதி, போன்ற வேலைகளையே ஆரம்ப காலங்களில் பெண்கள் கூடுதலாக ஈடுபடுகின்றனர். இன்று ஆண்களுக்கு சரிநிகராக உடல், உள ரீதியான உழைப்பை அவர்களும் வழங்கி குடும்ப வருமானத்தை கூடிய மட்டத்தில் பெருக்க அவர்களின் தொழில் வழிவகுக்கின்றது. இந் நிலையிலும் கூட தொழில் உலகில் பெண்கள் புக பல காரணிகள் தடைகளாக அமைகின்றன.

1. பெண்களின் சம அந்தஸ்து அங்கீகரிக்கப்பட வில்லை.
2. பெண்களின் கல்வி மற்றும் தொழில் தொடர் பான முடிவுகளை பெண்கள் எடுப்பதில்லை.
3. உற்பத்தி சேவை முயற்சிகளில் ஊழியர் பங்கேற்பிற்கு தேவையான தன்னம்பிக்கை வளர்க்க கூடிய கல்வி இன்னும் முழுமையாக கிடைக்கப் பெறாமை.
4. பெண்களின் முழு ஆற்றல்களையும் பயன் படுத்தக் கூடிய மனித வள விருத்திக்கான கல்வி ஆலோசனை மேற் கொள்ளப்படாமை.
5. பெண் முயற்சியாண்மை, பெண் முகாமை யாளர் பெண் உயர் நிர்வாகிகள் போன்ற பதவி, மற்றும் தகைமை நிலை விருத்திக்கு உதவும் கல்வித் திட்டங்கள் காணப்படாமை.

உலகில் காணப்படுகின்ற 13 கோடி சிறுவர் களுள் நான்கு பெண் பிள்ளைகளுக்கு ஒருவர் என்ற வீதாசாரத்தில் அவர்கள் பள்ளிக்கு செல்வதில்லை அத்துடன் அவர்களின் போஷாக் கின்மையும் மிக தாழ்ந்த மட்டத்தில் காணப் படுகின்றது.

இவ்வாறு நிலவும் பெண்கல்வியின் தொழிலையும் பொருத்தமானதாக இணைக்க அவர்களின் கல்வி செயற்பாடுகள் பின் வருமாறு மாற்றியமைக்கப்பட வேண்டும்.

1. பெண்கள் புலமை சார்ந்தவராகவும் ஒழுக்கம் உளவியல் கலாச்சார சமூக பொருளாதார அடிப்படைகளில் தகைமை மிக்கவராக்கப் படல்.

2. பல்வகைப்பட்ட தொழிற்பாடுகளிலும் ஈடுபடக் கூடிய திறன்கள் விருத்தி செய்யப் படல்.

3. தொழில் நிறுவன கலாச்சாரத்திற்கு பொருந் தக் கூடியயவராக்குதல்.

4. நாட்டின் பௌதீக, நிதி மற்றும் அறிவியல் வளங்களுடன் நெருக்கமான தொடர்புடைய வராக்கப்படல்.

5. பெண்களுக்கான தொழில் நிறுவனங்கள் பெண்களுக்கான உயர் தொழில் பயிற்சி நிறுவனங்கள் என்பன அதிகளவில் உருவாக் கப்படுதலும் நவீன மயப்படுத்தலும்.

6. பெண் முயற்சியாண்மையாளர் தனியாளா கவும் குழுவாகவும் வளர்ச்சியடையும் வகையில் வாண்மை பெறச் செய்யும் கல்வி நிகழ்சி திட்டங்கள் மற்றும் செயத்திட்டங்கள் வடிவமைக்கப்படல்.

7. பெண் மனித வளம் தொடர்பாக அடை யாளம் காணப்படும் பல்வேறு பிரச்சனை களிலும் அதிக சிரத்தையுடன் கவனம் செலுத்துவதோடு அவற்றை நிறைவான முறையில் அகற்றவும் அக்கறை காட்ட வேண்டும். இதற்கான உட்கட்டமைப் புகள் பேணப்படல்.

8. பெண்களின் உற்பத்தி திறனை மட்டுமன்றி தொழில் தொடர்பான சமூக அந்தஸ்தத் தையும் உயர்த்த கூடிய கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சி திட்டம் உருவாக்கப்படல்.

### முடிவுரை

பெண் கல்வி இன்று முக்கியத்துவமுடைய தாக விளங்கினாலும் அத்துறையில் பல தடை களுக்கும் கல்வி மற்றும் அடிப்படை பயிற்சி என்பவற்றின் அடிப்படையில் பெண் மனித வளத்தை விருத்தி செய்வதற்கான பல உபாயங்கள் உலகளவிலே முன் வைக்கப்படுகிறது. இதன் மூலம் பெண்கட்கும் கல்விக்குமிடையே காணப் படும் இடைவெளியை குறைக்க முடியும். பெண் களின் சமூக பொருளாதார அந்தஸ்து என்பது ஆண் வர்க்க நிலைப்பாட்டிலிருந்து தோற்று விக்கப்பட்டது. இது முற்று முழுதாக மனப்பாங்கு சார்ந்த விடயமாகையால் இதை சமுதாயம் நன்குணர்ந்து ஆண்களுக்கு அளிக்கப்படும் அனைத்து வித கல்வியும் பெண்களுக்கு அளிக்கப் படல் சிறப்பானதாகும். எனவே நம் நாட்டில் பெண்களின் விழுமியங்களை மதித்து அவர்கட்கு உயர் அந்தஸ்து வழங்கும் வகையில் அவர்களின் தகுதி நிலைக் கேற்ற தொழிலை வழங்குவதோடு உயர் தொடர் கல்விக்கான வசதிகளை ஏற்படுத்தி கொள்வதன் மூலம் சிறந்த ஆரோக்கியமான பெண் சமுதாயத்தை ஏற்படுத்த முடியும்.

### உசாத்துணை நூல்கள்

1. *Achteberg, J. (1991) Women as healer, Boston M. Ashambhala.*

2. பொருளியல் நோக்கு, மக்கள் வங்கி வெளியீடு 2006.

3. *Pre historic times P. Engels*

4. *Future of the family in Encyclopaediy of women, Society and Culture.*

□□□

# அன்றாட வாழ்வில் கணிதம்

வி. ஞானசிங்கம்
இரண்டாம் வருடம், கணிதப் பிரிவு (தமிழ்மொழி)

"எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்" என்பது முதுவாக்கு இவ்வாக்கின் மூலம் எழுத்துக்கு முன் எண்ணுக்கே முதலிடம் கொடுக்கப்பட் டுள்ளது. அந்தவகையில் கருத்துச் செறிவுள்ள தொகுதிகள் தொடர்பான கற்கையும் உலகில் ஏற்படும் பிரச்சினைகளில் உள்ளுணர்வை அமைத்தலினூடு கட்டியெழுப்பப்படுவதும் "கணிதம்" ஆகும்.

இந்த வகையில் கணிதம் என்பது.

01. சிந்தனையால் நயக்கக்கூடியது.
02. கருத்துச் செறிவுள்ள தொகுதி தொடர்பான கல்வி.
03. மெய்யுலகின் பிரசினையைத் தெரிந்து கொள்ள உதவுவது.
04. அறிவின் களஞ்சியம்.
05. ஒரு கலை.
06. ஒரு மொழி.

எனவேதான் அனுபவரீதியாக சுயாதீன கற்கையின் மூலம் குறிப்பிட்ட இலக்கை அடைதலே கணிதம் எனப்படுகின்றது. அதாவது நாம் செய்முறை மூலமும் கணிதத்தைக் கற்கிறோம். வாழும் சமூகத்திடம் இருந்தும் கணித அறிவைப் பெற்றுக் கொள்கின்றோம்.

கணித பாடத்தின் சமூகத்தேவைகள் :

01. நாம் வாழும் பௌதீகச் சூழலை அறிந்து கொள்ளுதல்
02. சூழலிலுள்ள பொருட்களைக் கணக்கிட்டுக் கொள்ளுதல்.
03. அளவீட்டு ரீதியில் ஒப்பிடுதல்.
04. அன்றாட வாழ்வில் நாம் மேற்கொள்ளும் கொடுக்கல், வாங்கல் செயற்பாடுகள்.

கணிதத்திலுள்ள சமச்சீர்தன்மைகள் இயற்கையில் காணப்படுவதும். இதனால் சூழல் எழில் மிக்கதாகவிருப்பதுவும், ஏனைய சுழிகள், வளைவுகள் மற்றும் பல்வேறு கோலங்களையும் நோக்கும் போது கணிதம் ஒரு கலையாகின்றது.

நாம் பேசும் மொழி வெவ்வேறாக இருந் தாலும் கணிதமொழி என்பது நம் எல்லோர்க்கும் பொது மொழியே. உதாரணம் 10 - 4 = 6 என்பது எல்லா இன மொழிக்கும் ஒன்றே. மேலும் மொழி என்பது ஒரு தொடர்பாடல் ஊடகமாகும். கணிதத்தின் மூலமும் நாம் தொடர்பாடலை மேற் கொள்கின்றோம். மொழி யிலுள்ள உயிர் மெய் எழுத்துக்களை கணக்கிட அவசியமாவதும் கணிதமே.

வரைபுகள், வடிவங்கள் மூலமாக கருத்துக் களை மிக இலகுவாக விளங்கப்படுத்த முடியும். ஏனைய பாடங்களை கற்பதற்கும் கணிதம் இன்றியமையாதது. அதாவது கணித அம்சங்கள் இல்லாத பாடங்களென இவ்வுலகிலே எதுவுமே இல்லை.

அண்மையில் ஆசிரியர் - வதிவிடப் பயிற்சியை மேற்கொள்ளவென பாடசாலை களுக்கு நாம் சென்றிருந்தோம். அங்குள்ள மாணவர்கள் கணிதம் கற்பதில் ஓரளவு நாட்டம் காட்டினாலும் ஏனைய பாடங்களை விட கணிதம் கற்பதில் அதிகம் பின்னடைவு காட்டுகின்றனர். அத்துடன் மிகவும் இலகுவான இக்கணிதபாடம் அண்மைய பரீட்சைப் பெறுபேறுகளின் படி கடினம் என நினைக்கும் மனநிலை மாணவர் களிடம் காணப்படுவதையும் அவதானிக்க முடிந்தது. இவ்வாறான பின்னடைவு மனோ நிலைக்கான காரணங்களாக,

01. வாய்ப்பாடு பாடமில்லை.
02. கூடுதலான சுயபயிற்சிகள் இல்லை.
03. மீளமீள கற்காத நிலை.
04. கணிதம் தொடர்பான போதிய அடிப்படை முன்னறிவு வழங்கப்படாத நிலை.
05. நான்குவிதமான கணிதச் செய்கைகளில் (கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல்) போதிய தேர்ச்சி இன்மை.
06. கணித பாட மட்டிலான அவதானக் குறைவு.

என்பவற்றை கண்டுணர முடிந்தது. எனவே மேலுள்ள காரணங்களுக்கு தீர்வு காண்பதன் மூலமே கணிதத்தை வாழ்க்கையின் கல்வியாகப் புரிந்து கொண்டு மனநிறைவுடன் கற்றுத்தேற முடியும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

□□□

# எழுந்திடுங்கள் சாதனை படைக்க

கருவாகி உருவாகி சிசுவாகி
வெளிவந்து
கனலையும் புயலையும்
கவலையையும்
அனுதினமும் ஏற்று அடங்கியது போதும்
எழுந்திடுங்கள் சாதனை படைக்க.

அவதரித்து விட்டோமே
ஆளுக்கொரு வடிவமாய்
அதனை பலபேர் பலவாறு
கூறக் கேட்டும்
வேற்றோர் வெட்டிப்பேச்சு
வேலைக்கு ஆகாதென
எழுந்திடுங்கள் சாதனை படைக்க.

மாற்று ஆற்றலுடையோர்
ண மனதறிந்து பேசாது
குருடு செவிடு முடம் சொத்தி
ண உள ஊனமுள்ள
உயிரிகளை
வெற்றிக்கணைகளால்
வேர்கொண்டு தகர்த்திட
எழுந்திடுங்கள் சாதனைபடைக்க.

பெற்றவரும் பெரும் பாரமென்ற
உற்றோரும் ஒரு சுமையென்ற
கற்றவரும் கண்டு கவனியாதுவிட
விரைந்தோடி கல்வியே
விந்தைபல செய்து
விண்ணைத் தொட்டிடலாம்
எழுந்திடுங்கள் சாதனைபடைக்க.

அர்த்தங்கள் நிறைந்திட்ட இவ்வுலகில்
அனர்த்தங்களிற்கும் எல்லை இல்லை
ஊனமென தெரியாது
தாய் வயிற்றில் உற்பவித்து
கருவாகி உருவாகி
சிசுவாகி வெளிவந்து
சில்லறைத்தனமாக சிதறப்பட்டு
அல்லல்ப்படும் உயிரிகளே
எழுந்திடுங்கள் சாதனை படைக்க.

அவதரித்து விட்டோமே
அவனியர் எமைத்தூற்ற
உறவுகள் எமைப் பேச
எம் தாய் உளம் குறுகிட
எம்முள்ளும் ஓர் மனசு
எமக்கென்றும் ஓர் உள்ளம்
உள்ளதென அறியாதோர்
எண்ணங்கள் பொடிப்பொடியாகிட
வீறு கொண்டு வெற்றி கண்டு
கூனிக்குறுகிட எழுந்திடுங்கள் சாதனை படைக்க.

எட்டா உயரத்திலே எழில் நிலா இருந்தாலும்
அதற்குள்ளும் குறையுண்டு கண்டுகொள்வார் யாருண்டு
இனி நாமும் செவ்வாயில் ஆராய்ச்சி செய்திடுவோம்
காலம் நெருங்கிட்டு என்றுகூறி
எழுந்திடுங்கள் சாதனை படைக்க.

என்ன தெரியும் இவர்களுக்கு
என்ன முடியும் இவர்களால்
என்ற முட்டாள்களின் முனகல்களிற்கு
என்ற கட்டிட முடிவில்லா கல்வியை
முயற்சியுடன் கற்றிட்டு
எழுந்திடுங்கள் சாதனை படைக்க.

அன்றாட உணவிற்கு திண்டாடும் உலகினிலே
கல்வியினிலே கரை தேடி
புதுமைகளைப் புனைந்திட்டு
முயற்சியினை சுவாசித்து
ஏச்சினையும் வாழ்த்தாக்கி
கஷ்டமெல்லாம் கருகிவிட
வீறு நடைகொண்டு
தடைக் கற்களை உடைத்தெறிந்து
எழுந்திடுங்கள் சாதனை படைக்க.

**விஜயநிதி**
2ம் வருடம், விசேட கல்வி.

# ஆசிரியர்கள் பேசும் போது..........

அருட் சகோதரி T. ஜெனோவா
2ம் வருடம், கிறிஸ்தவதுறை.

ஆசிரியர் எப்படியோ அப்படியே அவர் களது மாணவரும் மாற முடியும். பூ இருக்கும் இடத்திற்கு போனால் வாசம் தான் வரும். சாக்கடை இருக்கும் இடத்திற்குப் போனால் அதன் வாடை தான் வரும் உள்ளம் எப்படியோ அதே போல போதனைகளும் அமையும். அநேக மாணவர்கள் வாழ்வில் தோல்வியைத் தழுவக் காரணம் ஆசிரியர்கள் என்றே கூறவேண்டும். நல்ல ஆசிரியர்கள் நம்பிக்கையை வளர்ப்பவர் என்றே கூறலாம். விவேகத்தை கற்றுக் கொடுப்பார். ஆனால் எனக்கு ஒரு ஆசிரியரைத் தெரியும் அவர் எப்போது மாணவர்களிடம் பேசினாலும் தோல்வியான வார்த்தைகளையே பேசுவார். ஒரு சிறு தவறு செய்தாலும் அல்லது சரியாய் படிக்காவிட்டாலும் அவர் உடனே "நீ ஒரு மண்டு" "நீ பன்றி மேய்க்கத்தான் லாயக்கு" என்றும் கூறுவார். இதைக் கேட்டவுடன்அந்த மாணவருள் ஒருவன் கேட்டான் "இதை சொல்லத்தான் நீங்கள் பல்கலைக் கழகத்தில் B. Ed படித்தீர்களா? என்னை பன்றி மேய்க்கப் போ என கூறத்தான் M.A படித்தீர்களோ? இதைத்தான் படிக்காத என் அப்பாவே சொல்கிறாரே என்றான். அந்த ஆசிரியர் ஒரு நிமிடம் சிந்தித்து அவர் பேசவே இல்லை. அது முதல் அத்தகைய வார்த்தைகளை அவர் எவரிடமும் பேசியதே இல்லை.

நாம் யேசுவைப் போல பேசக் கற்றுக் கொள்ள வேண்டும். அவரைப் போல நம்பிக்கை யைப் போதிக்க வேண்டும். ஒருவன் ஆடாய், மாடாய், பன்றியாய், நாயாய் வந்தாலும் அவனை நல்ல மனிதனாய் மாற்ற வேண்டியது ஆசிரியரின் கடமை. இயேசுவைப் போல நல்லவற்றைக் கற்றுக் கொடுக்கும், மேன்மை படைக்கும் உன்னத வார்த்தைகளால் பேச வேண்டும். இயேசுவின் வாயிலிருந்து வெளிப் பட்ட வார்த்தைகள் எல்லாம் விசுவாசமான வெற்றியின் வார்த்தை களாய் இருந்தன. அந்த வார்த்தை அநேகருடைய உள்ளத்தில் உள்ளக் காயங்களை ஆற்றியது, நொருக்குண்ட இதயங்களை தேற்றி அரவணைத் தது, அவரின் வார்த்தைகள் ஆன்மாவை தட்டி எழுப்பியது. அறிவை வளரச் செய்தது, அன்பை மலரச் செய்தது, முடவனுக்கு அறிவு புகட்டியது இயேசுவின் வார்த்தையினால் மனிதன் புது வாழ்வை அடைந்தான் என பைபிள் கூறுகின்றது. இயேசுவைப் போல நீங்களும் ஒரு ஆசிரியரே. அவரின் ஆவி உங்களுள் குடி கொண்டுள்ளது.

ஆசிரியர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வார்த்தையாலும் மாணவரின் மனதைத் திறந்து புது வைகறைக்கு அழைத்துச் செல்ல முடியும். மாணவரிடம் நாம் பேசப் போகும் வார்த்தைகளை சிந்தித்துப் பார்த்துப் பேச வேண்டும். உங்கள் உள்ளத்தில் இருந்து உங்கள் வாயிலிருந்து தீய சொல் எதுவும் வராதிருக்கட்டும் என தூய பவுல் கூறுகின்றார்.

இன்றைய சமுதாயத்தை மாற்றியமைக்கும் பணி ஆசிரியர்கள் கையில் உள்ளது. அதனால் தன்னம்பிக்கையையும், விசுவாசத்தையும் உருவாக்க ஆசிரியரால் முடியும். மாணவரின் உள்ளத்தைப் புரிந்து கொண்டு பேச வேண்டும். வாய் எப்போதும் ஞானத்தை அறிக்கையிட்டுக் கொண்டிருக்க வேண்டும். ஏன் என்றால் அப்படிப் படைக்கும் பணியில் இறைவனுடன் பங்கு கொள்கிறோம்.

குடும்பங்களின் நிலையைக் கூட ஆசிரியர் களின் வார்த்தைகள் மாற்றி அமைக்க வேண்டும். ஆதி அப்போஸ்தலர், கிறிஸ்தவர்கள் தங்கள் சொல்லாலும் செயலாலும் தாம் இருந்த இடங்களை அசைத்தனர். பேதுரு போதனையைக் கேட்ட மூவாயிரம் பேர் மீட்பை பெற்றனர். அது போலவே அவர்களிடத்தில் விளங்கிய ஞானத்தின் ஆவியால், பேச்சால், சக்தியால் உங்களையும் செயல்படுத்த இறைவன் விரும்புகிறார். இயேசு இந்த தலைமுறையினரை சந்திக்க வேண்டி பொறுப்பை நமக்காக விட்டுச் சென்றுள்ளார். ஒருவனை திருடனாகவோ, தெய்வமாகவோ மாற்ற ஆசிரியரினால் முடியும்.

**"சொல்லுகச் சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்" என்றார் வள்ளுவர்.**

எனவே வாழ்வில் நம்பிக்கை இழந்து நிற்கும் இன்றைய இளைய தலைமுறையைக் கேலிக்குரியதாக ஆக்காமல் இல்லாமையை, அறியாமையை களைந்து எழுந்து நில். தோல்வி மனப்பான்மையைத் தூக்கி எறி. உனது ஒளி இதோ உதித்துவிட்டது என கூறுவது நல்லது. சமுதாய மறுமலர்ச்சிக்காகவும், நாட்டின் மறுமலர்ச் சிக்காகவும், நாட்டின் வளர்ச்சிக்காகவும் இறை வல்லமையில் எழுந்திருக்கச் செய்யுங்கள் ஒவ் வொரு மாணவனும் வழிகாட்டுங்கள் உணர்ந்து வாழ வழிகாட்டுங்கள்.

நன்றி.

# தமிழ் இலக்கியங்களிலே புதுக்கவிதைகளின் வளர்ச்சியும் சமூக பண்பாட்டுத் தாக்கமும்

பாலசுப்பிரமணியம் சதீஸ்
ஆரம்பக்கல்வித்துறை, உள்ளகப்பயிற்சி.

கவிதை இலக்கியமானது மேல்நாட்டாரின் வருகையால் இங்கு கொண்டுவரப்பட்டது. ஆரம்பகாலத்தில் இலக்கண வலுவுள்ள சொற்களைப் பயன்படுத்தி கற்றோர்க்கும் கசந்திடும் கடினமான மொழி நடையில் அமைக்கப் பட்ட மரபுக்கவிதைகள் இன்று "எளிமையே கவிதையின் இலட்சணம்" என்ற கருத்திற்கமைய புதிய பரிமாணத்துடன் புதுக்கவிதைகளாக மாற்றம் பெற்றன.

தொடக்க காலத்தில் வசனக்கவிதை, யாப்பில்லாக் கவிதை, இலகு கவிதை என அழைக் கப்பட்ட புதிய கவிதை வடிவமே தற்போது புதுக் கவிதையாக தோற்றம் பெற்றது. "சொல்புதிது, சுவைபுதிது, பொருள் புதிது, வளம்புதிது சோதிமிக்க நவகவிதை" என பாரதியினால் பாராட்டப்பட்ட கவிதை வடிவமே இன்று பெரும் செல்வாக்குடன் திகழ்கின்றது. புதுக்கவிதையின் முன்னோடியாகத் திகழ்பவன் பாரதி ஏழை எளிய மக்களும் கவிதை படித்துச் சுவைக்கலாம் என்ற சிந்தனையைத் தூண்டியதன் பயனாக இன்று எம் பண்பாட்டு விழுமியங்களில் கலந்து தாக்கத்தை ஏற்படுத்தியதாக இப் புதுக்கவிதை விளங்குகின்றது. நுண்கலைகளில் மிகவும் இரசனைக்குரிய வடிவமாக விளங்குவதோடு மொழியின் மூலமாகவே தன்னை வெளிப் படுத்திக்கொள்கின்றது. வாழ்க்கையே கவிதை யாக கவிதையே வாழ்க்கையாக மாறும் காலத்தில் இன்றைய வாழ்நிலையில் உலகமயமாதல், நகர மயமாதல், கணினி மயமாதல் என்பவற்றோடும் நவீன ஆடம்பரநுகர்வு, பன்மைக் கலாச்சாரங் களோடு முட்டிமோதி வெளிவரவேண்டிய மனிதன் பண்பாட்டுச சூழல்களைக் சீரழித்து இன்னும் பழைய வாதம் பேசுபவனாக சுயநலமும், அநியாயம், ஆக்கிரமிப்பு, ஆதிக்கமோகத்திலும் திழைப் பவனாக இருக்கின்றான். இவற்றை யெல்லாம் வெளியுலகிற்கு படம்பிடித்துக் காட்டவும், அகிம்சையின் குரலாய் ஒலிக்கவும் இக் புதுக் கவிதையினாலே மட்டுமே முடியும்.

ஒரு ஏழைக் கவிஞனுடைய கூரிய பேனா முனையை விட பெரிய ஆயுதம் உலகிலே இல்லை யெனலாம் அதுதான் சமுதாய நெரிசலை இனக்குரோதத்தை, அன்னிய ஆதிக்கத்தை, ஒழுக்க விழுமியத்தை சீர்செய்யும் கருவியாக அமையும் கவிதையை தன் குழந்தையைப் போலவே கவிஞன் பிரசவிக்கின்றான் அவை ஒவ்வொன்றும் அவனது உள்ளத்து உணர்வுகள் இதனாலேயே;

*"கவிஞர்கள் உருவாக்கப்படுவதில்லை – காரணம்*
*அவர்கள் களிமண் பொம்மையில்லை – தோன்றுகிறார்கள்*
*இந்த பிரபஞ்சத்தின் நுரைமீரல்களிற்கு – தன்*
*சொந்தமூச்சில் சுவாசித்துக் கொண்டிருக்கிறார்கள்"*

என்ற கருத்து யதார்த்த உண்மையாகின்றது. இன்று புதுக் கவிதையைப் பொறத்தவரையிலே பல்கிப் பெருகி பலநூற்றுக் கணக்கான இலக்கியங் களான வளர்ச்சி பெற்றள்ளன. கவிதைப் பேரரசு வைரமுத்து, மு.மேத்தா, பா.விஜய், டாக்டர் பொன்மணி போன்றவர்களும் இலங்கையைப் பொறுத்தவரையில் மகாகவி, நீலவாணன், மேமன்கவி போன்றவர்களின் கவிதைகள் சிறப்பானவை வளர்ந்துவரும் இளம் கவிஞர் வரிசையில் நெடுந்தீவு முகிலன் மிக குறிப்பிடத் தக்க இடம்பெற்றவர்.

கவிதை எழுதுவதற்கென யாரும் பிறந்து வருவதில்லை. நான் சிந்திப்பவற்றையெல்லாம் செதுக்கி வைத்துக் கொள்கிறேன் என் சிந்தனைகள் சமூகத்தின் வரலாற்றை ஒருமுறை மாற்றி எழுதட்டும் சமுதாய நெரிசல்களை சாக்கடைக் குள் தள்ளட்டும் இவ்வாறான சிந்தனைகள் எம் இளைஞர் யுவதிகளிடையே ஏற்பட்டால் இந்த உலகின் ஓட்டத்தை ஒருமுறை மாற்றி அமைக் கலாம். இதனையே கவிஞன்

*போர்வைகளில்...........*
*ஏன் இப்படி புதைந்து கிடக்கிறாய்*
*விழித்து நீ எழுந்தால்*
*விலங்குகளே நொருங்கும்.........*

என நம்பிக்கையற்று சேர்ந்த சமுதாயத்தை தட்டியெழுப்புகிறான். ஒரு சமூகத்தையே வாழ வைக்கின்றான்.

சமூகமெங்கும் பரந்துகிடக்கும் விடயங்களே கவிதைக்கான கருப்பொருளாகின்றன குறியீடு, படிவம் வர்ணனை என்பன புதுக்கவிதைகளின் மூலாதாரங்களாகின்றன. எமது அன்றாட வாழ்வில் விவசாயிகள் படும் அவலங்களை மகாகவி எழுதும் போது

*"மப்பன்றிக் காலமழை மண்ணிலே*
*சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது*
*ஏர் ஏறாது காளை இழுக்காது – இருந்தும்*
*பாறை பிளந்து பயிர்விப்பான் என்னூரான்"*

என யாழ்பாண விவசாயிகளின் துயரங்களை நிலைக் கண்ணாடி போல படம்பிடித்துக் காட்டு வான். இன்றைய நவீன மோகத்தில் கிராமிய மண்வாசனை அற்றுப்போய் விட்டதையும். அதன் அழகையும் கவிஞன் பாடும் போது

*"எங்கள் கிராமத்துக் கோயிலின் கிழக்கு வீதியில்*
*கிளித்தட்டு விளையாடி கிழிந்த ச டையோடு*
*அழுதழுது வீடுசென்ற அந்த நாட்கள்*
*எவ்வளவு இனிமையானவை.......................*

என மனக்காயங்களிற்கு நினைவுகளாலும், கற்பனைகளாலும், மருந்திடுகின்றான். கிராமியப் பண்பாட்டை வெளிப்படுத்துகின்றான்

அதேபோல இன்னும் நம் சமூகத்தில் சீதனக் கொடுமையால் பெண்கள் அழிந்துபோவதும் இன்னும் முதிர்கன்னியாய் வாழ்வதும் நடந்து கொண்டு தான் இருக்கின்றது என்பதை

*"எடைக்குஎடை தங்கம் கொடுக்க – அவளொன்றும்*
*எலிசபெத் மகாராணியில்லை – சாதாரண ஏழைதானே*
*அங்கத்தையும் தங்கத்தையும் உரசிப் பார்ப்பவர்கள்*
*உள்ளங்களை மட்டுமேன் உற்றுப்பார்க்கத் தவறுகிறார்கள்"*

என தன் சொந்தப் பிரச்சனைகளையும், சொந்தங்களின் பிரச்சினைகளையும் வெளிப் படுத்தி நிற்கின்றான். அதே போல சமகாலத்துப் பிரச்சனைகள் பற்றி ஒரு துடிப்புள்ள இளைஞனின் கருத்துக்கள் என்ற ரீதியில் நெடுந்தீவு முகிலனைப் பற்றிக் குறிப்பிட்டே ஆகவேண்டும் சமுதாயத்தின் கிழிசல்களாக, மனிதாபிமானத்தின் சிதறல்களாக, அடிமனதின் கிறுக்கல்களாக அநியாயத்தின் கீறல்களாக ஆகமொத்தத்தில் உணர்வுள்ள கவிதைகளாக வெளிவந்துள்ளன. அவரது மனத்திரை மேகங்கள் வாசிக்கும் ஒவ்வொருவரின் மனத்திரைமாற்றங்கள் என்றே குறிப்பிடலாம்

*"பிணக் குவியல்களைப் பார்த்த பிறகும் ஏனோ....?*
*மனிதாபிமானம் மண்குழியில்....?"*

என சமூகத்திற்கோர் சாட்டையடி கொடுக் கின்றார். மேலும் சுரண்டல்களைப் பற்றி ஒரு கவிஞனுடைய பேனாமுனை

*"சிறுகச் சிறுக சேர்த்த தேன்கூட்டை*
*திருடிச் செல்ல வந்தது வேடர் கூட்டம்*
*வழியின்றிக் கொட்டின தேனீக்கள்*
*கொட்டிய தேனீக்கள் கொல்லப்பட்டன – சட்டம் சொன்னது*
*கொட்டுதல் சட்டப்படி குற்றம் என்று.........."*

இவ்வாறு சட்டமும் தண்டனையும் பணத்தின் கனத்திற்கு முன்னால் வலுவிழந்து போகின்றது என்றும் சுரண்டல் தெரியாமலேயே நடந்து கொண்டுதான் இருக்கின்றது என்கின்றான் இதனையே எம் மலையக உறவுகளின் கொடுமை களை எழுதும்போதும்

*"இந் நாட்டின் முதுகெலும்பாக நாங்களிருக் கின்றோம்–ஆனால்*
*எங்களிடம் எஞ்சியிருப்பவை விலா எலும்புகளே"*

என அவர்களது மனச்சுமைகளை வெளிப் படுத்துகின்றான். இவ்வாறு பல்வேறு யதார்த்த நடைமுறைகளைக் கொண்ட புதுக்கவிதை சமூகத்திலே பல்வேறு சாதகமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. தமிழிலக்கியச் சுவைக்கு இன்னும் சுவை சேர்க்கின்றது. ஒவ்வொரு துடிப்புள்ள இளைஞரது பேனா முனையும் இப்பிரபஞ்சத்தை ஒருமுறை தொட்டு மாற்றட்டும். உலகெங்கும் உண்மைக் கருத்தை பறைசாற்றட்டும்.

**உசாத்துணை நூல்கள்**

மகாகவியின் கவிதைகள்
வெளிச்சம் வெளியே இல்லை - மு. மேத்தா
மனத்திரை மேகங்கள் வி. முகிலன்
ஈழத்துக் கவிதைகள்

# 'முதுசொம்'

க.இ. கமலநாதன்
கல்வியியலாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

## 'சிந்து நடையில் அமைக்கப்பட்ட விசேட கூத்து'

மூத்தோரைப் போற்றுதல், பெற்றோர்களைக் கனம் பண்ணுதல், ஆசிரியத்துவத்தை மதித்தல், சிறுவர் உரிமைகளை ஏற்றுக் கொள்ளல் எனும் விழுமியக் கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு ஆக்கப்பட்டதே "முதுசொம்" எனும் சிந்து நடை விசேட கூத்தாகும்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் முகிழ்நிலை ஆசிரிய மாணவர்களினால் ஆடப்பட்ட இக் கூத்தானது, உள்ளகப் பயிற்சி காலத்திலும், நிரந்தர ஆசிரியர்களான பின்பும் பல பாடசாலைகளில். போட்டிக்காகவும், பொது விழாகளுக்காகவும் தொடர்ச்சியாக மேடை யேற்றப்பட்டு வருகின்றது. கோட்ட, வலய, மாகான, மாவட்டப் போட்டிகளிலும் இக்கூத்து சிறப்பிடம் பெற்று வருகின்றது.

**கூத்தில் உலாவரும் பாத்திரங்கள்**

முத்துலிங்கம் - அப்பப்பா, ஓய்வு பெற்ற ஆசிரியர்.
விசாலாட்சி - அப்பம்மா, ஓய்வு பெற்ற ஆசிரியை
நடராஜன் - முத்துலிங்கத்தின் மகன், கணக்காளர்.
சிவ சக்தி - முத்துலிங்கத்தின் மனைவி, வீட்டுப்பணி.
சிவந்தன் - நடராஜனின் மகன், மாணவன்.
சுபானுஜன் - டொக்டர்
காருண்யா - டொக்டரின் மனைவி, இவரும் டொக்டர்.
ரதன் - டொக்டர் மகன்.
அபிநயா - டொக்டரின் மகள்.
கனவுத்தேவன் - ஒருகற்பனைப் பாத்திரம்.
சிவந்தன் - பெரியவனாய் வளர்ந்த சிவந்தன் (கனவில்)
மதுஷா - சிவந்தனின் மனைவி (கனவில்)
தோழர்கள் -



**காப்பு பாடல்**

வித்தக விநாயகனே - நல்ல
தத்துவத்தின் நாயகனே
நித்தமும் உனைப் பணிந்தோம் - சக்தி
அத்தனையும் தாருமையா.

முந்தி முந்தி விநாயகனே - அழகன்
முருகனுக்கு மூத்தவனே
மூத்தோரை முத்துக்களென்போம் - அதனை
முழுமனதாய் ஏற்றுக் கொள்வோம்

காப்பதமே காப்பதமே - எங்கள்
கணபதிக்கு காப்பதமே
காப்பதமே காப்பதமே - எங்கள்
மூத்தோருக்கு காப்பதமே

காப்புப் பாடல் முடிவடைய அனைவரும் மேடையை விட்டு வெளியேறுவர். பின்னர் சிவந்தன் மேடையில் தோன்றுவான்.

**சிவந்தன்** :- படிச்சுப் புத்தகம்களைச்சுப் போனேன்
அப்பம்மாவே கேளும் நானும்
ஓடிப்பிடிச்சு விளையாட
அப்பம்மாவே வாரும்

புத்தகத்தைப் பார்த்துப் பார்த்து
கண்கள் பூத்துப் போச்சு - இப்படி
நித்தம் நித்தம் நடக்குமென்றால்
நிம்மதியும் போச்சு.

**விசா** :- அம்மா சொல்லை நல்லாக் கேட்டுப் படியுங்க நீங்க
நாளை எம்மாம் பெரிய டொக்டராக வருவீங்க நீங்க
ஐய்யய்யோ நேரமிருக்கு இன்னும் கொஞ்சம் படியும் - அம்மா
எட்டி இஞ்ச பாத்தாரெண்டால் கன்னங் கொஞ்சம் சிவக்கும்

**சிவ - வச** :- என்னால் முடியாது அப்பப்பா என் கண்கள் பஞ்சடைந்து விட்டன என் உள்ளமும் சோர்ந்து விட்டது. அம்மா தான் அப்படியென்றால் நீங்களுமா?

**அம் - வச** :- செல்வா யதார்த்தம் எனக்கு நன்றாகப் புரிகிறது ஆயினும் உன் அம்மா.....

**சிவ - வச** :- அம்மா............ அம்மா............ அம்மா............ இப்போது எதற்கும் அஞ்சாத என் அப்பப்பாவை இங்கே அழைக்கிறேன்.

**சிவ** அன்பே வடிவான் எந்தனுயிர்
அப்பப்பா - நானும்
மனம் சோர்ந்து வாடுகிறேன்
எந்தனுயிர் - அப்பப்பா

குறைதீர்க்க ஓடிவாராய் எந்தனுயிர்
அப்பப்பா - என்னை
சிறைமீட்க ஓடிவாராய்
எந்தனுயிர் - அப்பப்பா

**சிவ - வச** :- அப்பப்பா ஓடி வாருங்கள் என் மனக்குறையை தீர்க்க ஓடோடி வாருங்கள்.

**முத்துலிங்கம்** :- சின்ன ராசனென் மூத்த மைந்தன் நானும்
பாலராசன் ஓடி வாறேன் சபையோரே - ஐயோ பெரியோரே.

பென்னம் பெரிய வயது - ஆகா
எழுவதைத் தாண்டினாலும் சின்னப் பிள்ளைதான் நானும் பாலராசன் தான்

ஆசிரியத் தொழில் செய்தேன் இப்ப
பென்சன் எடுத்தப் போட்டு வீட்டில் நிற்கிறன் நானும்.

மூச்சிரைக்க வேலை செய்தேன் - பலர்
முன்னேற நானும் தூண்டுகோலாயிருந்தேன்
ஓல்ட் இஸ் ஹோல்ட் என்பேன் - நானும்
முதுமையைக் கண்டுவிட்டு அஞ்சி ஓடிடேன்

:- என் அன்புப் பேரன், அப்பப்பா என்று அழைத்த குரல் என் காதில் கணீர் என்று கேட்டது. அவனுக்கு ஏதும் சங்கடங்கள் ஏற்படுமானால் அவன் சங்கடங்களை அழித்து அவன் சந்தோசமாய் சிரித்து மகிழ நானும்..................

:- பேரனை தேடியல்லோ
பால ராசன் நானும்
படு வேகமாய் போறேனாம்
பால ராசன் நானும்

ஆரென்னைத் தடுத்தாலும்
அழுங்குரல் தடுப்பேன் - பேரன்
சிரித்து மகிழ்ந்திடவே
ஆனதைச் செய்வேன்

:- பேரா என்னை ஏன் அழைத்தாய் சூரா ...

சிவ :- இதோ என் அப்பப்பா வந்துவிட்டார் இனி என் ஆனந்தத்திற்கு எல்லையேது

முத்து :- உன் கலக்கத்தின் காரணத்தை நான் அறியலாமா பேரா?

சிவ :- சொல்கிறேன் அப்பப்பா

:- படிச்சுப் புத்தகம் களைச்சுப் போனேன்
அப்பப்பாவே கேளும் - நானும்
ஓடிப் பிடிச்சு விளையாட
அப்பப்பாவே வாரும்

புத்தகத்ததைப் பாத்துப் பாத்துப்
கண்கள் பூத்துப் போச்சு - இப்படி
நித்தம் நித்தம் நடக்குமென்றால்
நிம்மதியும் போச்சு

:- அப்பப்பா படிபடியென்று என்னை நெருக்குவதால் நான் மனம் சோர்ந்து விட்டேன் உடல் களைப்படைந்து விட்டேன். இடையிடையே விளையாடவும் ஆசைப்படுகிறேன் நான் பரீட்சையில் கட்டாயம் சித்தியடைவேன்

முத்து :- படிக்க வேண்டும் படிக்க வேண்டும் - பேரா
பள்ளி சென்று பாடங்களை படிக்க வேண்டும்

சிவ :- படித்திடுவேன் படித்திடுவேன் நானும்
பள்ளி சென்று பாடங்களை படித்திடுவேன்

முத்து :- காலை எழுந்தவுடன் - வீட்டில்
கடவுளைத் தொழுத பின் படிக்க வேண்டும்

சிவ :- காலை எழுந்திடுவேன்- வீட்டில்
கடவுளைத் தொழுது பின் படித்திடுவேன்

முத்து :- மாலை நேரம் ஓய்வு நேரம் - அப்போ
சந்தோசமாய் ஓடிவிளையாட வேண்டும்.

சிவ :- மாலை நேரம் ஓய்வு நேரம் - அப்போ
சந்தோசமாய் விளையாட முடியவில்லை

முத்து :- ஆடலாமே பாடலாமே -படம்
கீறலாமே நாடகமும் நடிக்கலாமே

சிவ :- ஆடிப்பாட முடியவில்லை - படம்
கீறவும் நாடகம் நடிக்கவும் முடியவில்லை
அம்மா அப்பா கட்டுப்பாடுகள் - அதை
மீறி என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை

முத்து :- பெற்றோர்களே சிறுவர் உரிமைகளை மீறலாமா? இது அடிப்படையில் பெரிய தவறல்லவா சரி போகட்டும். இப்போது நாம் விளையாடலாம்.

சிவ :- கெந்திக் கெந்தி அப்பப்பா நான் விளையாட - நல்ல
கோடு ஒன்று மணலில் கீற வேண்டும்.

**முத்து** :- கெந்திக் கெந்தி பேரா நீயும் விளையாட - நல்ல
கோடு ஒன்று மணலில் கீறிடுவேன்

**சிவ** :- கண்ணைப் பொத்தி அப்பப்பா நான் விளையாட
அப்பம்மாவின் கண்ணைப் பொத்தி துணியால் கட்ட வேண்டும்.

**முத்து** :- கண்ணைப் பொத்தி பேராநீயும் விளையாட
அப்பம்மாவின் கண்ணைப் பொத்தி துணியால் கட்டிடுவேன்

**சிவ** :- தோழர்களே! நீங்களும் வாருங்கோவன்
நாமும் தாளம் போட்டு விளையாடிடுவோம்

**சிவசக்தி** :- கோபத்துடன் வந்து

படிக்கும் நேரத்தில் ஓடி விளையாட
அனுமதித்தது ஆராரார்
நடிப்பும் பாட்டும் ஆட்டமும் - போட்டிட
அனுமதித்தது ஆராரார்

(சிவந்தன் அப்பப்பாவிற்கு பின்னால் ஒழித்து நின்று பயப்பிடுதல்)

**முத்து** :- மனதைக் கவரும் மாலை நேரத்தில்
கொஞ்ச நேரம் விளையாடலாம்
மகிழ்ச்சியான மனமிருந்தால்
நினைத்ததனைத்தும் சாதிக்கலாம்.

**சிவசக்தி** :- உலகம் எங்கையோ போகுது - உங்கட
அறிவுரை இங்க தேவையில்லை
கலகம் செய்யிற கண்டதைச் சொல்லுற
அலம்பல் கதைகள் தேவையில்லை

**முத்து** :- உலகத்தோட ஒட்டி வாழ
பொழுது போக்கும் தேவை பிள்ள
அழுத்தம் அதிகமாகிவிட்டால்
ஆபத்து வாழ்வில் தோன்றும் பிள்ள

**சிவசக்தி** :- என்ர அறிவு எனக்குப் போதும்
புத்தி சொல்ல யாரும் தேவையில்ல
தத்துவம் பேசிற பித்தர்கள் பிள்ளையை
குட்டிச் சுவராக்கத் தேவயில்லை

**விசாலாட்சி** :- நாங்கள் பெறறு வளர்த்த பிள்ள
பட்டம் பதவிகள் பெற்றதால்
உனக்குப் புருசன் ஒருத்தன் கிடைச்சான்
கனக்க கதைக்க வேண்டாம் பிள்ள

**சிவசக்தி** :- கிழடுகள் ரண்டும் சேந்து என்னை வெருட்டவா பாக்கிறியள்? என்ர பிள்ளைய எப்பிடி வளத்து ஆளாக்க வேணும் என்பது எனக்குத் தெரியும்
(சிவந்தனின் அப்பா களைப்புடன் ஒவ்விசிலிருந்து வரல்)

தொண்டை கிழிந்திட நானொருத்தி - இஞ்ச
அண்டைக்கும் இண்டைக்கும் கத்துறனே
சண்டைக்கு வாறார் கொப்பரும் கொம்மாவும்
கண்ணை மூடிக்கொண்டு போறியளே

**நடராஜன்** :- பிரச்சினை பிரச்சினை ஒவ்விஸ் நிறைப் பிரச்சினை
நிம்மதி தேடி வீட்டுக்கு வந்தால்
இங்கையும் ஒரே பிரச்சினை
கண்ணை மூடிக்கொஞ்ச நேரம் ஓய்வெடுக்கப் போகிறேன்

கத்திக் குளறி சத்தம் போட்டால் நடக்கும் பிரச்சினை
(வீட்டுக்குள் செல்வார்)

**சிவசக்தி** :- *பிரச்சனை பிரச்சனை உங்களால் தான் பிரச்சனை*
*குடும்பம் குழம்பிப் போகப் போகுது உங்களால் தான் பிரச்சனை*
*எங்கேயும் துலைஞ்சு போனீங்கவெண்டாள் நிம்மதி எங்கள நாடிவரும்*
*பிள்ளையின் படிப்பும் வெற்றியும் மகிழ்வும் எங்களைத் தேடி ஓடி வரும்*

**வீசாலாட்சி** :- ஏன் இடிந்து போய் இருந்து விட்டீர்கள் இனி என்ன செய்வது வீட்டை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை. பேரன் சாப்பிட்டு விட்டு தூங்கிவிட்டான் போல் தெரிகிறது.

**முத்து** :- நல்லது உடனடியாக புறப்படு............
*உடுப்பை எடுத்து மடிக்கப் பேரா........ உடம்பெல்லாம் நோகுது*
*எனது செருப்பை எடுத்து வைக்க நெஞ்சில் நெருப்பள்ளிக் கொட்டுது.*

**வீசாலாட்சி** :- *மருந்துப் பேணி எடுக்கப் பேரா மனசெல்லாம் நோகுது*
*உ ந்தன் குறும்புத் தனத்தை நினைக்க கண்கள் குழமாய் போகுது.*

**முத்து** :- *உந்தன் விளையாட்டு மைதானம் எந்தன் நெஞ்சுதானே - நாமும்*
*வெகுதூரம் போறோமடா வேதனையாலே*

**வீசாலாட்சி** :- *மடியில் கிடந்து கதைகள் கேட்டாய் எந்தனுயிர் பேரா - நாமும்*
*நெடும் பயணம் போனமென்றால் நீயும் என்ன செய்வாய்*

**முத்து** :- சரி சரி புறப்படு பேரன் விழிக்கு முதல் புறப்படு
(இருவரும் வெளிக்கிட்டு முற்றத்துக்கு வரும் வேளை வெளியில் உலரபோட்ட உடுப்பைப் பார்த்த விட்டு)

**முத்து** :- *வெளியில் காயப்போட்ட உடுப்பை ஏண்டி எடுக்கல - பேரன்*
*விடியப்பள்ளிக்கு போக வேணும் அயனும் பண்ணேல்ல*

**வீசாலாட்சி** :- *ஒரு நொடியில் உடுப்பை எடுத்து அயனும் பண்ணுவேன்- அதனை*
*அடுக்கிப் பெட்டியில் வைச்சு போட்டு நானும் வந்திடுவேன்*
*தப்பு ஒண்டு நீங்களும் தான் செய்து போட்டியள் - பேரன்*
*சப்பாத்தைப் பொலிஸ் பண்ண மறந்து போனியள்.*

**முத்து** :- *பார்த்தியேடி பெரிய பிழை செய்யப் பார்த்தனே - பேரன்*
*சப்பாத்தை இப்ப பொலிஸ் பண்ணப் போறேனே.*
(அப்பம்மா சப்பாத்தை எடுத்து கொடுக்க அப்பப்பா பொலிஸ் பண்ணுவார், பின்னர் மருமகள் வர இருவரும் எழுந்து)

**முத்து** :- நாங்கள் போட்டு வாறம் பிள்ள

**வீசாலாட்சி** :- வரவேண்டாம் போங்கோ போங்கோ உங்களுக்கு இஞ்ச இடமில்லை இது உங்கட சாப்பாட்டுக் கோப்பைகள் இதையும் கொண்டு போங்கோ...........
(இருவரும் வெளியேறல்) இதன் போது சிவநந்தன் மேடைக்கு வருதல்)

**சிவ** :- அப்பப்பாவின் அறையில் படுத்துறங்கினால் தான் எனக்கு தூக்கமே வரும் என் பேரன் பேத்திக்கு சொக்கலேட் என்றால் கொள்ளை ஆசை என்று சொல்வார்கள் மூவரும் சாப்பிட்டுவிட்டு அப்பம்மாவின் கதையைக் கேட்டு விட்டு கண் அயர்வோம். அப்பம்மா, அப்பப்பா எங்கே போனீர்கள் - (தாய் வருகை)

*அப்பப்பாவும் அப்பம்மாவும் எங்கேயம்மா*
*எனக்கொன்றும் சொல்லாமல் எங்கே போனார் அம்மா*

**சிவசக்தி** :- *பார்த்துப் பார்த்து நீயும் படிப்பதற்கு அறிவைப் பெறுவதற்கு - ஒரு*
*கொம்பியூட்டர் மகனே வாங்கித்தாறன்*

**சிவ** :- *அணைத்தணைத்து எனக்கு அறிவூட்டும் ஆசை மொழி பேசும்*
*அப்பப்பாவும் அம்மம்மாவும் எங்கே போனார் அம்மா*
*கொஞ்சிக் கொஞ்சிக் என்னோடு விளையாடும் நீதிக் கதைகள் சொல்லும்*
*என் பேரன் பேத்தி எங்கே போனார் அம்மா*

**சிவசக்தி** :- இன்றைய நவீன உலகத்தோடு நீயும் இணைந்து சிறப்பாக கல்வி கற்க ஒரு கொம்பியூட்டர் ஒரு கான்போன் மற்றும் நவீன சாதனங்கள் நான் வாங்கித் தாறேன் மகனே.

**சிவ** :- அப்பப்பா, அப்பம்மா இருவரும் இங்கே வந்தபின் இதைப்பற்றி யோசிக்கலாம்.

**சிவசக்தி** :- *எங்கேயடா மகனே கண்டுவந்தாய் - எட*
*என்னிலுமோர் பெரிய பேரன் பேத்தி*
*மறந்திட்டார் மகனே மறந்திட்டா - உன்*
*அம்மா சொல்லைக் கேட்டு நடந்திட்டா*

*சிவ* :- *மறப்பதில்லை தாயாரே மறப்பதில்லை*
*என் தெய்வங்களை தாயாரே மறப்பதில்லை.*

**சிவசக்தி** :- எல்லாம் உன் நன்மைக்குத் தான்போய்படி போ........ போ
(சிவந்தன் CL ஆல் வெளியேற அப்பப்பாவும், அம்மம்மாவும் CR ஆல் பிரவேசிப்பர் DR சுபானுஜன் குடும்பத்தினர் DL ஆல மேடைக்கு பிரவேசிப்பர்.

**Dr. சுபா** :- இந்த வீதியால் வரும் பெரியவரைப் பார்த்தால் என்னை ஆளாக்கிய தெய்வம் போலல்லவா தெரிகிறது.
*பெரியவரே பெரியவரே உங்கள் பெயரை நான் அறியலாமா*

**முத்து** :- *எழுவது வயது வந்ததும் எனபெயர் பால.......... ராசன் என்பார்*

**Dr. சுபா** :- *எனக்கு எழுத்தறிவித்த இறைவன் நீங்கள் - குருவும் நீங்கள்*
*உங்கள் பாதம் தொட்டு வணங்குகிறேன்*

**முத்து** :- *எட சிவராசன் மகன் சுபானுஜன் நீர்*
*இப்போ பெரியவரேய் வளர்ந்து விட்டீர்*

**Dr. சுபா** :- *என் அறிவுக் கண்ணை திறந்த ஆசான்*
*பாதம் தொட்டு வணங்குகிறேன்*

**Dr. சுபா** :- இன்று அருமையான தினம் ஆசிரியர் தினம் இன்றைய தினம் என் வீடு வந்து விருந்துண்டு செல்ல வேண்டும்

**முத்து** :- நல்லது தம்பி நீங்கள் என்னவாக இருக்கிறீர்கள்? குழந்தை குட்டிகள்?

**Dr. சிவா** :- நான் டொக்டரா இருக்கிறேன் சுபானுஜன் M.B.B.S இவர் என் மனைவி இவரும் டொக்டர் தான் இவர் எனது மகன்

**முத்து** :- டொக்டரா? மனித வடிவில் உலாவருகின்ற தெய்வங்கள் அல்லவா நீங்கள்

**Dr. சுபா** :- அந்த தெய்வங்களை உருவாக்கும் பெரிய தெய்வங்கள் நீங்கள், ஆசிரியர்கள். எனவே ஆண்டு தோறும் போற்றுதற்குரியவர்களை, என் வாழ்விற்கு ஒளி காட்டிய ஆசிரியத் தெய்வங்களை வணங்கி ஆசீர்வாதம் பெறுவது என் பணிஇன்று என் சற் குருவிடமே ஆசீர்வாதம் பெறப்போகிறேன்

**ரதன்** :- பெரியவரே வணங்குகின்றேன்

**காருண்யா** :- இது அன்பே உருவான எனது மாமன் மாமிக்காக நான் வாங்கிக் கொடுத்த ஆசனம். இறுதிக் காலம் வரை அவர்கள் இதில் இருந்தே அருளாட்சி செய்தார்கள். எமது வீட்டைக் கோயிலாக்கினார்கள். வாருங்கள் வந்து ஆசனத்தில் அமருங்கள்.

**அபிநயா** :- நாங்கள் உங்களுக்கு பாத பூசை செய்யப்போகின்றோம்

*முக்கால் வலமாய் வந்தோம் - குருவே உம்மை*
*நாங்கள் தலை படிந்து வணங்குகிறோம் - குருவே உம்மை*
*நாற்கால் வலமாய் வந்தோம் - குருவே உம்மை நாங்கள்*
*நாளும் பொழுதும் தோத்தரிப்போம் குருவே உம்மை.*

**ரதன்** :- பன்னீரால் கால் கழுவி உமக்குப் பாத பூசை செய்திடுவோம்
பூக்களிலிட்டு பாதம் தொட்டு உம்மை தலை பணிந்து வணங்குகிறோம்.

**காருண்யா** :-
*ஆசிரியர் பெருமை பேசும் தினத்தில்*
*ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டோம்*
நாங்கள் எல்லோருமாக உணவு உட்கொள்வோம் வாருங்கள்.

**முத்து** :- ஒரு ஆசிரியர் எப்போது குளிர்கிறான் என்றால் தனது மாணவன் பெருமையுடன் வாழ்வதை காணும் போது தான்

**விசாலாட்சி** :- அந்த பேற்றை இன்று நாம் பெற்றோம்

**ரதன்** :- அப்பப்பா வாருங்கள் சாப்பிடுவோம் (அப்பப்பா கண்கலங்குதல்)

**Dr. சுபா** :- குருவே ஏன் கலங்ககின்றீர்கள்?

**விசாலாட்சி** :- அது ஆனந்தக் கண்ணீர்

**முத்து** :- வாடா என் செல்லப்பேரா
(எல்லோரும் சாப்பிடுவதற்காக வெளியேற சிவந்தன் அழுது கொண்டு மேடைக்கு வருதல்)

**சிவ** :- என் அப்பப்பாவும் அப்பம்மாவும் இன்னும் வரக் காணோமே நான் என்ன செய்வேன் விக்கினங்கள் தீர்க்கும் விநாயகனே துணை நீரே

**சிவா - பாடல்**:-
*பிள்ளையாரே........ பிள்ளையாரே..........*
*நானும் என்ன பாவம் செய்தேன்*
*அப்பப்பாவைக் காணவில்லையே....... பிள்ளையாரே*

*பசியுமிப்போ வருகுதில்லை*
*உணவைக் காண அப்பம்மாவின்*
*நினைவு தானே வருகுது....... பிள்ளையாரே*
*பள்ளி செல்ல மனமுமில்லை*
*புத்தகத்தைக் காணமெத்தக் கோபமிப்போ வருகுது.......... பிள்ளையாரே*

*ஓடிவாரும் ஓடிவாரும்*
*அப்பப்பாவைவும் அப்பம்மாவையும்*
*என்னிடத்தில் கூடிவாரும்......... பிள்ளையாரே*

ரதன் அழுது கொண்டு மேடையை விட்டு வெளியேறுதல் கனவுத் தெய்வம் கோரமான ஆட்டத்துடன் ui ஆல் பிரவேசித்தல்.

**கனவுத்தெய்** :-
*கறுப்புடுத்தி நிறங்கள்கட்டி கனவுத் தெய்வம் நானும் இப்போ*
*விடு விடுவென்று நடைபயின்றேன் கனவுத் தெய்வம் நானும்*
*ஏறுமாறாய் நடக்கின்ற மனிதர் மனதில் நுழைந்து*
*இரவில் கனவு வடிவில் உண்மை உரைத்திடுவேன் நானே*

நான் கனவுத்தெய்வம் எங்கேயோ ஓர் அழுங்குரல் கேட்கிறது அங்கே சென்று அக் குழந்தையின் கவலையைப் போக்குவேன்

*அழுங்குழந்தை வளர்ந்தது போல் நான் வேடமெடுப்பேன்*
*தாய் தந்தைக்குச் செய்யும் கொடுமையை திருப்பி அவைக்குக் கொடுப்பேன்*
*பேரப்பிள்ளையை தூக்கிக் கொஞ்சிற வேளையில் நானும் பிரிப்பேன்*
*உண்மைத் தன்மை உணரும் வரைக்கும் உலுப்பி உலுப்பி எடுப்பேன்.*

(பாடல் முடிவடைய கனவுத் தெய்வம் பின் மேடையில் நிற்க முதுமையடைந்த நடராஜனும், சிவசக்தியும் மகன் சிவந்தனின் மகனை (பேரப்பிள்ளையை) தாலாட்டுவது போல கனவு காண்பார்கள்)

**சிவசக்தி** :- *ஆரிராரோ ஆரிவரோ....... ஆரடித்து நீயழுதாய்*
*கண்மணியே கண்மலர்வாய்*

**நடராஜன்** :- *அடிச்சாரை சொல்லியழு அடித்தவரை பிடித்திடுவோம்*
*ஆக்கினைகள் செய்திடுவோம்*

**மதுஷா** :- எத்தின நாள் சொன்னனான் உங்களுக்கு வருத்தம் என்ர பிள்ளையை தூக்கா தேங்கோ எண்டு எனிமேல் தூக்கக்கூடாது. என்ர பிள்ளையை தொடக்கூடாது

**சிவசக்தி** :- பிள்ளை அழுதது அதுதான் தூக்கினனாங்கள்.

**மதுஷா** :- பெத்தவள் நான் இருக்கிறன் என்ர பிள்ளையை பார்த்துகொள்ள எனக்குத் தெரியும்

*சளியும் இழுப்பும் சலரோகமெண்டு எத்தின நோயைக் காவுறியள்*
*உங்கட கிருமி பிள்ளைக்குத் தொற்றினால் எத்தின வருத்தம் வந்து சேரும்*

**சிவசக்தி** :- *அழுத பிள்ளையை அரவணைக்கிற உரிமை எமக்கு இல்லையோ?*
*எங்கட பேரப்பிள்ளையைத் தூக்கிட எமக்கு உரிமை இல்லையோ?*

**மதுஷா** :- ரண்டு கிழடுகளும் சேர்ந்து என்னை வெருட்டவா பாக்கிறியள்.? என்ர பிள்ளையை எப்பிடி வளர்த்து ஆளாக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும்
- இந் நேரம் ஒவ்விசிலிருந்து சிவந்தன் (கனவில் வளர்ந்த சிவந்தன்)-களைப்புடன் வருதல் அப்போது

**மதுஷா** :- *தொண்டை கிழிந்து நானொருத்தி இங்கே*
*அண்டைக்கும் இண்டைக்கும் கத்துறனே*
*சண்டைக்க வாறார் கொப்பரும் கொம்மாவும்*
*கண்ணை மூடிக்கொண்டு போறியளே.*

**சிவந்தன்** :- *பிரச்சினை பிரச்சினை ஒவ்விஸ் நிறையப் பிரச்சினை*
*நிம்மதி தேடி வீட்டுக்கு வந்தால் இங்கேயும் ஒரே பிரச்சினை*
*கண்ணை மூடிக் கொஞ்ச நேரம் ஓய்வெடுக்கப் போகிறேன்*
*கத்திக் குளறிச் சத்தம் போட்டால் நடக்கும் பெரிய பிரச்சனை (வெளியேறுதல்)*

**மதுஷா** :- *பிரச்சனை பிரச்சனை உங்களால் தான் பிரச்சினை*
*குடும்பம் குழம்பிப் போகப் போகுது உங்களால் தான் பிரச்சினை*
*எங்கேயும் துலைஞ்சு போனீங்கள் என்றால் நிம்மதி எங்களை தேடிவரும்*
*பிள்ளையின் படிப்பும் சிறப்பும் வெற்றியும் எங்களைத்தேடி ஓடிவரும்*

**நடராஜன்** :- நாங்கள் போறம் பிள்ள எங்களை இனிமேலும் இப்படி பேசவேண்டாம் போட்டு வாறம்

**மதுஷா** :- போங்கோ போங்கோ உங்களை வாரி அணைக்கிறதுக்கு எத்தனையோ இடங்கள் இருக்குது போங்கோ இனிமேல் இந்தப் பக்கம் வரக்கூடாது. இந்தாங்கோ உங்கட சாப்பாட்டுகோப்பைகள் இதையும் கொண்டு போங்கோ

( மருமகள் வெளியேறுதல் நடராஜவும் சிவசக்தியும் தமக்குரிய சாப்பாட்டு கோப்பைகளை எடுத்துக் கொண்டு).

**நரடாஜன்** :- அரசன் அன்றறுப்பான், தெய்வம் நின்றறுக்கும் என்ற பழமொழி எங்களுக்கே பொருத்தமாகப் போச்சுது. (அழுதல்)

**சிவசக்தி** :- அழவேண்டாம் வாருங்கோ நாங்கள் போவோம்
(இருவரும் வெளியேற கனவுத் தெய்வம் வந்து பாடுதல்)

**கன- தெ-பா** :-

*அழுங்குழந்தை வளர்த்தது போல் நான் வேடமெடுத்தேன்*
*தாய் தந்தைக்குச் செய்யும் கொடுமையை திரும்பி அவைக்குக் கொடுத்தேன்*

*பேரப்பிள்ளையை தூக்கி கொஞ்சுகிற வேளையில் நானும் பிரித்தேன்*
*உண்மை தன்னை உணரும் வரைக்கும் உலுப்பி உலுப்பி எடுப்பேன்*

கனவுத் தெய்வம் மேடையை விட்டு வெளியேறும்
நடராஜனும் சிவசக்தியும் நித்திரை விட்டு எழுந்தவர்கள் போல் மேடைக்குள் ஓடிவரும்

**சிவசக்தி** :- நான் ஒரு பொல்லாத கனவு கண்டேன் அப்பா

**நடராஜன்** :- நானும் அப்படித் தான் ஒரு கனவு கண்டேன்.

**சிவசக்தி** :- சிவந்தன் ஓடிவாப்பா உடனேபோய் அப்பம்மா, அப்பப்பாவை கூட்டிவருவோம்.

**சிவந்தன்** :- ஓட்டப்பம் வீட்டை சுடமுன்னம் காட்டப்பா அப்பப்பாவை

அப்பப்பா, அப்பம்மா Dr சுபா குடும்பம் அனைவரும் மேடைக்கு வருதல். நடராஜன் சிவசக்தி இருவரும் அப்பப்பா, அப்பம்மா கால்களில் விழுதல்

**சிவசக்தி** :- எங்களை மன்னியுங்கள் எங்களுடைய தவறுகளை மன்னித்தருளுங்கள்

**முத்து** :- தவறுகளை நாங்களே உணர்ந்து கொண்டால் அதுவே பெரும் மன்னிப்புத்தான்.

**சிவந்தன்** :- எனது அப்பப்பாவும், அப்பம்மாவும் வந்து விட்டார்கள் எனிமேல் என்சந்தோசத்திற்கு எல்லையே இல்லை

**நடராஜன்** :- மூத்தோர்கள் எங்கள் முதுசொங்களடா, பெற்றோர்கள் எங்கள் போக்கிசங்களடா,

எல்லா நடியர்களும் இணைந்து வாழ்த்துப்பா பாடுவர்

*மங்களமாம் மங்களமாம் எங்கள்*
*சபையோருக்கு மங்களமாம்*
*மங்களமாம் மங்களமாம் எங்கள்*
*பெற்றோருக்கும் மங்களமாம்*
*மூத்தோரை முத்துக்கள் என்போம் - அதனை*
*முழுமனதாய் ஏற்றுக்கொள்வோம்*
*வாழ்த்துக்கள் சொல்லிடுவோம் - எல்லோரும்*
*வளமுடன் வாழ்க என்போம்.*

முற்றும்

# நாட்டிய சாஸ்திரம் கூறும் ரஸக் கோட்பாடு

**T. நிதர்சன்**
2ஆம் வருடம், நாடகமும் அரங்கியலும்.

கலை இன்பமாவது காவியம், சிற்பம், ஓவியம், நடனம், இசை, நாடகம் என்ற கலைகள் வாயிலாக மனதினது தூய நிலையின் கண்ணே எழுகின்ற இன்பமாகும். "கலையின் மூலம் உண்டாகும் இன்பத்தினைக் கலை நூலார் ரஸம்" எனக் கூறுகின்றார் "ரஸம் என்பது அழகினை நுகருமிடத்து உண்டாகும். இன்ப நிலை" ஆகும்.இவ் "ரஸமானது கலை அனுபவங்களின் வாயிலாக பெறப்படும் பெறுபேறு என்றும் கூறப்படுகின்றது. ரஸம் கேட்போன் அல்லது பார்வையாளனிடம் ஏற்படச் செய்வதாகவும் அழகியல் அனுபவமாகவும் கொள்ளப் படுகின்றது. ஒரு கலைஞன் அல்லது சுவைஞன் ஒரு கலை படைப்பைப் பார்க்கும் போது அல்லது கேட்கும் போது பல்வேறு காரணிகளால் தனது உள்ளத்து உணர்வுகள் தூண்டப்பட்ட நிலையில் ரஸத்தை அனுபவிக்கின்றான்.

"கலைப்படைப்பு பார்வையாளர் ரசிகரிடம் ஏற்படுத்தும் தாக்கம் ரஸம் எனப்படும். இதற்கு அடிப்படை ஆதாரமாக அமைவது "அழகு" ஆகும். அழகிய கலைப்படைப்புக்கள் ரசிகர்கள் மத்தியில் மிக உயர்ந்த ரசனையை ஏற்படுத்து கின்றது.

ரஸம் என்ற சொல் "ரஸ" என்ற வடமொழிச் சொல்லின் வினையடியாக தோற்றம் பெற்றது. இது அனுபவித்தல், சுவைத்தல் போன்ற பொருட்களில் விளக்கப்பட்டுள்ளது. ரஸம் என்ற சொல் வேதங்களிலே இருக்கு வேதத்திலே முதல் முதல் காணப்படுகின்றது. "சோமரஸம்" எனும் பதம் சோமக்கொடியில் இருந்து பிரித்து எடுக்கப் படும் சாறு என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப் படுகின்றது.

ரஸம் என்பது இருவகை அனுபவங்களை சுட்டி நிற்கின்றது. கவிஞன் அல்லது படைப் பாளனது அனுபவமாகவும் பார்வையாளர்கள் அல்லது ரசிகனது அனுபவமாகவும் இது விளக்கப்பட்டுள்ளது.

அழகியற் கலை சம்பந்தமான காலத்தால் முற்பட்ட நூல் பரத முனிவரால் எழுதப்பட்ட "நாட்டிய சாஸ்திரமாகும்" பரதர் நாடகக் கலையை அடிப்படையாகக் கொண்டு ரஸக் கொள்கையை விளக்கியுள்ளார்.

பரதர் கூறும் ரஸங்கள் எட்டு (8) வகைப்படும் அவை வருமாறு.

1. ஹாஸ்ய - சிரிப்பு
2. குரோத - கோபம்
3. உற்ஸாக - பெருமித நிலை
4. பய - பயம்
5. ஜீகுப்ஸ - அருவெறுப்பு
6. விஸ்மய - வியப்பு
7. ரதி - சிருங்காரம்
8. சோகம் - துன்பம்/ கருணா

ரஸங்கள் ஒன்பதாக கூறும் மரபு பிற்காலத்தில் உருவானது. அதனால் நவரஸம் என்ற கோட்பாட்டிற்கு பழக்கப்பட்டவர்களாக இருக்கின்றோம். ஒன்பதாவது ரஸம் சாந்தம் என்பதாகும். எந்த வொரு உணர்வு நிலையும் இல்லாதிருக்கும் நிலை தான் சாந்தம் எனும் ரஸம் ஆகும். தொல்காப்பியம் சாந்தம் எனும் ரஸத்தை "நடுவு நிலை" என அழைப்பர்.

பரதர் காவியத்தில் ரஸம் தோன்றும் முறையைப் பின்வருமாறு விளக்குகின்றார். ஒரு மரம் விதையில் இருந்து தோன்றுகின்றது. மரத்தில் இருந்து பூக்களும் பழங்களும் தோன்று கின்றன. மரத்திற்கு விதை மூலமாக இருப்பது போன்று கவிஞனுக்கு இதயத்தில் இருந்து தோன்றும் ரஸம் காவியத்திற்கு மூலமாக உள்ளது: என்று கூறுகின்றார்.

பரதர் ரஸக் கொள்கை பற்றி கூறும் போது "மனதிலே உணர்ச்சி உண்டாகி அதனின்றும் சுவையாகிய ரஸம் பிறக்கும் என்று கூறுகின்றார். நாட்டிய சாஸ்திரத்தில் 6 வது அத்தியாயத்தில் ரஸம் எவ்வாறு தோற்றிவிக்கப்படுகின்றது. என்பது பற்றி கூறப்பட்டுள்ளது விவாவம், அனுபாவம், வியபிசாரிபாவம் ஆகியவற்றின் சேர்க்கையினால் ரஸம் தோற்றிவிக்கப்படுகின்றது என்று நாட்டிய சாஸ்திரம் கூறுகின்றது.

ரஸத்தை தோற்றுவிக்கும் காரணிகள் 2 வகைப் படும். அவையாவன.

1. விஷிய காரணி
2. விஷியி காரணி

விஷிய காரணி என்று கூறும் போது அவைசிறப்பாக நாடகக்கலையில் கதாபாத் திரங்களிடையே பாவங்களை தோற்றிவிக்கின்றன. குறிப்பாக விபாவம் நாடக கதாபாத்திரங் களிடத் தே நேரடியாக உணர்ச்சியை தோற்று விப்பதுடன் இவ்வுணர்ச்சிகளை பார்வையாளரிடமும் மறை முகமாகவும் தோற்றிவிக் கின்றன. விபாவம் இரண்டு வகைப்படும்.

1. ஆலம்பன விபாவம்
2. உத்தீபன விபாவம்

ஆலம்பன விபாவம் மனிதனால் தூண்டப் படுவது. அதாவது காலம், இடம், சூழ்நிலை ஆகியவற்றால் உருவாக்கப்படுவது.

விபாவத்தை உணர்ச்சிகளின் தோற்றத் திற்கு காரணமாகவும், அநுபாவத்தை காரிய மாகவும் கொள்ளப்படுகின்றது. அனுபவம் சொல், செயல் எண்ணம் இவற்றின் துணை கொண்டு செய்யப்படும். அபிநய வகைகளால் கிளரப்படும் உணர்வுகள், புருவங்களை நெரித்தல் கடைக்கண் பார்வை முதலிய புற வெளிப்பாடுகளினால் உணர்த்தப்படும் போது தோன்றுகின்றது. விசேட வகையான அனுபாவங்களை பரதர் சாத்வீக பாவங்கள் என்கிறார். இவை எட்டு வகைப்படும்.

வியபிச்சாரி பாவங்கள் 33 ஆகும். இவை சஞ்சாரி பாவங்கள் எனவும் அழைக்கப்படும். இவை இடையிடையே தோன்றி மறையும் பாவங்கள் ஆகும். வியபிச்சாரி என்றால் ஒன்றை இழுத்துச் செல்வது என்று பொருள். இவை ரஸம் உண்டாவதற்கு உதவுகின்றன. வியபிச்சாரி பாவங்கள் ஸ்தாயி பாவங்கள் மாற்றுவதற்கு இழுத்துச் செல்கின்றன.

ஸ்தாயி பாவம் நிலையான அடிப் படையான உணர்ச்சியாகும். ஸ்தாயி பாவங்களே ரஸமாக உருமாறும் தன்மை உடையவை. பரதர் ஸ்தாயி பாவத்தின் உருமாற்றம் அல்லது தன்மை மாற்றம் ரஸம் என்று கூறுகிறார். ஸ்தாயி பாவங் களே எட்டுவகையான ரஸங்களைத் தோற்று விக்கின்றன.

கதாப்பாத்திரங்கள் மூலம் விபாவம், அனுபாவம், வியபிசாரி பாவங்கள் மூலமாக பார்வையாளர்களிடத்து சூக்ம நிலையிலுள்ள ஸ்தாயி பாவங்கள் தூண்டப்பட்டு அவைகளினால் அவ்வுணர்ச்சிகள் அனுபவிக்கப்பட்ட நிலையில் அது அவர்களுக்கு அழகியல் அனுபமாகிய அழகியல் திருப்பி உணர்ச்சியாகி ரஸமாகின்றது. ரஸத்தை அனுபவிப்பவர்கள் ரசிகர்கள் அல்லது சுவைஞர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்களும் கலைஞனை ஒத்த கற்பனைத்திறன் உடையவர்களாக இருந்தால்த்தான் கலையின் மூலம் கிடைக்கின்ற பூரணமான அனுபவத்தை பெற முடியும்.

# கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்



அமரர் சுப்பிரமணியம் சோதிரூபன் அவர்கள் பத்து வருடங்களாக எமது கல்லூரியில் கடமையாற்றி கல்லூரிக் காக உழைத்து எம் அனைவருக்கும் நல்லுதவிகளை வழங்கிய நல்ல மனிதர். அமரர் சுப்பிரமணியம் சோதிரூபன் அவர்கள் 02.05.2010 கல்லூரி மண்ணிலேயே இறைபதம் எய்தினார். அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுவதுடன் எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**சமூகத்தினர்**

# நாடகத்தின் சமூக முக்கியத்துவம்

டினோஷன்
09/JNCOE/ DRT /T /M99
நாடகமும் அரங்கியலும்

நாடகம் சமூகத்தினை பிரதி பலிக்கும் ஓர் கலைவடிவமாகும். ஏனைய கலைகளுடன் ஒப்பிடு கையில் அதிகளவிலான சமூகப் பண்புகளைத் தாங்கி நிற்கும் கலை வடிவமாகவும் நாடகம் விளங்குகின்றது. நாடகம் பலர் ஒன்றிணைந்து ஆக்குவதனாலும், பலர் முன்னிலையில் படைக்கப் படுவதானாலும் நாடகக் கலையில் சமூகப் பண்பை நாம் காணலாம்.

நாடகம் மனிதனை அவனுக்கே வெளிப் படுத்தும் ஓர் கலை வடிவமாகும். மனிதனை மோதுகை நிலையில் நாடகம் சித்தரிக்கின்றது. வாழ்வில் ஒவ்வொரு மனிதர்களும் வெவ்வேறு முரண்பாடுகளை எதிர் கொள்கின்றனர் இவ்வாறு எதிர் கொள்ளும் முரண்பாடுகளே அரங்கில் வெளிப்படுத்தப் படுகின்றது. எனவே மனிதர்கள் வாழ்வில் ஏற்படுகின்ற முரண்பாடுகளின் போது எவ்வாறு இயங்குதல் வேண்டும் என்பதற்கு அரங்கு விழிப்புணர்வு ஊட்டுகின்றது

சமகால விடயங்கள் அரங்கில் வெளிப் படுத்தப்படுகின்றன. மக்கள் தம்மைச் சூழ உள்ள பிரச்சனைகளை செய்திகளை அரங்கில் கண்டு கொள்ள முடியும். இதனால் சமகால போக்குகளை அறிந்து கொள்ள முடியும். சமூகத்தினை நாடகம் பிரதிபலிப்பதனால் அரங்கில் அது அவசியமா கின்றது. நாடகம் சமகால பிரச்சனைகளை வெளிப்படுத்துவனால் நாடகத்திற்கு ஊடாக தேசத்தின் வரலாற்றினை கண்டு கொள்ளலாம். உதாரணமாக கிரேக்க நாடகங்கள் கிரேக்க தேசத்தின் வரலாற்றினை எடுத்துக் காட்டுகின்றன.

நாடகம் சமூகத்தினை வியாக்கியானம் செய்யும் ஒரு கலை வடிவமாகும். ஆற்றுவோரது வியாக்கியானம்நாடகத்தில் வழங்கப்படுகின்றது. இதனால் நாம் சமூகத்தில் நிலவும் விடயங்கள் தொடர்பான குறித்த குழுவினரது பார்வை யினைக் கண்டு கொள்ளலாம். அது மட்டுமன்றி நாடகத்தில் முன்வைக்கப்படும் கருத்துக்கள் தொடர்பாக கூடி சிந்திக்கும் வாய்ப்பு ஏற்படு கின்றது. தனி ஒருவருக்காக நாடகம் இங்கு நிகழ்த்தப்படுவதில்லை. பலரை ஒன்றிணைத்தே நாடகம் நிகழ்த்தப்படுகிறது. பலர் ஓரிடத்தே ஒன்றிணைந்து சிந்திக்கும் வாய்ப்பு அரங்கில் வழங்கப்படுவதனால் சமூகத்தில் அரங்கு முக்கியத் துவம் பெறுகின்றது எனலாம்.

நாடகம் உளச்சிகிச்சையாக பயன்படுத்தப் படுகின்றது. உளரீதியாக பாதிக்கப்பட்டவர்களை இனங்கண்டு அவர்களை வழிநடத்துவதற்கு நாடகம் பெரும் பங்கு வகிக்கின்றது. உளச்சிகிச்சை நிலையங்களிலும் நடிபாகங்களை ஏற்று நடிகர்கள் நிகழ்வுகளை நிகழ்த்துவர். நோய்ப்பாதிப்பிற்கு உள்ளானவர்களையும் தம்முள் இணைத்துக் கொள்வர். இதனூடாக நோயின் கூறுகளையும் இனங்கண்டு கொள்வர் யாழ்பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களால் நிகழ்த்தப்பட்ட "அன்னை இட்ட தீ" என்னும் குழந்தை மா. சண்முகலிங்கம் அவர்களது நாடகம் போரினால் உள நெருக்கடிக்கு உள்ளானவர்களை மையப் படுத்தி அமைக்கப்படுகின்றது. கிரேக்கத்தில் நிகழ்த்தப்பட்ட "ட்றஜடி" எனும் அவலச்சுவை நாடகம் கிரேக்க மக்களிடம் காணப்பட்ட வாழ்வு பற்றிய பய உணர்ச்சியை வெளியேற்ற உதவி நிற்கின்றது இவ்வாறு உளச்சிகிச்சையாக அரங்கு பயன்படுத்தப்படுவதானால் அது சமூகத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது எனலாம்.

கல்வி சார் நடவடிக்கைகளுக்கு அரங்கு பயன்படுகின்றது தமிழ் மொழித்திறன் விருத்தி, ஆங்கில மொழிவிருத்தி என்பவற்றினை அதிகரிக்க தமிழ்த்தின விழா என்பன கொண்டாடப்பட்டு அங்கு நாடகங்கள் மேடையேற்றி வருகின்றனர். விஞ்ஞான ரீதியான கருத்தை விளங்கப்படுத்து வதற்கு நாடகத்தைப் பயன்படுத்தலாம். உதாரண மாக சூரிய தொகுதியின் இயக்கத்தை நாடகத்தின்

மூலம் எடுத்துக் காட்டலாம் இவ்வாறு மாணவர்களுக்கு கல்வி வளர்ச்சிக்கு அரங்கினைப் பயன்படுத்த முடியும்.

விற்பனை நடவடிக்கைகளில் நாம் நாடகத்தினைப் பயன்படுத்தலாம். புதிய பொருள் பற்றிய அறிமுகத்தை வழங்குவதற்கும் அப்பொருட்கள் பற்றிய பாவனைப்பண்பை அறிமுகப்படுத்துவதற்கும் அரங்கினை கையாள முடியும். விற்பனை நடவடிக்கைகளில் மட்டுமன்றி சுகாதார ரீதியில் அரங்கினைச் செயற்படுத்தவும் வாய்ப்புள்ளது. சுகாதார நடவடிக்கைகளின் முன்னெடுப்பதற்கு அரங்கு பயன்படுகிறது. உதாரணமாக மலேரியா நோயின் தாக்கத்துக்குள்ளான பிரதேசத்தில் மலேரியா நோய்க்கு எதிராக விழிப்புணர்வை ஊட்டுவதற்கு அரங்கினை கையாள முடியும்.

அரசியல் ரீதியாக அரங்கினை தாக்கமாக பயன்படுத்த முடியும். ஈழத்தமிழரது போராட்டத்தினை எழுச்சி ஊட்டியது அரசியல் அரங்கிற்கு கணிசமான பங்கு உண்டு இந்த வகையில் தெருவழி நாடகங்களும் மேடை நாடகங்களும் காத்திரமான பங்களிப்பினை செலுத்தியுள்ளன. அரசியல் மாற்றங்கள், அரசியல் பற்றிய விழிப்புணர்வும் ஆட்சி பற்றிய விமர்சனங்கள் என்பன முன்வைக்கப்படுவதற்கு அரசியல் அரங்கு உதவி நிற்கின்றது. இந்த வகையில் அரசியல் ரீதியாக அரங்கு பயன்படுவதனால் அது சமூகத்தில் முதன்மை பெறுகின்றது எனலாம்.

நாடகம் பண்பாட்டை வெளிப்படுத்தி நிற்கும் ஒரு கலைவடிவமாகும். நாடகத்தில் வெளிப்படுத்தப்படும் நிகழ்வுகள் பண்பாடு சார்ந்தவை ஆகும். பழக்க வழக்கங்கள் பிறமொழிக் குறியீடுகள் நம்பிக்கை, சிந்தனைகள் என்பன பண்பாட்டு சார்ந்து அமைகின்றன. எனவே பண்பாடடை கண்டு கொள்ள அரங்கு உதவுவதனால் சமூகத்தில் அரங்கு கவனிப்பதற்குரியதாக அமைகின்றது.

அரங்கு நேரடித் தொடர் பாடலைக் கொண்டுள்ள கலை வடிவமாகும். இங்கு ஆற்றுவோர் பார்வையாளருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு நாடகத்தை நிகழ்த்துகின்றனர் இலக்கியம், சிற்பம், ஓவியம், சினிமா போன்ற கலைவடிவங்களில் மறைமுக தொடர்பாடல் நிகழ்கின்றது. நாடகம் நேரடியாக தொடர்பு கொண்டு செய்தியினையும் உணர்வினையும் அனுபவத்தினையும் கையளிப்பதனால் பார்வையாளருக்கு அதிக தாக்கத்தினை விளக்குகின்றது. எனவே அரங்கு ஏனைய கலைகளிலும் பார்க்க சமூகத்தில் பயன்தரும் கலையாக அமைகின்றது.

நாடகம் கட்புல செவிப்புல கலைவடிவமாகும். கண்ணுக்குரிய வகையிலும் செவிக்குரிய வகையிலும் நாடகம் கையாளப்படுகிறது. கட்டிடம் சிற்பம், ஓவியம் என்பன கட்புல வடிவமாகும். இசை செவிப்புல கலைவடிவமாகும் நாடகம் கட்புல செவிப்புல ரீதியாக காணப்படுவதனால் அதன் வீச்சு அதிகரிக்கின்றது. நாடகம் ஓர் இயல்பு கலைவடிவமாகும் கணத்திற்கு கணம் நாடகம் அரங்குவதை அரங்கில் அவதானிக்கலாம். கணம் தோறும் மாறிச் செல்லும் வெளிப்பாடு அரங்கில் நிகழ்த்தப்படுவதனால் சமூகத்தில் நாடகம் தாக்கமாக பயன்படுத்தக்கூடிய வாய்பினை பெற்றுள்ளது. உதாரணமாக குறித்த ஓர் விடயத்தில் பல்வேறு பரிமாணங்களை நாடகம் வெளிப்படுத்தி நிற்கும்.

நாடகம் சமூகத்தில் கூடிச் சிந்திப்பதற்கும் நெருக்கமான தொடர்பாடலை மேற்கொள்வதற்கும் சமூகம் பற்றிய வியாக்கியானத்தினையும் வழங்குவதற்கும் பண்பாட்டினை வெளிப்படுத்துவதற்கும் பண்பாட்டின் தொடர்ச்சியை பேணுவதற்கும் உள ரீதியான சிகிச்சை முறையாகவும் மகிழ்வூட்டலை வழங்குவதற்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் அனுபவத்தை கையளிப்பதற்கும் ஒவ்வொருவரிடமும் மறைந்திருக்கும் ஆற்றலை வெளிக் கொணர்வதற்கும் சமூகம் சார்ந்த சுகாதாரக் கல்வி விஞ்ஞான அரசியல் நடவடிக்கைகளுக்கும் வரலாற்றினைக் கண்டு கொள்வதற்கும் மக்களை மக்களை எழுச்சியூட்டுவதற்கும் பயன்படுகிறது இதனால் நாடகம் சமூகத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது எனலாம்.

# சங்கீதத்தின் பெருமையும் பயனும்

மு. ஜெனனி
Mu/ T/ F/ \84
2ஆம் வருடம், சங்கீதத்துறை.

சங்கீதம் என்பது செவிக்கும் மனத்திற்கும் இன்பத்தைத்தரும் சிறந்த மேன்மையான கலையாகும். பசு, பக்ஷிகள், மிருகங்கள், நாகம், மனிதர்கள் போன்ற எல்லாவிதமான ஜீவராசிகளும் இனிமையான ஸங்கீதத்தைக்கேட்டு மயங்குகின்றன.

சங்கீதத்திற்கு 4 உபவேதங்களில் ஒன்றான, காந்தர்வ வேதம் என்று பெயர். ஸங்கீத வித்வத் உள்ள அனேக மஹனீயர்கள், பக்தி ரஸம் ததும்பும் ஸங்கீதத்தினால், கடவுளின் தரிசனத்தை நேரில் கண்டிருக்கிறார்கள் அனேக பக்திரஸம் ததும்பும் க்ருதிகளையும் பல்வேறு உருப்படிகளையும் அருளிச் செய்திருக்கிறார்கள் உலகம் தோன்றிய போதே சங்கீதமும் தோன்றியிருக்கிறது. என்றாலும் மனிதன் தன் அறிவுக் கூர்மையினாலும், யுக்தியினாலும் வளர்த்த அருங்கலை களில் சங்கீதமும் ஒன்று. மனிதன் ஈசன் அருளிய குரலைப்பேசுவதற்கு மட்டுமல்லாமல், பாடவும் செய்வதால், அவன் தன் குரலின் பூரணத்துவத்தை அடைகிறான். கை விரல்களும் இசைக்கருவிகளை இசைக்கப்பயன்படுகின்றன. இதனால் அளவிலா மகிழ்ச்சி அடைகின்றான்.

மனிதனுடைய தேகத்திலேயே இசைத் தத்துவம் அடங்கியிருக்கிறது என்று பெரியோர் கூறுவர். திருவள்ளுவர் வாக்குப்படி, செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம், இனிமை நிறைந்த சங்கீதத்தைக் காதாரக் கேட்டு மனதார மகிழ்ச்சி கொள்கிறோம்.

இயற்கை பிரமாணங்களையும், அனுபந்தங் களையும் ஆதாரமாக் கொண்டு கந்தர்வதத்துவம் என்ற சங்கீத சாஸ்திரத்தை பெரியோர்கள் ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

ஏழிசை அதாவது ஸரிகமபதநி என்ற ஏழுஸ்வரத்தை ஏற்படுத்தி, அதனின்று இனிமையான நாதத்தை எழுப்பி, பலப்பல வாக்கேயக் காரர்கள் இனிமையான க்ருதி, கீர்த்தனை போன்ற பல உருப்படிகளை அருளிச் செய்திருக்கிறார்கள். அவைகளைப் பாடவோ, வாசிக்கவோ, கேட்கவோ, செய்தால் நாம் மெய்மறந்து, உணர்ச்சி பூர்வமாக நினைக் கின்றோம். ஸ்ரீ தியாகராஜா சுவாமிகளுக்கு சராத மகரிஷியினால் கிடைக்கப் பெற்ற "ஸ்வரார்ணவம்" என்ற க்ரந்தத்தில் வீணை வாசிப்பதில் தேர்ச்சி பெற்ற வனும், ஸ்ருதி சாஸ்திரத்தில் நிபுணனானவனும், தாள ஞானதைப் பெற்றவனும், பிரயாசையின்றி மோக்ஷமார்க் கத்தை அடைகிறான் என்ற ஸ்லோகம், சங்கீத சாஸ்திர ஞானத்தின், வீணை வாசிப்பின் மேன்மையை எடுத்துக்காட்டுகிறது அதாவது சுத்த இசை என்பதற்கு எவ்வளவு பெருமை அளிக்கப்பட்டிருக்கிறது என்பது நன்கு புலப் படும். சங்கீதத்தையே தன் உயிர் மூச்சாகக் கொண்ட பல மஹான்கள், பக்தி நிறைந்த காரணத்தினால், கடவுளின் தரிசனத்தை நேரிலேயே பெற்றிருக்கிறார்கள்.

சங்கீதத்தை முறைப்படி அப்பியாசித்து நன்றாக ஸாதகம் செய்து அருமை பெருமை வாய்ந்த சங்கீதத்தை முறையாக கானம் செய்யும் பொழுது அதைக்கேட்க, நாம் நம்மையே மறந்து, தெய்வீக உலகில் சஞ்சரிப்பது போன்ற இன்பக் கடலில் மூழ்குவோம் சங்கீதம் மனிதனின் துர்குணங் களைப் போக்கி நற்குணங்களை மேம்படுத்தி இவ்வுலகில் உயர்ந்தவனாக ஆக்கக்கூடிய சக்தி உடையது. பாட்டின் அர்த்தம் விளங்காவிடினும், சங்கீதத்தின் இசையில் எந்தேசத்தவராயிருந் தாலும் கேட்டு மகிழ்வுறு கிறார்கள் சங்கீத வித்துவான்களுக்கு எல்லா தேசங்களிலும் நன்மதிப்பும் மரியாதையும் உண்டு.

**சங்கீதத்தின் பிரிவுகள்**

சங்கீதம் மூன்று வகைப்படும்

1. மெலடி
2. பாலிபோனி
3. ஹார்மோனி

1. மெலடிகல் சங்கீதத்தில், ஸ்வரங்கள் ஒன்றுக் குப் பின் ஒன்று தொடர்ச்சியாக வரும்

2. பாலிபோனி சங்கீதத்தில், ஒரு முறையைத் தழுவி, அமைக்கப்பட்ட கீதங்கள் ஒரு காலத்தில் வாசிக்கப்படும்.

3. ஹார்மோனிகல் சங்கீதத்தில், ஸ்வரத் தொகுதிகள், ஒரு ஸ்வரத்தை வாசிக்கும் பொழுதே, அதன் இணை ஸ்வரம் ஒன்றுக்குப் பின் ஒன்று தொடர்ச்சியாக வரும்.

ஆசியா கண்டத்தில் இந்தியாவில், மெலடிகல் சங்கீதமும் ஐரோப்பிய நாட்டில் பாலிபோனி சங்கீதத்தையும், ஹார்மோனி சங்கீதத்தையும் கேட்கலாம். மேல்நாட்டார் சங்கீதம், ஸம்வாத சங்கீதம் என்றும் அழைக்கப்படும்.

சங்கீத தத்துவங்களை நன்கு அறிந்த நமது முன்னோர்கள் மற்ற சங்கீதத்தை விட, மெலடிகல் சங்கீதத்தையே, ராகத்தை வளர்க்கத் தேர்ந்தெடுத் தார்கள். பாலிபோனி, ஹார்மேனி சங்கீதத்தில் அவர்கள் நாட்டம் கொள்ளவில்லை. மிகவும் புராதனமானதும், கலைக்கெல்லம் சிகரத்தைப் போன்றதும் இந்திய சங்கீதமே இந்திய சங்கீதம் சுமார் 600 ஆண்டுகளாகதென்னாட்டில் கர்னாடக சங்கீதம் என்றும் வடநாட்டில் ஹிந்துஸ்தானி சங்கீதம் என்றும் வழங்கப்படுகின்றது. கி.பி 14 ம் நூற்றாண்டு (1309 - 1372) ஹரிபால தேவர் இயற்றிய சங்கீதஸீதாகரம் என்னும் நூலில் ஹிந்து ஸ்தானி, கர்னாடக சங்கீதப் பிரிவுகளைத் தெளிவாகக் கூறியுள்ளார். அதற்குப்பின் வந்த அபிநவராகமஞ்சரி என்னும் நூலில் சங்கீத ஸீதாகரத்தில் கூறப்பட்டிருந்ததை ஆமோதிக்கும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

கர்னாடக சங்கீதத்தில் பண்டைக்காலத்தில் தோன்றிய திவ்யப்பிரபந்தங்கள், தேவாரம், திருப்புகழ் இவைகள் எல்லாம் சிறந்த பண்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. பின் ராகங்கள் நாளடைவில் பிரசித்தமாகி, ஏராளமான க்ருதிகள் கீர்த்தனை, தரு, தரங்கம், ராகமலிகை, அஷ்டபதி, தில்லான போன்ற பற்பல உருப்படி வகைகள் எல்லாம் சிறந்த மஹான்களால் உருவாக்கப் பட்டன.

இந்திய சங்கீதத்திற்கு பொக்கிஷம் ஆக சங்கீதத்தில் கீதம், வர்த்யம், நிருத்யம் இவை மூன்றுமே சங்கீதம் என்று கருதப்பட்டு ஒன்றாக இசைக்கப்பட்டு வந்தன. சங்கீதக்கலை சிறிது அபிவிருத்தி அடைந்ததும் கீதமும் வாத்யமும் நிருத்யக் கலையினின்றும் பிரிக்கப்பட்டு தனிப்பெருமை கொண்டது. பல மஹான்களின் முயற்சியாலும், கடவுளின் அனுக்ரஹத்தாலும், சங்கீதக்கலை வளர்ச்சியடைந்து, சிறந்தக் கலையாகவும், பூரணக்கலையாகவும் முழுமை அடைந்து பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.

**உசாத்துணை நூல்கள்**

இந்திய கர்னாடக சங்கீதம் - திருமதி. S. விஜயலட்சுமி

கர்னாடக சங்கீதம் - செல்வி. ம. கிருஷ்ணவேணி

# The Good Teacher

Tranquil and tireless.
Helpful and humble.
Enthusiastic and earnest.
Gentile and generous in her work.
Optimistic in her outlook.
Obedient to her authority.
Daring to do something beautiful for children.
Truthful and trustworthy in her dealings.
Eager, and Enduring.
Ardent to take up His / her task
and approachable person.
Creative in her thoughts and deeds.
Hard worker and giving hope to others.
Effective in her mission and Love.
Ready and responsibility in her day today life.

**Mr. Maria Nivedha A.C**
Christianity Course, (2 nd Year)

# மகிழ்ச்சிகரமான கற்றலும் பிள்ளை நேயப் பாடசாலையும்.

திருமதி. ஜெயலஷ்மி உதயகுமார்.
கல்வியியலாளர்,
யாழ்ப்பாணம் தேசியகல்வியியற்கல்லூரி.

**1. அறிமுகம்**

பிள்ளைக்கு முதல்முதலாக திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட கலைத்திட்டத்திற்கேற்ப வழங்கும்கல்வி ஆரம்பக்கல்வி எனப்படும். முறைசார் கல்வியின் முதற்கட்டமாக தரம் 1 தொடக்கம் 5 வரை பிள்ளையின் அத்திவாரமிடப் படுகின்றது. சமூகத்தின் தேவையை நிறைவு செய்யும் முதற்பணி ஆரம்பக்கல்வியில் தொடங்கு கின்றது. மாணவர்களின் முதிர்ச்சிப் படிமுறைக்கேற்ப அவர்களின் உள்ளார்ந்த செயற்பாடுகளை மேம்படுத்தி வளர்க்கக் கூடிய வகையில் ஆரம்பக்கல்வி கற்றற் செயலொழுங்கு கள் வடிவமைக்கப்படுகின்றன.

வாழ்க்கையின் உயர்ந்த நோக்கில் பிள்ளைப் பருவம் ஒவ்வொருவர் வாழ்விலும் மகத்தான அனுபவங்களைத் தோற்றுவிக்கும் இனிய பருவமாகும். இப்பருவத்தில் பெறும் கல்வி வாழ்நாள் முழுவதையும் வளப்படுத்தி முன்னெடுத்துச் செல்லும் வலுவுடையதாக இருக்கின்றது.

பிள்ளைகள் விருப்புடனும் மகிழ்வுடனும் பயனுள்ள கற்றற் செயற்பாடுகளில் இயங்குதல் ஒரு வகுப்பின் செயலூக்க நிலை எனலாம். இவ்வாறான மகிழ்ச்சிகரமான இயங்கு நிலைக்கு வகுப்பறையின் வசதிகளும், வளங்களும் ஆசிரியரின் மகிழ்ச்சிகரமான கற்பித்தல் அணுகுமுறைகளும் அவசியமான காரணி களாகும்.

ஒரு வகுப்பறை மகிழ்ச்சியானதாக அமையும் போது தான் அங்கு வினைத்திறனான கற்றல் இடம்பெறும். வகுப்பறை மாணவரின் அனுபவம், செயற்பாடு, கவர்ச்சி போன்றவற்றிற்கு உரியதாக இருத்தல் வேண்டும். சுயகற்றல் (Self Activity) மாணவரின் ஊக்கியாகச் செயற்படும் வண்ணம் ஆசிரியர் கற்பித்தல் நுட்பங்களை மாற்ற வேண்டும். "விளையாட்டு மூலம் கற்பித்தல் பிள்ளைகளிடையே மகிழ்ச்சியைத் தோற்று விக்கும்" என்று புறொபல் குறிப்பிடுகின்றார்.

பிள்ளைகளின் ஒட்டுமொத்தமான விருத்திக்கு அவர்களின் தேவைகள் நிறைவேற்றப் படுவதும், அவர்கள் பாதுகாக்கப்படுவதும், கல்வி மற்றும் கற்றலுக்கான வாய்ப்பு கிடைக்கப் பெறுவதும், தங்களை வெளிப்படுத்தவும், வயதிற்குப் பொருத்தமான முறையில் விளை யாட்டு, செயற்பாடுகள் என்பவற்றினூடாக சமூகமயமாதலும் தேவைப்படுகின்றன.

எல்லாப் பிள்ளைகளும் விளையாட்டு மற்றும் மகிழ்ச்சிகரமான செயற்பாடுகள் மூலம் தங்களைத் தாங்களாகவே வெளிப்படுத்து கின்றனர். ஏனையோருடன் சுமுகமான தொடர் பாடலைப் பேணுகின்றனர். தாம்வாழும் உலகைப் புரிந்து கொள்கின்றனர். ஆரம்பக்கல்வி மாணவர் களின் மகிழ்ச்சிகரமான கற்றலை பயனுறுதி உடையனவாக்குவதற்கு இன்றைய பிள்ளை நேயப் பாடசாலை அணுகுமுறை பெரிதும் உதவுகின்றது.

**2. பிள்ளை நேயப் பாடசாலை.**

கற்கும் சூழல் மகிழ்ச்சிகரமானதாக அமைய வேண்டும். பிள்ளையின் ஆரோக்கியம் (உடல், உள), பாதுகாப்பு, பால் சமத்துவம், வசதி வாய்ப்புக்கள் என்பனவற்றை மேம்படுத்து வதனூடாக பிள்ளையின் தரமான கல்வியினா லான உயர்வு நிலையை எந்தவித இடையூறு மின்றிப் பெறுவதனை ஊக்குவிப்பன பிள்ளை நேயப் பாடசாலைகளாகும்.

**பிள்ளை நேயப் பாடசாலையின் சிறப்பு இயல்புகள்.**

★ சிறுவர் உரிமையை அடிப்படையாகக் கொண்டதுடன் செயற்திறனுடன் பேணி வருதல்.

- ★ பால்சமத்துவம் பேணுதல்.
- ★ அறிவு மற்றும் செயற்றிறனுடைய தரமான கற்றற் பேறுகளை விருத்தி செய்தல்.
- ★ பிள்ளைக்கு ஆரோக்கியமானதும், தீங்கற்றதும், பாதுகாப்பானதுமான இடம்.
- ★ பிள்ளைகள் சமூகம் - குடும்பம் என்பனவற்றுடன் பற்றுறுதியான ஈடுபாட்டைக் கொண்டிருத்தல்.
- ★ பிள்ளை நேயப் பாடசாலைத் தொகுதி கொள்கை, செயற்பாடுகள், ஒழுங்கு விதிகளுக்கு உறுதுணையாக இருத்தல்.

ஒவ்வொருபிள்ளையும் தமது வயதிற்கேற்ற கல்வியைப் பெற வேண்டும் என்பது யாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும். சர்வதேச சிறுவர் உரிமைச் சட்டங்களும் இவற்றை அங்கீகரிக்கின்றன. பிள்ளைகள் உரிமையில் ஆசிரியர்கள் மிக முக்கிய பொறுப்பு வாய்ந்தவர்களாக அமைகின்றனர். ஆசிரியர்கள் பிள்ளைகளை உள, உடல் ரீதியாக வளர்த்து ஆளாக்குபவர்கள் கண்காணிப்பவர்கள் ஆவர். பெற்றோருக்குச் சமமான உரிமைகள் பல ஆசிரியர் வசம் உண்டென்பதை சட்டம் ஏற்றுக் கொள்கின்றது. ஆரம்பக்கல்வி முதல் இரண்டாம் நிலைக்கல்விவரை ஆண், பெண் பேதமின்றிப் பிள்ளைகளிற்கு எல்லா விடயங்களிலும் சமவாய்பு வழங்கப்படல் வேண்டும்.

பாடசாலைச் சூழல் கவர்ச்சியானதாகவும் ஆரோக்கியமானதாகவும் இருப்பதுடன் சுகாதாரம், பாதுகாப்பு போதுமான வசதி வாய்ப்புக்கள் காணப்படுவதுடன் சிறுவர் துஷ்பிரயோகம், தீய கெடுதிகளிலிருந்து பாதுகாப்பினை உறுதி செய்தல் என்பனவற்றுடன் அவசரகால முகாமை பேணப்படும் தொகுதிக் கட்டமைப்பை நடைமுறைப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பாடசாலை அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பாடசாலைச் சமூகத்தின் செயல்திறன் மிக்க பங்களிப்பு, பிள்ளை நேய வீடு-பிள்ளை நேய சமூகம் என்பனவற்றினை மேம்படுத்துவதில் பாடசாலை வெற்றியுடன் செயற்படுகின்றது. அத்துடன் கலைத்திட்டம், பாடநூல்கள், ஆசிரியர் கைந்நூல்கள் என்பவை பிள்ளை நேயக் கொள்கைகளை இணைத்துக் காணப்படுதல் என்பனவும் பிள்ளை நேயப் பாடசாலைகளின் பயனுறுதித் தன்மைக்குக் காரணங்களாகும்.

பிள்ளை நேயப் பாடசாலை மேலும் பயனுறுதியுடன் செயற்படுவதற்கு சுற்றாடல்சார் செயற்பாடுகள் மூலம் செயற்படுத்தப்படும் கற்றல் வட்டங்கள் இன்றியமையாதனவாகும். இக்கற்றல் வட்டங்களை ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் செவ்வனே நிறைவு செய்வதன் மூலம் பிள்ளை நேயப் பாடசாலைகளை மேலும் மகிழ்வுடன் வலுப்படுத்த முடியும்.

**3. கற்றல் வட்டங்கள்.**

மகிழ்ச்சியான அனுபவங்களைப் பெறக் கூடிய வகையில் கற்றல் சூழலை ஒழுங்கமைத்துக் கொடுப்பது ஆரம்பக்கல்வி ஆசிரியரின் கடமையாகும். பிள்ளைகள் அனுபவங்கள் மூலமே கற்கின்றனர். பிள்ளைகள் சுயமாகவும், சுதந்திரமாவும் செயற்படுவதற்கும், விளையாடு வதற்கும், தொட்டுணர்வதற்கும் பயன்படுத்து வதற்குமான களமாக கற்றல் வட்டம் அமைய வேண்டும். பிள்ளைகள் தமது தேவைக்கேற்ற செயற்பாடுகளையும், பொருட்களையும் தெரிவு செய்து ஆசிரியரின் வழிகாட்டலுடன் ஈடுபடுவர். மாணவர்கள் எந்தவித தலையீடுமின்றி தனியாகவோ, கூட்டாகவோ சிந்தித்துச் செயற் படக் கூடிய களமாகவும் அமையும். இங்கு பால் சமத்துவம் பேணப்படுவதுடன் பாதுகாப்பும் உறுதி செய்யப்படும். கற்றல் வட்டத்தினுள் வைக்கப் படும் பொருட்கள் அடிக்கடி மாற்றப் படுதல் வேண்டும். கற்றல் வட்டங்கள் பலவாகும்.

- ★ சித்திர வட்டம் :- இது பிள்ளைகளின் எண்ணங்களையும் உணர்வுகளையும் மேம்படுத்தி ஆக்கத்திறனை விருத்தி செய்யும்.
- ★ சுற்றுச் சூழல் வட்டம் :- பிள்ளைகள் அவதானித்தல், அனுபவித்தல், உணர்தல், பாரத்தல், கேட்டல் மூலம் சூழலிலிருந்து அனுபவங்களினூடாக அநேக விடயங்களை கற்றுக் கொள்கின்றனர்.

★ நாடக ஆற்றுகை வட்டம்:- தம்மைக் கவர்ந்தவற்றைப் போலச் செய்வர். மகிழ் வளிப்பு நிலைமைக்குள்ளாவர். சிறந்த உள அபிவிருத்தி, பயமற்ற தன்மை, தன்னம்பிக்கை ஏற்படுத்தும் கூச்சமின்றியும் பயமின்றியும் வெளிப்படுத்தப் பொருத்தமான வட்டம்.

★ செய்தி தகவல் வட்டம் :- இன்றைய தகவல் தொழில் நுட்பத்துடன் இணைந்த அறிவு வெடிப்பு யுகத்தில் நாளுக்கு நாள் புதிய விடயங்கள் அறிமுகமாகி வருவதைக் காண முடிகிறது. அவற்றை ஆரம்பக் கல்வி முதலே பெற்றுக் கொடுக்க வேண்டும். பொருத்தமான தகவல்களை ஒழுங்கமைத்து வழங்க வேண்டும்.

★ இசையும் அசைவு வட்டம் :- மன அழுத்தங் களைப் போக்கி சமநிலைத்தன்மை அடைய வும் செயற்பாடுகளில் முழு மன ஈடுபாட்டு டனும் செயற்பட இவ்வட்டம் உதவும்.

★ புலன் விருத்தி வட்டம் :- புலன் அறிதிறனை விருத்தியாக்குவதுடன் சூழல் மாற்றத்தினை அறிய வேறுபட்ட மணங்களை அறிய உணர்தல் திறனை மேம்படுத்த உதவும்.

★ பண்பாட்டியல் வட்டம் :- சமூக விழுமியங் களைப் பேணி நற்பிரஜையாக வாழ்வர். நாட்டின் கலை, கலாசாரம், பண்பாடு, பாரம்பரியங்கள் அறிந்து சமூக நியமங்களை ஏற்றுச்செயற்படுவர்.

★ நீர், மணல் வட்டம் :- நீர்,மணல் என்பன வற்றுடன் விளையாடுவதன் மூலம் மகிழ்வுடன் கற்றல் அறிவையும் அனுபவத்தினையும் பெறுவர்.

★ சமூகத்திறன் வட்டம் :- பிரச்சினையிலிருந்து தம்மை விடுவித்து சந்தர்ப்பத்திற்கேற்ப செயற்படுவர். தலைமைத்துவப் பண்பு, கூட்டுணர்வு என்பன வளர்வதுடன் சமூக இணைப்பாக்கத் திறன் பெறுவர்.

இக்கற்றல் ஒரு மகிழ்ச்சியான செயல். இதனை செயற்படுத்துபவர்கள் ஆசிரியர்கள். இதற்கு வகுப்பறை பாதுகாப்பும் வசதிகளும், வளங்களும் கொண்டதாகவும் ஆசிரியர் அறிவு, திறன், நேர்மனப்பாங்கு, செயலூக்கம் என்பன வற்றைக் கொண்டிருப்பதுடன் பிள்ளைகளின் விசேட தேவைகளைக் கருத்திற் கொண்டு செயற்படுபவராகவும் இருக்கும் அதேவேளை பால் சமத்துவம் பேணுபவராகவும் இருத்தல் வேண்டும். வன்முறை/கொடுஞ் சொற்களற்ற கவிநிலை என்பனவற்றுடன் பாடசாலையுடன் இணைந்து முழுச்சமூகமும் பிள்ளையின் உரிமைகள், தேவைகள் பற்றிய பூரண அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும். மேற்கூறப் பட்ட பண்புகளை உடைய மகிழ்ச்சிகரமான பிள்ளை நேயப் பாடசாலையில் ஆசிரியர் மாணவர்களின் கற்றல் சுமையாக அமையாது சுகமான அனுபவ மாக மாற்றுபவராக இருப்பார்.

நன்றி

**உசாத்துணை நூல்கள்**


1. மகிழ்ச்சிகரமான கற்றல், ஆசிரியர் சேவைக் கால செயற்றிட்டம் (Tip/GTZ)
2. பாடசாலை மட்ட கல்வி அபிவிருத்தி, ஆசிரியர் சேவைக்கால பயிற்சிச் செயற்றிட்டம் (Tip), மத்திய மாகாண கல்வித் திணைக்களம். (2001)
3. ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (2006) உலகச் சிறுவர் நிலை.
4. உள-சமூக தலையீட்டு ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம், யுனிசெவ் (Unicef)
5. Early Childhood Learning Stages, Early Childhood Cevelopment Unit, Ministry if Education, cullural Affairs and sports, Northern and Eastern provinces. (2007)
6. www.unicef org/pdedue/education/child him. 22.05.2003.

# Global Warming

**M.Thinesh**

2nd year Science English Medium.

The grievous threat posed by the various global warming issues seems to be taking the center stage among the various environmental issues That threaten the planet today. These global warming problems include rising temperature, extreme me weather conditions, melting glaciers, rising sea level, extinction of plant and animal species & many more. Even though the evidence of global warming. such as the increase in the frequency of hurricanes and submerging of the coastal areas & tiny islands, is making the Problems of global warming move and more obvious several questions about it still remain un answered. It is this ignorance on our behalf that is acting as a catalyst for the hazards of global warming.

**What is global warming**

The term global warming refers to the rise in the average temperature of the planet, due to the accumulation of greenhouse gases in the atmosphere as a result of various natural and human activities. These green house gases, such as carbon dioxide & methane, have the tendency to trap the sun's heat in the Earth 's atmosphere in a phenomena referred to as the greenhouse effect, & contribute to the problem of global warming.

The reports compiled by the Intergovernmental panel on climate change (IPCC) suggest that the average temperature of the planet has increased by 1.8 degree Celsius over the last century & continues to increase at an alarming rate. This rise in temperature is a matter. of grave concern, as studies reveal that it is resulting in a series of adverse effects on the planet. Before we move on to these global warming issues. let's try to understand what are the factors that cause the near - surface temperature to rise

**What Cause Global Warming Problems?**

The main cause of global warming can be broadly categorized into two groups - natural causes and an thropogenic causes (causes triggered by humans) The natural causes of global warming , such as the solar variation, feed back effect, natural release of the methane gas, Volcanic eruptions etc. don't cause much harm to the planet. In fact these natural causes play a crucial role in regulating the temperature of the planet, & absence to these would have resulted in freezing conditions on the planet, thus making it virtually impossible for the life forms to survive. The anthropogenic causes of global warming , on the other hand include several human activities which result in accumulation of various green house gases in the atmosphere These activities include pollution caused by Vehicles & industries, methane, release triggered by mining & cattle rearing, depletion of oxygen as a result of deforestation etc.

**Effects of Global Warming**

Global warming is basically resulting in a series of domino effect on the planet, where in on thing is leading a number of subsequent things and the chain of event continues. for instance, enormous amount of freshwater is stored on the planet in the form of glaciers. when the glaciere global warming , they cause flash floods in the vicinity, contribute to the sea level rise by flowing into the ocean and deplete the store of fresh water on the planet, thus leaving us devoid of water to drink. This is just one of the various en ampules of some of the most severe global warming effects on Earth.

Species extinction is yet another major effect of global warming on the planet, and the extinction of the Golden toad, endemic to costa Rica, is one of the best example of this phenomena. on one hand, the ocean water and makes it expand. As the water expands it tends to encroach upon the land, this coastal areas & thiny islands. Incessant heating of water also triggers devastating hurricanes in the coastal regions.

So We will be able to curb the problems of global warming to a significant intent, if not rout them totally.

# விஞ்ஞானக் கற்றலில் கட்டுருவாக்க வாதம்.

திருமதி சந்திக்கா நாகேந்திரன்.
கல்வியியலாளர்,
யாழ்ப்பாணம் தேசியகல்வியியற்கல்லூரி.

கல்விச் செயலொழுங்குகளின் மூலம் எதிர்பார்க்கப்படும் மாணவர்களின் சிறந்த அடைவு மட்டம் பயனுறுதி மிகு கற்றல் - கற்பித்தலிலேயே தங்கியுள்ளது எனலாம். "வாழ்வினில் சிறப்பான பொருத்தப்பாட்டினைப் பெற்று நல்வாழ்கையை வாழ கற்றலே ஒருவருக்கு உதவுகின்றது. கற்றல் எனப்படுவது படிப்படியாக நடத்தையில் பொருத்தப்பாட்டை அடைவ தாகும்". (ஸ்கின்னார்) "மனத்தின் சக்தியால் உந்தப்பட்டு தன்செயல்களால் ஒருவன் பெறும் மாற்றங்களையே கற்றல் என நாம் கூறுகின் றோம்". இம்மேற்கோள்களிலிருந்து கற்றல் என்பது வெறுமனே ஒரு விடயமாக கருத முடியாதுள்ளது. மாணவர்கள் தமது எதிர்கால வாழ்வுக்குத் தேவையான சகல தேர்ச்சிகளையும் இக்கற்றலின் மூலமே பெற்றுக்கொள்கின்றனர். இன்றைய 21ம் நூற்றாண்டில் யாவருக்கும் விஞ்ஞானம் என்ற சிந்தனையில் விஞ்ஞானக் கல்வியின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது. எனவே விஞ்ஞானக் கற்றலை வினைத்திறனாக்கி இன்றைய அறிவுப்பெருக்க உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய ஆற்றலை வழங்க வேண்டிய காத்திரமான பொறுப்பு இன்றைய விஞ்ஞான ஆசிரியர்களுக்குண்டு. இதன் பொருட்டு ஆசிரியர்கள் பல்வேறு கற்றல் கோட்டுபாடுகள் பற்றி அறிந்திருக்க வேண்டிய துடன் அவற்றைப் பொருத்தமான வேளைகளில் பிரயோகிக்கக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். இந்த வகையில் அண்மைக் காலங்களில் கற்றல் செயன்முறையை நன்கு மேம்படுத்தும் நோக்கில் அதிக கவனம் செலுத்தப் படும் கட்டுருவாக்க வாத சிந்தனையில், கட்டுரு வாக்க வாதமென்றால் என்ன? இத்தத்துவத்தி லிருந்து பெறப்பட்ட கல்விக் கருத்துக்கள் யாது கூறுகின்றன?. விஞ்ஞானம் கற்பித்தலில் இதன் செல்வாக்கு எவ்வாறு காணப்படுகின்றது என்பது பற்றி எடுத்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கட்டுருவாக்க வாதம்** (Constructivism)

கற்றல் தொடர்பான தத்துவார்த்த சிந்தனையாக கட்டுருவாக்க வாத சிந்தனை விளங்குகின்றது. கிரகித்தல் உளவியல் துறையி லிருந்து பெறப் பட்டது இக்கட்டுருவாக்கவாத தத்துவமாகும். Jeanpiage, levevygotsky, jerom Bruner, Howard Gard மற்றும் Nelson Good man ஆகியோரின் பணியினை அடிப்படையாகக் கொண்டதாகும்.

கட்டுருவாக்க வாதத்தின் பிரதான ஊகக் கருத்து யாதெனில் "அறிவு" என்பது யதார்த்தப் பொருளாக வெளியே இருப்பதில்லை அது கற்பவரால் உள்ளே செயலூக்கத்துடன் கட்டி யெழுப்பப்படுவதாகும். (Hendry sking 1994) கற்கின்ற சமூகத்தினரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவாக உண்மைகள் இருப்பதனால் இவ் உண்மைகள் நிலைத்த உண்மைகளாகின்றன. கடந்த கால அனுபவ அடிப்படையில் அமைந்த முன்னைய அறிவுடன் (Prior knowledge) புதிய நிலைமைகளை கற்பவர் சந்திக்கின்றார். இதனை முந்திய அறிவுடன் ஒன்றிணைப்பதன் மூலம் புதிய அறிவு கட்டியெழுப்பப்படுகின்றது.

கட்டுருவாக்கவாதமென்பது ஒரு கற்றல் கோட்பாடாக ஆரம்பித்த போதும் அதனது ஆட்சிப்பரப்பு படிப்படியாக விரிவடைந்து கற்றலின் ஒரு கோட்பாடாகவும் கல்வியின் ஒரு கோட்பாடாகவும் கருத்துக்களின் மூலத்தின் ஒரு கோட்பாடாகவும் தனிப்பட்ட அறிவு மற்றும் விஞ்ஞான அறிவின் ஒரு கோட்பாடாகவும் ஆகி உள்ளது. உண்மையில் கட்டுருவாக்கவாதமானது மகத்தான ஒன்றிணைந்த கோட்பாட்டின் வடிவமாக ஆகிவிட்டது. இந்த வகையில் கற்றலில் கட்டுருவாக்க வாதம் பெறுமதிமிக்கதாகவும் ஊக்குவிக்கப்படவேண்டியதாகவும் காணப் படுகின்றது. இக்கட்டுருவாக்கவாத தத்துவத் திலிருந்து பல கல்விக் கருத்துக்கள் பெறப் பட்டுள்ளன. இக் கருத்துக்கள் மாணவர் மையக் கல்வி தொடர்பாக கவனம் செலுத்துகின்றது. மாணவர் தொழிற்படா நிலையில் அறிவை விளங்கிக் கொள்வதைவிட உயிர்ப்புடன் தொழிற் பட்டு அறிவை உருவாக்கிக்கொள்வது முக்கிய மானது என இக்கொள்கை மூலம் எடுத்துக் காட்டப்படுகின்றது.

**கட்டுருவாக்க வாத தத்துவத்திலிருந்து பெறப்பட்ட கல்விக் கருத்துக்கள்**

- போதனையின் இலக்குகள் எண்ணக் கருவிருத்தியும் ஆழமான விளக்கமுமேயன்றி நடத்தைகளோ அல்லது திறன்களோ அல்ல (Fosnot C.T 1996)
- மாணவர்கள் மேற்கொள்ள வேண்டிய கட்டியெழுப்பும் செயற்பாடே கற்றலாகும். கல்வி புகட்டுபவரின் பணியாதெனில் அறிவைக் கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பங்களை மாணவர்களுக்கு வழங்குவதாகும். (Glaserfeld 1996).
- பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பொருத்தமான விளக்கத்தினை கட்டியெழுப்புவதற்கு மாணவர்களுக்கு உதவுவதற்காக, அர்த்தமுள்ள, போலியல்லாத செயற்பாடுகளை ஆசிரியர் வழங்கவேண்டும். (Wilson 1996)
- உள்ளடக்கம் (Content), கற்றல் செயற்பாடு ஆகிய இரண்டும் பிரதிபலிக்கப்படுவது மிகவும் முக்கியமானதாகும்.
- தமது விளக்கத்தினை மாணவர்கள் பரிசோதித்து, குறிப்பிட்ட விடயங்கள் பற்றிய விளக்கத்தை விரிவுபடுத்தும் வகையில் மாணவர்கள் கூட்டாக செயற்பட (Collaborative groups) அனுமதிக்க வேண்டும். (Savery & Deffy 1996).
- வகுப்பில் கற்பிக்கப்படுகின்ற புதிய தகவல்களுக்கும் மாணவர்களின் கடந்தகால எதிர்கால அனுபவங்களுக்கிடையிலான "தெளிவான இணைப்புகளை" ஆசிரியர்கள் நிறுவ வேண்டிய தேவையுள்ளது. ஆசிரியர்கள் முழுப் பாடத்திலும், முடிவு அலகுகளிலும், பாடத்திலுமுள்ள முக்கிய அம்சங்களை தொகுத்து, மீளாய்வு செய்து இணைத்துக்கொள்ள வேண்டும். (Ennis 1994).
- எண்ணக்கரு ரீதியான விளக்கம் என்பது கற்றல் நிலைமைகளின் போது மாணவர்கள் கொண்டுள்ள முந்திய அறிவினால் (Prior knowledge) செல்வாக்குப் பெறுகின்றது. இவ் முந்திய அறிவுக்கு முற்கிரகித்தல்கள் (Preconceptions) சாதுரியமற்ற கோட்டுபாடுகள் (Naïve Theories), மாற்றுச் சட்டமைப்புக்கள் (Alternative frame works) அல்லது தவறான எண்ணக் கருக்கள் (Misconceptions) எனப் பெயர்களிடப்பட்டுள்ளன. (Kinnpear 1994).
- கற்பவரின் முன்னைய சிந்தனையை எதிர்க்கும் வகையில் ஆசிரியர்கள் வினா எழுப்ப வேண்டும். (Alternatives frame come, preconceptions)

**கட்டுருவாக்க வாத கற்றற் கொள்கையும் விஞ்ஞானம் கற்பித்தலும்**


கட்டுவாக்கவாதத் தினை சிலர் விமர்சித்து வந்த போதும், (Suchting 1992, Uatthewa 1993, Phillips 1995, osbrone 1996) அதனைக் கையாள்வதில் சிலர் கவனத்தை வலியுறுத்துகின்ற போதும் (Millor 1989, Solomon 1993) ***1980*** ஆம் ஆண்டிலிருந்து விஞ்ஞானப் பாடவிதான சிந்தனை மீது மிகவும் துலக்கமான உளவியற் செல்வாகிகினைக் கொண்டிருப்பது விஞ்ஞானக் கற்றலில் கட்டுருவாக்கவாத நோக்கமாகும். (Fensham 1992, P 801) மேலும் இன்றைய நூற்றாண்டில் விஞ்ஞானம் கற்பித்தல் தொடர்பாகப் பெரிதும் பிரஸ்தாபிக்கப்படும் ஒரு கொள்கையாகவும் காணப் படுகின்றது.

இக்கற்றல் கொள்கையின்படி மாணவர்கள் உயிர்ப்புடன் தொழிற்பட்டு முந்திய அறிவுடன் புதிய நிலைமைகளை இணைத்து புதிய அறிவினைக் கட்டியெழுப்புகின்றனர். சுருங்கக் கூறுவதானால் எவ்வாறு என்ன கற்கிறோம் என்பதில், எவ்வாறு நாம் சிந்திக்கிறோம் என்பது செல்வாக்குச் செலுத்துவதாக உள்ளது. இந்த வகையில் விஞ்ஞானக் கற்றலில் கோலங்களை அவதானித்தல், எதிர்வுகூறுதல், பிரச்சினைகளை விடுவித்தல் தொடர்புகளை உருவாக்குதல் போன்ற உளச்செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கு கட்டுருவாக்கவாத கற்றல் அணுகு முறையில் (Constructivist Learning Approach) எண்ணக்கருவரைபட நுட்பமுறை ஒரு உத்தியாக்கப் பயன்படுகிறது. எண்ணக்கருப்படங்கள் (Concept maps) கட்டுருவாக்கவாத கற்றல் அமைப்பிலிருந்து தோன்றியவையே. இன்று விஞ்ஞானக் கற்றலில் இவற்றின் செல்வாக்கு மிகுந்து காணப்படுகின்றது.

மேலும் Roger Bybce என்பவரின் தலைமையிலான உயிரியல் விஞ்ஞான கலைத் திட்ட கற்கைக்குழுவினரால் கட்டுருவாக்கவாதத் திற்கான **5E** என்னும் கற்றல் மாதிரியுரு உருவாக்கப்பட்டுள்ளது.

வகுப்பறைக் கற்றலை மாணவரின் அதிகபங்கு பற்றலுடன் முன்னெடுத்துச் செல்லவும் தாமாகவே ஈடுபட்டு அனுபவங் களுக்கூடாக அறிவை கட்டியெழுப்பவும். அடைந்து கொண்ட விளக்க அறிவினை மற்றவர்கள்களுக்கு அளிக்கவம் வகைசெய்யும் 5E மாதிரி விஞ்ஞானக்கற்றலை உயிரோட்ட முள்ளதாக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும் கட்டுருவாக்கவாதத்தை முன்னெடுப்பதற்கு இவ் வழிமுறை மிகவும் பொருத்தமானதாகவும் வளமானதாகவும் அமையும்.

விஞ்ஞான விடயம் ஒன்றினைக் கற்பிப் பதற்கு கட்டுருவாக்க வாத அணுகுமுறையினை நோக்குவோம். நீர் கொண்ட தாழி ஒன்றினுள் நிறுத்தப்படும் எரியும் மெழுகுதிரி ஒன்றினை சாடி ஒன்றினால் கவிழ்த்து மூடப்படும் போது நடைபெறும் மாற்றங்களுக்கான காரணங் களுக்கான விஞ்ஞான அறிவை ஆசிரியர் ஒருவர் கட்டுருவாக்கவாத கோட்பாடுகளைக் கொண்டு எவ்வாறு கற்பிக்கலாம் என்பதை ஆராய்வோம்.




✱ படத்திற் காட்டியவாறு செயற்பாட்டினை மாணவர் தாமாக மேற்கொள்ள ஆசிரியர் வழிகாட்டி அவதானத்திற்கான காரணத்தை வினாவுதல்.


✱ ஏற்கனவே மாணவன் பெற்றுள்ள எரிதலுக்கு ஒட்சிசன் அவசியம் என்ற அறிவுடன் புதிய நிலைமையையும் இணைத்து மெழுகுதிரி அணைவதற்கும் நீர் மட்டம் உயருவதற்கும் காரணங்களாக, மொழுகுதிரி எரிவதற்கு குவளையினுள் இருந்த $O_2$ விரயமாகிய இடத்திற்கு நீர் உள்ளே புகுந்தது எனக் கூறுவான்.

✱ இவ்விடத்தில் ஆசிரியரின் பொருத்தமான தலையீட்டின் மூலம் இதற்கு மிகத் திருத்தமான காரணமான, மெழுகுதிரி எரியும் போது வளிவெப்பமேறுவதால் வளியின் ஒரு பகுதி அப்புறுப்படுத்தப்பட, உள்ளமுக்கம் வெளி அமுக்கத்தை விடக் குறைவதும் இதனால் நீர் உள்நோக்கித் தள்ளப்படுகின்றது என்பதனை, சொல்லிக்கொடுக்காது அவ் அறிவினைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை கட்டுரு வாக்கவாத ஆசிரியருக்குள்ளது.

✱ இதனை பின்வருமாறு மேற்கொள்ளலாம்.

✱ *3 அல்லது 4 மெழுகுதிரிகளை ஒரே தடவையில் கொழுத்தி அதே சாடியினால் மூடி அவதானிக் கவிடல்.*





✱ தற்போது செயற்பாடு *1* ஐவிட கூடுதலான நீர் உயர்ந்திருப்பதனை அவதானித்த மாணவனிடம் அதற்கான காரணத்திற்கான அறிவினைக் கட்டியெழுப்ப வேண்டும்.

✱ இதற்கு பின்வரும் செயற்பாடுகள் மூலம் கட்டியெழுப்ப முடியும்.

**செயற்பாடு 3**

✱ புகுத்தி (Syringer) இறுப்பர்குழாய், முகவை, நீர்த்தாழி ஆகியவற்றை மாணவருக்கு வழங்குதல்.

✱ முகவைய்யை நீரின் மீது தலைகீழாகக் கவிழ்த்து வைக்க வழிகாட்டுதல்.

✱ முகைவையினுள் நீர் புகவில்லை என்பதை அவர்கள் அவதானிப்பர்.

✱ புகுத்தியைப் பயன்படுத்தி நீரைப்புகுத்தத்தக்க வழிமுறையினை மேற்கொள்ள வழிகாட்டல் (புகுத்தி மூலம் வளியை எடுத்தல்)

இதன் மூலம் முகவையினுள்ள வளியை அப்புறப்படுத்தாது அதனுள் நீரைப் புகுத்த முடியாது என்ற அறிவை மாணவர் தமது அனுபவத்தினூடாக தாமாகவே கட்டியெழுப் புவர்.

✱ நீர் கொண்ட போத்தல் ஒன்றின் வாயில் அவித்த முட்டை ஒன்றினைப் புகுத்த வழிகாட்டல்.

- ★ போத்தலை வெப்பமேற்றுதல்.
- ★ முட்டை உள்ளே தள்ளப்படுவதை மாணவர் அவதானிப்பர்.

இதன் மூலம் போத்தலினுள் உள்ள வளி வெப்பமேறி வெளியேறும். அப்போது போத்தலினுள் அமுக்கம் குறைவடையும் புறத்தே வளி அமுக்கம் உயர்வானதாதலால் முட்டை போத்தலினுள் தள்ளப்படும். எனவே இவ்விரு செயற்பாடுகள் மூலம் மெழுகுதிரி அணைவதற்கும் நீர்மட்டம் உயருவதற்குமான தொடர்பிற்கான திருத்தமான காரணத்தினை மாணவர்கள் அனுபவ ரீதியாக செயற்பாடுகளுக் கூடாக பெற்ற முடிவினையும், முன்னைய அறிவையும் ஒன்றினைப் பதனூடாக கட்டியெழுப்புவர். இவ்வாறாக விஞ்ஞானக் கற்றலை வினைத்திறனாக்கும் கட்டுருவாக்கவாத அணுகுமுறையானது பெறுமதி மிக ஒன்றாகவும் ஊக்குவிக்கப்பட வேண்டியதாகவும் காணப்படுகின்ற போதிலும் விஞ்ஞான பாட உள்ளடக்கங்களை முழுமையாக இவ் அணுகுமுறையினூடு கற்பிப்பது என்பது ஒரு சர்ச்சைக்குரிய விடயமாகவே காணப்படுகின்றது. இதனை பிரபல்ய கட்டுருவாக்க வாதியான Richard white பின்வருமாறு கூறுகிறார். "விஞ்ஞான எண்ணக்கருக்களை இம்முயிலே கற்பிப்பது தொடர்பான ஆய்வானது பாட உள்ளடக்கங்களை கற்பதில் ஆர்வத்தை தூண்டி விட்ட போதும் வெவ்வேறு விடயங்களை எவ்வாறு கற்பிப்பது என்ற தெளிவான ஆலோசனையை இது வழங்கவில்லை. (Fensham, Gunstone and white 1994, P, 225) எனவே விஞ்ஞான உள்ளடக்கங்கள் முழுவதையும் இம்முறையிலே கற்பிப்பது என்பது எவ்வளவு தூரத்திற்கு வினைத்திறனாக அமையும் என்பது கேள்விக்குறியதாகும்.

மேலும் விஞ்ஞான உள்ளடக்கத்தை கற்பிப்பதால் கட்டுவருவாக்கவாத அணுகுமுறைக்கு ஏற்படுகின்ற கஷ்டம், வெறுமனே நடைமுறை ரீதியிலான ஒன்றல்ல இக்கஷ்டமானது கட்டுருவாக்கவாத அணுகுமுறைக்கான ஓர் அடிப்படைக் கோட்பாட்டுப் பிரச்சினையை அம்பலப்படுத்துகின்றது. அறிவினை சொல்லிக் கொக்க முடியாது அது தானகவே கட்டியெழுப்பப்பட வேண்டிய ஒரு விடயமாயின் சிக்கலான எண்ணக்கருக்கள் தொடர்பான அறிவினைப் பெற மிகத்திறமைசாலிகளுக்கே (Tshe best minds) பல வருடங்கள் எடுப்பின் மாணவர் அதனை எவ்வாறு பெறமுடியும்? மற்றும் அருவ நிலை (abstract) எண்ணக்கருக்களான ஆர்முடுகல், விசை, பிறப்புரிமைப்பொருள் போன்றனவும் நேரடி அனுபவத்திலிருந்து விலக்கப்பட்ட அணுக்கட்டமைப்பு, கலச்செயற்பாடுகள், உடுத்தொகுதி செயற்பாடுகள் போன்ற விடயங்களும், முன்னைய கிரகித்தலுடன் தொடர்பு அற்றவைகளான வைரஸ் பற்றிய கருத்துக்கள், பிறபொருள் பதார்த்தங்கள் (antibodies), கூர்ப்பு, மின்காந்த கதிர்வீச்சு ஆகியவை பற்றிய கருத்துக்களும் மற்றும் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட விடயங்கள் உட்பட அன்றாடஅனுபவங்கள், எதிர்பார்ப்புகட்கு முரணாண விடயங்களை இவ் கட்டுருவாக்க வாத அணுகுமுறையினூடு எவ்வாறு கற்பிக்கலாம் என்பதும் கேள்விக்குறியே ஆகும். அறிவை புகட்டுவது என்பது வெறுமனே எண்ணக் கருக்களை கற்பிப்பதாக அமையாது வழிமுறைகளையும் முறையியல்களையும், வழிமுறையின் கோட்பாடுகளையும் கொண்டதாக அமைய வேண்டும் என்பதால் மாணவர்களுக்கு சில விடயங்களை ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்காமல் இவை யாவற்றையும் எவ்வாறு அவர்களிடத்தே கட்டியெழுப்ப முடியும் என்பது சர்ச்சைக்குரிய விடயமாகவே தென்படுகிறது. இதனை லீட்ஸ் பல்கலைக்கழக குழுவினர் பின்வருமாறு கூறுகின்றனர். விஞ்ஞானத்தின் அறிவு முறைகளை சென்றடையும் வாய்ப்பு கற்பவர்களுக்கு வழங்கப்படுமானால் அறிவைக் கட்டியெழுப்பும் செயற்பாடானது தனிப்பட்ட அனுபவ விசாரணைக்கு அப்பாற் செல்ல வேண்டும் என்பதோடு பௌதீக அனுபவங்களுக்கு மட்டுமல்லாது மரபுவழி விஞ்ஞானத்தின் எண்ணக்கருக்கள் மற்றும் மாதிரிகளையும் சென்றடையும் வாய்ப்பு கற்பவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். (Drivereta1 1994, P 6) மேற்கூறிய கருத்தைக் தெரிவித்த பின்பு லீட்ஸ் பல்கலைக்கழகக் குழுவினர் மாதிரிகளை (Models) தாமாகவே கட்டியமைப்பதற்கும், பிரயோகிக்கக் கூடிய அவற்றின் ஆட்சிப் பரப்பினை மதிப்பீடு செய்வதற்கும் அவ் ஆட்சிப்பரப்பினுள் அவற்றைப் பயன்படுத்துவதற்கும் கற்பவர்கட்கு உதவுவது ஆசிரியர்களுக்கான சவாலாக உள்ளதாகவும் குறிப்பிடுகின்றனர். ஆயினும்

அழுத்த சக்தி விகாரம், ஒளித்தொகுப்பு, வலுவளவு ஆகிய கருத்துக்களை கற்பவர்கள் ஏன் கட்டியெழுப்ப வேண்டும்? இகருத்துக்களை மாணவர்கட்கு விளங்கப்படுத்தி அவர்கள் விளங்கக்கூடிய வகையில் வகை செய்தால் என்ன? என்ற வினாக்கள் உங்கள் முன்தோன்றலாம் விஞ்ஞான ஆசிரியர் என்ற வகையில் கட்டுரு வாக்கவாத கோட்பாடுகளை மீறாது இக் கருத்துக்களை கட்டியெழுப்புவதற்கு கற்பவர் களுக்கு உதவுவது என்பது கட்டுருவாக்க வாத ஆசிரியர்களுக்கான சவாலாக இருக்கும். இதனை லீட்ஸ் பல்கலைக்கழகக் குழுவினர் இனங்கண்டு பின்வருமாறு கூறுகின்றனர். மரபுவழி விஞ்ஞானக் கருத்துக்களை மாணவர்களுக்கு கற்பிக்கும் போது பொருத்தமான அனுபவச் சான்றுகளை வழங்கு வதன் மூலமாகவும் கோட்பாட்டுக்கருத்துகள் மற்றும் மரபுரிமைகளை மாணவர்களுக்கு கிடைக்கக்கூடியதாக செய்வதன் மூலமும் கட்டுரு வாக்கவாத அணுமுறையில் கற்றலை மேற் கொள்ளலாம். ஆனால் கோட்பாட்டுக் கருத்துக் கள் மற்றும் மரபுகளை மாணவர்களுக்கு விளங்கப் படுத்தாமல் ஆசிரியர்கள் அவர்களுக்கு அவற்றை எவ்வாறு கிடைக்கக் கூடியதாக செய்யமுடியும், மேலும் மாணவர்களுக்கு அவற்றின் தொடர்பு களை விளக்கி கற்பிக்காது எவ்வாறு கோட் பாட்டுக் கருத்துக்கள் மற்றும் மரபுகளை அவர் களுக்கு கிடைக்கச் செய்ய முடியும் என்பன இதன் போது எழும் வினாக்களாகும். ஆயினும் கருத்துக் களையும் கோட்பாடுகளையும் விசாரணை செய்யும் செயற்பாடானது மாணவர் களை சிந்திக்க வைத்து அவை குறித்து வினா எழுப்ப வைக்கும். இந்த நிலைப்பாடானது என்ன கற்கிறோம் என்பதில் எவ்வாறு சிந்திக்கின்றோம். என்ற நிலைமை யினைத் தோற்றுவிப்பதனூடாக அறிவினைக் கட்டியெழுப்ப வழி வகுக்கும் எனலாம்.

## முடிவுரை

புதிய விடயங்கள், கருத்துக்கள் பற்றி நாம் சோதித்தறிய ஆரம்பிப்போமாயின் குறித்த விடயம் பற்றி ஏற்கனவே நாம் விளங்கியிருப்ப வற்றை பொருத்திப்பார்க்கும் வகையில் முன்னைய கண்டுபிடிப்புகளின் தேடல்களின் மூலம் நாம் பெற்றஅறிவு, அனுபவத்தன்மைகளை ஒருங் கிணைக்க வேண்டியுள்ளது. இதன் மூலம் புதிய விடயங்களை எம்மால் இலகுவாக விளங்கிக் கொள்ளக்கூடியதாக அமையும். மேலும் தாமதமாகவே உயிரோட்டமுள்ள வகையில் செயற்பாடுகளினூடாக அறிவைக் கட்டியெழுப்பு வதனால் நீண்டு நிலைத்து நிலைத்து நிற்கக்கூடிய கற்றலுக்கும் வழி வகிக்கும் எனவே கட்டுரு வாக்கவாத கற்றல் அணுகுமுறையினை விஞ்ஞான பாடக்கற்பித்தலில் பிரயோகித்து அதனை சாத்தியப்படுத்துவது முற்று முழுதாக விஞ்ஞான ஆசிரியர்களின் கரங்களிலேயே தங்கியுள்ளது. விஞ்ஞானம் கற்பித்தலுக்கு கட்டுருவாக்கவாதம் தான் தனி ஒரு அணுகுமுறையல்ல இதனையும் ஒரு அணுகு முறையாக பயன்படுத்தி விஞ்ஞானக் கற்றலை உயிரோட்டமுள்ளதாக்க வேண்டிய காத்திரமான பொறுப்பு இன்றைய விஞ்ஞான ஆசிரியர்களுக்குண்டு.

## உசாத்துணை நூல்கள்


1. Driver –R, Asoko – 4, Leach – J, Mortimer – E& sct – P; (1994), Constructing scientific knowledge in the classroom, Educational Researcher.
2. Ennis, C.D (1994), knowledge and belief underlying, curricular expertise.
3. Fensham. P.J, Gun stone – R, & white R (Eds) (1994) The content & teaching and learning, Flamer press, London.
4. Fosnot C.T (1996) Constructivism A Psychologcal Theory, perspectives, and practices, Newyork, N.Y; Teachers college press.
5. Hendry, G.D Sking – R.C (1994) on Theory of learning and knowledge, Educational implication of advances in neuroscience.
6. Mathews M.R (1993), old wine in new Bottles, A problem with constructivist Epistemology, In H. Alexander (ED) Philosophy of Education, society urabns.
7. Millar – Rcig89), constructive criticisms, Interactional journal of sc.Edu
8. Osborne J.(1996), Beyond constructivism, Integrate Edu.
9. Phillips.D.C (1995) the Good, the Bad and the ugly. The many suces of constructivsm Educational Researcher.

# Time management

**M. Santhuru**
$2^{nd}$ year, English Course.

**A**s we are the prospective teachers of the National College of Education. we should use the time systematically.

I would like to be able to manage my time better but I never seem to find the time this commonly heard light hearted comment points to a common problem for most of us; how to find the time to achieve everything we would like in our lives. It is a particular problem at work because the time we spent there is formally defined. Poor time management leaves us feeling frustrated at the end of the working day. Tasks are not completed and we have to carry them for forward, or even worse. We have to work late to get things done and struggling to keep up standards when we are already tired only produces stress and poor quality work.

Although it is true that some people are short of time because they simply have too much to do. Most of us would benefit from thinking about what we are doing with our time at the moment and how we would like to change this. Time is a valuable resource because it is non renewable; to be an effective manager you need to learn how to manage your time well.

Poor time managers are often so busy that they simply can't pause to stop and think about how they are actually spading their time and whether or not what they are doing is actually getting them anywhere. If you let things drift your activities the way you spend your time day in day out may actually be standing in the way of achieving your goals and objectives.

There are two sides of better time management - things we wish to do and things we wish to avoid doing

we might wish to

- use time at work more effectively
- get more things done in the available time
- balance the time we spend at work with more time for ourselves and our families
- feet more relaxed and in control of our time

Things we with to avoid might include wasting time

- forgetting to do important things.
- rushing to meet deadlines.
- being late for meetings
- feeling stressed and out of control

The best time managers are those who have a developed sense of different kinds of time. The time that they must plan, control and use in the most efficient way possible and the time during which they can be free from the pressure of time

Are you in control of your time? or it controlling you? Are you able to change your approach to time? any way we are teachers. We can become good teachers when we keep up time. So you start to plan, How are you going to get more control aver your time. It is important to identify which areas are in most urgent need of attention.

Give a model that how to spend our time usefully for a week.

| | | |
|---|---|---|
| Paid work | - | 50 hours |
| Study | - | 34 hours |
| Leisure | - | 5 hours |
| Sleep | - | 56 hours |
| Friends and your | - | 10 hours |
| un paid work | - | 8 hours |
| Main tanence | - | 5 hours |

## Speacial Education - 2009



## Music - 2009



## Christianity - 2009



## English - 2009



Science Tamil Medium - 2008



Maths Tamil Medium - 2008



Science English Medium - 2008



Maths English Medium - 2008



# மனப்பாங்குகளை விருத்தி செய்வதனூடாக நன்னடத்தைப் பண்புகளை உருவாக்குதல்


செல்வி இந்திரா செல்வநாயகம்
கல்வியியலாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி


இன்று பலராலும் பரவலாக எங்கும் பேசப்பட்டு வருகின்ற முக்கியமான ஒருவிடயமாக மனப்பாங்கு உள்ளது. அனைவரும் கூட்டமாகவும், கூர்மையாகவும் சிந்தித்து ஆக்கபூர்வமாக செயற்படவேண்டிய தேவையையும் அவசியத்தையும் உணர்த்தி நிற்கின்றது. அறிவாளிகளையும் திறமைசாலிகளையும் உருவாக்கிய கல்வி ஒப்பீட்டளவில் பரந்து விரிந்த இதயம் கொண்ட மனிதர்களை உருவாக்க தவறிவிடுகின்றது என்ற குற்றச்சாட்டுக் களும் சுட்டிக் காட்டப்படுவதும் தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது கொலை, களவு, கோஸ்டி மோதல், துஷ் பிரயோகங்கள் போன்ற சமூகச் சீரழிவுகளே மலிந்து காணப்படுகின்றன. இவை எங்கிருந்து தோற்றம் பெறுகின்றதோ அங்கிருந்தே படிப்படியாக களைந்து சீரமைத்து வழியமைத்து உணர்வுபூர்வமான மாற்றத்தை உருவாக்க தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கும் அவசியமும் அவசரமும் ஏற்பட்டுள்ளது. எனவே மானிடம் நேசிக்கும் இதயங்களை உருவாக்குவதனால் மனப்பாங்கு மாற்றமும் விருத்தியும் அடைதல் வேண்டும்.

ஊக்கல் விசை பழக்கவழக்கங்கள் சூழலின் செல்வாக்கு மற்றும் பரம்பரை இயல்புகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய உள்ளார்ந்த எழுச்சிசார் அமைப்பு மனப்பாங்கு எனக்குறிப்பிடலாம். இதனை "தேஸ்டன்" என்பர். ஒருவர் காட்டும் துலங்கல் எனக் குறிப்பிட்டு உள்ளார். மேலும் இதனை உள்ளத்தின் வெளிப்படும்போது விருப்பமானவை நேர்த்தியாகவும் வெறுப்பானவை எதிர்திசையாகவும் தொழிற்படுவதற்கு அமைவாக நேர்மனப்பாங்கு எதிர்மனப்பாங்கு என இருவகையாக வகைப் படுத்திச் கொள்ள முடிகின்றது. மனப்பாங்கு என்பது மிகவும் உறுதியானது அதனை மாற்றியமைப்பது என்பது இலகுவான காரியமல்ல

குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியை நன்னோக்கோடும் எதிர்மறை நோக்கோடும் பார்க்க இயலும் அதிகமாக பலனளிக்கவல்லது நன்னோர்க்காகும். எதிர்மறையான கண்ணோட்டம் ஒரு நபரில் பெரும்பாலும் தீங்கை விளைவிக்கவல்லது எவ்வாறாயினும் நன்மையான பக்கத்தையே பயிற்றுவித்தல் வேண்டும்.

### நேர் எதிர் சிந்தனைகள்

நேர் சிந்தனையுடன் பார்த்தல் என்பது எதிர்பார்ப்புக்களோடும் உற்சாகத்தோடும் ஆக்கபூர்வமாகவும் நோக்குதல் ஆகும். வேறு வகையாக கூறுவதாயின் ஒன்றினது பிரகாசமான பக்கத்தை நோக்குதல் எனலாம். எதிர்மறை நோக்கு என்பது எதிர்பார்ப்புக்களற்ற விரக்தியோடு நோக்குதல் ஆகும். அதாவது ஒன்றினது இருளான பக்கத்தை பார்த்தல் ஆகும். உதாரண மாக ஒரு நிகழ்ச்சியை இரண்டு விதங்களில் நோக்கலாம். இதனை நேராக பார்த்தால்

- ☆ குறித்த பாட அலகை விரைவாக கற்று முடிக்கலாம்
- ☆ ஆசிரியரது தரிசனம் மகிழ்ச்சியாக அமையும்
- ☆ தமது சந்தேகங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்க வழிகாட்டுவர்

இதே நிகழ்ச்சியினை எதிர்மறையாக பார்த்தால்

- ☆ ஒய்வு கிடையாது
- ☆ மகிழ்ச்சியாக சகபாடிகளுடன் உறவாட முடியாது
- ☆ நாம் போட்ட திட்டத்தை நிறைவேற்ற முடியாது

ஆகவே நாம் ஒன்றைப்பற்றி நோக்குகின்ற சிந்தனைப்படியே அவரும் நடந்து கொள்வார் அவ்வாறு நடக்க ஊக்கவிக்கப்படுவார் நாங்கள் ஒருவரை நம்பும்போது அவரும் எங்கள் மீது நம்பிக்கை கொள்ள ஊக்குவிக்கப்படுவார் ஒருவர் மீது நாம் இரக்கம் கொள்ளும் போது அந்நபரும் எம்மில் இரக்கம் காட்டுவார் நாம் ஒருவரை கௌரவப்படுத்தும் போது அவரும் எம்மை கௌரவப்படுத்துவார்

### நேர் சிந்தனைகளின் விளைவுகள்

- ☆ எதிர்பார்ப்புக்கள் உண்டாதல்
- ☆ செயலாற்றல் தோன்றல்
- ☆ புத்துணர்ச்சி ஏற்படல்

- ✯ உற்சாகம் உருவாதல்
- ✯ சமூகத்தில் தலைமைத்துவம், கிடைத்தல்
- ✯ அனைவராலும் நேசிக்கப்படல் போன்ற விளைவுகள் ஏற்படுகின்றன.

**எதிர் சிந்தனையின் விளைவுகள்**

- ✯ மனவெறுப்பு
- ✯ உற்சாகமிழப்பு
- ✯ தோல்விமனப்பான்மை
- ✯ கோபம்
- ✯ பயம்
- ✯ பொறாமை
- ✯ மனவேதனை/விரக்தி
- ✯ ஏனையோரால் புறக்கணிப்படல்
- ✯ தூய்மையான நட்புக்கிடையாமை போன்ற விளைவுகள் ஏற்படுகின்றன

குழந்தைகளை சமுதாய விருட்சமாக மாற்றியமைப்பதில் பங்குகொள்ளும் பெற்றோர் கள் ஆசிரியர்கள் சமய நிறுவனங்கள் ஏனைய தொடர்பு சாதனங்கள் ஊடகங்கள் பண்பாடு விழுமியங்கள் அறநெறிகள் கருத்துக்கள் முன்மாதிரிகள் மீது கவனம் செலுத்தி பழமையை நோக்கி பாரம்பரிய வாழ்வியல் கோலங்களின் நல்ல விடயங்களை சீரமைத்தல் மூலம் பண்பட்ட பண்புகளையும் விருத்தியையும் ஏற்படுத்த முடியும்.

**பண்பாடும் மனப்பாங்கும்**

கணிதவியலில் பூச்சியம் (Zero) என்னும் கருத்தாக்கம் எவ்வளவு முதன்மையானதோ அவ்வாறே மனிதவாழ்விலும் பண்பாடு என்னும் கருத்து மிகவும் முக்கியமானது பண்பாட்டினை வரையறுப்பது இலகுவானதல்ல எனினும் பலரது கருத்துக்களின் அடிப்படையில் அனைவராலும் பகிர்ந்து கொள்ளக்கூடியவை என்ற பொதுக் கருத்தை எட்ட முடிகின்றது பண்பாடு குறிப்பிட்ட விழுமியங்களுக்கு முக்கியத்துவம் தருகின்றது உதாரணமாக தூய்மைக்கு முதலிடம் தருகின்றன. சில பண்பாடுகள் நேர்மை அமைதி சமத்துவம் கடவுள் வழிபாடு போன்ற விழுமியங் களில் ஏதோ ஒன்றிற்கு முக்கியத்துவம் தருகின்றன.

யப்பானியருக்கு அழகு என்பது இன்றி அமையாத விழுமியம் ஸ்பெயின் நாட்டவருக்கு ஆண்களின் வீரத்தன்மை முக்கியமான விழுமியம் இந்தியாவில் ஆன்மீக உணர்வு இன்றியமைகாத விழுமியமாக உள்ளது. ஆகவே பண்பாடு நாட்டிற்கு நாடு சமூகத்திற்கு சமூகம் வேறுபடலாம். ஆனால் கட்டுக் கோப்பான வாழ்வியலுக்கு வழிகாட்டு வாதாக பண்பாடு அமைகின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது

**நடத்தை மனப்பாங்கு மாற்றத்தில் நெறிமுறைகளின் பங்களிப்பு**

மனிதர்களின் நடத்தை முறைகளையும் செயற்பாடுகளையும் முறைப்படுத்தக்கூடிய விதிகளே நெறிமுறைகள் (Norms) எனப்படும் இவை விழுமியங்களிலிருந்து மாறுபட்டவை விழுமியங்கள் பெரும்பாலும் கருத்தியல் (Ideology) வடிவம் பெற்றவை நெறிமுறைகளோ இவற்றைச் செய்யக்கூடாது இவை சரி இவை பிழை இவை நல்லது இவை கெட்டவை என உறுதிபடக்கூடும் அல்லது நெறிப்படுத்தும் தன்மை பெற்றவை

தமிழர் வாழ்வில் பெரியோர் ஆசிரியர் வரும்போது இளையவர்கள் கால்மேல் கால் போட்டுக் கொண்டு இருக்கக் கூடாது. இறை வழிபாட்டிற்கு குளித்துத்தான் செல்ல வேண்டும். வீதிகளில் பச்சை விளக்கு எரிந்த பின்பே பயனத்தை தொடங்க வேண்டும். என்ற எண்ணற்ற நெறிமுறைகள் உள்ளன. பண்பாட்டிற்கு பண்பாடு நெறிமுறை மாறவும் கூடும். மக்கள் இயல்பாக இணக்கமாக செயல்படவும் தனிமனிதர்கள் ஒழுங்காக செயல்படவும் நெறிமுறைகளே உத்தரவாதம் தருகின்றன. கணிதத்தில் எவ்வாறு வாய்ப்பாடுகளையும் சூத்திரங்களையும் பற்றி நின்று தீர்வுகாண வேண்டியுள்ளதோ அவ்வாறே மக்கள் வாழ்விலும் நெறிமுறைகள் என்னும் வாய்ப்பாட்டை பற்றி நிற்கவேண்டும். அவை காலங்காலமாய் மக்களால் உறுதியாக பின்பற்றப் படுகின்றன. இதனை சமுதாயத்தை இயக்கும் கட்டுப்பாடுகள் என்றும் கூறலாம். தனிமனிதனா லும் சரி குழுவினராலும் சரி அவரவர் இப்படித் தான் செயல்பட வேண்டும். இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் போன்ற எதிர்பார்ப்புக்களை நெறிமுறைகள் குறிப்பிடுகின்றன. அவை சமுதாயத்தின் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் என ஒரு மதிப்புத் தரத்தை (Standard) வரையறுத்து அதன் படி உறுப்பினர்கள் செயல்பட வேண்டுமென பணிக்கின்றது அல்லது எதிர்பார்க்கின்றது. ஆகவே நெறிமுறைகளின் பங்கு ஒரு சமுதாயத்தின் கட்டுக் கோப்பான நடத்தை முறைக்கு வழிகாட்டு முறையாக அமைவதுடன் உறுப்பினர்களிடையே

மனப்பாங்கு விருத்தியினையும் ஏற்படுத்து கின்றது. நெறிமுறை மனித வாழ்விற்கு அரனாக விளங்குவதால் அவை மீறப்படாது பாதுகாத்து பேண குடும்பம் பாடசாலை ஏனையோகள் நேர்மனப்பாங்குடன் முன்வருதல் அவசியம்.

**பண்பாட்டை மீறும் செயல்கள்**

இன்றைய சூழ்நிலையில் உகந்த பண் பாட்டை மீறும் செயல்கள் பல அதிகளவில் நிகழ்கின்றன. அவ்வாறான செயல்கள் சில பின்வருமாறு,

- சிறு வயதிலேயே போதைவஸ்துப் பாவனை சூதாடுதல் போன்ற பொதுவிலக்குகளை (Prohibitions) மீறி அவற்றைச் செய்தல்.
- தன்னலமற்ற பொதுநல வாழ்வு என்ற இலக்கை மீறி பிறரை துன்புறுத்தி சுயநலத்தையும் ஆதாயத்தையும் தேடி அலைதல்.
- குடும்ப அமைப்பிற்குள் கட்டுப்படாமல் பரத்தமை வாழ்வில் ஈடுபடல்.
- தகுதி அடிப்படையில் பணி நியமனம் செய்யும் மரபை மீறி இன உண ...ு தனிச்சலுகை மூலம் அதைச் செய்தல்.
- வகுப்பறைகளிலும் தேர்வுகளிலும் கடைப் பிடிக்க வேண்டிய நெறிமுளைகளை மீறி ஆசிரியர்களை எள்ளி நகையாகுதல், நூல்களை பார்த்து எழுதுதல்.
- புனிதம் பேணப்பட வேண்டிய இடங்களில் கூச்சலிடல், பொதுச் சொத்துக்களை நாச மாக்குதல்.
- சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்று கூறுவோர் அவர்களின் சுயநலனுக்காக அவற்றை மீறுதல்.
- பழி கூறுதல் இம்சைப்படுத்தல் ஏனையோரை துன்புறுத்தல்களில் ஈடுபடுதல்.
- தேசியகொடி ஏற்றப்படும் போதும் கீதம் இசைக்கப்படும் போதும் மரியாதை செலுத்த தவறுதல்.

**மனப்பாங்குகளை விருத்தி செய்து கொள்ளத்தக்க காரணிகளும் வழிமுறைகளும்**

ஒவ்வொரு நபரும் தமது இலக்கை வெற்றி கரமாக்கி தன்னை சூழ உள்ளோரையும் மகிழ் வித்து வாழ வேண்டுமானால் அவரிடம் நேர் மனப்பாங்கு செயற்பட்டால் மாத்திரமே சாத்திய மாகும். எனவே எதிர் மனப்பாங்கினை நேர்மனப் பாங்காகவும் நேர்மனப்பாங்கை தொடர்ந்து நிலைநிறுத்தி வைக்கவும் வேண்டி யுள்ளது. இந்த மாற்றங்களிலும் வளர்ச்சியிலும் குடும்பம், பாடசாலை, சமயங்கள் ஏனைய முன்மாதிரிகள் தொடர்பு சாதனங்கள் ஈடுபாட்டுடனும் உணர்வு பூர்வமாகவும் செயற் படுதல் அவர்களின் பிரதான பணியாகும்.

**குடும்பம்**

குடும்பம் என்னும் நிறுவனம் மிகவும் இன்றியமையாத அலகாகச் செயற்படுகின்றது. குழந்தை வளர்ப்பின் போது குடும்பம் ஆற்றுப் பணியைப் பொறுத்தே குழந்தையின் உடல் உளம் அமையும் என மாக்கிரட் மீடு கூறு கின்றார். குடும்பத்தின் முக்கிய பணி குடும்ப உறுப்பினர் களை அன்புடன் நடத்துவதாகும். குறிப்பாக இளங்குழந்தைகளிடம் அன்பு பேணுதல் அவர்களின் வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் குழந்தைகள் மீது செலுத்தும் அன்பு, பாசம், பரிவு அரவணைப்பு, கவனிப்பு முதலியன குழந்தை களுக்கு பாதுகாப்பான உற்சாகமான வாழ்வதற் கான சூழலை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. இதனால் பிள்ளையின் உளவளர்ச்சி உகந்த நிலையில் அமைவதால் சமுதாயம் போற்றிக் காக்கும் பண்புகளை மதிக்கும் நல்ல உறுப்பினராக உருவாகும் வாய்ப்பு ஏற்படுகின்றது. குடும்பத்தை தவிர வேறு எந்தவொரு இடத்திலும் நிஜமான அன்பு, பாசம், பரிவு, கவனிப்பு போன்றன கிடைப் பது அரிது மாறாக தாய் தந்தை இருவரையும் அல்லது ஒருவரை இழந்தோரும் உகப்பான குடும்பசூழல் அமையப் பெறாத பிள்ளைகள் ஒருவகையில் துரதிஸ்ட சாலிகள் என்றே கூற வேண்டும்.

அடுத்து எந்நேரமும் பிள்ளைகளை குறைகூறுதல் திட்டுதல், நீர் படிக்கமாட்டாய் முன்னேறமாட்டாய் உம்மால் ஒன்றும் முடியாது போன்ற எதிர்மறையான வார்த்தைப் பிரயோகங் கள் பிள்ளை யதார்த்தமான வாழ்வியல் கோலங் களை சுயமாக உணர தடை செய்கின்றது. வேறு சில பெற்றோர்கள் பாசமிகுதியால் பிள்ளையின்

எல்லா கடமை பொறுப்புக்களை தாமே செய்தல் இதனால் பிள்ளை எதிர்காலத்தில் குடும்பத்தி லிருந்து பெற வேண்டிய முன் மாதிரிகள் பலவற்றை இழக்கின்றன. பிறருக்கு உதவுகின்ற மனப்பாங்கு இல்லாது போவதுடன் எதிர் நடத்தைகள் தோற்றம் பெறுகின்றன. இதனால் பிள்ளையிடம் மனப்பாங்கு விருத்தி குன்று கின்றது. எனவே குடும்ப சிறந்த நற் பண்புள்ள பிள்ளையை உருவாக்குதல் முக்கியபங்கு பெறு கின்றது.

**பாடசாலை**

குழந்தை ஐந்து வயது பூர்த்தியடைந்ததும் பாடசாலை செல்கின்றது. குறிப்பிட்ட நபர் வாழும் கலாசார சூழலே அவரது நடத்தையை பெரும்பாலும் உருவாக்குகின்றது. இந்த வகையில் ஒரு குறித்த நபரின் மனப்பாங்கு விருத்தியில் பாடசாலையின் பங்களிப்பு மகத் தானது பாடசாலைக்கல்வியின் ஊடாக நற்பண்பு களை வளர்க்கும் சந்தர்ப்பங்கள்.

- ☆ ஆரம்ப வகுப்புக்களில் உள்ள பஞ்சதந்திரக் கதைகள்.
- ☆ சரித்திரக்கதைகள் வரலாறுகள், மாண்புமிக்க தலைவர்களின் அர்ப்பணித்த சேவைகள்.
- ☆ பாடல்களும் மக்கள் இலச்சியங்களும்
- ☆ போட்டிகரமான கற்றலுக்கு பதிலாக கூட்டாக கற்கும் சந்தர்ப்பம்
- ☆ ஆசிரியரின் முன்மாதிரி
- ☆ சாதகமான உளப்பாங்குகளை மேம்படுத்து வதற்கான ஏனைய செயற்பாடுகள்
- ☆ வன்செயல்கள், முரண்பாடுகள், துன்புறுத்தல் கள் போன்ற தீங்கிழைக்கும் கருத்துக்களை தவிர்த்துக்கொள்ளவும் மாறாக மகிழ்ச்சி கரமான சமாதான வாழ்வு வாழ்வதற்கான வாய்ப்புகளை இனம்கண்டு ஊக்குவித்தல்
- ☆ ஜீவகாருண்யம் தொடர்பான சமயக்கதைகளை மாணவரிடம் பாத்திரமேற்று நடிக்கச்செய்தல்.
- ☆ தீங்குவிளைவிக்காத பிராணிகளிடத்தில் அன்பும் பரிவும் காட்ட உதவுதல்
- ☆ பிறசமய விழாக்களில் பங்கு பற்றச்செய்தல்
- ☆ சமயசடங்குகளின் பழக்க வழக்க அர்த்தத்தை புரிந்து ஈடுபடச்செய்தல்
- ☆ இறைபக்தியை மேலோங்கச்செய்தல்
- ☆ எச்சரித்தல் குறைகூறுதல் உடல் உள தண்டனை அனுதாபம் இவை அனைத்தும் எதிரான நுட்பங்கள் ஆகும் முடிந்தளவு நேரான நுட்பங்களை பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

**சமயம்**

மானிட வாழ்க்கையில் சமய நம்பிக்கை ஆவியுலக வழிபாட்டில் தொடங்கி ஒரு கடவுள் வழிபாடுவரை பலநிலைகளாகப்படி மலர்ச்சி யடைந்து வந்துள்ளது சமயநம்பிக்கை ஆனது மக்கள் வாழ்வில் மிகவும் வேரூன்றி உள்ளது. அத்துடன் மனங்களை அமைதிப் படுத்துவதிலும் சாந்தப்படுத்துவதிலும் நேர்மனப்பாங்கை உருவாக்குவதிலும் பெரும் பணியாற்றுகின்றது இதற்கு பின்வரும் கருத்துக்களை ஆதாரமாகக் காட்டலாம்.

1. எதிர்காலம் எப்படி அமையுமோ என அறிய முடியாத நிலையில் தோன்றும் பயம் கலந்த எதிர்பார்ப்பு உணர்வுடன் தேற்றிக்கொண்டு அதன் மூலம் ஒருவகையான நம்பிக்கையைப் பெற்று வாழ்க்கையை நடத்துவதில் அனைத்து சமயங்களும் பெரும் பங்குவகிக்கின்றது.

2. சமுதாயம் சுட்டிக்காட்டும் நெறிமுறை களையும் (Norms) விழுமியங்களையும் (Values) முறையாக பின்பற்றி நடப்பதால் மட்டுமே அச்சமுதாயம் நிலைபெறமுடியும் என்றும் அவற்றினை கண்டிப்புடன் ஏற்றுச் செயல்பட வைப்பதிலும் சமயம் பெரும் பங்காற்று கின்றது. பின்பற்றுவோர் சிறப்படைகின்றனர் என்பதை வலியுறுத்துகிறது.

3. பெற்றோருக்கும் ஆசானுக்கும் பெரியோர் களுக்கும் மதிப்பளிக்க வேண்டும் என்ற நெறிமுறை வீட்டிலும் பாடசாலைகளிலும் கற்பிக்கப்படுகின்றது. இவர்களை மதிப்பவன் இறைவனை மதிப்பவனுக்குச்சமன் என்ற கருத்து அமைவதால் ஒவ்வொருவரையும் சிந்திக்க வலுவூட்டுகின்றன எனச்சமயங்களும் இதனையே போற்றுகின்றன.

4. திருமணம் என்ற எல்லைக்குவெளியே பாலுறவு கொள்வதை ஒழுக்கக்கேடு எனவும் சமயம் வலியுறுத்துகின்றன. இவ்வாறு

சமுதாயத்தின் கட்டுக்கோப்பை நிலைப் படுத்தும் நெறிமுறைகளும் விழுமியங்களும் சமயக் கூறுகளுடன் தொடர்பு பெறுவதால் அவை வலிமையும் ஆற்றலையும் பெற்றுச் செயல்படுகின்றன.

5. நன்மை செய்வோருக்கு நன்மை விளையும் நன்மை செய்வோர் சிக்கலை எதிர்கொள்ளும் போது ஆற்றல்மூலம் காப்பாற்றப்படுவர் இறப்புக்கு பின் வாழ்வுண்டு அதில் அவரவர் செய்யும் செயலுக்கு ஏற்ப மறு உலகில் ஏற்படும் வாழ்வு இறைவனால் அமைத்துக் கொடுக்கப் படும். தீமை செய்வோர் தொடர்ந்து இன்னல்களையும் பாவங்களையும் சந்தித்து இறப்பிற்கு பிந்திய வாழ்விலும் அவற்றைச் சந்திக்க வேண்டிவரும் என்பன போன்ற எண்ணக் கருத்துக்களை சமயம் வலியுறுத்தி நிற்கின்றது. எனவே இதன் மூலம் துர்நடத்தை நிலைக்கு தள்ளாமல் நன்னிலையிலே சிந்திக்க வகை செய்கின்றது.

6. இக்கட்டான சூழலை எதிர்கொள்ளும் போது அதாவது போர்க்கா ங்கள் உள்நாட்டு கலவரங்கள் குழுச்சண்டைகள் தொழில் புரட்சி கடுமையான வறட்சி ஏனைய இயற்கை அனர்த்தங்கள் தனிமனித விரக்தி போன்ற எண்ணற்ற நிகழ்வுகள் தலைதூக்கும்போது சமூகக்கட்டுக் கோப்பு சிதைவுறும் (Social Aisorganization) நிலைக்குத் தள்ளப்படும். இதனால் சமுதாய உறுதிப்பாடு (social Solidarity) தளர்ந்து கலகலத்துவிடும் இவ்வாறான சமுதாய மாற்றத்திற்கு பல நிறுவனங்களும் மாறுதல்களுக்கு இலக்கா கின்றன. இவற்றுள் மொழியும் சமயமும் மட்டுமே விரைவில் மாற்றத்திற்கு உட்படுத்தப் படுவதில்லை. இதற்கு காரணம் மனிதவாழ் வியலில் இவை இரண்டும் இரு கண்களைப் போன்று கருதப்படுவதாகும். இதனூடாகவே உலகவாழ்வு முழுவதும் உணரப்படுகின்றது.

7. சமயத்தின் மிகப்பெரிய ஆற்றல்களாகச் சடங்குகள் வழிபாட்டு மரபுகள் திகழ்கின்றன. இவை சமூகத்தை ஒன்றிணைந்து கட்டுக் கோப்பாக செயற்படவைப்பதில் பெரும் பணி செய்கிறது. எல்லாச் சமயங்களிலும் தனிமனிதர்களாக ஈடுபடல் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து மேற்கொள்ளும் சடங்குகளும் வழிபாட்டு முறைகளும் இடம் பெற்றுள்ளன. இவை சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களையும் ஒன்றுசேர்த்து அவர்களுக் கிடையே கூட்டுணர்வை வளுப்படுத்து கின்றன.

8. தனிமனித வாழ்வின் கட்டுக் கோப்பிற்கு சமயம் துணைபுரிகிறது. தனிமனிதர்களுக்கு ஏற்படும் இன்பம் துன்பம் நல்லவை கெட்டவை பொருள் இழப்பு செல்வவளமும் அவதூறும் செல்வாக்கும் அழிவும் வளமும் பாவமும் வீடுபேறும் தோல்வியும் வெற்றியும் போன்ற அனைத்தும் இறைவனால் கொடுக்கப் பட்டவையே என்ற மக்களின் நம்பிக்கையை போதிக்கிறது. இதனால் அனைவருக்கும் தம் வாழ்வின் அனைத்து எதிர்பார்ப்புகளையும் ஈட்டுவதற்கு வழிகாட்டுமாறு இறைவனை வேண்டுகின்றனர். அத்துடன் இவற்றை மீறுவது சமயக்கட்டுப்பாட்டை மீறுவதாகும் என்ற அச்ச உணர்வை மக்களுக்கு போதிக் கிறது. இந்த வகையில் முறைகளைச் சுட்டிக் காட்டுவதும் அதனைப் பின்பற்ற அறிவுறுத்து வதும் சமயத்தின் பெரும்பணியாக விளங்கு கின்றது.

9. ஒவ்வொருவரும் தம் வாழ்வில் எதிர்கொள்ளும் உடலியல் உளவியல் வாழ்வியல் சிக்கல் களையும் மாற்றங்களையும் தாங்கிக் கொள்ளும் திறனை இறைநம்பிக்கை கொடுக்கிறது. உதாரணமாக பிறப்பு திருமணம், இறப்பு, நோய் வாய்ப்பட்டு மீளுதல் போன்ற உளவியல் வாழ்வியல் மாற்றங்களும் தோல்வியைச் சந்தித்தல் மற்றவர்களால் ஏமாற்றப்படுதல் பழிவாங்கப் படுதல் திடிரென இழப்பை சந்தித்தல் தனிமனிதனின் உளவியலை மிகுதியாகப் பாதிக்கின்றன. இந்த பாதிப்புக்களிலிருந்து மீளுவதற்கு சமய வழிபாட்டு முறைகள் நம்பிக்கைகள் துணை நிற்பதுடன் மன வெழுச்சிகளிலிருந்து மீண்டும் அமைதியைத் தேடிக்கொள்ளும் மனப்பக்குவத்தை வளர்க்க உதவுகின்றது.

10. மனிதன் ஏன்? எதற்காக? எப்படி? வாழ வேண்டும் என்பதற்கு சமயமே விளக்கம் கூறுகின்றது. நடைமுறை வாழ்வில் கூட மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட செயல்களுக்கு விளக்கம் காண்பதில் சமயமே துணை

நிற்கின்றது. உண்மை எது? பொய் எது? என்பவற்றை அராய்வதில் ஆர்வம் காட்டாமல் அதனை புனிதத்தன்மையானது என்ற அளவு கோளாகக் கொள்ள வேண்டிய கட்டாயத் திற்கு மக்கள் தள்ளப்படுகின்றனர். இதனை மக்கள் பயன்படுத்தி தம் நடத்தை முறைகளை யும் சமுதாய அமைப்பில் கட்டுப்பட்டு செயல்படும் தன்மையையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியவர்களாகக் ஆக்கப் படுகின்றர்.

எனவே சமயம் மக்களின் வாழ்வை நெறிப்படுத்தி மனப்பாங்கை விருத்தி செய்யும் ஓர் உயிரோட்டமுள்ள சமுதாய நிறுவனமாக செயறலாற்றுகிறது என்பதில் ஐயம் இல்லை
இவை தவிர அறநூல் கருத்துக்கள் இலக்கியங்கள் சமூக நன்மையின் பொருட்டு உழைத்த உத்தமர்கள் வரலாறுகள் போன்றவற்றை அழுத்தம் கொடுத்து கற்பித்தல் மூலமும் ஊடகங்களும் இதனை முன்னுரிமைப்படுத்தல் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தி பரந்த மனப் பாங்குடன் வாழவழியமைத்துக் கொடுத்தல் வேண்டும்

"இம்சைக்கு இம்சையால் பதிலளிப்பதை விட இம்சைக்கு அஹிம்சையால் அளிக்கும் பதில் எதிராளியில் நேரடியாக்கப்படும்

- மகாத்மா காந்தி

"எதிரி உம்மில் எதிர்பார்ப்பதை பூர்த்தி செய்யத்தக்கதாக ஒருபோதும் நடந்து கொள்ளா தீர்

- நெப்போலியன்

**உசாத்துணை நூல்கள்**

01. நளினி.ந (2002) வளரும் உள்ளம் மாணவர் உளவியல்
02. பக்தவச்கல பாரதி (1999) பண்பாட்டு மானிடவியல்
03. கலாநிதி விமலாகிருஷ்ணபிள்ளை (2001) வழிகாட்டலுடன் ஆலோசனையும்
04. பாலசூரிய.ஏ.எஸ் (1995) பிள்ளைகளுக்குச் சமாதானத்தைக் கற்பித்தல்
05. ஆறுதல் (2010) உளசமூக இதழ் - 001

# விழிப்புணர்வு

காலச்சக்கரத்தின் வேகத்தாலோ
கர்ம வினையின் பயனாலோ
பிறந்திட்டோம் மாற்று ஆற்றலுள்ளோராய்

பிந்த எம் மனதில் உறுதியாக உரமுண்டு
நிறைவான மனமுண்டு
இலகுவான எண்ணங்களுமுண்டு

நாங்களும் கல்வியில் சாதிக்கவில்லையா?
விளையாட்டில் வீரர்கள் ஆகவில்லையா?
இயற்கையை இரசித்து வர்ணமாக்கவில்லையா?

எங்கள் வேலைகளும் செய்து மற்றோர்க்கு
ஏணியாகவும் ஏத்தனிக்கின்றோம்
ஏன் புரிந்து கொள்கிறீர்களில்லை?

நாம் மட்டும் தாருங்கள் என்று கேட்டா
வாங்கினோம் – இறைவனின் படைப்பை
திருப்தியுடன் ஏற்றுட்டோம்

திருப்தி தான் நிறைவான வாழ்வென்ற
பெரும் புதிரை கண்டிட்டோம்.

எல்லா நிறைகளையும் வைத்துக் கொண்ட
நீங்கள் முயற்சியென்ற ஒன்றையும்
மறந்து வீண்வேலையுடன் பொழுது கழித்து
எம்மை எள்ளி நகையாடுவதால்
எம்மை துகள் அளவும் தொட்டிடவும்
முடியாது – துகளை நொருக்கிடவும்
முடியாது – ஆம் விழிப்புணர்வு வரும்
வரை மாற்று ஆற்றலுள்ளோர் மட்டும்
மகிழ்வுடன் மலர்ந்திடுவர் மலரவன் அருளால் என்றும்

முு. பிரியஹாசினி
2ம் வருடம், விசேட கல்வி

# நாடகமும் அரங்கியலும் ஆசிரியர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள்

பா. பகீர்பரன்
09/JNCOE/ DRT /T /M99, JNCOE.

இயலாகி இசையாகி இவை இயந்து நாடகமாய் இலங்குகின்ற இன்பத்தமிழ் என்று தமிழுக்கு சிறப்பு சொல்லப்படுகின்றது. கூடவே நாடகத்தமிழ் சிறப்பொன்றையும் உணரக் கூடியதாக உள்ளது. அச்சிறப்பு இயற்றமிழும் இசைத்தமிழும் இணைந்து நிற்கின்ற சிறப்பாகும்.

இச் சிறப்புடைய நாடகத்தமிழ் ஏனைய வற்றை விட மக்களால் விரும்பப் படுவதற்கான காரணங்களை யாவருமறிவர். அதனால் உண்மை யிலே நாடகம் சார்ந்த செயற்பாடுகளே அதிகமாக இடம் பெறவேண்டும். இவ் நாடகம் சார்ந்த செயற்பாடுகளை மேற்கொள்கின்ற ஆசிரியர்கள் பல்வேறு சவால்களை எதிர் கொண்டு கற்பித்தலை மேற்கொள்கின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மற்றும் சமூகத்தில் உயர்ந்த நபர்களாக காணப் படுகின்ற ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை களை பின்வருமாறு குறிப்பிடலாம்.

பாடசாலைகளில் நாடகமும் அரங்கியலும் எனும் பாடத்திற்கு வகுப்பறைகள் காணப் படாமை. சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய பாடநெறிகள் தத்தமக்கென வகுப் பறைகளை கொண்டமைந்து காணப்படுகின்றது ஆனால் அனேகமான பாடசாலைகளில் மர நிழலிலும் மண்டபங்களிலுமே மாணவர்களுக்கு கற்பிக்கப் படுகிறது. இத்தகைய பிரச்சினைகளை எதிர் நோக்கி பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலே தமது கடமைகளை செவ்வனவே செய்கின்றனர். மேலும் சில ஆசிரியர்கள் தமது பாடத்திற்கு மாணவர்களை இணைத்துக் கொள்கின்றமை.

(உ+ம்) சித்திரம், சங்கீதம், நடனம் இவ்வாறாக இணைப்பதனால் நாடகம் அரங்கியல் பாடத்திற்கு மாணவர்கள் குறைவாக காணப் படுகின்றனர். சில பாடசாலைகளில் மாணவர் தொகை குறைவாக காணப்படுவதனால் நவீன கற்பித்தல் முறையான தேர்ச்சி மையக் கல்வியினை மேற்கொள்ளமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். நாடகமும் அரங்கியலும் ஆசிரியர்கள் ஏனைய ஆசிரியர்களால் மதிக்கப் படாமை. அதாவது ஏனைய ஆசிரியர்கள் இவர் நாடக ஆசிரியர் தானே இவருக்கு ஆட்டமும், பாட்டும் தானே தெரியும் என்றும் வேறு என்ன விடயம் தெரியப்போகுது என்ற கருத்துக்கணிப்பு காணப்படுகின்றமை

சில பாடசாலைகளில் நாடகமும் அரங்கிய லும் பாடத்தை கற்பிப்பதற்கு நிரந்தர நியமனமற்ற ஆசிரியர்கள் கடமை புரிகின்றமை அதாவது நன்கு பயிற்றப்பட்டு பயிற்சிகள் பெற்றுச் செல்கின்ற ஆசிரியர்கள் பாடசாலைக்கு செல்லும் போது நியமனம் பெறாத ஆசிரியரின் கட்டுப்பாட்டுக்குக் கீழ் இயங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படு கின்றனர். இதனாலும் ஆசிரியர்கள் பிரச்சினைக்கு உள்ளாக்கப்படு கின்றனர்.

யாழ் மாவட்டத்திலெ பெரும்பாலான பாடசாலைகளில் நாடகமும் அரங்கியலும் எனும் பாடம் அறிமுகப்படுத்தப்படவில்லை. இதனால் பல்வேறு நாடக ஆசிரியர்கள் பாடசாலைகளில் வேறு பாடம் கற்பிக்கும் நிலை காணப் படுகின்றது.
(உ+ம்) தொழில்நுட்பவியல், தமிழ், புவியியல்

நாடகம் அரங்கியலானது ஏனைய பாடங்கள் போலன்று செய்முறையுடனும், காட்சிப்படுத்தலுடனும் மேற்கொள்ள வேண்டும். அதாவது நவீன சாதனங்கள் பாடசாலைகளில் காணப்படாமையினால் கற்பிப்பதில் சிரமத் தன்மை காணப்படுகின்றது.
(உ+ம்) T.V, MULTEMEDIA, O.H.P

அதாவது பாடத்திற்கு ஏற்ற படங்களை காட்சிப்படுத்தி கற்பித்தலை இலகுவாகச் செய்ய இத்தகைய சாதனம் இல்லாததால் கற்பித்தலை மேற்கொள்ள முடியாத நிலை நாடகமும் அரங்கி யலும் ஆசிரியர்களுக்கு ஏற்படுகின்றது.

"மனிதரோடு மனிதரை இணைக்கும் மனித இதயத்தோடு மனிதரை பேசவைக்கும் மனிதரை மனிதர் மதிக்கும் நாடகங்கள் எங்கிருப் பினும் எப்படியானவையாயினும் நாம் அதனை ஏற்க வேண்டும்" நாளைய சமுதாயதூண்களை உருவாக்குகின்ற ஆசிரியர்கள் பல்வேறு இடர் பாடுகளுக்கு மத்தியில் தமது கற்பித்தலை மேற்க் கொள்கின்றனர். இவ் ஆசிரியர்கள் சிறந்த கற்பித்தலை மேற்கொள்ள மேற் கூறப்பட்ட பிரச்சினைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

"உண்னை அறிந்து கொள்ள பழைய கொள்கை மற்றவர்களை அறிந்து கொள் புதிய கொள்கை"

எனவே நாடகமும் அரங்கியலும் ஆசிரியர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு ஏனைய ஆசிரியர் போல் சிறப்பாக துலங்க வழிவகை செய்வோம்.

□□□

# 'டெங்கே' அடங்கு!

வெடிகுண்டும் கடற் கோளும்
வெருட்டிய காலம்
வெகுதூரம் சென்றாலும்
இன்று கொடிய விஷமியாய்
உயிரை உறுஞ்சும்
கடுகுக் கொசுவே!
காலனின் சிசுவே!
உன் – அவல வருகைக்கு – இங்கு
அழைப்பிதழ் அனுப்பியது யார்?
அடியே 'ஏடிஸ்'
வடக்கின் வசந்தத்தை
முடக்க வந்த
அடங்காக் குடம்பியே,
எங்கள்
குடும்ப நலத்தை
குலைக்க வந்த குறுகுக் கூனியே,
விழிக்குத் தெரியா
வழியே நுழைந்து
விஷத்தைக் கொட்டி
விசயத்தை முடிக்கும்
பகற் கொள்ளைக் காரி.....!
தேங்கி நிற்கும் தூய நீரில்
ஓங்கி நீ பரவுகிறாயோ!
தயவின்றிக் கொல்லும்
உயிர் கொல்லியே
இனி உன் தாக்குதலை
நாங்கள் தூக்கிலிடுவோம்!
தேக்க நீர் நிலைகள்
தெருக்குப்பை கூழங்கள்
அருவருக்கும் இடம் யாவும்
அடியோடகற்றுவோம்!
டெங்குப் பிசாசே நீ
தங்குமிடங்களின் சங்கறுப்போம்!
தடங்கல் தரும் உன்
இடங்கள் யாவும்
அடக்கம் செய்வோம் – உன்
முடுக்கம் செய்வோம்.

மானியூர் ரட்ணேஸ்

□□□

# கட்டுருவாக்கவாதம் கற்பித்தல் கற்றல் பிரயோகங்கள்

திருமதி சுகந்தினி அன்ரனி தவச்செல்வம்
கல்வியியலாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி.

கட்டுருவாக்கவாதம் கற்பித்தல் கற்றலுக்கான ஓர் அணுகுமுறையாகும். கற்றல் பற்றிய தத்துவமாகிய கட்டுருவாதம் மாணவர்கள் புதுக்கருத்துக்கள் பற்றிய விளக்கத்தை தாமாகவே கட்டியெழுப்புதல் வேண்டுமெனவும் விடயங்களை விளங்கிக் கொள்ள தனது முன்னைய அனுபவத்தையும் புதிய தேடல்கள் மூலமாக முதல்நிலை அறிவையும் பயன்படுத்துகின்றனர் எனவும் விளக்குகின்றது. அதாவது மாணவர் தாம் கற்றுக் கொள்கின்ற புதிய விடயங்களை தாம் ஏலவே கற்ற விடயங்களுடன் தொடர்படுத்தியே கற்கின்றனர். மாணவரின் தற்போதைய அறிவு, நம்பிக்கைகள் திறன்களைப் பயன்படுத்தும் ஒரு கற்றல் உத்தியே கட்டுருவாக்கவாதம் இந்த அணுகுமுறையில் மாணவர் தாம் ஏற்கனவே கற்றுக்கொண்ட கற்றலையும் புதிய விளக்கத்தையும் தொகுத்துக் கொள்கின்றனர்.

ஒரு பாடத்தில் மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதில் பல்வேறு கற்பித்தல் கற்றல் முறைகள் மிகமுக்கிய பங்கினை வகிக்கின்றன அதிகநேர விரிவுரைகளை கொண்ட பாடத்தில் மாணவர் தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டி இருந்தால் அவர்கள் உயர்மட்ட உள்ளார்ந்த ஆர்வத்தை கொண்டிருக்க வேண்டும். கடந்த சில வருடங்களில் பல்வேறுபட்ட கற்றல் கற்பித்தல் முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு பரிசோதிக்கப் பட்டுள்ளன. இவற்றின் நோக்கம் திறன்களை விருத்தி செய்வதாகும். கற்பித்தல் முறைகளை மாற்றம் செய்வது இலகுவானதல்ல என்பது அறியப் பட்டுள்ளது. இந்நிலையில் ஆசிரியர் மைய அணுகுமுறையிருந்து மாணவர்மைய கற்பித்தல் கற்றல் அணுகுமுறையானது மாணவரின் உச்சநிலை செயலாற்றலையும் மாணவர்களில் கூடுதல் கவனம் செலுத்துகின்றது.

**கட்டுருவாக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும்**

மானிட நடத்தைக்கு அடிப்படையாக அமைவது கற்றல், மனிதப்பழக்கவழக்கங்கள் இலட்சியங்கள், நம்பிக்கைகள், மனப்பாங்குகள் மொழிப் பிரயோகங்கள், புலக்காட்சி, ஆளுமைக் கோலங்கள் போன்ற அனைத்திலும் செல்வாக்கு செலுத்துவது கற்றல் ஆகும். உளவியலாளர்கள் கற்றல் நிகழ்வுகளை உற்று நோக்கி பரிசோதனைக் குட்படுத்தி கற்றல் தொடர்பான கருத்துக்களை முன்வைத்ததன் விளைவாக கற்றல் கோட்பாடுகள் தோற்றம் பெற்றன.

முதன்முதலாக 1900ம் ஆண்டுகளில் நடத்தைவாதக் கோட்பாடுகள் தோற்றம் பெற்றன. இககோட்பாடுகளை முன்வைத்தவர்களில் முதன்மை பெறுபவர்களாக E.L தோண்டைக் I.P பவ்வோ, J.B வாட்சன் E.R குத்ரி, டு.ஹல், B.R ஸ்கின்னர் ஆகியோர் விளங்குகின்றனர்.

நடத்தைவாதிகள் குறிப்பிடுவதுபோன்று கற்றல் ஒரு பொறிமுறைத் தொழிற்பாடு அன்று எனவும், உளத்தொழிபாடுகளுடன் தொடர்புபட்டது என்பதை வலியுறுத்தி அறிகைசார் கற்றற் கோட்பாடுகள் 1950களில் முன்வைக்கப்பட்டன. இக்கோட்பாட்டாளர்களில் E.C ரோல்மன், கொல்கா, கோலர், லேதிமர் கேட்லூவின் போன்றவர்கள் முக்கியமானவர்கள் இதனைத் தொடர்ந்து 1970 காலப்பகுதிகளில் கட்டுருவாதம் முதன்மைபெறத் தொடங்கியது. இதன் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்த உளவியலாளர்களாக பின்வருவோர் முக்கியம் பெறுகின்றனர்.

**கட்டுருவாக்கம் பற்றிய கோட்பாடுகளில் செல்வாக்கு செலுத்திய சில உளவியலாளர்கள்**

- ★ Giambattista Vico - (1668 - 1744)
- ★ Immanuel Kant - (1724 - 1804)
- ★ John Dewey - (1859 - 1952)
- ★ Maria Montessori - (1870 - 1952)
- ★ Wladyslaw Streeminski - (1893 - 1952)
- ★ Jean Piaget - (1896 - 1980)
- ★ Lev Vygotsky - (1896 - 1934)
- ★ Heinz von Foerster - (1911 - 2002)
- ★ Jerome Bruner - (1915)
- ★ Herbert Simon - (1916 - 2001)
- ★ Paul Watzlawick - (1921 - 2007)
- ★ Ernst von Glasersfeld - (1917)
- ★ Edgar Morin - (1921)

கட்டுருவாக்கவாதம் 1970களில் முதன்மை பெற்ற போதிலும் வரலாற்றுரீதியாக நோக்குகின்ற போது ஆரம்பகால உளவியலாளர் களிடம் இச்சிந்தனை காணப்பட்டமை புலனாகின்றது உளவியலில் கட்டுருவாதம் நியாயித்தலை அடிப் படையாகக் கொண்ட கட்டுருவாதம் (காரண காரிய அடிப்படையில் அறிவைக் கட்டுமானப் செய்தல்) தீவிர கட்டுருவாதம் பயிற்சி கருத்தேற் றத்துடன் தொடர்புடையது என கண்டுள்ளது.

### கற்பித்தல் கற்றல் உபாயங்கள்

கற்பித்தற் செயற்பாடனது வினைத்திறனும் விளைதிறனும் உடையதாக அமைதல் அவசியம். இதற்காக கற்பித்தல் உபாயங்கள் கற்றல் இலக்குகளை அடைவதற்குரிய உபாயங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். கற்பித்தற் செயற்பாடு நன்கு திட்டமிடப் படுவதற்கு கலைத்திட்டம் மாணவரின் முன் அனுபவங்களும் அறிவும் கற்பவர்களின் ஆர்வம், மாணவரின் கற்றல்பாங்கு, கற்றல் வளங்கள், அவர்களுடைய விருத்தி நிலை போன்ற விடயங்கள் கவனத்திற் கொள்ளப்படவேண்டிய தாகும். கற்பித்தல் கற்றல் பற்றிய ஐந்து உபாயங் கள் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது.

### நேரடிப் போதனை

ஆசிரியர் நெறிப்படுத்தும் உபாயம் என அழைக்கப்படும் இம்முறையானது மாணவர் களின் திறன்களை படிப்படியாக விருத்தி செய்வதற்கும் மாணவர்களை ஆர்வத்துடன் செயற்பாட்டில் ஈடுபடுத்தி அறிவைக் கட்டுரு வாக்குவதிலும் சிறந்து விளங்குகிறது. ஆசிரியர்கள் பொதுவாக தகவல்களை வழங்குவதற்கு பிரயோகிக்கும் விளைதிறனுள்ள ஒருமுறையாகும்.

### நேரில் போதனை

மாணவர்மைய உபாயம் என கருதப்படு கின்ற இப்போதனையானது அவதானித்தல், கண்டறிதல், அனுமானித்தல், கருதுகோள்களை உருவாக்குதல் என்பவற்றில் மாணவர்களை ஆர்வத்துடன் தூண்டுவதை ஊக்குவிக்கிறது. மாற்றுவழிகளைத் தேடவும் பிரச்சினைகளைத் தீர்க்கவும் மாணவர்களின் ஆக்கத்திறன், ஆளிடைத்திறனை வளர்க்கவும் இன்றியமையாத உபாயமாகும்.

### அனுபவம்சார் கற்றல் உபாயம்

மாணவர்மையச் செயற்பாடு அடிப் படையில் அமையும் கற்றலானது மாணவர்கள் தமது தனிப்பட்ட சொந்த அனுபவங்களை திறனாய்வு செய்து கற்றல் விடயம் தொடர்பாக மீள்நோக்கு, பிரதிபலிப்பு, மற்றும் பிரயோகித்தல் என்ற வகையில் அனுபவம்சார் கற்றலானது கற்பவர்கள் ஒரு செயற்பாட்டில் பங்குபற்றலுடன் கற்றலையும் முன்னனுபவங்களுடன் கூடிய செயற் பாட்டினையும் பின்னோக்கிப் பார்த்து திறனாய்வு செய்து அவ்வாறான பகுப்பாய்விலிருந்து பயனுள்ள அக்காட்சியைப் பெறுவதுடன் புதிய சந்தர்ப்பங்களில் செயற்படுவதற்கு கற்றலை பயன்படுத்தும் போதுதான் அனுபவம் சார் கற்றல் நிகழ்வதாக Pfeiffer and Jones (1979) தெரிவித் துள்ளனார்.

### சுதந்திரமான கற்கை உபாயம்

இக்கற்கை உபாயத்தின் மூலம் மாணவர்கள் குறிப்பிட்ட விடயங்களை சுயமாகக் செயற் படுத்தவும் கற்றலுக்குத் தேவையான திட்ட மிடலைச் செய்யவும் ஊக்குவிக்கப்படுவதுடன் சுந்திரமான கற்றல் குவிமையம் ஆசிரியர் வழிகாட்டலில் அல்லது மேற்பார்வையின் கீழ் மாணவர்களால் நடைமுறைப் படுத்தப்படு கின்றது. இக்கற்கையானது இன்னொரு மாணவனோடு பங்குதாரர்களாகக் கற்றல் அல்லது கூட்டாகக் கற்கும் குழுவில் ஒரு பகுதியாக இருக்கலாம். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு உதவி செய்ய விரும்பும் தன்மையை கொண்டிருத்தல் வேண்டும். கற்பவர்கள் தகவல்களைப் பெறு வதற்கும் கையாள்வதற்கும் உள்ள ஆற்றலை விருத்தி செய்ய முன்வரவேண்டும்.

### இடைத்தாக்கத்துடன் கூடிய போதனை உபாயம்

ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் மிகவும் இன்றியமையாததாக அமைகின்ற அவதானித்தல், செவிமடுத்தல், ஆளிடைத்தொடர்பு, திறன்கள், ஆற்றல்கள் என்பன இந்த உபாயத்தை செயல் படுத்த தேவைப்படுகின்றன. Seamen and Fellenz - 1989 ஆகியோர் கலந்துரையாடலும் பகிர்தலும் ஆசிரியர், மாண்வர்களின் சிந்தனைகள், உணர்வு கள், அனுபவங்கள், கருத்துக்களுக்கு பிரதி பலித்தல் அறிவு என்பனவற்றிக்கான வாய்ப் புக்களை வழங்குவதோடு மேலான சிந்தனைக்கும் உணர்வுகளுக்குமான மாற்றுவழி முறைகளைப் பிறப்பிப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்குகின்றது

என்கின்றனர். இடைத்தாக்கத்துடன் கூடிய போதனை வடிவமானது குழுவாக்கத்திற்கும் இடைத்தாக்க முறைகளுக்கும் இடமளிக்கின்றது.

**கற்பித்தல் கற்றல் முறையியல்கள்**

கற்பித்தல் கற்றல் உபாயங்கள் கற்பித்தல் கற்றல் முறைகள் தொடர்பான செயற்பாட்டுத் திட்டங்களை ஆசிரியர்கள் மேற்கொள்ள உதவுகின்றன. மிகப்பொருத்தமான கற்பித்தல் உபாயம் எதுவென்பதை ஆசிரியர் தீர்மானித்ததன் பின்னர் பயன்படுத்த வேண்டிய முறையை நிர்ணயிக்கலாம்.

**கற்பித்தல் கற்றல் முறைகள்**

**நேரடிப் போதனை**
(விரிவுரை, போதனைக்கலை, வினாக்கேட்டல், பரிசோதனை பயிற்சி, செய்து காட்டல்)

**நேரில் போதனை**
(விசாரணை, பிரச்சனை தீர்த்தல், எண்ணக்கரு படமாக்கல், விடய ஆய்வு, பிரதிபலிப்பு கலந்துரையாடல்)

**இடைத்தாக்கத்துடன் கூடிய போதனை**
(விவாதம், பாத்திரமேற்று நடித்தல், கூட்டாகக் கற்றல், கலந்துரையாடல்)

**அனுபவம்சார் கற்றல்**
(வெளிக்களப்பயணம், பரிசோதனை, விளையாட்டு,கற்றல் மீள்நோக்கு, பிரயோகித்தல், பாவனை)

**சுதந்திரமான கற்றல்**
(அறிக்கை, ஆராய்ச்சி, கட்டுரை, குழுவேலை, ஒப்படைக்கப்பட்ட வேலை)

**கட்டுருவாத கற்பித்தல் – கற்றல் முறையியல்கள்**

கட்டுருவாக்கத்தை அடிப்படையாகக் கொண்ட சில உதாரணங்கள் வருமாறு

**1. கற்பித்தல் சார்ந்த "சாரம் கட்டல்"** (Instructional Scaffolding)

கற்றல் நடைபெறுவதற்கு ஆசிரியர்கள் மாணவர் மற்றும் சகபாடிகள் உதவுவதை இச்சொல் (Scaffolding) உருவாக்கமாகக் கொண்டு உள்ளது Wood Bruner Ross (1976) ஆகியோரது ஆய்வுகளிலிருந்து இச்சொல் தோற்றம் பெற்றது.

"சாரம் கட்டுதல்" செயற்பாட்டில் மாணவனால் ஆரம்பத்தில் சுயமாக புரிந்து கொள்ளமுடியாத எண்ணக்கருவை படிப்படியாக புரிந்து கொள்ள ஆசிரியர் உதவுகிறார். மாணவன் எதுவித உதவியுமில்லாமல் செய்ய முயற்சிக்கப் படுவதுடன் ஆரம்பத்தில் ஏற்படும் தவறுகளும் ஆசிரியரின் பின்னூட்டலுடன் தனது இலக்கு களை அடைய ஊக்குவிக்கப்படுகிறான். மாணவன் தனது செயற்பாடுகளை சுயமாக செய்யத் தொடங்கும்போது படிப்படியாக உதவிகளை ஆசிரியர் நிறுத்திக் கொள்கிறார். "தாம் ஏற்கனவே" அறிந்த விடயத்திலிருந்து அறியாதவற்றை அறிவதற்கு "சாரம் கட்டல்" ஒரு பாலமாக உதவுகிறது இது ஒரு ஊக்கியாக அமையும் (Benson, 1997)

**2. பிரச்சினையை தளமாகக் கொண்ட கற்பித்தல்**

மாணவன் விரிவுரை கலந்துரையாடல் மற்றும் வழிகாட்டப்பட்ட கண்டுபிடித்தல்கள் மூலம் எண்ணக்கருக்களையும் செயனமுறை களையும் கற்றுக்கொள்கின்றான். இத்தகைய அறிவினை நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட சூழ் நிலைக்கு அல்லது பிரச்சினைக்கு அவன் பயன் படுத்துகின்றான். (Torpal Sage, 2002)

மாணவர் மையம் கொண்ட பிரச்சினையை தளமாகக் கொண்ட கற்றலானது மாணவர் கொண்டுள்ள அறிவை உண்மையான வாழ்க்கை நிலைமைகளில் பிரயோகிப்பதற்கு உதவுகிறது. அறிவுரீதியாக முதிர்ச்சி அடையும் மாணவர்கள் சுயநம்பிக்கை, சாதனை ஆவல் பகுப்பாய்வுத் திறன்கள், குழுவேலைத்திறன்கள் விருத்தி யடைந்து பிரச்சினைகளைத்தீர்க்கும் தன்னம் பிக்கை மேம்படுகிறது.

**பிரச்சினைகளைத் தளமாகக் கொண்ட கற்றலின் நன்மைகளாக பின்வருவன அமையும்.**

1. மாணவர்கள் கற்றல் மீது அதிக ஊக்கலையும் ஆர்வத்தையும் பெறுகிறார்கள்.
2. ஆசிரியர்கள் புத்துணர்ச்சியை அனுபவிப் பதுடன் சொந்த அறிவை விரிவாக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றார்கள்.
3. தொழில்நுட்பவியலில் புதிய வாண்மைத் திறன்களைப் பெறுகிறார்கள்.
4. விளைதிறன் மிக்க கற்பித்தல் நுட்பங்கள்.
5. செயற்திட்டங்களை விருத்தி செய்ய ஒத்துழைத்து செயற்படுதல்
6. பல்வேறு வகையான கணிப்பீட்டு முறைப் பயன்பாடு.
7. மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் முகாமை செய்ய கற்கிறார்கள்.

எனவே ஆசிரியர் இம்முறையை பிரயோகிப்பதன் மூலம் மாணவர் அடையக்கூடிய பேறுகளை ஆம்பத்திலிருந்தே இனம் காணலாம்.

**03. கூட்டுக் கற்றல்:–**

குறிப்பிட்ட இலக்கை அடைவதற்காக ஒரு குழுவாக மாணவர்கள் செயற்படுவதற்கு வாய்ப்பு வழங்குவதாகும். குழுவின் வெற்றிக்கு தனி நபர்களின் வகை கூறலையும் மேம்படுத்து கின்றது. இக்கற்றல் மூலம் மாணவர்களிடம் சமூக இடைவினைத்திறன்களை விருத்தி செய்வதே முக்கிய நன்மையாகும்.

**கூட்டுக்கற்றல் படிமுறைகளாவன.**

I. குழுக்களை உருவாக்குதல்
II. வழிகாட்டல்களை வழங்குதல்
III. செயற்பாடுகளை வழங்குதல்
IV. கணிப்பீடு
V. பெறுபேறுகளைப் பகிர்ந்து கொள்ளல்


கூட்டுக்கற்றல ஆய்வுகூடபரிசோதனைகள், செயற்திட்டங்கள், விளையாட்டுக்கள், வீடியோ எடுத்துரைப்புக்கள், பாத்திர நடிப்பும், நாடகமும் போன்ற செயற்பாடுகளுக்கு பயன்படுத்தலாம். அதுமட்டுமன்றி ஒரு குழுவாகப் பிரச்சினை தீர்ப்பதற்கு ஒரு களமாக அமைகிறது.

**04. 5E அணுகுமுறை : 7E மாதிரி**

இம்முறை கட்டுருவாத அடிப்படையை கொண்டதும் ஆசிரியரும் மாணவர்களும் பொதுச் செயற்பாடுகளை அனுபவிக்கவும் ஏற்கனவேயுள்ள அறிவு மற்றும் அனுபவங்களின் மீது புதியவற்றைக் கட்டி எழுப்பி பூரணமான தமது விளக்கத்தைப்பற்றி தொடர்ச்சியாக கணிப்பீடு செய்யவும் வழிப்படுத்துகின்றது.

5E கற்றல் வட்டத்தின் தனிப்பட்ட கூறுகளான ஈடுபடுத்தல், தேடுதல், விளக்குதல், விரிவாக்குதல் மற்றும் மதிப்பீடு என்பன உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும் பாடத் திட்டங்கள் மற்றும் கலைத்திட்ட அபிவிருத்திகள் பற்றிய ஆய்வுகள் 5E கட்டத்தினை 7E கட்டமாக விரிவாக்க வேண்டுமெனக்கோரின.

உத்தேச 7E மாதிரிகையானது ஈடுபடுதல் கட்டத்தினை வெளிப்படுத்துதல் மற்றும் ஈடுபடுத்தல் என்றவாறும் விரிவாக்கல் மதிப் பிடுதல் ஆகிய இரண்டு கட்டங்களை மூன்று கூறுகளாக விரிவாக்கல் மதிப்பிடுதல் மற்றும் பெரிதாக்குதல் என விரிவுபடுத்தப்படுகின்றது.




7E கற்றல் வட்டமும் போதனைச்சட்டகமும்.

**கட்டுருவாக்க கற்றலுக்கான போதனைக் கருவிகள்:**

**01. சித்திர வடிவ ஒழுங்காக்கிகள்:–**

மாணவர்களுக்கு உறுதியான செயற் பாடுகளை வழங்குபவை சித்திர வடிவ ஒழுங்காக்கி என்பது தகவல்களின் கட்புலக் குறியீடாகும். இந்த ஒழுங்காக்கிகள் நிகழ்வுகளை கால அடிப் படையிலும் (Tome Lines) ஒப்பிட்டு வேறுபடுத்து வதிலும் (வென்வரைபடம்) மற்றும் சிந்தனைக் கிளறலுக்கான கருவியாக (எண்ணக் கரு படங்கள்) விளக்குகின்றன. தகவல்களை பதிவு செய்வதனால் மாணவர்கள் முக்கிய விடயங் களையும் தொடர்பு களையும் அறிந்து கொள்வதோடு கற்றவைகளை நினைவில் நிறுத்தவும் உதவியாக உள்ளன. பல்வேறு அமைப்பிலும் வடிவிலும் வெவ்வேறு பெயர்களில் கூட அமைக்கமுடியும். அவை யாவன அறிவுப்படங்கள், எண்ணக்கருப் படங் கள், கதைப்படங்கள். அறிகை ஒழுங்காக்கி எண்ணக் கரு வரைபடங்கள் என்பனவாகும்.

சித்திரவடிவ ஒழுங்காக்கிகள் கற்றலை நெறிப்படுத்த பல வடிவிலான தகவல்களை பாடவிடயங்களை ஒழுங்கமைத்து பயன் பாட்டுக்கு பிரயோகிக்க கூடியவை.

உதாரணங்கள் சில வருமாறு:

1. வலைப்பின்னல் மரம் - தகவல்களை ஒழுங்கு செய்து துணைக் கூறுகளை பிரதிபலிக்க பயனுள்ளது.
2. சிலந்தி வலைப்படம் - பிரதான கருத்துடன் தகவல்களை தொடர்புபடுத்துவதற்கு இன்றி யமையாதது.

3. மீன் எலும்புப் படம் - காரணமும் விளைவுக்கு மான தொடர்புகள் சிக்கலாகவும் மிகை யாகவும் இருக்கும் போது பயன் படுத்தலாம்.

### 02. கணினி உதவியுடனான போதனை:-

கற்றலுக்கு போதுமான வசதிகள் இருந்தால் மாணவர்கள் வேகமாக தனியாகப் பணிபுரிய அல்லது குழுவாக பிரச்சினைகளை தீர்க்க கணினியை பயன்படுத்தி கற்கலாம். இதன் மூலமாக மாணவர்களை தொடர்ச்சியான நிகழ்ச் சித்திட்டங்கள் மூலமாக வழிப்படுத்தி கற்றலில் மகிழ்ச்சி அதிகரிக்கும் வகையில் ஆக்கத்திறனை மேம்படுத்தலாம். மாணவர்களின் ஆற்றலைக் கணிப்பிட்டு முன்னேற்றத்தை புத்தாக் கத்தை பதிவு செய்யலாம்.

### 03. K-W-L கற்றல்

5E வட்டச் செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்களுக்கு வேலைத்தாளை ஆயத்தம் செய்து மாணவரின் முன்னைய அறிவினை அடிப்படையாகக் கொண்டு இயலுமான அளவு கருத்துக்களை பிறப்பித்து K நிரலைப் பூரணப் படுத்தியபின் குறிப்பிட்ட விடயம் பற்றி கற்க விரும்பும் கருத்துக்களையும் விளக்கங்களையும் வினவச்சொல்லி W நிரலையும் பட்டியலிட்டு கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டதன் பின்னர் புதிய அறிவினைப் பெற்றுக் கொள்வார்கள். இது அதீத அறிகைக் கட்டமாகும்.

### K-W-L இன் முக்கிய கூறுகள்

K – தெரிந்தது என்ன முன்னைய அறிவு
W – கற்க விரும்புவதை தீர்மானித்தல்
L – கற்றவற்றை இனங்காணல்

### ஆசிரியர் வகிபாங்கு

மாணவர் மையக் கற்பித்தல் மாணவர்களை முதன்மைப்படுத்துகிறது. மாணவர் மையக் கல்வியில் ஆசிரியர் என்பவர் வெறுமனே ஒரு வசதிப்படுத்துபவர் மட்டுமே இந்நிலையில் மாணவரின் தேவைகள், திறன்கள், ஆர்வம், ஈடுபாடு, கற்றல் பாங்கு, ஆகியவையே முதன்மை பெறுகின்றன. இந்த வகுப்பறை கற்பித்தல் முறையில் கற்றல் அனுபவித்தல் மாணவரின் உயிர்ப்பான குரலுக்கு முதன்மை அளிக்கிறது. மாணவர் மைய கற்றலானது தமது கற்றல் செயற்பாட்டிற்கு மாணவர்களையே பொறுப் பாளிகளாக்குவதுடன் மாணவர்கள் உயிப்புடன் இயங்க வேண்டியவர்களாக உள்ளனர்.

ஒரு கட்டுருவாத ஆசிரியர் பிரச்சினைகளை வழங்கி மாணவர்களின் தேடலை ஊக்குவித்து மாணவர்களின் வினாக்கேட்டலை வழிப்படுத்தி புதிய சிந்தனைக் கோலங்களை மேம்படுத்துவார். கூட்டுருவாதம் பெரும்பாலும் அடிப்படையான தரவுகள், முதன்மை நிலை மூலங்கள் இடைவினை தரும் சாதனங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்து கின்றது. இவற்றை பயன்படுத்தும் ஆசிரியர்கள் மாணவர்களை தமது எண்ணக்கருத்தொடர்பான தரவுகளை உபயோகப்படுத்தவும் தமது ஆளுகைக் குரிய சொந்த கண்டறிதல்களில் ஈடுபடவும் ஊக்கு விப்பார். படிப்படியாக இச்செயன்முறைகள் மூலம் மாணவர்கள் கற்றல் என்பது "அறிவுப் பிரவாகம்" என உணர்வர் கட்டுருவாதம் வளர்ந் தோர் உட்பட சகல மாணவர்களுக்கும் பொருத்த மான அணுகுமுறையாகும்.

இவ்வாறு கட்டுருவாக்கம் கற்பித்தல்-கற்றல் செயற்பாட்டில் முக்கியத்துவம் பெற்று ஆசிரியர் மாணவர்களுக்கு இடையிலான மேம்பாட்டை அதிகரிக்கின்றது. மாணவரின் சிந்தனைக் கோலங்களையும் புத்தாக்க செயற்பாடுகளையும் நல்லமுறையாக வழிப்படுத்துபவராகவும் ஆசிரியர் செற்படுவர். மாணவனின் பலம் பலவீனங்கள் தேவைகளை உணர்ந்து செயற்பட்டு மாணவர் அறிவை விளக்கத்தை கட்டமைப்பு செய்ய வழிவகுக்கும் அணுகு முறையாக கட்டுருவாத அணுகுமுறை விளங்கு கின்றது.

### உஷாத்துணை நூல்கள்


- பேராசிரியர் க.சின்னத்தம்பி (1991) அறிக்கைத் தொழிற்பாடுகளும் ஆசிரியமும்
- பேராசிரியர் சபா.ஜெயராசா (2008) கற்றல் உளவியல்
- ஊலகநாதர் நவரட்ணம் (2007) கற்றல் கற்பித்தல் செயன்முறையில் கல்வி உளவியல்


### இணையம்

WIK:Pedio the free encyclopedia

□□□

# அரங்கின் அழகியல்

**N. Tharani**
2nd Year, Drama.

எந்த ஒரு படைப்பும் கலை வடிவம் என்னும் பெயரினைப் பெறுவதற்கு பண்பு அலகில் அது அழகியல் என்னும் கலைத்துவம் அமைய வேண்டும். அந்த வகையில் அரங்கு கலை என்னும் அந்தஸ்தினைப் பெறுவதற்கு அங்கு வெளிப்படும் அழகியல் காரணமாக அமைகின்றது.

ஒவ்வொரு அரங்குகளும் தத்தமது பண்பாட்டின் அடிப்படையில் அழகியல் சிந்தனையைக் கொண்டுள்ளன. பண்பாடே அரங்கின் அழகியலைத் தீர்மானிக்கும் பிரதான காரணியாக அமைகின்றது. பண்பாட்டின் மொழி அரங்க மொழியாகக் கையாளும் போதுஅங்கு அழகியல் உருவாகின்றது. ஒவ்வொரு தேசத்திற்கும் என பண்பாடு வேறுபட்டுக் காணப்படுவதனால் அரங்கின் அழகியலும் வேறுபடுகின்றது. உதாரணமாக கிரேக்கத்தில் திறஜெடி அரங்கில் "கதாசிஸ்" அழகியல் சிந்தனையாக அமைகின்றது. யப்பானிய நோ நாடகத்தில் "யூகென்" அழகியல் கோட்பாடாகக் காணப்படுகின்றது. நாட்டிய சாத்திர அரங்கில் "ரசம்" அழகியல் கோட்பாடாக அமைகின்றது.

அழகியல் எண்ணக்கரு பார்வையாளர் களின் மனப்பாங்குடன் தொடர்பு பட்டதாகும். பார்வையாளர் அழகியல் நிலையில் நாடகத்தின் செய்திகளை உள்வாங்கிக் கொள்வதற்கு, ஆற்றுவோர் பல்வேறு அம்சங்களைக் கருத்திற் கொள்வர். அவற்றில் ஒன்று "நம்பகத்தன்மை" ஆகும். நாடகம் கற்பனைக்கு ஊடாகப் படைக்கப்படும் ஒரு கலைவடிவம் ஆகும். இருப்பினும் அது வாழ்வினை பிரதிநிதித்துவம் செய்கின்றது. நாம் வாழும் உலகினை கற்பனைக்கு ஊடாக ஆற்றுவோர் படைக்கும் போது அங்கு நம்பகத்தன்மையினைக் கருத்திற் கொள்வர். பார்வையாளருக்குச் சொல்லப்படும் செய்தியில், வடிவத்தில் நம்பகத்தன்மை ஏற்படும் போது அரங்கில் அழகியல் உருவாகின்றது

அரங்கு வெளிப்படுத்தப்படும் வடிவம் எளிமையாக அமையும் போது அங்கு அழகியல் இயல்பாக உருவாகின்றது. நாடகம் பார்வை யாளர்களுக்கு விளங்கக் கூடிய வகையில் எளிமை யான செய்தியை வெளிப்படுத்தும் போது அங்கு நாடகம் வெற்றி அடைகின்றது. நாடகத்தின் தேவைக்கு மேலதிகமாக அரங்கில் ஆடம்பரத் தன்மை காணப்படின் அங்கு அழகியல் தடைப் படுகின்றது.

நாடகம் தனது அழகியலைத் தீர்மானிப் பதில் மோடியின் பங்கினையும் உள்வாங்கிக் கொள்கிறது. மோடியைப் பின்பற்றி நாடகம் தயாரிக்கப்படுமாயின் அங்கு சமகாலக் கதை, படச்சட்ட மேடை நான்காவது சுவராகப் பயன்படுத்தல், பிரதிநிதித்துவப் பாங்கிற்கான காட்சியமைப்பு, பாத்திரப் பண்பை வெளிப் படுத்தும் வேடஉடை போன்ற யதார்த்த வாத மோடிக்குரிய பண்புகள் பின்பற்றும் போது அழகியல் உருவாகின்றது.

மோடி மீறப்படும் வகையிலும் நாடகம் தயாரிக்கப்படும். குறித்த மோடியில் இருந்து விலகி நாடகம் தயாரிக்கும் போது முற்று முழுதாக விலகுதல் அவசியம். சில சந்தர்ப்பங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட மோடிகளைப் பயன்படுத்தி நாடகத்தைத் தயாரிக்கும் போதும், மோடியை மீறி நாடகம் தயாரிக்கம் போதும், அவை பொருத்தமாக அமையும் இடத்து அழகியல் உருவாகின்றது.

அரங்கில் " எதிர்வு கூறமுடியாமை" என்னும் பண்பு காட்சிகளில் காணப்படும். எதிர்வு கூறமுடியாமை என்பது அடுத்து நிகழவிருக்கும் காட்சியைப் பார்வையாளரால் முற்கூட்டியே உணரமுடியாத நிலையினைக் குறித்து நிற்கின்து. இவ்வாறு பார்வையாளருக்கு வியப்பளிக்கும் வகையில் நாடகம் வளர்த்தெடுக்கப்படுமாயின் அங்கு அழகியல் உருவாகும்.

# தென்மகாணமும் திராவிடக் கலாசார மரபுகளும்

நடேசபிள்ளை ஞானவேல்
கல்வியலாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

இந்திய கலாசார மரபுகளை ஆரியக்கலாசர மரபு, திராவிடக்கலாசார மரபு என இருகூறாக வேறுபடுத்தி நோக்கும் மரபு காணப்படுகின்றது. தென்னிந்திய கலாசார மரபும் தமிழ்ப் பண்பாட்டு மரபும் மேலோங்கிக் காணப்படும் கலாசார மரபைத் திராவிட கலாச்சார மரபு என இனங் காண்பர்.

இலங்கையில் திராவிடக் கலாசார மரபுகள் காலத்துக்குக் காலம் விரிவாக்கம் பெற்றுச் சென்றதை வரலாற்று நிகழ்வுகள் விபரிக்கின்றன. ஏனைய மாகாணங்களில் திராவிடக் கலாசார மரபு பேணப்பட்டது போன்று காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங் களை உள்ளடக்கிய தென்மகாணத்திலும் பேணப்பட்டதை வரலாற்றுச் சான்றுகள் நிரூபித்துக் காட்டுகின்றன.

முருகனது படைவீடுகளில் ஒன்றாக ஈழத்தில் அமைந்துள்ள கதிர்காமத்தலம் பண்டைக்காலம் முதல் திராவிடக்கலாசர மரபுகளைப் பேணி வந்துள்ளமையை சான்றுகள் மூலம் அறிய முடிகிறது. திராவிடப் பெண்ணாகிய வள்ளி நாச்சியாரை முருகப்பெருமான் மணந்து கொள்வதற்காக கதிர்காமம் வந்தமையும் வள்ளி நாச்சியாரது வழித்தோன்றல்கள் திராவிட கலாசார மரபுகளைப் பின்பற்றியதையும் வம்சக் கதைகள் மூலம் அறிய முடிகிறது தமிழகத்தில் 15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த **அருணகிரிநாதர்** கதிர்காமக்கந்தன் மீது திருப்புகழ் பாடும் அளவுக்கு அங்கும் இவ்வாலயத்தின் சிறப்பு உணரப்பட்மையை அவதானிக்கலாம் அத்தோடு யாழ்ப்பாண இராச்சிய காலத்தில் வாழ்ந்த புலவரால் **"கதிரைமலைப்பள்ளு"** கதிர்காமகந்தன் மீது பாடப்பட்டதோடு இலங்கையில் பாடப் பட்ட முதலாவது பள்ளுப் பிரபந்தமாகவும் இது அமைகின்றது.

மாத்தறை மாவட்டத்தில் தெவிநுவர என இன்று அழைக்கப்படும் தெய்வேந்திர முனையில் கி.பி 15ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி வரையும் திராவிடக்கலாசார மரபுகள் சிறப்பாக பேணப் பட்டமையை தேசசஞ்சாரிகளது குறிப்புக்களும், கல்வெட்டுக்களும் இன்று காணப்படும் சிதைந்த கட்டடங்களும் நிருபித்துக் காட்டுகின்றன. தெய்வேந்திரமுனை போர்த்துக் கேயரது வருகைக்கு முன்னர் இலங்கையில் புகழ்பூத்த துறைமுகப் பட்டினங்களில் ஒன்றாக விளங்கியது. அங்கு தென்னிந்திய வர்த்தகர்களது செல்வாக்குக்கள் மேலோங்கிக் காணப்பட்டன. இத்தகைய வர்த்தக நகரில் காலத்துக்காலம் பல இந்து ஆலயங்கள் அமைக்கப்பட்டன. **"சந்திரசேகரீச்சரம்"** என்ற சிவாலயம் அவற்றுள் காலத்தால் முற்பட்டது. இது விஜயனது வருகைக் காலத்தோடு தொடர்பு பட்டதாக யாழ்ப்பாண வைபவடாலை ஆசிரியரும் மற்றும் போல் பீரிஸ் என்ற வரலாற்றாய்வாளரும் குறிப்பிடுவர். உருகுணை தேசிய பூங்காவில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தை சேர்ந்ததாக கருதப்படும் பிராமி மொழியில் எழுதப்பட்ட கல்வெட் டொன்று கிடைக்கப்பெற்றது; அதில் **சிவநகர்** என்ற குறிப்புக் காணப்படுவதனால் அது இவ்வாலயம் அமைந்த ஆலயப் பகுதியினைக் குறிப்பிட்டு இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இச்சந்திரசேகரர் ஆலயம் ஆறாம் விஜயபாகுவின் காலத்தில் **"நகரீசன்"** கோவில் என அழைக்கப்பட்டது. இது பற்றி சிங்கள மொழியில் அமைந்த கல்வெட்டு ஒன்றின் மூலம் அறிய முடிகிறது. அதில் மேற் படி மன்னன் ஆலயத் தின் நித்திய பூசைகள் கிரமமாக இடம்பெறும் பொருட்டு தானமாக வழங்கப்பட்ட ஊர்கள் பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன.






இன்று இவ்வாலயம் சிதைந்த நிலையில் காணப்படுகின்றது. இவ்வாலயத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படும் நந்தி, இரண்டு சிவலிங்கங்கள் என்பன வெளிப்படுத்தப் பட்டுள்ளன. சிவலிங்கங்கள் ஆவுடையார் அற்ற நிலையில் நீண்ட லிங்கங்களாக காணப் படுகின்றன. அழகிய கலைத்திறனை உடையதாக நந்தியின் சிற்பம் அமைந்துள்ளது. கழுத்தில் ஒலி எழுப்பும் மணியிலான மாலையும் அதற்குமேல் இரண்டு ஆபரண மாலைகளையும் அணிந்திருப்ப தோடு கழுத்தில் எரியுடன் கூடியதாகவும் வலது காலை சற்று முன்னே நோக்கி உயர்த்தி பிடித்த நிலையில் முதுகுப்புறத்தில் பட்டாடை ஒன்று விரிக்கப்பட்ட நிலையில் இரு செவிகளையும் நிமிர்த்தியவாறு கம்பீரமாகக்காட்சி அளிக் கின்றது. தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்தில் இடம்பெறும் நந்தியின் கலைநயத்தை ஒத்த சிறிய வடிவம் கொண்டதாக இது அமைக்கப் பட்டுள்ளது.




ஆலய வளவில் சிதைந்து காணப் படும் சிற்ப தூண் களில் திராவிடக் கலை மரபை பிரதி பலிக்கும் புராணக் கதைச் சிற்பங்கள் காணப்படுகின்றன. வில்லை வானை நோக்கி ஏந்திய நிலையில் காணப்படும் சிற்பம் முப்புரங்களை எரித்த சிவனது திரிபுராந்த நிலையைக் குறிப்பதாக அமைகிறது. அத்தோடு விநாயகர் சிற்பம் ஒன்றும் அழகாகச் செதுக்கப் பட்டுக் காணப்படுகிறது. வாசற் படிகளுக்கு பக்க வாட்டில் பயன்படுத்தப் பட்டதாகக் கருதப்படும் தும்பிக்கையை ஏந்திய யானையின் சிற்பம், இருயாழிகள் ஒன்றை ஒன்று தமது முகங்களை இணைந்தபடி நிற்கும் சிற்பம் என்பன பல்லவர் களின் சிற்பபமரபுகளைப் பிரதிபலிப் பனவாக அமைகின்றன.

தெய்வேந்திர முனையில் அமையப்பெற்ற மற்றுமொரு ஆலயம் விஷ்ணு ஆலயமாகும். இது இங்கு அமைக்கப்பட்ட ஆலயங்களுள் பிரமாண்டமாக அமைக்கப்பட்டதோடு பல தேச சஞ்சாரிகள் வந்து வழிபட்டு போகும் வண்ணம் அக்காலத்தில் புகழ்மிக்கதாக அமைந்திருந்ததை அறிய முடிகிறது. **தொலமி, இபுன்பதூதா, மக்கன்சி, கியுதோ, ஜோன்வில்லே,** போன்றோரது குறிப்புக்கள் இதை நிருபிக்கின்றன. திராவிட மக்களின் கடல் தெய்வமாகிய வருண பகவானுக்கு ஆதியில் ஆற்றப்பட்ட வழிபாடே பிற்காலத்தில் விஷ்ணு வழிபாடாக வளர்ச்சி கண்டது. இவ்வாலயத்தைச் சுற்றி பெரிய வர்த்தக நிலையங்கள் அமைக்கப்பட்டதோடு அவற்றின் வருவாய் இவ்ஆலயத்துக்கே செலவிடப்பட்ட தாகவும் அங்கு ஆயிரக்கணக்கான பிராமணர் களும் 500க்கு மேற்பட்ட தேவதாசிகளும் பணிபுரிந்ததாக கி.பி 1344ஆம் ஆண்டில் இக்கோவிலைப் பார்வையிட்ட இபுன்பதூதா குறிப்பிடுகின்றார்.




காலி மாவட்டத்தில் 1911 ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற தமிழ், போர்ஸியம், சீனம் ஆகிய மும்மொழிகளில் அமைந்த கல்வெட்டு ஒன்றில் இவ்வாலத்திற்கு 1403 ஆம் ஆண்டு சீன அரசன் **"யிங்லோ"** என்பவன் வழங்கிய தானங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றது. அதன்படி தேநுவரை நயினாருக்கு 1000 கழஞ்சு பொன், 5000 கழஞ்சு வெள்ளி, 50 பல வண்ணப் பட்டுப்புடவைகள், 5 செப்பிலான தூபக்கால்கள், 2500 கட்டி கற்பூரத்தயிலம், 10 சந்தனக்கட்டிகள் என்பன வழங்கப்பட்டதாக அறிய முடிகிறது. இவை அனைத்தும் ஆரியச்சக்கரவத்திகளது வேண்டு தலின் பேரில் தருவிக்கப்பட்டதாகவும், அவன் போர்ஸியமொழியில் பாண்டித்தியம் பெற்றிருந் ததையும்; சர்வதேச வர்த்தகத்தில் தமிழ்மொழி யும் அக்காலத்தில் சிறப்பான ஓர் இடத்தை வகித்ததனையும் இக்கல்வெட்டு நிருபித்து நிற்கிறது மேலும் இக்கல்வெட்டின் மேற்பகுதி சீன அலங்கார முறைமையில் செதுக்கப்பட்டுள்ள

தோடு அது சீனாவில் எழுதப்பட்ட பின்னரே இலங்கைக்கு எடுத்துவரப்பட்டு இருக்கலாம் என அதனை ஆராய்ந்த கல்வெட்டியல் நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.



பல்லவர் காலத்தில் பேணப்பட்ட திராவிடக் கலாசார மரபுகளை இலங்கையில் இன்றும் பிரதிபலிக்கும் ஆலயமாக தெவிநுவர விஷ்ணு ஆலயம் அமைகிறது. ஆரம்பத்தில் கற்றளியாக அமைக்கப்பட்ட இவ்ஆலயம் கி.பி 7ஆம் நூற்றாண்டிற்குரிய தென்னிந்தியக் கலைப்பாணியை பிரதிபலிப்பதாக அமைகின்றது. பிற்காலத்தில் இங்கு புணருத்தாரண வேலைகளை மேற்கொண்ட சிற்பிகள் 14ஆம் நூற்றாண்டுக் குரிய பாண்டியர்களது லைப்பாணியையும் இங்கு பிரதிபலிக்கச் செய்துள்ளனர். அதன் பிரகாரம் தூண்களில் இடம் பெறும் கூடு என்னும் கபோதம், கதவு நிலைகளில் காணப்படும் நாகபந்தனம் அதன் மேல் அமைக்கப்பட்டுள்ள கஜலக்ஷ்மியின் உருவம் என்பன இம்மரபை வெளிப்படுத்துகின்றன.



திஸர சந்தேஸய (அன்னம் விடுதூது) என்ற சிங்கள மொழியில் அமைந்த தூதுப் பிரபந்தத்தில் தெய்வேந்திர முனையில் அமைக்கப்பட்ட விநாயகர் ஆலயம் பற்றிய செய்திகளை அறிய முடிகிறது. அது **"மகுல்வல்ல"** என்ற இடத்தில் உள்ள **"வல்லே மடம்"** என்ற தென்னந்தோப்பில் அமையப் பெற்றதாகவும் இவ் விநாயகர் ஆலயத்தினை "இராமச்சந்திரன்" என்ற தமிழ் வணிகன் அமைத்ததாகவும், அங்கு நாள்தோறும் காலை வேளையில் மணி ஒலியுடன் தமிழில் வழிபாடுகள் ஆற்றப்பட்டதாகவும் குறிப்பிடுகின்றது. சென்ற நூற்றாண்டில் தலை உடைந்த நிலையில் ஓர் விநாயகர் சிற்பம் இப்பிரதேசத்தில் பெறப்பட்டுள்ளது. அது இவ்விநாயகர் ஆலயத்தை சார்ந்ததாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

தெவிநுவரவிலிருந்து மாத்தறைக்குச் செல்லும் வழியில் அமைந்திருந்த நாகதம்பிரான் ஆலயம் பற்றிய செய்திகளை கோகில சந்தேஸய (குயில் விடு தூது), பரவி சந்தேஸய (புறாவிடு தூது) ஆகிய தூது இலக்கியங்கள் மூலம் அறிய முடிகிறது. படமெடுத்த நிலையில் வாலை பல சுருள்களாக சுருட்டிய நிலையில் நாகதம்பிரானது சிற்பம் காணப்பட்டதாகவும்; இங்குள்ள பெண்களை நாகக் கன்னியர்களாக அடியவர்கள் அழைத்தமை பற்றிய செய்திகளையும் மேற்படி தூது இலக்கியங்கள் விபரிக்கின்றன.

தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள அம்பலாந்தோட்டை என்ற ஊரில் 1985ஆம் ஆண்டில் "நிதியேகம" என்ற வயற் காணியிலிருந்து "ஷீன் அப்புகாமி" என்ற விவசாயினால் 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வெண்கல முத்திரை ஒன்று கண்டெடுக்கப் பட்டது. அதில் மகிஷாசுரமர்தினியின் சங்காரத் தோற்றம் இடம்பெறுவதோடு **"நானாதேசி"** என்ற தமிழ் வணிகர் குளாத்தினால் பயன்படுத்தப் பட்ட நாணயமாக இருக்கலாம். எனக் கருதப் படுகிறது. ஆதலால் 12ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் தமிழ் வணிகர்களது செல்வாக்கு அம்பலாந்தோட்டையிலும் நிலவியதை இது புலப்படுத்துகிறது.

தெய்வேந்திர முனையில் வசித்த பிராமணர் களும் தமிழ் நாட்டிலிருந்து தான் வந்தவர்கள் என அறியமுடிகிறது. இங்கு பிராமணர்கள் வசிப்பதற் கென அக்ரகாரங்களும் பிராமண வீதிகளும் காணப்பட்டன. அவை **"தேநுவரைப் பிரம்ம தேயம்"** என அழைக்கப்பட்டன. அம்பாந் தோட்டை மாவட்டத்தின் நாய்மானா ஊரிலிருந்து கிடைக் கப்பெற்ற மூன்றாம் பாக்கிரம பாகுவின் காலத்தைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டு ஒன்றில் தேநவரையில் வசித்த பிராமணர்கள் பன்னிரு வருக்கு வழங்கிய தானங்கள் பற்றிய செய்திகளை விபரித்துக் கூறுகின்றது. அதன் பிரகாரம் நாய் மானக் கிராமம் சுங்கங்கொல, பகல, கரமுல்லை, வேர்த்துவை ஆகிய இடங்களில் வயலும் தோட்டமும் அன்பளிப்பு செய்யப் பட்டதோடு "இத்தானத்துக்கு ஊறு விளைவிப் போர் கங்கையிற் பசுவையும், பிராமணரையும் கொன்ற

பாவத்திற்குரிய கதியை அடைவார்கள் என்றும் இத்தகைய கொடை நீடித்து நிலைக்க உதவுவோர் சுவர்க்கத்ததையும், முத்தியையும் அடைவார்கள்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



**"திஸ் கந் த தத் தேனுவரைப் பெருமாள்" "சரஸ்வதி தேனுவரைப் பெருமாள்"** என்ற பிராமண கோத்திரங்கள் தெவிநுவரவில் அமையப்பெற்றதாகவும், சிங்கள மன்னர்களது அரண்மனைக்கு வேண்டிய பஞ்சாங்கங்களை சோதிட முறைப்படி கணிப்பதும் தெவிநுவரவில் வசித்த பிராமணர் களின் பொறுப்பாக இருந்தது. அதன் பிரகாரம் கோட்டை இராச்சியத்தை ஆண்ட நான்காம் பராக்கிரமபாகுவின் (1302-1326) காலத்தில் அவனது அவைக்களப் புலவனாக விளங்கிய தேனுவரைப் பெருமாள் என்ற புனைபெயரை யுடைய **"போசராச பண்டிதன்"** என்பவனால் **"சரசோதிமாலை"** என்னும் தமிழ்ச் சோதிட நூல் அரங்கேற்றப்பட்டது. இதுவே இன்று தமக்குக் கிடைக்கும் காலத்தில் முதலாவது இலங்கைத் தமிழ் இலக்கியமாகும். எனவே இலங்கையின் முதலாவது தமிழ் இலக்கியத்தை படைத்த பெருமை தென் மாகாணத்தையே சாரும்.

காலிக் கோட்டைக்கு அருகில் உள்ள ஆழ்கடல் பரப்பில் 1992ஆம் ஆண்டு சுழியோடிகளால் முருகனது அழகிய வார்ப்புச்சிலை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டட்டது. இரண்டடி உயரம் கொண்ட இச்சிலை முருகனது சுப்ரமணியரது முகூர்த்தத்திற்குரிய பிரதிமாலட்சணங்களை உடையதாகக் காணப்படுகின்றது. இதனை ஆராய்ந்த ஆய்வாளர்கள் அது கி.பி 13ஆம் நூற்றாண்டுக்குரியதாகவும், சோழர்களது கலைப் பாணியை உடையதாகவும் குறிப்பிடுகின்றனர். ஆகவே சோழர்களது கடல் வாணிபத்தின் போது தென் மாகானத்தில் வழிபடப்பட்ட முருகன் ஆலயம் ஒன்றினை சார்ந்ததாக இது அமைந்திருக்க வேண்டும் எனக்கருதப்படுகின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களினால் தென்மாகாணத்தில் பல இந்து ஆலயங்கள் அமைக்கப்பட்டன. அவற்றுள் காலி நகரில் அமைந்துள்ள ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம், கதிரேசன் ஆலயம், அம்பாந்தோட்டை கதிரேசன் கோயில், காலி உடுகம கதிரேசன் கோயில், காலி உணவட்டுன விநாயகர் ஆலயம் என்பன குறிப்பிடத்தக்கன. இவை திராவிடக் கலை அம்சங்கள் நிரம்பப்பெற்றதாகவும் சிவாகம முறையில் பூசைகள் மேற்கொள்ளப்படும் ஆலயங்களாகவும் திகழ்கின்றன. காலி கதிரேசன் கோயில் நுழைவாயிலில் காணப்படும் மரவேலைச் சிற்பங்கள் சிறப்பான கலை நயம் பொருந்தியனவாகக் காணப்படுகின்றன.

மாத்தறை புகையிரத வீதியில் கதிர்காம யாத்திரியர்களால் அமைக்கப்பட்ட முருகன் ஆலயம், மாத்தறை வெகறகென மகா பத்திரகாளி அம்மன் ஆலயம், காலி தலகஸ்வெல ஸ்ரீ முருகன் ஆலயம், மற்றும் தோட்டத்தொழிலாளர்கள் செறிந்து வாழும் தலங்காக, அல்பிட்டிய தலகஸ்வெல, எத்கண்டுற, பிற்றபெதெற, அக்குறச தெனியாய முதலான இடங்களில் அமைக்கப் பட்டுள்ள முத்துமாரியம்மன் ஆலயங்கள்; அவற்றினூடாக ஆண்டுதோறும் ஆற்றப்படும் காமன்கூத்து, பொன்னார் சங்கர் கூத்து என்பன இன்றும் தென்மாகாணத்தில் திராவிடக்கலாசார மரபுகளை வெளிப்படுத்தி நிற்கின்றன.

முடிவாக தென்மாகாணம் என்பது சிங்கள மயப்படுத்தப்பட்டது. அங்கு திராவிடக்கலாசார மரபுகள் ஆற்றப்படுவதில்லை. என்ற குற்றச் சாட்டுக்களை முன்வைப்போர்க்கு மேற்படி கள ஆய்வுத்தகவல்கள் தக்க பதில்களை வழங்குவதோடு தென்மாகாணத்தில் மேலும் மறைந்து கிடக்கின்ற திராவிடக்கலாசார மரபுகளை வெளிக்கொணர்வதற்கான ஆய்வு முயற்சிகளில் ஈடுபடுவோர் சுதந்திரமாகச் சென்று தகவல்களை சேகரிப்பதற்குப் பாதுகாப்பு நிலைமைகள் முன்னர் தடையாக இருந்துள்ளன. இன்று நாட்டில் எவரும் எங்கும் சென்று வருவதற்கான நிலைமைகள் காணப்படுவதனால் இத்துறைசார்ந்த ஆர்வலர்கள் அக்கறை கொண்டு ஆய்வுகளை மேற் கொள்வதன் வாயிலாக தென் மாகானத்தில் மறைந்து கிடக்கும் திராவிடக் கலாசார மரபுகளின் உண்மைத் தரிசனங்களை வெளிச்சத்துக்கு கொண்டு வர முடியும்.

# Hinduchium - 2009




JNCOE

# இலங்கையில் நாட்டியக்கலை வளர்ச்சி

கேதுசா இராமச்சந்திரன்
உள்ளகப் பயிற்சி ஆசிரியர்

இலங்கையிலே பழைய காலம் தொட்டு நுண்கலைகள் பல்வேறு வகைகளிலே வளர்ந்து வந்துள்ளன. இங்கு வாழும் சிங்களம், தமிழ் பேசும் மக்களிடையே கட்டிடக்கலை, சிற்பம், ஓவியம் முதலிய கலைகள் நன்கு வளர்ச்சி யுற்றாலும் இசை, நடனம் குறிப்பாக சாஸ்திரிய இசை, நடனம் ஆகியன ஆதிகாலத்திலே நன்கு வளர்ச்சியடைந்தமைக்கு தக்க சான்றுகள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. எனினும் பௌராணிக மரபின் படி இலங்கையை ஆண்ட இராவணன் வீணைக்கொடியோன் எனவும், அவன் சாமகானம் பாடிச் சிவபெருமானின் திருவருள் பெற்றான் எனவும் கூறப்படுகின்றது. இலங்கையின் வடபகுதியில் உள்ள யாழ்ப்பாணம் என்ற பெயரே யாழ்பாடி (யாழ்வாசிப்பவள்) தொடர்பால் ஏற்பட்டதென்றும் மட்டக்களப்பில் உள்ள பாடுமீன்களின் இசையும் குறிப்பிடற் பாலது. இசை ஜதீகங்களாயினும் இலங்கைத் தமிழ் மக்களிடையே தொன்மையாகவே சாஸ்திரிய இசை நிலவி வந்துள்ளமை குறிப்பிடற் பாலது. இவற்றை விட வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே நிலவி வரும் தென்மோடி, வடமோடி நாட்டுக்கூத்து மரபுகளிலும் குறிப் பிடற்பாலது.

சிலப்பதிகார காலம் தொட்டு பரதக்கலை தொடர்ந்து தமிழகத்திலே வளர்ந்து வந்துள்ளது. தமிழகத்திலே சிறப்பாக வளர்ந்து வந்த இக்கலை இந்தியாவுக்கு வெளியே உள்ள இலங்கை, இந்தோனேசியா, வியட்னாம், கம்போடியா, தாய்லாந்து முதலிய நாடுகளிலும் காலப் போக்கிலே பரவி வந்துள்ளது. இந்தியாவிற்கு மிக அண்மையில் இலங்கை இருந்தாலும் இக்கலை சிறப்பாக ஆரம்பித்து வளர்ச்சியடையவில்லை என்றே கூறவேண்டும். ஏன் என்று ஆராயும் பொழுது இலங்கையிலே வாழும் சிங்களவரும். தமிழரும் முறையே பௌத்தம், இந்து சமயம் ஆகியவற்றைப் பின்பற்றுகின்றனர். இவர்களை விட குறிப்பிட்ட தொகை இஸ்லாமியரும், கிறிஸ்தவர்களும் உள்ளனர். இங்கு ஒவ்வொரு மதத்தவரும் தமக்குரிய மதத்தைப் பின்பற்றிய மையால் சாஸ்திரிய இசை, நடனமரபுகள், புராதன காலத்தில் வளர்ச்சியடையவில்லை. சோழராட்சி தொடக்கம் சில நூற்றாண்டுகளுக்கு மேற்பட்ட கலைகள் சிங்கள அரசசபை, இந்துக்கோயில்கள் ஆகியவற்றில் இடம் பெற்றன. ஆயினும் 16ம்,17ம் நூற்றாண்டுகளில் போர்த்துக்கேய, ஒல்லாந்த படையெடுப்புக்களாலும் அவர்கள் ஆட்சியின் போது பின்பற்றப்பட்ட சுதேசக் கலையழிப்பு கொண்டமையினாலும் இலங்கையின் மேற் கரையோரப்பிரதேசங்களிலிருந்த கோவில்கள் முதலியன அழிக்கப்பட்டன. இதனால் இந்துக் களிடையே பெரும்பாலும் கோவிற் கலைகளா கவே நிலவி வந்துள்ளன. இசை, நடனம், சிற்பம், ஓவியம் முதலிய நுண்கலைகள் அழிக்கப்பட்டது. இதனால் இவை சார்பான கலைகளும் மங்கி மறைந்தன. இதனாலேயே இவைகளுக்கு போதிய சான்றுகள் இல்லாமல் போயிற்று. ஆயினும் சில இலக்கிய தொல்லியச் சான்றுகள் கிடைத்துள்ள தைக் கொண்டு இலங்கையிலும் நாட்டியக்கலை வளர்ந்துள்ளதை ஓரளவுக்கு உய்த்தறியலாம்.

பொலநறுவை, தெவிநுவர போன்ற இடங் களிலிருந்து சைவ, வைஷ்ணவ, கோவில்களில் தேவரடியார்கள் இருந்து இசை, நடனப்பணிகள் புரிந்தமைக்கான சான்றுகள் உள்ளன. அத்தோடு கந்தளாயிலிருந்த விஜயராஜஸ்வரம் என்னும் சிவாலயத்தில் ஏழு தேவரடியார்கள் இருந்தனர் என அறியப்படுகின்றது. இங்கு ஆரம்பகாலத்தில் நடனம் இறைவனுக்கு வழங்கும் தானங்களில் ஒன்றாக காணப்பட்டது. பிற்பட்ட காலத்தில் இப்பெயர் கூறி அழைப்பது இல்லாமல் போயிற்று. மேலும் திருக்கேதீஸ்வரம், திருக் கோணேஸ்வரம் முதலிய புராதன சிவவாலயங் களிலும் தேவாரடியார் இருந்தனர் எனலாம். அண்மைக் காலத்திலே கலாசார முக்கோணப் பிரதேச அகழ்வாய்வின் போது அநுராதபுரத்தி லுள்ள அபயகிரி விகாரைப் பகுதியிலே நடன நிலையிலுள்ள அர்த்தநாரீஸ்வரர் சிலையொன்று கிடைத்துள்ளது. சிவன், சக்தி, தாண்டவம், லாஸ்யம் பற்றிய கருத்துக்களை உள்ளடக்கிய இச்சிலை நன்கு ஆராய்தற்குரியது. இவ்வாறு

பாளி சிங்களம், சமஸ்கிருதம் ஆகிய இலக்கிய நூல்களில் சில இடங்களில் இசை, நடனம் பற்றிய குறிப்புக்கள் உண்டு. அதாவது கி.பி 14ம் நூற்றாண்டு தொடக்கம் 16ம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியிலே சிங்களத்தில் எழுதப்பட்ட சந்தோய (தூது)ப்பிரபந்தங்களில் சமகாலத் தென்னிலங்கையிலே நிலவி வந்த இசை, நடனம் பற்றிய குறிப்பிடத்தக்க தகவல்கள் காணப்படுகின்றன. அத்தோடு தெடிகமவி லிருந்து ஆட்சி புரிந்த 5ம் பராக்கிரமபாகுவின் அரண்மனையில் இடம் பெற்ற நடனங்களைப் பற்றி திசரசந்தேசய என்னும் நூல் விபரிக்கின்றது. "நடன மாதரின் கண்புருவங்கள் வண்டுகளின் நிரைபோல நெளிகின்றன எனவும்" நடனமாதர் கடைக்கண்களாலே பார்க்கின்றனர் எனவும் அந்நூல் குறிப்பிடுகின்றது. களனியில் உள்ள விபீஷணனின் தேவாலயத்திலே நடன மாதிற்கு இன்றியமையாது விளங்கும் நாட்யப்பிரமம் பற்றி அதாவது "ஆடல் மகளிர் கை வழி நயனம் செய்தல் ஆடுதல் பற்றி சேவலிஉறினி சந்தேசய" குறிப்பிடு கின்றது. பறிராகுலர் என்பவர் பரவிச்சந் தேசயத்திலே நாட்டிய கரணம் பற்றியும், நடன மாதின் அங்க அசைவுகள் பற்றியும் குறிப் பிட்டுள்ளனர். ஆகவே மேலே கூறப்பட்ட நூல் களில் காணப்படும் நடனம் பற்றிய குறிப்புகள் ஆகியன பரதரின் நாட்டிய சாஸ்திர அமைப்பு பின்பற்றியதையிட்டு வந்தமை தெளிவாகின்றது. அத்தோடு இக்காலத்தில் கதகளி அல்லது கண்டிய நடனம் நிலவியதற்கான சான்றுகள் இல்லை எனவும், பரத நாட்டியமே நிலவியது மட்டும் என பேராசிரியர் இ.ஆர்.சரச்சந்திரா சுட்டிக் காட்டி யுள்ளார்.

இலங்கையிலே சோழப் பெருமன்னர் ஆட்சியின் போது பரதக் கலை முன்னையதிலும் பார்க்க இங்கு நன்கு பரவ வாய்ப்புக்கள் ஏற்பட்டன. இலங்கையிலே சோழரின் தலைநகராக விளங்கிய பொலநறுவையில் அமைக்கப்பட்ட வானவன் மாதேவி ஈஸ்வரத்தில் திருப்பணி புரிந்து தேவரடியார் கோவிலிலேயே "நந்தா விளக்கு" எரித்தனர். எனக் கல்வெட்டுக்கள் கூறுகின்றது. சோழரைத் தொடர்ந்து இலங்கையில் ஆட்சி புரிந்த முதலாம் விஜயபாகு, முதலாம் பராக்கிரம பாகு போன்ற சிங்கள மன்னரும் இக்கலையினை ஆதரித்து வந்தனர். மேலும் யாப்பகூவவிலும், கடலதெனியாவிலும் உள்ள கல்லான போதிகைச் சிற்பங்களிலே உள்ள நடன உருவங்கள் குறிப்பிடற்பாலன. இதனை பேராசிரியர் சரச்சந்திரா சிதம்பரம் கோயிற் சுவர்களில் காணப்படும் நடன சிற்பங்களுக்கு ஒப்பானவை என்று கூறுகிறார். அதாவது நடராஜத் திருவுருவம் சதுர, ஹரிஹஸ்த, கண்டசூசி, நிடுஞ்சத முதலிய காரணங்களைக் கூறலாம். இவ்வாறு யாழ்ப்பாணத்திலும் ஆட்சி புரிந்த தமிழ் மன்னர் பரதக்கலையையும் ஆதரித்து வளர்த்து வந்ததாகவும் இக்காலத்தில் எழுந்தவையான பாடல் கைலாயமாலை முதலிய நூல்களிலே நடனம் பற்றிய குறிப்புகள் காணப் படுகின்றது. மேலும் வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் "கனகி" எனும் நடனமாது நர்த்தபியா இருந்தார் என்று கூறப்படுகின்றது. அத்தோடு பரச செயன் முறையில் மட்டும் அன்றி நடன சாஸ்திரத்திலும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண நாவலர் முன்னிலையிலே பரிசோதித்ததாக தமிழ் நாட்டு நாட்டியக் கலைஞராகிய கங்கை முத்துப்பிள்ளை எழுதியுள்ள பரத சாஸ்திர நூல்களில் ஒன்றான "நடனாதிவாத்யரஞ்சனம்" எனும் நூலில் காணப்படுகின்றது. இவற்றோடு பரதநாட்டிய மறுமலர்ச்சிக்கு அரும் பெரும் தொண்டாற்றியவர் களுள் கலாயோதி ஆனந்த குமாரசாமியைக் கூறலாம். மேலும் 1947ல் இந்தியக் கலைஞர்கள் பலரும் வந்து நடனக்கச்சேரியை நடத்திச் சென்றனர். தமிழகத்திலே ஏற்பட்ட பரதக்கலை மறுமலர்ச்சியைத். தொடர்ந்து யாழ்ப்பாணத் திலும் இதன் நாட்டம் ஏற்பட்டது. அதற்காக திரு.ஏரம்புசுப்பையா, திரு.எம்.எல்.பரம், கலைப் புலவர் நவரத்தினம், திருமதி. மகேஸ்வரி நவரத்தினம், திரு.வீரகத்தி, திரு. எஸ். ஆர். இராசநாயகம், கலையரசு சொர்ணலிங்கமும் குறிப்பிடத்தக்கவர்கள். இவற்றை விட இலங்கை யில் இருந்து மாணவர்கள் இந்தியா சென்று வழவூர் ராமையாபிள்ளை, அடையாறு லக்ஷ்மணன் நாட்டியம் ஆனது இலங்கையில் பல கலை நிறுவனங்களிலும் பயிற்றுவித்தனர். இது விரிவடைந்து பாடசாலைப் பாடத்திட்டத்தில் அழகியல் பாடங்களில் ஒன்றாக 1972ம் ஆண்டு அமுல் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து உயர்தரப் பாடங்களில் ஒன்றாகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் கலைக் கழகத்தில்

1963ம் ஆண்டு டிப்ளோமா கற்கை நெறிகளும் இடம் பெற்றது. இதன் மூலம் இலங்கையிலும் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பு விபுலானந்தா கல்லூரியிலும் நடனம் மிகவும் துரித வளர்ச்சி யினைக் கண்டது என்றே கூறவேண்டும். அத்தோடு வட இலங்கை சங்கீத சபை மூலம் நடனம் ஒரு பாடமாக நடைமுறைப்படுத்தப்பட்டு மேலும் அதன் பங்களிப்பை காட்டியது. தற்பொழுது யாழ் பல்கலைக்கழகத்தில் பரத நாட்டியம் ஒரு பாடமாகவும் துறைசார்ந்த வளர்ச்சியையும் கண்டுள்ளது. இதிலிருந்து வெளியேறும் மாணவர்கள் நுண்கலைமாணி (நடனம்) என்னும் பட்டத்தைப் பெற்று வெளியேறுகின்றனர். மேலும் நடனத்தில் முதுதத்துவமாணிப்பட்டம் பெற்ற பலர் இன்று பல்கலைக்கழகத்தில் விரிவுரையாற்றுகின்றனர். முதன் முறையாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலேயே நுண்கலைமாணிப்பட்டமும் முதுதத்துவமாணிப் பட்டமும் பெற்ற ஒருவர் 2009இல் நாட்டியத்துறைத் தலைவராக நியமிக்க பட்டது நாட்டியத்துறையின் வளர்ச்சியென்றே கூறவேண்டும். மேலும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை தேசிய கல்வியியற் கல்லூரியில் நடனப் பாடத்தில் பலர் பயிற்சி பெற்று ஆசிரியர்களாக பல பாகங்களிலும் சேவையை வழங்குகின்றனர் இவற்றைவிட பல்வேறு கலைஞர்கள் கொழும்பில், கண்டியில் பரத நாட்டியத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் தம்மை அர்ப்பணித்து வருகிறார். அதை விட இலங்கை அரசு சிறந்த கலைஞர்களுக்காக ஒவ்வொரு வருடமும் "கலாசூரி" விருது வழங்கி கௌரவிக்கின்றது. இவ்வாறு நாட்டியக் கலை பல்வேறு பரிமானங் களுக்குட்பட்டு மிகவும் துரித வளர்ச்சியைப் பெற்றது. இவ் வகையில் தமக்கு என்று ஒரு துறையினை பெற்றுள்ளது. ஆகவே இலங்கையில் நாட்டியத்தின் வரலாறு மிகவும் பழமை பொருந்தியதொன்றாகவும் பல்வேறு சமூகப் பொருளாதார மாற்றங்கள் பல்வேறு மன்னர்களின் படையெடுப்புடனிலிருந்தும் தப்பி இப்பொழுது ஒரு புதிய பரினாமத்தைப் பெற்று விளங்குவது ஆடல் வல்லானின் கருணை என்றே கூற வேண்டும்.

□□□

# நாம் இனிக்கலங்கிட மாட்டோம்

அவதரித்து விட்டோம் அவனியிலே
அல்லல் படும் மானிடராய்
கண்களில் பார்வைதான் இல்லை ஆனால்
செவிப் புலனிலே அனைத்தும் அறிந்திடுவோம்.

காதுகள் தான் கேட்பதுமில்லை
வாய்தான் பேசிடமுடியவில்லை
ஆயினும் பார்த்து உணர்ந்திட
விழிகள் உள்ளனவே

கால்கள் இல்லை என்ற கவலையில்லை
நம்பிக்கைக் கால்கள் பூட்டிக்கொண்டு
நன்றாக நாமும் நடமாடிடுவோம்
நாளும் நம் வேலையில் நனைந்திடுவோம்

வரைந்திடக் கைகள்தான் இல்லை
நல்ல இரண்டு கால்கள் இருக்கிறதே பென்சில் பிடித்திட
பேசிட முடியாவிடினும்
சைகை இருக்கின்றதே

பார்வையிலே நாங்கள் அழகில்லை எனினும்
நல்ல மனதை நாம் மட்டும் கொண்டுள்ளோம்
அர்ப்பணிப்புடன் ஆதரவாக கற்பிக்க
தம் வாழ்வையே அர்ப்பணிக்கும் தெய்வங்களாக ஆசிரியர்களும்

வாழ்க்கையில் போராட்டங்களை சந்தித்தோம் அதில்
எத்தனையோ சவால்களை எதிர்கொண்டு விட்டோம்
வாழ்ந்துவிட எமக்கு நம்பிக்கை என்ற ஆயுதமும்
நல்லோரும் உள்ளனரே நமக்கென்று

நமக்கென்று அச்சம் ஒன்றுமில்லை
நம்மிடம் பற்பல ஆற்றலும் ஆக்கத் திறன்களுமுண்டு
எம் கண்களிலெல்லாம் எதிர்காலம் தெளிவாக தெரிந்திட
கை கால்களில் சோர்வின்றி தன்னம்பிக்கையுடன்
வாழ்வில் நல் உறுதியுடன் வாழுவோமே இனி
நாம் இனிக் கலங்கிடோம்.

சி. துஷாந்தி
2ம் வருடம், விசேட கல்வி.

□□□

# மாற்று ஆற்றலுடையோரின் சவால்களும் சாதனைகளும்

**விஜயநிதி. இ**
2^ம் வருடம், விசேட கல்வி.

"மாற்றம் ஒன்றே மாற்றம் இல்லை" என்பதற்கிணங்க இருபத்தோராம் நூற்றாண்டிலே பல அற்புதங்கள் அதிசயங்கள் நிறைந்து கணினிகளிற்குள் சுழன்று சுற்றிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு மனிதரைப் போல மாற்று ஆற்றலுடையோரும் சளைத்தவர்களல்ல.

புவியிலே சஞ்சரித்துக் கொண்டிருக்கின்ற ஒவ்வொரு ஜீவனும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் மாற்று ஆற்றலுடையோராக காணப்பட்ட போதும் மீண்டும் பழமைக்கு திரும்பி விடுகின்றனர். அவ்வாறு பழைய நிலைமைக்கு மீளாதிருப்போரை OR மெது மெதுவாக மீள்வோரை மாற்று ஆற்றலுடையோர் என்கிறோம். அதாவது சாதாரண மாணவர் களிலும் பார்க்க உடல், உள சமூக மனவெழுச்சி என்பவற்றில் அதிக வேறுபாடுகளும் நுண்ணறிவு வேறுபாடுகளும், ஆற்றல் வேறுபாடுகளும், பல்வேறு தேவையுடையவர்களாக இருப்பவர்களை மாற்று ஆற்றலுடையோர் என்கின்றோம். மாற்று ஆற்றலுடையோர் தொடர்பான அறிவு இன்று நமது சமூகத்திலுள்ள அனைவருக்குமே மிகவும் இன்றியமையாத தொன்றாகக் கொள்ளப் படுகின்றது. ஆதனால் தான் இன்று இத்துறை தொடர்பான முன்னொடுப்புக்கள் துரித கதியில் மேற்கொள்ப்பட்டு வருகின்றன. அத்துடன் நமது நாட்டுச் சூழ்நிலைகள் காரணமாக நாளுக்கு நாள் அதிகரித்து வரும் மாற்று ஆற்றலுடையோரின் எண்ணிக்கையானது இத்துறை தொடர்பான விளக்கங்களை அறிவிக்க வேண்டிய முக்கிய அம்சமாகக் காணப் படுகின்றது.

உலகிலே காணப்படுகின்ற நவீன விஞ்ஞான செயற்பாடுகள் ஆய்வுகள் மூலம் அனைவருக்கும் அடிப்படைக்கல்வி வழங்கி அவர்களையும் ஒளிப்பாதையில் பிரவேசிக்க வைக்கின்றனர்.

ஆயினும் ஒளிப்பாதையில் பல்வேறு காரணங்களினால் பிரவேசிக்க மடியாத மக்கட் தொகுதியினர் அதாவது விலத்தப்பட்டு விட்டு அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் எத்தனை ஆயிரம் சவால்களை எதிர்கொள்கின்றனர். ஆம்,

"வாழ்க்கை ஒரு சவால் அதை வெற்றிகரமாக தன்னம்பிக்கையுடன் தன்கை உதவியுடன் எதிர்கொள்" என்ற வீரமொழிக்கிணங்க சாதாரணமாக நடமாடுகின்ற ஒவ்வொரு மனிதர்களுக்கே ஓராயிரம் சவால்களெனின் மாற்று ஆற்றலுடையோர்க்கும் குறி தப்புவதில்லை. "சிறு துளியிலிருந்தே பெருவெள்ளம் போல" அவர்களுக்கு குடும்பத்திலிருந்து பாடசாலை சமூகம் உலகம் உறவு என உலகை சுற்றிசுற்றி சவால்கள் தான் ஏராளம். மேற்கூறப்பட்ட ஒவ்வொரு தரப்பும் உடலாலும் உள்ளத்தாலும் உபத்திரத்தாலும் சில வேளைகளில் உதவி செய்வதாலும் மாற்று ஆற்றலுடையோரிற்கு சாவாலாகின்றனர்.

மாற்று ஆற்றலுடையோரின் சவால்களை நோக்குவோமானால் குடும்பத்திலுள்ளவர் தம் பிள்ளைகளையே பெரும் சுமைகளாகவும், தமக்கு தண்டனைக்காக கிடைத்திருக்கிறார்கள் எனவும், தமக்கு அது பெரிய கௌரவக் குறைச்சலாக கடவுளை நொந்தும் அப்பிள்ளையை வஞ்சிக்கிறார்கள், வதைக்கிறார்கள், வருத்தம் புரியாது அறைகளில் மறைத்து வைக்கிறார்கள். சிலவேளைகளில் எமனாகவும் மாறிவிடு கின்றார்கள்.

தம் சேவைகளை சிறப்புற நிறைவேற்றிவிட்டு அவர்களை புறக்கணிக்கிறார்கள். தம் உறவுகளுக்கு மறைக்கின்றார்கள் என்ன செய்ய முடியும் கடவுளே! பெற்றவளே உற்றோர்களே புறந்தள்ளினால் அந்த நடமாடும் ஜீவன் எங்கு செல்வது? ஒவ்வொரு மனிதனும் உடலால் தாக்கப்படுவதை விட உளத்தால் பாதிக்கப்பட்டு நொருங்கிப்போய்விடுவான் "கண்ணாடி மீது கல் பட்டது போல" இவ்வுறவுகளெல்லாம் இவர்களைத் துண்டு துண்டாக நொருக்கி பாடசாலைச்

சமூகத்திற்கு அனுப்பும் போது அவர்கள் எல்லோரும் அப்பிள்ளைகளை அரவணைப் பார்கள் என்பது கேள்விக்குறியே ஏனெனில் அங்குள்ள ஆசிரியனும் சாதாரண மனிதன் தானே அத்துடன் மாற்று ஆற்றலுடைய பிள்ளை களிற்கென்று தனித்தனியாக பாடசாலைகளும் இல்லை. சாதாரணமாக காணப்பகின்ற பாடசாலை களும் இவர்களை ஏற்க மறுக் கின்றன. உட்படுத்தல் கல்வி வந்த பிறகும் அதனை எல்லாப் பாடசாலைகளும் நடைமுறைப் படுத்துவதில்லை. தம் கல்லூரி வரலாறு பாரம்பரியம் என கங்கணம் கட்டிக் கொள்கிறார் கள் அவர்களும் எங்களைப் போல ஒரு ஜீவன் தானே தவறி எனக்கொரு நிலை வந்திருந்தால் நான் என்ன நிலை தடுமாயிருப்பேன் என ஒவ்வொன்றை யும் தன் தன் நிலையிலிருந்து சிந்திக்க தவறி விடுகின்றனர்.

கல்வியே வளம், கல்வியே பலம், கல்வியே செல்வம், கல்வியே அனைத்தும் இவ்வுலகத்திலே அசைக்கமுடியாதவோர் சித்தாந்தமாக உள்ளது கல்வியே. அக்கல்வியைப் பெற்று அவர்கள் கரை கண்டு வேற்று கடல் காணாவிட்டாலும் கடலுக்குள் நுழையவாவது அவர்களிற்கு தேவை யான, அடிப்படையான, அவர்களால் புரிந்து கொள்ளக் கூடிய கல்வியை கற்பிக்க ஞான விளக்குகளாக திகழும் ஆசிரியர்களும் தவறி விடுகின்றனர். இந்த ஆசிரியர்களிற்கு ஏற்றாற் போல பெற்றோர்களும் இப்பிள்ளைகளை பாடசாலைக்கு 10 வயதிற்கு மேல் தான் அனுப்ப நினைக்கின்றார்கள், அனுப்புகின்றார்கள். மற்றப் பிள்ளைகளைப் போல அவர்களின் கல்வியில் அக்கறை காட்டுவதில்லை ஆக்கம் ஊக்கமளிப் பதில்லை.

ஒவ்வொரு மனிதனும் பிறந்து, பிறந்த பயனின் படி வாழ நல்ல கல்வியைப் பெற வேண்டும் அக்கல்வியைப் பெற்றே வாழ வேண்டும் அதற்கு இவ் ஆசிரியர்கள் "மெழுகாக உருகி" கொடுக்காது மெழுகுகளை உருக்கி அதாவது அப்பிள்ளைகளின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்குககின்றார்கள்.

உதாரணத்திற்கு ஒரு பாடசாலையில் அதாவது உட்படுத்தல் கல்வியுடைய பாடசாலை யில் இப்பிள்ளைகளை ஒதுக்கி வைக்கின்றனர். மனவருத்தத்தை ஏற்படுத்தக் கூடிய சொற்களை பிரயோகிக்கின்றனர். இவ்வாறான தடைகளை உடைத்தெறிந்து வெளிவந்து ஓர்அளவு முன் னேறிய பின்பும் தம் மணவாழ்க்கை போன்ற எத்தனையோ சவால்களை எதிர் கொள்ள வேண்டி யிருக்கின்றது.

இப்பிள்ளைகளிற்கு உரிமை கூறக்கூடியதாக யாழ் குடா நாட்டில் வாழ்வகம் விழிப்புல வலு விழந்தோர்களுக் கெனவும் நவீல்ட் செவிப்புல விழிப்புல வலுந்தோருக்கெனவும் சிவபூமி, ஆக் ஆகிய இரண்டு மன வளர்ச்சி குன்றியோர் களிற்கெனவும் உருவாக்கி செயற்பட்டு வருவது அவர்களிற்கு ஓரளவு மன ஆறுதலை தந்தாலும் இந்நான்கு நிறுவனங்கள் மட்டும் இருப்பது பெரும் சவாலாகவே காணப்படுகின் றன. இவற்றிற்கெல்லாம் முக்கிய காரணமாக மாற்று ஆற்றலுடையோர் தொடர்பான சரியான உண்மையான விழிப்புணர்வுகள் பெற்றோரிட மும் ஆசிரியர்களிடமும் சமூக உறவுகளிடமும் நட்புறவுகளிடமும் காணப் படாமையே, சில மூட நம்பிக்கைகளை கை விடாது காப்பாற்றி வருவது பெரும் சவால்கள். சில விழிப்புணர்வுகளை விளங்கியும் ஏற்றுக் கொள்ளும் மனம் இல்லாமை.

ஓரளவிற்கு பாடசாலைகளில் நிர்ப்பந்தங் களுக்கமைய மாணவர்களை ஏற்றாலும் அவர்களுக்கு கற்பிக்கும் விதங்கள் பற்றி அவ் ஆசிரியர்களிற்கு பயிற்சிகள் இல்லாமை அதாவது விசேட கல்வித்துறை தொடர்பான அதாவது மாற்று ஆற்றலுடையோரிற்கு தேவையான துறைசார் பயிற்சிகள் நவீன யுகத்திலே புதிதாக அவர்களிற்கென உருவாகி வருகின்ற உபகரணங் கள் பற்றி அறிய விரும்பாமை அவை தொடர்பாக கல்வி கற்காமை.

மாற்று ஆற்றலுடையோரிற்கு கற்பிக்க வென நியமிக்கப்படும் ஆசிரியர்களும் குறைவு. அவர்களிற்கும் சமூகத்தில் மதிப்பில்லை. அவர்களுக்கு ஒருவித ஊக்குவிப்புக்களும் வழங்கப்படுவதில்லை.

பொதுவாக நோக்குவோமாயினால் இம் மாணவர்களுக்கான சவால்களாக பெற்றோர்கள் ஏற்கிறார்கள் இல்லை, பாடசாலை சமூகம்

ஏற்கிறதில்லை, அவர்களுக்கென அவர்களுக்குத் தேவையென உள்ள வளங்களை யாரும் கொள்வனவு செய்து கொடுப்பதில்லை. சமூகத்தில் உள்ள உறவுகளும் ஏற்பதில்லை மதிப்பதில்லை.

மாற்று ஆற்றலுடையோர் சவால்களை எதிர் கொள்கின்றனர் என்பதை தெளிவாக வெளிப்படையாக எல்லோரும் அறிய இன்னும் எத்தனையோ மாற்று ஆற்றலுடையோர் எதுவித முன்னேற்றமும் இன்றி வீடுகளில் முடக்கப் பட்டிருப்பதன் மூலமும் எத்தனையோ ஜீவன்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற யாழ்குடாநாட்டிலே 4 நிறுவனங்கள் மட்டுமே காணப்படுவதிலிருந்தும் அரசினால் ஒரு நிறுவனம் கூட யாழ் குடா நாட்டில் அரசினால் நிர்வகிக்கப்படவில்லை போன்ற இரண்டு விடயங்களுல் அப்பட்டமான உண்மையாக வெளியாகின்றது.

"ஒவ்வொரு விடயத்திலும் நன்மை தீமை உண்டு போல" "நாணயமொன்றிற்கு பூ, தலை இரு பக்கம் போல" எத்தனை சவால்கள் தான் எங்களை எதிர் கொண்டு நின்றாலும் தகர்த்தெறிந்து நீச்சலடித்து கரை காண்போம் என்ற ஓங்கிய ஓசையின் விளைவுகளும் எவ்வளவோ! எம் கண்களுக்கு தென்படுவதில்லை, ஆயினும் அவற்றை நோக்குவோமானால் எத்தனையோ தனவந்தர்கள் ஒருவித குறைகளையும் தம்மகத்தே கொண்டிராத போதும் கல்வியை ஒரு பொருட்டாகவே நினைப்பதில்லை. அலட்சியப்படுத்திய வெளிநாட்டு மோகத்தை நாடும் இக்கால கட்டத்தில் மாற்று ஆற்றலுடையோரின் சாதனையோ! எத்தனையோ! ஆம் முழு மனிதனாக இருந்தும் ஒரு விதம் கூட தன் வீட்டிற்கு நாட்டிற்கு என பங்களிப்பு செய்யாது தங்கியிருப்போர்களாக காணப்படுகின்றவர் மாற்று ஆற்றலுடையோரில் விழிப்புல வலுவிழந்தோர் கல்வியில் கூடிய வளர்ச்சியை கண்டுள்ளனர்

புள்ளிகள் மூலம் உருவான "பிறெய்ல்" எழுத்து முறையினையும் "அபக்கஸ்" என்ற கணித முறையினையும் சிறப்புற கற்றுத்தந்தோர் ஆசிரியராக, விரிவுரையாளராக, சட்டத்தரணியாக, எழுதுவினைஞராக இன்னும் பற்பல தொழில்களை புரிகின்றனர். செவிப்புல வலுவிழந்தோர் பற்றி நோக்கின் அவர்களால் உயர்கல்வி கற்கமுடியாவிட்டாலும் சைகை மொழி மூலம் உரையாடலையும் எழுத்து மூலம் கல்வியையும் கற்று ஓரளவு தம் எதிர்காலத்தை தம் சொந்த முயற்சியால் முன்னேற்றும் தொழில்களில் ஈடுபடுகின்றனர். அலங்கார வேலைகளில் ஈடுபடுகின்றனர். படப்பிடிப்பாளராக தையல் தொழில் செய்பவராக, எல்லாவற்றிலும் சமூக நற்பிரஜையாக காணப்படுகின்றனர். மற்றும் மாற்று ஆற்றலுடையோர் இந்தியாவில் பல்வித தொழில் நிறுவனங்களில் தொழில் புரிகின்றமை மிக முக்கிய விடயமாகும். மற்றும் இசைத்துறை நடனத்தறை ஓவியத்துறை போன்றவற்றை புரட்டி எடுக்கின்றனர். நீங்கள் நாளிதழில் நாளும் படித்திருப்பதில்லை? விழிப்புல வலுவில்லையெனிலும், இயற்கையை இரசித்தும் இசைத் தென்றலும், கால்களை இழந்தாலும் கைகளை ஊன்றுகோல்களை பாவித்து நாட்டிப்புயல்களும், கைகளை இழந்தாலும் காலோ முசு வாயைப் பயன்படுத்தி ஆச்சரியப்பட்டு அதிசயமளவிற்கு ஆராய்ந்து ஓவியங்களும் சொல்லிலடங்காத சாதனைகள் தான் இன்னும் ஏராளம்.

வாழ வழி தெரியாது திசை மாறி ஓடும் படகைப் போன்ற பரணியிலே சவால்களையும் உடைத்தெறிந்து சாதனைகளை நிலைநாட்டிட எதிர்காலத்தில் மாற்று ஆற்றலுடையோரின் சவால்கள் என்ற எண்ணக்கருவே இல்லா தொழிந்து பெற்றோர், மாணவர், சமூதாயம், பாடசாலை, ஆசிரியர்கள் போன்றோர் மத்தியில் நல்ல விழிப்புணர்வை ஏற்படுத்தி "உலகின் ஒளி முதலே சூரியனாம்" அதைப் போல மாற்று ஆற்றலுடையோரின் சாதனைகளில் பெரும் பங்கைப் பிடிப்பது வருங்கால விசேட கல்வித் துறை ஆசிரியர்கள் என்பதில் எந்தவித ஐயமின்றி எல்லோர் மனதில் பசுமரத்தாணி போல பதிவது திண்ணம்.

# நிஜமாகிப்போன நிழல்கள்


சி. பிரதீபன்.
JNCOE 2009 Art course, 10 th Batch.

ஓவிய, சிற்பக் கலைஞர்கள் என்றதும் ஒய்யாரமாய் ஒழிவு மறைவின்றி அழகை, அதுவும் பெண்களின் அழகை வரைபவர்கள், அல்லது அணு அணுவாய்ச் செதுக்குபவர்கள் என்று எண்ணும் வண்ணம் சில படைப்புக்கள் இருந் தாலும் அதற்கப்பால் ..... அவர்களது நுண்ணறிவு எவ்வளவு தூரம் இந்த உலகப் படம் பிடித்துள்ளது என்பதனை நாம் உணர வேண்டும்.

பழமையைப் பேணி கணனியுகம் வரை காத்து எமக்குக் கையளித்த பெருமை இவர்களு டையது அல்லவா.

சிற்பங்களும் ஓவியங்களும் சில சிற்றின் பத்தைச் சுற்றி நின்றாலும் அதனுள் புதைந்து கிடைக்கும் கோலங்கள் பல அக் காலத்தின் பதிவு களாகவே உள்ளன. ஆடைகள் முதல் மனித குலத்தின் ஆசைகள் வரை படம் காட்டுபவை இவையே.

ஓவியன் அகமும், புறமும் படம் பிடிப் பவன் அதனால்தான் ஒரு டாவின்சியால் மோனலிசாவின் ஓவியத்தைத் தர முடிந்தது. இன்று வரை அந்த புன்னகையின் அர்த்தம் புரியாது தடுமாறுகின்றனர். நரம்பியல் நிபுணர் கள் முதல் நாடி பார்க்கும் வைத்தியர் வரை அந்தப் புன்னகைக்கு அர்த்தம் காணத் துடித்துக் கொண்டு இருக்கின்றனர்.




மோனலிசா

எதிர் காலத்தில் நடக்க வேண்டிய வற்றிற்கு நம்பிக்கை யுடன் உருக் கொடுக்க நுண் அறிவும் கற்பனைத் திறனும் அவசியம். அவை யின்றி எதனையும் புதிதாக உருவாக்க முடியாது.

பறவையைக் கண்டான் விமானம் படைத்தான் என்றால் அந்த விமானத்திற்குரிய வடிவத்தை விஞ்ஞான ஆய்வுகள் எதுவும் நடைபெறாத இற்றைக்கு 500 ஆண்டுகளுக்கு முன்னரே வரைந்து காட்டியவர் ஓவியர் டாவின்சி.

அது மட்டுமல்ல ஒரு குழந்தை தாயின் வயிற்றில் எப்படி இருக்கும் என்பதனை முதல் முதல் வரைந்து காட்டிய வரும் அவரேதான்.



அது மட்டு மல்ல விமானம் கண்டு பிடிப்பதற்கு முன்னரே விமானத்தை வரைந்து அதில் இருந்து குதிக்கும் பரசூட் எனப்படும் பாதுகாப்புக் குடையையும் வரைந்து 500 ஆண்டுகளுக்கு முன்னரே இன்று வாழ்வபர் களுக்கு உரிய பார்வையையும் அறிவையும் முன் கூட்டியே பெற்றிருந்தவர் இந்த மாபெரும் ஓவியர். மனிதனின் உடற் கூறுகளை துல்லியமாக வரைந்து தள்ளியவரும் இவரே.



மேலை நாடுகளில் ஓவியம் ஒரு பிரதான மான பாடமாகத் திகழ்வதற்கான காரணம் அதனை ஒரு கலையாக மட்டும் பார்க்காமல் அதனுள் புதைந்து கிடக்கும் நுண்ணறிவுத் திறன், ஆக்கசக்திகளுக்கான களஞ்சியம் என்று அதனை நோக்குகின்றனர்.

ஒரு உண்மையான ஓவியன் சமூக வைத்தியன், சிறந்த சிற்பி பெரும் கவிஞன், தத்துவ மேதை, விஞ்ஞானி என பல் வேறு வடிவங்களில் நோக்கப் படுகின்றார்.



லியனோர்டா டாவின்சி

இதற்கு உதாரணமாக வாழ்ந்தவர் லியனோர் டாவின்சி ஆவார். இவர் 15.04.1452 இத்தாலியில் பளோரன் நகர் அருகே இருக்கும் "வின்ஸி" என்ற கிராமத்தில் பிறந்தார். 1503 ஆண்டளவில் மோனலிசா என்ற மர்மப் புன்னகை அரசியின் ஓவியத்தை வரைந்தார். 02.05.1519 காலமானார். தன் வாழ்நாள் முழுவதும் மனித குலம் இன்று அனுபவிக்கும் சுகங்களுக்கான சூத்திரதாரியாக விளங்கினார்.

## Stress

A Lecturer when explaining stress management to an audience,
Raised a glass of water and asked,
"How heavy is this glass of water?"

Answers called out ranged from 20g to 500g.

The lecturer replied, "The absolute weight doesn't matter."
It depends on how long you try to hold it.
If I hold it for a minute, that's not a problem.
If I hold it for an hour, I'll have an ache in my right arm.
If I hold it for a day, you'll have to call an ambulance
In each case, it's the same weight, but the longer
I hold it, the heavier it becomes."

He continued,
"And that's the way it is with stress management.
If we carry our burdens all the time, sooner or later,

As the burden becomes increasingly heavy,
We won't be able to carry on."

"As with the glass of water,
You have to put it down for a while and rest
before holding it again.
When we're refreshed, we can carry
on with the burden."

"So, before you return home tonight, put the
burden of work down. Don't carry it home. You
can pick it up tomorrow."

"Whatever burdens you're carrying now,
Let them down for a moment if you can.
So, my friend, put down anything that may be
a burden to you right now. Don't pick it up again
until after you've rested a while."

Form a dear friend
T.Mohan, Lecturer, Jaffna NCOE.

## Some Strategies to improve English

**S.Muguntthan,**
English Lecturer,
Jaffna NCoE.

When people think of a language, which consists the four skills: speaking, listening, reading and writing. All of them are important, and all of them should be learnt. But unfortunately examinations usually test reading and writing skills merely, the speaking and listening skills are often forgotten or are given very little teaching time. This action on written skills may well produce pupils who can pass the examination, but it does not help them to learn an English which will be useful to the students outside the school, where the speaking skill will be important. To change this situation, two things are to be done in the school system. They are:

1. 'written examination' and 'oral/practical examination' should be considered for the examination in Schools, just like Music, Dance and Art subjects.

2. Students should participate co-curricular activities in English.

Teaching cannot cover everything in the classroom. It is common for schools to hold some of their activities in the evenings or on non-teaching days. These co-curricular activities may or may not be compulsory, but they are very valuable and necessary.

There are three ways for holding the activities out of the classroom.

1. Teachers help pupils to learn more English by giving them extra practice in the use of English.

2. They help to develop social and other skills. Eg: How to hold meetings? Run committees, write reports and co-operate with others.

3. They teach pupils how to cope with real problems such as budgeting or working to deadlines.

These points apply to all co-curricular activities how they are used to support English Teaching.

These activities are not compulsory. Indeed, they provide a good way for those pupils who have a special interest in English to do more and to get more personal attention from their teachers. There are some of the co-curricular activities, running an English Club, A journalism club, a reading club, debating, Drama, producing a play, action songs group which involve both spoken and written English.

**Running an English Club**

English is not only for using in schools but has great value outside the school. There are often very able pupils who need a way to use their English and improve it outside the classroom. One of the best ways is to run an English Club. This can be loose federation of societies und the patronage of the English department, but it will often be the case that the member of staff most interested in drama is not the English Teacher, so each school should develop its own method of organizing the activities. It is even possible that there can be more than one drama or debating club in a school.

**A Journalism club**

This operates a 'wall newspaper' which its reporters keep up to date in the fashion of new reporters. They have editors and an editorial board. They can ask to be given the job of giving a news bulletin to assembly every day or every week. The journalism club can also be responsible for producing the school magazine.

It is important that the club has access to a radio if they are going to report on events outside the school. The club should also venture out of the school

and if there are professional media organizations nearby, it is worth organizing the occasional visits to studios or newspaper offices.

**A reading club**

A reading club is a good way for staff to help pupils who have a special interest in reading. It can be a substitute for a poor library and with a little organization, can enable a limited number of pupils to read a great deal. In the meetings the members of the reading club should report to each other about books which they have read and what they liked and did not like.

**A Field Trip**

Selecting places, International Non Governmental Organizations, where English atmosphere is available and make arrangements for the for the field trip and give opportunities to interact with the people who may be English Speaking people. This condition gives a different exposure of English for the students and they can try to speak with them. It is the real life situation which is in need in future to the children.

**Debating**

A debating or public speaking club can take responsibility for organizing all types of activities, from quizzes, to public speaking and debates. They may also arrange talks by outside speakers.

Debates are a formal way of organizing speaking, and a good means of developing pupils' confidence in any language. They often have quite complex rules- in fact, there are different rules for different types of debate but organizers should take care that the pupils and students do not come to pay so much attention to the rules that they lose the enjoyment of speaking well in public atmosphere. What are the benefits of debates?

1. They teach us to speak in a formal and organized way on special occasions.
2. They make us organize our thoughts.
3. They make us think about issues.
4. They make us discipline ourselves in respect to time.
5. They make us able to defend our ideas against reasoned 'attack'
6. They make us learn how to summarize.
7. They teach us to listen and respect other people's point of view.

A debate is a discussion which follows laid-down rules. There are different ways to conduct a debate. The main aim is always to present arguments for and against a topic. The topic is presented in the form of a motion such as :

" This House believes that weapons are better than words".

There are always two teams of speakers: one speaking for the motion and against the motion.

**Drama**

Drama is an excellent way to improve pupils' language skills. Those who act those who have other jobs to do in a drama production and the audience all benefit. We have said before that spoken language has to be swift and fluent to be natural. Drama is one of the best ways to encourage fluent speech and to help children use language in a more or less natural context. Some teachers like dramas to be such a serious business that neither the cast nor the audience are allowed to have any fun, but drama can be simply for entertainment, as well as a serious support to learning English; there is nothing wrong with this.

Drama is often used to make an educational point through entertainment. This may be part of the education already going on in the school, or it may be to give specific important messages.

On the other hand, English, by watching drama, is easily acquired and can be used gradually, if it is the same atmosphere. Shakespearean English gives

us confidence in using language, but it is not possible to use in our own atmosphere. So, Watching Sri Lankan Drama in English is much useful to improve spoken English within short time.

### Action songs

English Songs can be selected according to the age level and let them practice with the meaning. Suitable materials scripts, karaoke and Cds are available at bookshop or from browsing. Teacher can practice and then give practice to the students who are very inquisitive to perform along with the tune. When students perform and involve in organizing action songs, they can get some confidence which let them to talk very fluently.

### Conclusion

Considering above tools and the facilities, teachers and students can enrich the environment with the natural English. Each term may be used allocating various types of items  ·d everybody should participate at least one item. If all the students and teachers think and implement in schools, learning English is not a huge thing.

### Applying Language Learning Strategies




## நற்பணியாற்றிட விரைந்திடுவீர்

உலகிற்கு ஒளியாய்
உண்மையின் வழியாய்
உவர்ப்பற்ற உப்பாய்
சமூகத்தின் சிற்பமாய் – தினம்
துலங்கும் ஆசான்களுக்கோர்
அன்பு நிறை அறை கூவல்

தினம் தினம் வேதனையால்
யாருமற்ற அனாதைகளாய்
இன்றிருக்கும் சின்னஞ் சிறுசுகளுக்கு
நம்பிக்கை தீபங்களாய் விளங்கிடுவீர்

பறந்து கொண்டிருக்கும் இவ்வுலகிற்கு
பண்புடனே பணியாற்றிட
போரில் தாக்குண்டவர்களுக்கு
பொறுமையேற்று பணி செய்ய விரைந்திடுவீர்

அந்தரித்து அல்லலுறும் எம் சமூகத்திற்கு
தாழ்மையாய் தாராள மனம் கொண்டு
தயாள உள்ளத்துடன் பணியாற்ற
அன்புடனே விரைந்திடுவீர்

ஆர்வமாய் ஆனந்தமாய் இறை பக்தியுடன்
விழிப்புடனே பணியாற்றி
ஞானத்தின் குழந்தைகளை பிரசவித்து
நிறைபணியாற்றிட அழைக்கின்றார்
எம் பெருமான் இயேசு

இந் நற்பண்புகளை ஆசான்கள்
தம் இதயத்தில் தாங்கி
இங்கிதமாய் இன்பமாய்
இறைபணியாற்ற அழைக்கின்றோம்.

அருட் சகோதரி மெரினா
2ஆம் வருடம் கிறிஸ்தவதுறை

# தத்தெடுக்கப்பட்டோம்

மும்மூன்று ஆண்டுகள்
கல்லூரி அன்னை பல
ஆசிரியக் குழந்தைகளைக்
கருத்தரித்து இப் பாருக்குப்
பரிசளித்தாள் – ஆனால்
அவை அத்தனையும் தாண்டி
அவள் கிறிஸ்த்தவத்துறையையும் தன்
பத்தாம் வருட கருத்தரிப்பில்
மேலதிக பிள்ளைகளாக
தத்தெடுத்தாள் – காரணம்

நாம் எங்கள்
நிரந்தர வதிவிடத்தை
நிலையான வாழிடம் தொலைத்து
தரித்து நிற்க சிறு
நிழலற்றுத் தவித்த எம்
வன்னி சகோதரர்களுக்குக்
கொடுத்து நாம் நின்று
பயில இடமிழந்து தவித்தோம்

எம் தாய் நாட்டின்
நடு நிலைமை
தவறிய போக்கினால்
நாங்கள் மூரண்டு
மாதம் கல்லூரிக் கல்வியை
மறந்து எங்களுக்குரித்தான
கல்லூரியை இழந்து
யாழ் கல்வியற் கல்லூரியில்
தத் தெடுக்கப்பட்ட பிள்ளைகளானோம்

அழுகையும்
அங்கலாய்ப்பும்
எங்களுக்கொன்றும்
புதிதாகத் தெரியவில்லை
யாழ் வருவதற்கு வழிதெரியாது
யாழ்ப்பாணமே எப்படி எனப் புரியாது
கொதி நீரில் விழுந்த
அரிசியைப் போல் நாங்கள்
எங்களுக்குள்ளேயே
புழுங்கிப் புழுங்கி
எம் நிலையை எவருக்கும்
சொல்லவும் இயலாமல்
மெல்லவும் இயலாமல்
துடிதுடித்த நாட்கள்
இன்னமும் எம்
மனச்சுவர்களிலே
வெட்டப்பட்ட
கல்வெட்டுக்களாய்
காட்சி தருகின்றது
இன்று போல் அன்று நாம்
யாழுக்கு வந்தது
வசுவண்டிகளில் அல்ல
கொதிக்கும் மனங்களோடு
கொந்தளிக்கும் கடலிலே
கண்களில் நீர்
கொட்டக் கொட்ட
கப்பலிலே வந்தோர்
எம்முள் பலர்
நாடு விட்டு நாடு செல்வது போல்
நடு நடுங்கும் உள்ளத்தோடு
உயரப் பறக்கும் விமானத்தில்
ஏறி இங்கு வந்தோர்
எம்முள் சிலர்

எம் உள்ளத்து வலிகளை
உள்ளேயே உறையவைத்தோம்
புதிதான ஓரிடத்தில்
கால் பதித்தோம்
அது தான் யாழ் கல்லூரி
இங்கு பீடாதிபதி எம்மை
இருகரம் நீட்டித் தத்தெடுத்துக் கொண்டார்
இந்த நிகழ்வினால்
எம் உள்ளத்திலே
உறைந்து போயிருந்த

அத்தனை வலிகளும்
பனி போல உருகிப்போயின.
நாம் இக் கல்லூரிக்குத்
தத்தெடுக்கப்பட்ட பிள்ளைகள்
என்றாலும் நாங்களும்
கல்லூரி அன்னையின்
அன்பான அரவணைப்பில்
தான் பெற்ற பிள்ளைகள்
என்று நோக்கப்பட்டோம்
சகல உரிமைகளும்
கடமைகளும்
வழங்கப்பட்டு
எம் வாழ்வும்
வசந்தமாக்கப்பட்டது.

கல்லூரியின் பீடாதிபதியும்
கல்வியலாளர்களும் எம்
சக ஆசிரிய மாணவர்களும்
காட்டிய அன்பில்
நாங்கள் எங்கள்
மெய் மறந்து
எங்களுக்குள் இருந்த
எல்லாக் கவலைகளும்
துறந்து சுதந்திரம் பெற்ற
நாடு போலானோம் என்றால்
அவ்வாக்கில் பொய்யில்லை
யாழ் ஒரு தமிழ் தேசம்.
யாழ் மக்கள் அதிலே
ஒரு தனிப் பாசம் எமக்கும்
ஒரு புது நேசம்
இது தான் இனி என்றும்
எம் சுவாசம்

இன்று எம் உரிய
கல்லூரி எமை அழைத்தால்
நாம் அங்கு செல்ல
தயாருமில்லை
எமை இங்கிருந்து
அனுப்புவதற்கு எம்
பீடாதிபதிக்கு
விருப்பமும் இல்லை
ஏனெனில் எமை
அவர் தத்தெடுத்துக்
கொண்டார் – நாம்
அவரினால் தத்தெடுக்கப்பட்ட
பிள்ளைகள்...............

S.P.A.R. கிஷானி
கிறிஸ்தவத்துறை, 2ஆம் வருடம்.

---

The greatest lesson in life is to know that even fools are right sometimes.
He has all the virtues I dislike and none of the vice I admire.
An appeaser is one who feeds a crocodile, hoping it will eat him last.
It has been said that democracy is the worst form of government, except all the others that have been tried.

Winston Churchill:

Speak softly and carry a big stick; you will go far.
The best executive is the one who has sense enough to pick good men to do what he wants done, and self - restraint enough to keep from meddling with them while they do it.
No man is justified in doing evil on the grounds of expediency.

Teddy Roosevelt:

No man has a good enough memory to make a successful liar.
Always bear in mind that your own resolution to succeed is more important than any other thing.
You cannot help men permanently by doing for them what they could and should do for themselves.

Abraham Lincoln:

# கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் இடையில் காணப்படும் தொடர்புகளும் காரணிகளும்

செல்வி கிரிஜா கந்தசாமி
கல்வியியலாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வி கல்லூரி.

கற்றலும் கற்பித்தலும் இரு வேறுபட்ட பதங்களாக விளங்கியபோதிலும் இவற்றின் செயற்பாடுகளுக்கிடையே நெருங்கிய தொடர்பு இருப்பதைக் காணலாம். கற்றலும், கற்பித்தலும் மனிதனை மேம்படுத்த உதவும் சிறந்த நடத்தை களாக விளங்குகின்றன.

ஒரு உயிர் இது வரை கடைப்பிடித்து வந்த அனுபவங்களையும் நடத்தைகளையும் காலப் போக்கில் படிப்படியாகவும் மெதுவாகவும் மாற்றி புதிய அனுபவங்களையும் நடத்தைகளையும் கடைப்பிடிக்கச் செய்யும் பாரிய மாற்றமே கற்றல் ஆகும் என கோட்ஸ் கில்காட் ஸ்கின்னர் போன்ற கல்வி உளவியலாளர்களின் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு கற்றலை வரைவிலக்கணப் படுத்தலாம்.

இது போன்ற கற்பித்தலின் வரைவிலக் கணமும் இதனுடன் பெருமளவு தொடர்பு உடையதாக அமைந்துள்ளது. "கற்றல் அனுபவங் களையும் தொழில்நுட்பங்களையும் திட்டமிட்டு ஒழுங்குபடுத்தி கற்பதற்கான சூழ்நிலையும் விளக்கங்களையும் உருவாக்கி மாணவர்களை வழிப்படுத்தி ஊக்குவித்துக் கற்றலை இலகுபடுத்தி அவர்களின் நடத்தையிலும் அனுபவத்திலும் மாற்றத்தை ஏற்படுத்துவதே கற்பித்தலாகும்." எனக் கற்பித்தலை வரைவிலக்கணப்படுத்தலாம்.

கற்றலினதும் கற்பித்தலினதும் இலக்கு பெருமளவில் ஒன்றாகவே அமைந்துள்ளது. கற்போரின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்து வதே கற்றலின் முக்கிய இலக்காகும். இது போன்றே குறித்த விடயத்தைக் கற்போருக்கு இலகுவில் விளங்க வைத்து அவர்களின் நடத்தை யில் ஒரு பொருத்தப்பாடான மாற்றத்தை ஏற்படுத்து வதே கற்பித்தலின் இலக்காகும்.

கற்றலின் வெற்றிக்கு கற்பித்தல் மூல ஊற்றாக அமைந்துள்ளது. கற்பித்தல் தொழில் நுட்பங்கள் கற்பித்தல் விளக்கங்கள் கற்போரின் ஆளுமைத்திறன் போன்ற கற்பித்தல் கூறுகளே கற்றலின் வெற்றியை நிர்ணயிக்கும் முக்கிய காரணியாக அமைந்துள்ளது.

கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்பட்டபோதிலும் சில வேறுபாடுகள் இருப்பதையும் அவதானிக்கலாம். கற்போர் மாணவர்களாகவும் கற்பிப்போர் ஆசிரியர்களாகவும் விளங்குகின்றனர். கற்கும் மாணவர்கள் கற்கும் விடயத்தில் அறிவும் அனுபவமும் குறைந்தவர்களாகவும், கற்பிக்கும் ஆசிரியர்கள் கற்பிக்கும் விடயத்தில் போதிய அறிவும் அனுபவமும் மிக்கவர்களாக விளங்கு கின்றனர்.

கற்றல் செயற்பாடுகளும் கற்பித்தல் செயற்பாடுகளும் எதிர் எதிரான செயற்பாடுகளாக அமைந்துள்ளன. கற்பதில் ஈடுபடுதல் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல், அவதானித் தல், கிரகித்தல், கேள்விக்கு விடையளித்தல், கேள்வி கேட்டல் செய்முறைப் பயிற்சியில் ஈடுபடல், பரீட்சை எழுதல் பணிந்து போதல் என்பன கற்றலின் செயற்பாடுகளாக அமை கின்றன.

ஆனால் கற்பித்தல் செயற்பாடுகள் இதற்கு எதிர்மாறாக அமைகின்றன. விடயத்தை இலகுவில் விளக்குதல், கேள்விகளுக்குச் சரியான விடை பகர்தல், செயல்முறைப் பயிற்சிகளை ஒழுங்கு செய்தல், கற்றலுக்கான சூழ்நிலையையும் வளங்களையும் உருவாக்குதல், வழிகாட்டல், மதிப்பிடல் என்பன கற்பித்தலின் செயற்பாடு களாக அமைகின்றன.

கற்றலிலும் கற்பித்தலிலும் கற்கும் மாணவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். கற்க ஒரு மாணவன் இல்லையேல் கற்றலுமில்லை கற்பித்தலும் இல்லை. கற்பிக்கின்றவனான ஆசிரியன் இன்றியும் கற்றல் நிகழலாம். ஆனால் கற்பவனான மாணவன் இன்றிக் கற்றலும் கற்பித்தலும் நிகழ முடியாது. அதனால் கற்றல் கற்பித்தல் என்பனவற்றின் நிலைக்களமாக அமைபவர்கள் மாணவர்களே.

எனவே மாணவர்களிடையே கற்றலுக் கான ஆர்வத்தைத் தூண்டி கற்றலை முன்னெடுக் கும் பொறுப்பு கற்பித்தலுடைய தாகும்.

கற்றல் கற்பித்தல் என்பனவற்றின் வெற்றி மாணவர்களின் ஆளுமை, மதிநுட்பம், திறமை போன்ற காரணிகளிலேயே தங்கியுள்ளது. கற்றலில் ஈடுபடும் மாணவர்கள் அனைவரும் ஒரே தகுதியுடையவர்களாக இருக்கமாட்டார்கள். இவர்களிடத்தில் அறிவு, திறமை போன்ற அம்சங்களில் வேறுபாடுகள் இருக்கலாம். சிலர் திறமைசாலிகளாகவும், சிலர் திறமை அற்றவர் களாகவும் இருப்பர். இதற்கு ஏற்ப கற்றல் கற்பித்தல் திறமைகள் அமைய வேண்டிய பொறுப்பு கற்பித்தலுடையதாகும்.

கற்றல், கற்பித்தல் நிலைகளில் கற்பிப் பவராகிய ஆசிரியரின் நிலையும் முக்கியமாகும். கற்றலின் வெற்றி மாணவர்களின் திறமையில் தங்கியுள்ளது. ஆசிரியரின் ஆளுமைத்திறன், அறிவுத்திறன், கற்பிக்கும் நுட்பம் போன்ற வற்றிலும் கற்றல், கற்பித்தல் வெற்றி தங்கியுள்ளது. மாணவர்களைப் போன்ற ஆசிரியர்களும் கற்பிக்கும் திறன், அறிவு போன்ற துறைகளில் வேறுபாடுடையவர்களாக இருப்பர். கற்றல், கற்பித்தல் வெற்றிக்கு ஆசிரியர்கள் தம்மைத் தகுதியுடையவர்களாகவும் ஆக்கிக்கொள்ள வேண்டியது மிக முக்கியதாகும்.

கற்றல் சிறப்பாக இடம்பெறுவதற்கு சில "கற்பித்தல் வளங்கள்" இருத்தல் மிக அவசிய மாகும். அமைதியான சூழல், கட்டடிட, தளபாட உபகரண வசதி, கற்பித்தல் நுட்பங்கள், பாட விதானங்கள், நூல் நிலையங்கள், வழிகாட்டிகள், ஊக்குவிப்புக்கள் போன்ற வளங்கள் கற்பதற்கு மிக அவசியமாகும்.

இக்கற்றல் வளங்கள் சிறப்பாக ஏற்படுத்திக் கொள்ளா விட்டால் கற்றல் சிறப்பாக இடம்பெற முடியாது. இக்கற்பித்தல் வளங்களை கற்போ ராகிய மாணவர்களால் ஏற்படுத்திக்கொள்ள முடியாது, இவற்றை ஏற்படுத்த இவர்களுக்குத் தகுதியும் ஆற்றலும் முற்றாக இல்லை.

கற்றலுக்கு தேவையான கற்றல் வளங்கள் யாவற்றையும் சிறந்த முறையில் உருவாக்கிக் கொடுப்பதும் அவற்றை நன்கு அபிவிருத்தி செய்வதும் கற்பித்தலினதும் கற்பிப்போரினதும் முக்கிய கடமையாகும்.

பாடசாலைக்கு வருகின்ற மாணவர்கள் அனைவரும் கற்கும் ஆர்வத்தினால் தான் பாடசாலைக்கு வருகின்றனரெனக் கூறமுடியாது. பெருமளவிலான மாணவர்கள் பெற்றோரின் வற்புறுத்தல் காரணமாகத்தான் பாடசாலைக்கு வருகின்றார்கள். இதனால் அவர்களிடத்தில் கற்றலுக்கான விருப்பமும் ஆர்வமும் காணப்பட மாட்டாது. இவர்களிடத்தே பெருமளவில் விளையாட்டு ஊக்கமும் ஆர்வமுமே மேலோங்கி இருக்கும். ஆனால் இவர்களை ஆசிரியர்கள் வலுக்கட்டாயப்படுத்திக் கற்பித்துவிடமுடியாது. கற்றலென்பது கட்டாயப்படுத்தித் திணிக்கப்படும் திணிப்பல்ல.

எனவே மாணவர்களிடையே கற்றலுக் கான ஆர்வத்தைத் தூண்டி கற்றலை முன்னெடுக்கும் பொறுப்பு கற்பித்தலுடைய தாகும். கற்பிக்கும் ஆசிரியர்கள் கற்போரின் ஆர்வத்தைத் தூண்டக்கூடிய உளவியல் ரீதியான அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்கவேண்டியது மிக அவசியமாகும். இது தொடர்பாகக் கல்வி உளவியலாளர்கள் பல கற்றல் கற்பித்தல் கோட்பாடுகளை உருவாக்கியுள்ளனர். கற்றலுக் கான ஊக்குவிப்பை உள்நிலை ஊக்குவிப்பு, வெளிநிலை ஊக்குவிப்பு என இரு வகையாக வகுக்கலாம். வெளிநிலை ஊக்குவிப்பைவிட உள்நிலை ஊக்குவிப்பு கற்போரிடத்தே ஏற்படும் ஆர்வம் கற்றலை மிகப் பயனுடையதாக்கின்றது.

உள்நிலை ஊக்குவிப்பில் மாணவர்களுக்கு ஆர்வத்தை ஊட்ட பல முறைகளைக் கற்பிப்போர் கையாளுகின்றனர். விளையாட்டுக்களுடன் கல்வியை இணைத்து போதித்தல், கவர்ச்சியான நிகழ்வுகளுடன், காட்சிகளுடன் கல்வியை இணைத்துப் போதித்தல், கட்புல, செவிப்புலக் கருவிகள் மூலம் கல்வியைக் கற்பித்தல் போன்றவற்றின் மூலம் மாணவர்களின் கற்கும் ஆர்வத்தை உள ரீதியாக ஏற்படுத்தலாமென கல்வி உளவியலாளர்கள் விளக்கியுள்ளனர்.

□□□

# CONCEPTMAP

**M. Nishanthini**
Sc/E/140

## Introduction

The use of concept maps as a teaching strategy was first developed by. J. D. Novak of cornel university in the early 1980' s It was derived from Ausubel' s learning theory which places cetral emphasis on the influence of student's prior knowledge on subsequent meaning ful learning.

According to Ausubel, "the most important single factor influencing learning is what the learner already Knows. Thus meaning ful learning results when a person consciously and explicitly ties new knowledge to relevant concepts they already possess.

Ausubel suggests that when meaning ful learning occurs, it produces a series of changes within our entire cognitive structure, modifying existing concepts and forming new linkages between concepts. This is why meaning ful learning is lasting and power ful wheres rote learning is easily forgotten and not easily applied in new learning or problem solving situations which the present science curricula so advocate.

The concept map is a device for representing the conceptual structure of subject discipline in a two dimensional form which is analogous to a road map. concept map are diagrammatic representations which show meaningful relationships between concepts in the form of propositions.

A concept map can be considered as some what similar to a spider chart, an organization chat or a flow diagram. Each concept depends on its relationships to many others for meaning.

one big advantage of using Concept maps is that it provides a visual image of the concepts under study in a tangible form which can be focused very easily. During the formulation process it con soli dates a concrete and precise understanding of the meanings and inter - relations of concepts.

In presenting concepts to students, teachers should never ask students to memorize prepared concept maps. This could merely promote rote learning and so defeat the purpose of encouraging active meaning ful learning on that part of the learner.

## What is a concept map?

Similar to an outline or a flowchart, a concept map is a way of representing or organizing knowledge. However a concept map goes beyond the typical outline in that concept maps show relationships between concepts, including bi - directional relationships. usually. a concept map is divided in to nodes and links links. Nodes (often circles) represent various Concepts, and links [lines] represent the relationships between concepts. (Lanzing 1997)

A concept map presents the relationships among a set of connected concepts and ideas. It is a tangible way to display how your mind "sees" a particular topic. By constructing a concept map you reflect on what you knom and what you don't know. In a concept map, the concepts, usually represented by single words enclosed in a rectangle are connected to other concept boxes by arrows. A word or brief phrase written by the arrow defines the relationship between the connected concepts. Major concept boxes will have lines to and from several other concept boxes generating a network.

## Steps in constructing concept maps

1. Select :- Focus on a theme and then identify related key words or phrases.

2. Rank :- Rank the concepts from the most abstract and inclusive to the most concrete and specific.

3. Cluster :- Cluster concepts that function at similar level of abstraction and those that interrelate closely.

4. Arrange :- Arrange concepts into a diagrammatic representation

5. Link and add proposition :- Link concepts with liking lines and label each line with a proposition.

**Steps in making a concept map.**

- Write down major terms terms or concepts about a topic
- Identify the most general, intermediate, and specific concepts.
- Begin drawing the concept map.
- Concepts are circled.
- Place the most general concepts at the top.
- Place intermediate concepts below general concepts.
- Put specific concepts on bottom
- Draw lines between related Concepts.
- Label the lines with "Linking words" to indicate how the concepts are related.
- Revise the map.

## Use of concept maps. in teaching

Teaching a topic

In constructing concept maps, difficult concepts can be clarified and can be arranged in a systematic order. using concept maps in teaching helps teachers to be more aware of the key concepts and relation ship among them. This helps teachers to convey a clear general picture of the topics and thir relationships to their students. In this way, it is less likely to miss and misinterpret any important concepts.

Reinforce understanding

Using concept maps can reinforce students understanding and learning. This enables Visualization of key concepts and summarizes their relationship.

Check learning and identify misconception


The use of concept maps can also assist teachers in evaluating the process of teaching. They can assess the students achievement by identifying misconception and missing concepts.

Evaluation

Students achievement can be tested or examined by concept mapping.

## Use of concept map for student

1. Summarize the subject matter.
2. Self preparation.
3. To memorize the subject easily.
4. To evaluate them self.
5. Recall the prior knowledge.
6. Get clear idea for relationship between the concepts.



# வகுப்பறை முகாமை, பொது முகாமை என்பவற்றில் நேரமுகாமைத்துவத்தின் அவசியம்

திருமதி ஞானகி தர்மஜீலன்
கல்வியியலாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

கல்வி நிர்வாகத்தில் பாடசாலை முகாமையும், வகுப்பறை முகாமையும் மிகவும் முக்கியமானவையாகும். ஒரு சிறந்த வகுப்பறை முகாமைத்துவம் பாடசாலைகளில் பிரச்சினைகள் எழுவதை தவிர்ப்பது மட்டுமன்றி சமூகத்தில், நாட்டில் ஏற்படும் பிரச்சினைகளை தவிர்க்கும் என்பது யாரும் மறுக்க முடியாத ஒருவிடயமாகும். வகுப்பறை முகாமைத்துவமானது ஆசிரியரின் ஆளுமை, கல்விப்பணிகள், பாடசாலை சமூகத்தில் அவர் வகிக்கும் பங்களிப்பு போன்றவற்றிலேயே தங்கியுள்ளது. எனவே ஆசிரியர் தனது வகுப்பறையை சிறப்பாக முகாமை செய்வதற்கு நேரத்தின் பெறுமதி பற்றி நன்கு அறிந்து அதனை சிறப்பான முறையில் திட்டமிட்டு பயன் படுத்துவதன் மூலம் சிறந்த ஒரு நற்பிரஜை உருவாக்க முடியும்.

வகுப்பறை என்பது பாடசாலையின் சிறு கூறாகும். வகுப்பாசிரியர் தனது வகுப்பில் சில வரையறைக்குள் ஒரு அதிபரைப் போன்று செயற்படுகின்றார். ஒரு பாடசாலையில் ஆற்றப்பட வேண்டிய பணிகளில் பல வகுப்பறைகளிலும் ஆற்றப்படவேண்டும் அவ்வாறான முக்கிய பணிகளில் சில பின்வருமாறு

- ✯ வகுப்புத் தலைவரை தெரிவு செய்தல்
- ✯ பல்வேறு கடமைகளுக்குமான உபகுழுக்களை தெரிவுசெய்தல்
- ✯ பாடசாலை தொடங்குமுன் சென்று வகுப்பறை ஆரம்ப கடமைகளை அவதானித்தல்

உதாரணமாக நேர அட்டவணை, துணைப் பாடவிதான நிகழ்ச்சிகளின் அட்டவணை, மற்றும் படங்கள் கற்பித்தல் உபகரணங்கள் என்பன ஒழுங்காக வைக்கப் பட்டுள்ளனவா? என அவதானித்தல் மாணவர்களது ஒழுக்கம் தொடர்பாக போதிய கவனம் செலுத்துதல் வகுப்பாசிரியரின் கடமைகளில் மிகவும் முக்கியமானது இன்று பெரும்பாலான பாடசாலைகளிலும் ஏனைய கல்வி நிறுவனங் களிலும் மாணவர்களது ஒழுக்க கட்டுப்பாட்டிற்கு யார் பொறுப்பு அதற்கு வகை கூறுவது யார் என்பது சந்தேகத்திற்கு உரிய ஒரு விடயமாக மாறிவருவதை நாம் அனைவரும் அவதானித்து வருகின்றோம். மாணவரிடத்து நல்ல ஒழுக்கம் இல்லை, எனில் நல்ல முகாமையும் இல்லை, கல்வியும் இல்லை, சமூக நேயமும் இல்லை மாணவர் ஒழுக்கம் தேசிய முன்னேற்றத்திற்கு அவசியமானது மாணவர்கள் தொடர்ந்தும் அனைத்து மட்டங்களிலும் பண்பாடு பிரதிபலிக்கப்படல் வேண்டும். இவர்கள் மேற் கொள்ளும் நற்பழக்கங்களும், ஒழுக்கம், ஒழுங்கு, கல்வி கற்கும் நிறுவனத்திற்கு வெளியில் உள்ள நடத்தைகளிலும் பிரதிபலித்தல் அவசியம். இவ்வாறு வகுப்பறை முகாமையில் மாணவரது ஒழுக்கத்தை பேணுதல் நிலை நிறுத்துதல், வளர்த்தல் என்பவற்றில் ஆசிரியரது கடமை பிரதானமானது.

- ✯ ஆசிரியர்கள் நிர்வாகத்திற்கு நேரடியாக உதவுதல், அதாவது பாடப்பதிவுகள் முன்னேற்ற அட்டவணைகள் பாடக் குறிப்புக் கள் புள்ளிப்பதிவுகள் வரவு இடாப்புக்கள் அறிவுறுத்தல்களை சரியான முறையில் விளங்கித்தெளிந்து கடமைகளில் ஈடுபடல் இவ்வாறான விடயங்களில் கவனம் செலுத்துவதுடன் மேலும் நிர்வாகத்திற்கு பெரும் பிரச்சினைகள் கொடுக்காது முரண்பாடுகளைக் களையும் நபராக திகழ்ந்து மாணவர்களுக்கு நல்ல முன்மாதிரிகளை வழங்க வேண்டும்.
- ✯ ஆசிரியர் தான் கற்ற உளவியல் கோட்பாடுகள் கற்றல் கோட்பாடுகள் போன்றவற்றை வகுப்பறையில் பிரயோகித்து செயல்வடிவம் வழங்கப்படும் போது ஆக்கத்திறனும் தொழிற்பாடும் உடையதாக வகுப்பறையில் வைத்துக் கொள்ளுதல் பிரதான கடமையாகும்.
- ✯ சிறந்த முறையில் கல்விச் சுற்றுலாக்கள் வெளிக்கள ஆய்வு என்பவற்றை ஒழுங்கமைத்தல் இவற்றினை ஒழுங்கமைக்கும் போது பாடங்கள் மூலம் வழங்கப்பட வேண்டிய முக்கிய அனுபவங்களை தெளிவாக அமைத்தல் வேண்டும் வெறும் நகைச் சுவையாகவோ கேளிக்கையாகவோ மகிழ்ச்சியாக பொழுதை கழிப்பதாகவோ மட்டும் அமையக்கூடாது இதன் வெற்றி திட்டமிடலிலேயே தங்கியுள்ளது.
- ✯ வகுப்பறையில் அனைத்து மாணவர்களது முன்னேற்றத்திற்கும் பொறுப்பானவர் ஆசிரியர் எந்த நிலையில் உள்ள மாணவர்

களுக்கும் அவரது நிலைக்கு சென்று போதிய பொருத்தமான கல்வியை வழங்க ஏற்பாடுகளை செய்பவராக இருத்தல் வேண்டும். உதாரணமாக பின்தங்கிய மாணவர்கள் பல்வேறு குறைபாடுகள் இயலாமை உடையோரையும் கவனத்திற் கொள்ளல் அவரது வகுப்பறை முகாமையில் பிரதான இடத்தை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

- ☆ சிறந்த தொடர்பாடல்களை ஏற்படுவத்துபவராக இருத்தல் அதாவது கல்வி நிறுவனத் தலைவர் அல்லது அதிபர் ஏனைய ஆசிரியர்கள் கல்வி சாரா ஊழியர்கள் தொடர்பு கொண்டு அவர்களது கருத்துக்களையும் செயற்பாடுகளையும் பெறுவதில் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும்.
- ☆ பாடசாலை அல்லது நிறுவனத்திற்கு உள்ளே மட்டுமல்லாது பாடசாலைக்கு வெளியேயும் பெற்றோர் நலன்விரும்பிகள் அரச அரச சார்பற்ற ஏனைய வளவாளர்களையும் இணைந்து அவர்களது ஆலோசனை செயற்பாடுகளையும் பெற்றுக் கொள்ளக்கூடிய மதிநுட்பம் வாய்ந்தவராக செயற்படுவது முக்கியமான கடமையாகும்.

அனேக ஆசிரியர்கள் தமது கடமைகளில் இருந்து விலகி விடுகின்ற நிலைமை இன்று பரவலாக அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே இவை பாடசாலை முன்னேற்றத்திற்கும் முகாமைத்துவத்திற்கும் தடையாக அமைகின்றது. எனவே இவற்றிக்கான தீர்வு வழிவகைகளை தேடுவதும் அவர்களது கடமைகளை மேற்பார்வை செய்வதும் பின்னூட்டல்களை பெறுவதும் ஊக்குவிப்பு நுட்பங்களை கையாள்வதும் முகாமைத்துவக் குழுவின் பணியாகும்.

மேற்படி வகுப்பறை முகாமையை சரிவரச் செய்து எதிர்பார்த்த இலக்கை அடைய வேண்டுமானால் ஆசிரியருக்கு நேர முகாமைத்துவம் பிரதான உயிர்நாடியாக அமைகின்றது. ஆகையால் மிக அரிதான வளமான நேரத்தின் பயன்பாட்டிற்கு திட்டங்கள் அமைக்கப்படாதவிடத்து வீண் விரயமாக்கப் படுகின்றது. நேரம் பெறுமதி வாய்ந்தது அதற்கு பெறுமதி கூறுவது கடினம் நேரத்தை சேமிக்கவோ அல்லது நிறுத்தி வைக்கவோ முடியாது இழந்தால் இழந்ததாகவே ஆகிவிடும். ஆகவே தான் நேரத்தை திட்டமிட்டு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

நேரத்தை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு தேவையான விடயங்கள் சில பின்வருமாறு

- ☆ தெளிவான நோக்கம் - ஒரு நேரத்தில் ஒரு வேலையை செய்தல்
- ☆ ஊக்கம்
- ☆ வேலைப்பகிர்வில் ஆற்றல்
- ☆ ஆக்கத்திறன்
- ☆ நல்ல தொடர்பாடல்
- ☆ நல்ல வேலைப்பழக்கவழக்கம்
- ☆ சீரிய சிந்தனை அல்லது மனப்பாங்கு
- ☆ தெளிவான தகவல்
- ☆ விரைவான வாசிப்பு முன்னுருமைப்படுத்தலில் தெளிவான கருத்துக்கள்
- ☆ சிறந்த கோவைப்படுத்தல் முறை
- ☆ வழமையான கடமையில் ஒழுங்குமுறை
- ☆ உயரிய வேலை ஒழுக்கம்
- ☆ நல்லதை செய்யும் ஆற்றல்
- ☆ முடிவுறும் வரை பணியைச் செய்தல்
- ☆ சுயஒழுக்கம்
- ☆ தீர்மானம்
- ☆ நல்ல வேலைச் சூழல்
- ☆ நல்ல ஆரோக்கியமான உடல், உளம்

நேரத்தை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான மேலும் சில நுட்பங்கள்

1. மனம் ஈடுபடக் கூடிய வேலைகளையும் அதற்கு பொருத்தமான சூழல்களையும் தெரிவு செய்து கொள்ளல் அதிகாலை சிலருக்கு மனம் தெளிவாகவும் வேறு சிலருக்கு வேலைகள் எல்லாம் முடிந்து நிஷப்தமாக இருக்கும் இரவுப்பொழுது உகந்ததாக இருக்கும் யார் யாருக்கு எந்நேரம் தெளிவாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கின்றதோ அந்நேரத்தினை ஆசிரியர் தானும் பயன்படுத்தி தனது மாணவர்களுக்கும் வழிகாட்ட முன்வர வேண்டும்
2. நீண்டநேரம் மனதை ஒருமுகப்படுத்தல் வேண்டும் என்ற நிற்பந்தத்தை தவிர்த்தல் எந்த ஒரு மனிதனாலும் ஆகக்கூடியது 10/15 நிமிடங்களே மனதை ஒருமைப்படுத்திக் கொள்ளமுடியும் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. எனவே பணிகளை நிறைவேற்றும் போது பொருத்தமான இடைவேளையை எடுத்துக் கொள்வதன் மூலம் சிறப்பாக ஆற்றமுடியும் உதாரணமாக வகுப்பறைக் கற்பித்தலின் போது சிந்தனைக்கு 15 நிமிடங்கள் மேற்படாது வேறு ஆரம்ப முயற்சிகளில் அதாவது மனதிற்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும்

செயற்பாட்டில் ஈடுபடுத்துதல் வீட்டில் பிள்ளைகள் கற்றலில் ஈடுபடும் போது இடைவெளி வரக்கூடியவாறு மாற்று ஒழுங்குகளை ஒழுங்கமைத்து கொடுத்தல் ஊடாக மன ஒருமைப்பாட்டை பேணமுடியும்.

3. பாடசாலை வகுப்பறை வீடு ஏனைய பணி நிறுவனங்கள் போதிய அளவு வெளிச்சம் காற்றோட்டம் சத்தமின்மை ஏனைய கவனக் கலைப்பான்கள் அந்தம் இடத்திற்கு பொருத்தமான அலங்காரம் போன்றன நல்ல முறையில் உளவியல் ரீதியான மனதை கவர்ந்து செயற்பாடுகளில் ஈடுபட தூண்டியாகவும் ஊக்கியாகவும் அமையும்.

4. அடுத்து பிரதான விடயங்களை பின்போடாது செயற்படுதல் எது அவசியமானது எது அவசரமானது என்பதை தெரிந்து அதற்கு முன்னுரிமை வழங்கி செய்தல் வேண்டும் குறித்த ஒரு செயலை நாம் எவ்வளவிற்கு பின்போடுகின்றறோமோ அந்தளவிற்கு அச்செயலை செய்து முடிப்பதற்கான கால அளவும் கூடிக்கொண்டே போகும்.

5. சுயமதிப்பீட்டினை மேற்கொள்பவராக இருத்தல் வேண்டும். தனது நேரம் எவ்வளவு எப்படி எதற்காக செலவழிந்துள்ளது எதிர்பார்த்த இலக்கு எந்தளவிற்கு எட்டப்பட்டுள்ளது இவ்வாறு மேற்கொள்ளும் போது தவறவிடும் சந்தர்ப்பங்களை திருத்தவும் மாற்றுவழி முறைகளை இனங்கண்டு மேலும் தனது செயற்பாட்டை மேம்படுத்தி பயனுடையதாக்கிக் கொள்ள சுயமதிப்பீடு உதவுகின்றது.

6. இன்று தொலைபேசி அழைப்புக்கள் தொலைக்காட்சிகள் அதன் பயன்பாட்டைப் விட மேலதிகமாக நேர வீண்விரயத்தையும் கலாச்சார சீரழிவுகளையும் இட்டுச் செல்வதை காண முடிகின்றது. எனவே இவை ஆக்கபூர்வ மாக செயற்படக்கூடிய நேரத்தின் பெரும் பகுதியை உட்கொண்டு விடுகின்றன. ஆகையால் இவை தொடர்பான விடயங் களிலும் ஆசிரியர்கள் வகுப்பறை முகாமையில் நேரங்களை வீணடிக்காதவாறு செல்ல வழிகாட்டுதல் அவசியம்.

7. நேரப்பயன்பாட்டினை அதிகரிப்பதற்கு ஆசிரியர் நேரத்தை திட்டமிடல் வேண்டும். இதில் நுட்பமுறைகளையும் பின்பற்றப்படுதல் வேண்டும் மேற்கொள்ள விரும்பும் செயற்பாடுகளை நாளாந்த திட்டம், வாராந்ததிட்டம், மாதாந்த திட்டம், வருடாந்தத்திட்டம் என திட்டமிடுதல் நேரம் வீணடிக்கப்படுவதை தவிர்த்துக் கொள்ளலாம்.

இன்று நேரத்தை பலர் வீண்விரயம் செய்கின்றனர். அவ்வீண்விரயத்திற்கு பல்வேறு காரணிகள் ஊக்கிகளாக அமைகின்றன. இவ்வகையில் அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் இவ்விடயங்களை அறிந்திருத்தல் அவசியமாகும்.

- ☆ ஒழுங்குப்படுத்தபடாத கூட்டம்
- ☆ திட்டமிடப்படாத வேலை ஒப்படைப்பு
- ☆ தீர்மானமின்மையும் தாமதமும்
- ☆ நெருக்கடிகள் பிரச்சனைகள் என்பவற்றை உரிய நேரத்தில் தீர்க்காமை
- ☆ குறிப்பிட்ட சில பணிகளில் அதிக ஈடுபாடு கொள்ளல்
- ☆ சுய அபிவிருத்தியின்மை
- ☆ பணியாற்றலில் முன்னுரிமை வழங்காமை
- ☆ திட்டமிடப்படாத தொடர்பாடல் என்பனவும் நேரத்தை வீணாக்கின்றன.

எனவே ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு நடைமுறை வாழ்க்கை அனுபவங்கள் மூலம் வழிகாட்டுவதுடன் அவர்களது வகுப்பறையில் ஏற்படும் பிரச்சினைகளை தீர்ப்பதில் அக்கறை உடையவராகக் காணப் படுவதுடன் எதிர்காலத்தில் தமது வாழ்க்கையில் கடைப்பிடிக்கக் கூடியவர்களாக மாற்றமுறச் செய்தல் நன்று.

"உனது நேரத்தைச் சிறந்த முறையில் உபயோகிக்கக் கூடிய மனிதன் நீயே"

**உசாத்துணை நூல்கள்**


01. சந்திரசேகரன் சோ. சின்னத்தம்பி மா(2002) கல்வியும் மனிதவளவிருத்தியும் எஸ்.எச். பதிப்பகம் கொழும்பு

02. சின்னத்தம்பி.மா 2004 ஆசிரிய முகாமைத் துவம் விஸ்டம் பப்ளிகேசன்ஸ்

03. செல்வராஜா.மா 1995 கல்வி அபிவிருத்தி முகாமைத்துவம்

04. தனேஸ்வரி ரவீந்திரன் 2004 தந்திரோபாய மனிதவள முகாமைத்துவம்

05. Richard.M Modgetts (1982) Management Theory Process and Practices


□□□

# ஸப்த ஜால வயலின் சிறப்பம்சங்கள்

தர்மினி இரவிச்சந்திரன்
*(சங்கீதத்துறை) உள்ளகப் பயிற்சி மாணவி.*

**ஸ**ங்கீதத்தில் கர்நாடக இசைக்கருவிகளை ஆராயுமிடத்து வயலின் வாத்தியமானது தனக்கென ஒரு தனிச்சிறப்புடன் இன்று மிளிர்கின்றது தன்னிகரற்ற பக்கவாத்தியமாக விளங்கிவரும் இவ்வாத்தியமானது தனி வாத்தியமாகவும் விசேஷத்தன்மையுடனும் வியாபித்துள்ளது. "இளமையிற் கல்" என்ற வாக்கு இந்த வயலின் சாதத்திற்கு எத்துணை பொருத்தம் என்பது எனது சொற்ப அனுபவத்திற்கண்ட மாபெரும் உண்மை.

ரீங்காரம் செய்யும் வண்டின் நாதத்தில் இருந்து எத்தன்மையானாலும் அத்தன்மைக்கேற்ப பற்பல நாடி வடிவங்களை மேதாவிகளால் இவ்வாத்தியத்தின் மூலம் வெளிப்படுத்த முடியும். வயலின் வாத்தியத்தின் வடிவமே எழிலற்றதாகவும் எளிமையான சிறிய உருவஅமைப்பு கொண்டதாகவும் உள்ளது. இவ்வாத்தியத்தின் வில்லானது தந்திகளில் இழையும்போது அதன் சிறிய உடலினின்றும் எழும்பும் இனிமையான நாதம் பேரின்பத்தை ஏற்படுத்துவதில் ஐயமில்லை.

கவர்ச்சியான இனிமை நிறைந்த நாதச் செறிவுடன் கூடிய இவ்வாத்தியத்தில் எந்தச் சுருதிக்கும் எளிதில் விரைவாக சுருதி சேர்த்துக் கொள்ளமுடியும். மிகத்தெளிவாக ஸாகித்யங்களை உணத்துமளவில் நீளமான வில் அமைப்பால் பார்வைகளை நீடிக்கச் செய்து நுட்பமான சாரதிகள் வலிவு, மெலிவு ஆகிய இசைத் தன்மைகளை தெளிவுடனும் சீருடனும் வெளிப்படுத்தும் சிறப்பியல்பை கொண்டது இந்த வயலின் வாத்தியம்

மந்திரஸ்தாயிலிருந்து தார, அதிகாரஸ்தாயி வரை எளிதான விரலோட்டத்தில் செயற்படும் (Fingerings) இயல்பு வாய்ந்தது மெட்டுக்களற்று உருக்கப்பட்டுச் சரளமாக வாசிக்ககூடிய விதத்தில் நான்கு தந்திகளை மட்டும் உடையததாக இருப்பது இவ்வாத்தியத்தின் மற்றுமொரு சிறப்பம்சமாக அமைகிறது.

பலவித இசைக்கருவிகளுடன் அதாவது வீணை, வேணு, மிடற்றோசை போன்றவற்றுடன் ஈடுகொடுத்து இணைந்து நிற்கும் சக்தி வாய்ந்த வயலின் வாத்தியமானது சீரிய, துல்லியமான, துடிப்பு மிக்க உயர்ந்த ஒலியை (Ourtones) அதிகளவு கொண்ட அதிர்வலைகளுடன் (Vibrations) வெளிப்படுத்துவதால் அரங்குகளில் அயனாகவும், துணையாகவும் பிரகாசிப்பதில் வாய்ப்பில்லை

தனக்கென சிறப்பம்சங்களை கொண்டுள்ள வயலின், எங்கும் எளிதில் எடுத்துச் செல்வதற்குரிய உடலமைப்புடன் எல்லாவித இசைமுறைகளையும் அவற்றின் நுணுக்கங்களையும் தெளிவாக வெளிப்படுத்தும் தன்மையுள்ள ஒன்றாகும். ஐரோப்பியரின் இக்கருவியான இவ்வயலின் இந்திய இசையில் முக்கியமாக கர்நாடக இசையுலகில் வரவேற்கப்பட்டு இன்றியமையாத வாத்தியமாகவும் தலைசிறந்த வாத்தியமாகவும் போற்றப்பட்டு வருகிறது.

நிறைவான இணையற்ற தனித்தன்மையை கொண்டமைந்து அனைவராலும் கவரப்பட்ட வயலின் வாத்தியமானது இசை மறுமலர்ச்சிக்குப் பின் தக்கதருணத்தில் நம் கர்நாடக இசையுட் புகுந்ததால் அனைத்து மக்களாலும் மிக விருப்பத்துடன் வரவேற்கப்பட்டு இன்று இசை உலகில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்று உள்ளது.

ஸ்வயமான இசைஞானத்துடன் நிதானத்தை லயத்தில் ஏற்படுத்தி தன்னம்பிக்கையுடனும் பக்தி சிரத்தையுடனும் அசுரசாதகம் செய்து மனோதர்ம, கற்பித முறைகளைக் கையாண்டு கர்நாடக இசையை வளர்க்கும் ரீதியில் ஸப்த ஜால வயலின் விற்பன்னர்கள் தோன்றிய பெருமை

வயலினை முதன்முதலிற் கையாண்ட புகழ் பெற்ற மும்மூர்த்திகளில் ஒருவராகிய முத்துஸ்வாமி தீட்சிதரின் தம்பியாகிய பாலஸ்லாமி தீஷிதரை சாரும் என்பது பெரும் பாலோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும்.

□□□

# "நவீன கலைத்திட்ட வடிவமைப்பின் போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் பற்றிய நோக்கு"

த. சிவகுமார்
கல்வியியலாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

கலைத்திட்டமானது குறித்த நாட்டின் முறைசார் முறைசாரா கல்வி அமைப்பை ஒழுங்குபடுத்துகின்ற செயலாற்றுகையாக உள்ளது கலைத்திட்டம் என்பது கல்வியின் நோக்கங்கள், பாடஉள்ளடக்கம், உள்ளடக்கத்தை வடிவமைத்தல், கற்றற் செயற்பாடுகள் கற்பித்தல் செயற்பாடுகள், மதிப்பீட்டு முறைகள், பின்னூட்டல் போன்ற அம்சங்களின் தொகுப்பு ஆகும் இக் கலைத்திட்ட வடிவமைப்பின் போது கவனத்திற்கொள்ள வேண்டிய காரணிகள் பல செல்வாக்கு செலுத்துகின்றது அவை பின் வருமாறு

1. தத்துவக் காரணிகள்.
2. அழகியல் காரணிகள்.
3. பொருளாதாரக் காரணிகள்.
4. உளவியல் காரணிகள்/மனநலம்.
5. அரசியல் தாக்கம்.
6. சர்வதேச ரீதியான அரசியல் மாற்றங்கள்.
7. சமய எண்ணக்கருக்கள்.
8. சமூக நிலையும், விழுமியங்களும்.
9. கல்விச் சீர்திருத்தங்கள் (Educational Reforms)
10. கல்விச் சிந்தனைகள்.
11. விஞ்ஞான தொழிநுட்ப வளரச்சி
12. சமுதாய தேவைகளும் வரலாற்றுத் தேவைகளும்
13. கிடைக்கக் கூடிய வளங்கள்.
14. மாணவரது உளவியல் தேவைகள்.
15. தற்கால பண்பாட்டுப் போக்குகள்.

இவை கலைத்திட்டத்தை குறித்த நாட்டில் நடைமுறைப்படுத்துவதில் செல்வாக்கு செலுத்துகின்றன குறித்த நாட்டின் நிலையான அபிவிருத்தியில் கலைத்திட்ட செயலாற்றுகையானது மிகுந்த முக்கியத்துவம் உடையவையாக கருதப்படுகின்றது எதிர் கால நாட்டின் நற்பிரசைகளான இன்றைய மாணவர்களுக்கு வழங்க வேண்டிய அனைத்து தேர்ச்சிகளும் பாடசாலை கலைத்திட்டத்தினூடாக பிரயோகிக்கப் படுகின்றன

**கலைத்திட்ட நோக்கங்கள்.**

1. அறிவைப் பெறுதலும். பயன்படுத்தலும்.
2. ஆளுமை விருத்தி.
3. சூழலுடன் இசைவாக்கம் பெறல்.
4. சுயமான வாழ்வில் பிரவேசித்தல்.
5. பொருளாதார நோக்கு.
6. நற்பிரசைகளை உருவாக்குதல்.
7. பண்பாட்டுக் கல்வியை வழங்குதல்.
8. சமூகவியல் மாற்றம்.
9. ஆன்மீக உணர்வும், அது சார்ந்த தொழிற்பாடுகளும்.
10. உலக குடிமக்களாக்குதல்.

கலைத்திட்ட நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய வகையில் கலைத்திட்டம் உருவாக்கப்படுகின்ற போதே அது பயனுடையதாக அமையும்

இந்தியக் கல்வியியலாளாரான சர்மா கலைத்திட்டம் தயாரிக்கும் போது பின்வரும் விடயங்களை கருத்தில் கொள்ள வேண்டும். எனக் குறிப்பிட்டுள்ளார்.

- ☆ கல்வியின் நோக்கு, இலக்குகளை முன்னிலைப் படுத்துவதாக இருத்தல்.
- ☆ மாணவர்களது வயதுக்கு ஏற்ற தேவைகள் ஆர்வங்களை கருத்தில் கொள்ளல் சமூகத்தின் தேவைகளை கருத்தில் கொள்ளல்.
- ☆ மாணவர்களுக்கு எதனைச் சிந்திப்பது என்பதை விடுத்து எவ்வாறு சிந்திப்பது என்பதை முன்னிலைப்படுத்தல்.
- ☆ அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை உள்ளடக்கிய பொருத்தமான தேர்ச்சிகளை ஊட்டுவனவாக அமைதல்.
- ☆ நெகிழ்ச்சித் தன்மை கொண்டதாக அமைதல்.
- ☆ மாணவர்களுக்குப் பல்வேறு அனுபவங்களை வளங்கக் கூடியதாக அமைதல்.
- ☆ நவீனத்துவம், புதுமைத்துவம் என்பன கருத்தில் கொள்ளப்படல்.

ஒரு நாட்டின் கலைத்திட்டத்தை வடிவமைக்கும் போது பல்வேறு காரணிகள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. ஏனெனில் கலைத்திட்டத்தின் தேவைகள் எப்போதும்

சமுதாய தேவைகளை அடிப்படையாகக் கொள்வதுண்டு. அதே போல் வரலாற்றுத் தேவைகளும் கலைத்திட்டத்தின் தேவைகளாக அமைகின்றன.

வரலாறுகளின் போக்குகளிலிருந்து எந்தவொரு நிறுவனமும் எந்தவொரு சமூகமும் விலகியிருக்க முடியாது. காலத்திற்குக் காலம் சமூகத்தின் தேவைகளும் நோக்கங்களும் செயற்பாடுகளும் மாறுதலடைகின்றன. இவற்றைக் கவனத்தில் கொண்டு கலைத்திட்டம் அமைக்கப்படுகின்றன. இந்த அடிப்படையில் பல்வேறு காரணிகள் கலைத்திட்டத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஸ்மித்,ஸ்ரான்லி என்பவர்கள் கலைத்திட்டம் தயாரிக்கும் போது பின்வரும் விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

- ☆ முதனிலைத் தரவுகளையும், அனுபவங்களையும் வழங்குவதாக அமைதல்.
- ☆ மாணவர்களின் எண்ணக்கரு உருவாக்கத்திற்கு உதவுதல்.
- ☆ கற்றல், கற்பித்தல் கோட்பாடுகளை தத்துவங்களை பொருத்தமாக ஏற்றுக் கொள்வதாக அமைதல்.
- ☆ முன்நோக்கிய பார்வையை ஊட்டுவதாக அமைதல்.

ஐக்கிய அமெரிக்காவின் கல்வி வடிவமைப்பில் கலைத்திட்டம் பின்வரும் விடயங்களை உள்வாங்கக் கூடியதாக வடிவமைக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

- ☆ ஒரு மாணவனை முழுமனிதனாக்குதல்.
- ☆ மாணவர்களுக்குப் பொருத்தமான தொடர்பாடல் திறனை வழங்குதல்.
- ☆ பொருளாதார விருத்தியை கருத்தில் கொள்ளல்.
- ☆ நல்லபிரசையை உருவாக்கக்கூடியதாக அமைதல்.

பாடசாலைக் கலைத்திட்டத்தின் மூலம் பல கருமங்கள் ஆற்றப்பட வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது. என்பது கலைத்திட்டத்தினால் எதிர்பார்க்கப்படும் கருமங்கள் அல்லது பணிகள் தொடர்பான ஆய்வுகள் மற்றும் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்களுக்கமைய தெளிவாகின்றது.

1. தற்போதைய மற்றும் எதிர்கால சமூகத் தேவைகளை நிறைவு செய்தல்.
2. பண்பாட்டை வளர்த்தலும், காத்தலும், கையளித்தலும்.
3. சமநிலையான ஆற்றலை விருத்தி செய்தல்.
4. சமூகப்படுத்தல்.
5. தனியாளிடத்தே ஆக்கத்திறன்களையும், உற்பத்தித் திறன்களையும் வளர்த்தல்.
6. மதிநுட்பமுடைய பகுத்தாராயும் தன்மை கொண்ட தனியாட்களை உருவாக்குதல்.
7. தனியாளின் கைத்திறனை வளர்த்தல்.
8. தொழிலில் ஈடுபடுவதற்கு தேவையான அடிப்படை திறன்களை விருத்தி செய்தல்.
9. நயப்பாற்றலை வளர்த்தல்.

ஆகியவை முக்கியமானவையாகக் கருதப்பட்டுள்ளமை பாடசாலைக் கலைத்திட்டத்தினால் ஆற்றப்பட வேண்டியபல பணிகள் உள்ளன என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. மேல்வாரியாகக் காணப்படும் தொடர்புகளினூடாக மிகப் பரந்த பணிகள் கலைத்திட்டத்தினூடாக நிறைவு செய்யப்படல் என்பதும் இதிலிருந்து விளங்குகின்றது.

**கலைத்திட்டம்**

கலைத்திட்டம் Curriculum எனும் ஆங்கில பதமானது இலத்தீன் சொல்லில் இருந்து தோன்றியது ஆங்கிலத்தில் "ஓடும் பாதை" "வழிகாட்டும் பாதை" என அழைக்கப்படுகின்றது கலைத்திட்டம் என்பது பாடசாலையில் ஒருவன் கற்க வேண்டிய துறைகளை கொண்ட (cours of study) வழிகாட்டும் பாதை. ஆகும்

**பி. எச். ரேலர்.**

பாட உள்ளடக்கம், கற்பித்தல் முறைகள் அவற்றின் விளைவுகள் என்பன கலைத்திட்டத்தில் உள்ளடங்கும். இவற்றிடையே ஏற்படும் இடைத்தாக்கத்தின் மூலம் உயிர்ப்பான செயற்பாடு பாடவிதானத்தால் தயார்படுத்தப்படுகின்றது.

யாதேனும் முறைமையான கல்வியை வழங்குவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு பாடம் அல்லது சில பாடங்கள் பண்டைக் காலத்தில் கலைத்திட்டமாகக் கருதப்பட்டது என்பது அவற்றை நோக்கும் போது தெளிவாகின்றது. பொழிப்பாக்கப்பட்ட ஒக்ஸ்ல் பர்ட் ஆங்கில அகராதியில் கலைத்திட்டம் என்பது ஆசிரியரால் மேற்கொள்ளப்படுபவற்றின் பெறுபேறாகப் பிள்ளையிடத்தே ஏற்கப்படுகின்றமையாகும். பாடசாலையினால் பொறுப்பேற்கப்பட வேண்டிய வற்றின் மூலம் பிள்ளைகள் பெறும்

சகல அனுபவங்களும் அதிலடங்கும். இவ் வரைவிலக்கணத்தின்படி பாடசாலையினால் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் சகல அனுபவங் களும் கூட்டாக கலைத்திட்டமாக கருதப் படுகின்றது.

வெற்றிகரமாக செயற்படுத்தக் கூடிய வகையிலும் விமர்சன ரீதியிலும் சோதிக்கக் கூடியதாகவும் கல்விப் பிரேரனைகள் இன்றியமை யாக் கோட்பாடுகளையும் பண்புகளையும் முன்வைப்பதாக மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியே கலைத்திடடமாகும் என ஸ்டேன் கவுஸ் குறிப்பிட்டுள்ளார். இவ் வரைவிலக் கணப்படி கல்விப் பிரேரணைகளின் கட்டாய மான கோட்பாடுகளும் பண்புகளும் கலைத் திட்டத்தில் அடங்குதல் வேண்டும் மேலும் அது வெற்றிகரமாக செயற்படுத்தக் கூடியதாகவும் விமர்சன ரீதியில் சோதிக்கப்படக் கூடியவாறு கலைத்திட்டத்தின் மூலம் செயற்படுத்தும் தன்மை பற்றிக் கூடிய கவனம் செலுத்தியுள்ளமை தெளிவாகின்றது.

**கலைத்திட்டவடிவமைப்பின் போது கவனத்திற் கொள்ள வேண்டிய காரணிகள்**

**தத்துவக் காரணிகள்.**

பழந்தமிழர்கள் தமது கலைத்திட்டத்தில் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற் பொருளையும் அடிப்படையாகக் கொண்டனர். அவர்கள் இதேபோல் சமய, ஆன்மீக கோட்பாடு களாக பல அம்சங்களை கல்வி ஏற்றுக் கொள்கிறது. ஆன்மீக ஈடேற்றத்திற்காக வாழுதல் முக்கிய காரணியாக அமைகின்றன. சமய தத்துவம், பொருளாதார தத்துவம், அரசியல் தத்துவம் என்பனவும் கீழைத்தேய தத்துவம் மேலைத்தேச தத்துவம் என்பனவும் முக்கியமான தாக இருந்தது. தத்துவார்த்த சிந்தனைகளை விருத்தி செய்வதில் தத்துவ காரணிகளின் பங்கு தெளிவாக வலியுறுத்தப் படுகின்றது. நல்ல ஆசிரியர்களே தத்துவ ஞானிகளாகவும், விளங்கினர். சோக்கிரட்டீஸ், பிளேட்டோ, திருவள்ளுவர், காந்தி போன்றவர் களது சிந்தனைகள் தத்துவார்த்த சிந்தனைகளாக கல்வியில் ஏற்றுக் கொள்ளப் படுகின்றது.

**அழகியல் காரணிகள்.**

தனிமனித வாழ்வு சமூக வாழ்வு என்ப வற்றில் அழகியல் எண்ணக்கருக்கள் முக்கிய மானவை. அழகு என்பது ஒழுங்கு. சீர்மை, ஒழுக்கம், தெய்வீகம் என்றெல்லாம் தமிழர்கள் கருதினார்கள். மழலைகள், தெய்வம், அன்பு, சுத்தம், நேர்மை, ஒழுக்கம். போன்ற அனைத்திலும் அழகியல் எண்ணக்கருக்கள் சேர்க்கப் பட்டிருந்தன. கோயில்களே சமூகத்தின் அழகியல் அம்சமாகத் திகழ்ந்தது. (கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்.) பாடசாலை கலைத்திட்டங்களை வடிவமைப்பவர்கள் வகுப்பு நிலைக்கும், பாடங்களில் தன்மைக்கும் ஏற்றதாக படிப்படியாகக் ஒன்றிணைக்கப்பட்டன. ஆழகியல் கோட்பாடுகள் சமயம், மொழி, சுத்தம், ஓவியம் ஒழுங்கு என்பவற்றுடன் மிகக் கவனமாக ஒன்றிணைக்கப்பட்டன. வாழ்வியலின் முக்கியமான அம்சமாக அது பிள்ளைகளால் உணரப்படுகின்றது.

**பொருளாதாரக் காரணிகள்.**

ஒரு நாட்டின் அரசாங்கம் பொருளாதாரக் கொள்கைள், கோட்பாடுகள் என்பவற்றிற்கு அமைவாகக் கலைத்திட்டம் வலியுறுத்தப் படுகின்றது. சீனா, சோவியத் யூனியன் போன்ற நாடுகளில் கம்யூனிச பொருளாதார கோட்பாடு களுக்கு ஏற்ற கலைத்திட்டம் காணப்படுகின்றது. ஆனால் பிரித்தானியாவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் முதலாளித்துவ கோட்பாடுகளுக்கு அமைவாக கலைத்திட்டம் வடிவமைக்கப் பட்டன. இலங்கையிலும் 1972 கலைத்திட்டம் சோசலிச பொருளாதார கோட்பாடுகளுகளை நன்கு வலியுறுத்தியது. 1972ல் சமூகக்கல்விப் பாடம் அறிமுகம் சோசலிச பொருளாதாரத்தின் விளைவாகும்

**உளவியல் காரணிகள்/மனநலம்.**

பாடங்களைக் கற்றுக் கொள்ளும் மாணவர் கற்கும் பகுதியில் விருப்பமும், ஊக்கமும் அவர்களது உளவியல் நிலைமைகளில் தங்கி யுள்ளது. இவை உளவியல் அம்சங்களுடன் உடலியல் மாற்றங்களுடனும் தொடர்புடையது. இதனால் ஆசிரியர்கள் இவற்றை விளங்கிக் கொண்டு கற்பிக்க வேண்டும். கற்பித்தல் முறைகளை வடிவமைக்கும் போது உளவியல் காரணிகள் முக்கியம் பெறுகின்றன. மாணவர் களின் வயதிற்கேற்ப உளவியல் மாற்றங்களும் ஏற்படுவதால் வகுப்பு நிலைக்கேற்றதாக பாடங் களையும் வடிவமைக் வேண்டும். உளவியலில் பிள்ளை உளவியல், கல்வி உளவியல், என்பன மிக முக்கியமானவையாகும்.

**அரசியல் தாக்கம்.**

எல்லா நாடுகளிலும் அந்தந்த நாடுகளில்

நிலவுகின்ற அரசியல் கொள்கைகள், ஆட்சி முறைகள் அரசியல் கட்சிகள் நடைமுறைகள் என்பவற்றிற்கு ஏற்றதாகவே கலைத்திட்டங்களை வடிவமைக்க முடியும். பொதுவாக கம்யூனிஷ (சோசலிச) அரசியல் கோட்பாட்டாளர்கள் கடுமையான தணிக்கை முறைகளை பயன்படுத்து வதுண்டு. ஜனநாயக நாடுகளில் கூட சில நெருக்கடியான நிலைமைகளில் அரசியல் ரீதியான கட்டுப்பாடுகள் கண்காணிப்புக்கள் ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் என்பன கலைத்திட்டம் தொடர்பாக கையாளப் படுவதுண்டு. இலங்கையில் *1972, 1982, 1997* காலப் பகுதிகளில் எல்லாம் அரசியல் மாற்றங் களுக்கு ஏற்றதாகவே கலைத்திட்டங்கள் மாற்றி அமைக்கப்பட்டன.

**சர்வதேச ரீதியான அரசியல் மாற்றங்கள்.**

சர்வதேச ரீதியிலான அமைப்பாக (U.N.O) விளங்குகின்றது இந்நிறுவனம் பற்றியும் அதன் இணைநிறுவனங்கள் பற்றியும் நிறுவன மாற்றங்களும் கொள்கைகளும் பாடங்களில் உள்ளடக்கப்படுவதுண்டு. இவை பற்றியும் கலைத்திட்ட வடிவமைப்பாளர்கள் கவனம் செலுத்துகின்றனர்.

**சமய எண்ணக்கருக்கள்.**

கலைத்திட்ட வடிவமைப்பில் சமய எண்ணக்கருக்கள். சுதந்திரத்திற்கு முன்னிருந்தே முதன்மை பெற்றுள்ளன. இலங்கையில் 11ம் வகுப்பு வரை சமய பாடம் பிரதான பாடமாக உள்ளது. இலங்கையரின் சமூக வாழ்வில் சமயமானது செல்வாக்கு கொண்டுள்ளது. இதன்படி பாடசாலைகளில் சமய பாடம் கற்பிக்கப்படுவதோடு இணை கலைத்திட்ட செயற்பாடாக சமய விழாக்களும் அங்கீகரிக்கப் பட்டுள்ளன. சமய நிறுவன்ங்கள், சமய விழுமியங்கள் கலைத்திட்டத்தில் பெரு மளவில் இடம் பெறுகின்றன. சில நாடுகளில் இவை கலைத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படு வதில்லை. சமய பாட முக்கியத்துவம் படிப் படியாக கலைத்திட்டத்தில் அதிகரித்துச் சென்றுள்ளது இதனைக் கருத்தில் கொண்டு கலைத்திட்டம் வடிவமைக்கப் படுகின்றது.

**சமூக நிலையும், விழுமியங்களும்.**

பாடசாலை, சமூகக் கட்டமைப்பு, சமூக வசதிகள் பிள்ளைகளுக்கான வாய்ப்புக்கள் தொடர்பாக ஒரே மாதிரியான கலைத்திட்ட நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை. வசதி குறைந்த கிராமியப் பிள்ளைகளுக்கு பலவீனமான கலைத்திட்டங்களும், றோயல் கல்லூரி, விசாகா கல்லூரி போன்ற மிகப் பெரிய நகர்ப்புற பாடசாலைக் கலைத்திட்டம் மிகவும் வேறு பட்டிருந்தன. இரண்டாம் மொழி English, தொழில்நுட்பப் பாடம், கணணிக்கல்வி இணைக் கலைத்திட்டம் தொடர்பான ஏற்றத்தாழ்வுகள் கலைத்திட்டத்தில் காணப்படுகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு கலைத்திட்டம் வடிவமைக்கப் படுகின்றது.

**கல்விச் சீர்திருத்தங்கள் (Educational Reforms)**

இலங்கைக் கலைத்திட்ட செல்நெறிகளை தீர்மானிப்பதில் கல்விச் சீர்திருத்தங்கள் முக்கியமானவை. ஒவ்வொரு காலப்பகுதியிலும் அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்படுகின்ற கல்விச் சீர்திருத்தங்கள் கலைத்திட்டத்தை மாற்றியுள்ளன. *1960லும் 1970ன்* பின்பும் குறிப்பாக *1990லும்* கொண்டுவரப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் மிகப் பெரிய மாற்றங்களை கலைத்திட்டத்தில் ஏற்படுத்தின. அடிப்படை யான மாற்றங்கள் இல்லாத போதும் பயன்பாட்டு அடிப்படையில் கலைத்திட்டம் மாற்றப் படுள்ளன.

**கல்விச் சிந்தனைகள்.**

பாடசாலைக் கலைத்திட்டங்களை வடிவமைக்கும் போதும், நடைமுறைப்படுத்தும் போதும் பல்வேறு உயரிய கல்விச் சிந்தனைகள் பின்பற்றப்படுகின்றன. பிளேற்றோ, ருஸோ, ஜோன்டூயி, மகாத்மா காந்தி, போன்றோரின் கல்விச் சிந்தனைகள் கலைத்திட்டத்தில் அதிக மாற்றங்களை ஏற்படுத்தின. அண்மைக் காலங்களில் கலைத்திட்டங்களில் அறிவை விடவும் தேர்ச்சி, அல்லது திறன்கள் முக்கியமாகி யுள்ளன. தொழில் துறைகளில் பிரயோகிப் பதற்கான மொழி மற்றும் தொழிநுட்ப ஆற்றல்கள் என்பன அவசியமானவையாகக் கருதப்பட்டன. பன்மொழி ஆற்றலும் புத்தாக்க சிந்தனைகளும் கலைத்திட்டத்தில் வலியுறுத்தப்படுகின்றன.

**விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி**

கலைத்திட்ட வடிவமைப்பிலும் நவீன மயப்படுத்தலிலும் விஞ்ஞான தொழிநுட்ப காரணிகள் அதிக செல்வாக்குச் செலுத்தியுள்ளன. பாட உள்ளடக்கம், வகுப்பறை ஒழுங்கமைப்பு கற்றல், கற்பித்தல் உள்ளீடுகள் கற்றல், கற்பித்தல் முறை போன்ற பலவற்றிலும் விஞ்ஞான தொழிநுட்ப வளர்ச்சி அதிகம் செல்வாக்குச்

செலுத்தி வருகின்றது. காலங்களை மீதப்படுத்தல், விரயங்களைக் குறைத்தல் தொடர்பாக விஞ்ஞான தொழிநுட்ப முன்னேற்றங்கள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. கற்றலையும், கற்பித்தலையும் பொறிமுறைப்படுத்தல் என்பது துரிதமாக இடம் பெற்று வருகின்றது. இன்றைய வகுப்பறையில் இணையத்தள வசதிகள் மின்னியல் கற்பித்தல் பயன்படுத்தப்படுகின்றது எனவே இதனைக் கருத்தில் கொண்டு கலைத்திட்டம் வடிவமைக்கப்படுகின்றது.

**கலைத்திட்ட அபிவிருத்தியும், அதன் வகைகளும்.**

ஒரு மனிதனிடம் அடங்கிக் கிடக்கும் உள்ளார்ந் ஆற்றல்களை வெளிக் கொணர்ந்து உடல், ஒழுக்கம், அறிவு, ஆன்மா ஆகியவற்றிலே பூரண விருத்தியை ஏற்படுத்துகின்ற கல்வியே மனித இனத்திற்கு எக்காலமும் தேவையாக உள்ளது.

**கலைத்திட்டம்.என்பது**

- ☆ உலகம் பற்றிய பூரண அறிவைப் பெறல்.
- ☆ சிறந்த குடிமகனாக்குதல்.
- ☆ தன்னளவிலே திறமையும், தன்னம்பிக்கையும் உடையவனாதல்.
- ☆ கூட்டுறவு மனப்பாங்கு.
- ☆ நல்லொழுக்கம்.
- ☆ ஏற்படும் தடங்கல்களை அச்சமின்றி எதிர் கொண்டு பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளும் சக்தி.
- ☆ நவ உலகில் தன்னைப் பொருத்திக் கொள்ளுதல்.

அவர்களுக்கு கல்வி எனும் பயிற்சியை வழங்க நாம் எல்லோரும் விரும்புகின்றோம். இத்தகைய பெறுபேறுகளை மாணவர்களிடையே ஏற்படுத்தும் கல்வியை எவ்வாறு வகுத்து திட்டமிட்டு எந்தளவிற்குக் கற்பிக்கலாம் அறிவியல், உளவியல் அடிப்படையிலே கல்வி உளவியல் சிந்தனையாளர்கள் காட்டிய ஒழுங்கு முறையே கலைத்திட்டம். ஆகும்

**கலைத்திட்டக் கொள்கையின் வளர்ச்சி.**

கலைத்திட்டத்தினை செழுமை செய்ய உதவிய தத்துவஞானிகள் பிளேட்டோ, அரிஸ்ரோட்டில், புரட்கரஸ் கானப்படுகின்றனர் இக்கலைத்திட்டம் அரசியல்மாற்றம், பொருளாதார மாற்றம், சமூக மாற்றம், கலாச்சார மாற்றங்களை உள்வாங்கியயே கலைத்திட்டம் உருவானது.

யதார்த்த நிலையுணர்ந்து கலைத்திட்டம் வடிவமைக்கப்பட வேண்டும். எனக்கூறிய கல்வியியலாளர்கள் கொமினியஸ், ரூஸோ, புரொபல், ஸ்பென்சர், மோண்டசறி, மகாத்மா காந்தி, ஜோன் டூஜி இவர்கள் கலைத்திட்டம் மாணவர்களை மையமாகக் கொண்டு உருவாக்கப் படவேண்டும் எனக் கருதினர்.

**புதியதொரு கலைத்திட்ட நோக்கு.**

1. கலைத்திட்டம் தயாரிக்கும் முறை.
2. கலைத்திட்டம் யாருக்காக தயாரிக்கப் படுகின்றது.
3. தேர்ச்சி வடிவில் காட்டுதல் வேண்டும்.
4. தேர்ச்சி மட்டங்களை இனங்காணுதல்.
5. பாடவிடயங்கள், தலைப்புக்கள், உப தலைப்புக் களாக வரிசைப்படுத்தல்.
6. Eclectic Methods (தேர்ச்சியை அடைவதற்கான முறைகள்)
7. விடய உள்ளடக்கம்.
8. விடய உள்ளடக்கத்தை மாணவர்களிடம் கொண்டு செல்லத்தக்க பல்வேறு முறைகள்.
9. தேவையான காலம்.
10. ஏனைய வளங்கள்.
11. கற்பித்தல் தர உள்ளீடுகள்.
12. கணிப்பீட்டு நியதிகள். (land marks)

புதிய கலைத்திட்ட தத்துவமும், அதற்கு அடிப்படையாக அமையும் காரணிகளும்.
கல்வியின் 6 தூண்களை நிறைவேற்றக்கூடியதாக கலைத்திட்டம் வடிவமைக்க வேண்டும்

| நாம் இன்று இருக்கும் இடம் யாது?<br>Where we are? | நாம் இன்று இருக்க வேண்டிய இடம் யாது?<br>Where we want to be? |
|---|---|
| 1. அறிந்துள்ளவற்றைக் கற்றல். | 4. அறிந்துள்ளவற்றைக் மாற்றி அமைத்தல். |
| 2. முன்கூட்டியே தீர்மானிக்கப் பட்டவற்றைக் கற்றல். | 5. இதுவரை தீர்மானிக்கப்படா தவற்றைத் தேடல். |
| 3. ஏற்கனவே காணப்படுபவற்றை கட்டியெழுப்புதல். | 6. எதிர்காலத்திற்கு தேவை யானவற்றைக் கட்டியெழுப்புதல். |

"வந்த பின் செயற்படும் அணுகுமுறை." (reactive approach) யாதேனுமொன்று நிகழ்ந்ததன் பின்னர் அது பற்றித் துலக்குவதே "வந்த பின் செயற்படும் அணுகுமுறை." உ+ம் குண்டு வெடித்ததன் பின்னர் குண்டு அந்த இடத்திற்கு கொண்டு வரப்பட்ட முறை, கொண்டுவந்தோர், இழப்புக்கள் அறியப்படும் முறையாகும். "வருமுன் செயற்படும் அணுகுமுறை." (Proactive approach) எதிர் கால ஏற்ற வகையில் எம்மைத் தயார் செய்தல். தேடலை முனைப்பாக் கொண்டு கல்வி நடைமுறைப்படுத்தப் பட்டிருப்பின் இன்று நிகழ்பவற்றை நாம் பல வருடங்களுக்கு முன்னர் இனங்கண்டிருக்கலாம்.

உ+ம். குண்டு வெடிப்பு நிகழலாம் என நினைத்து வெடி குண்டை இனங்காணக் கூடிய உபகரணங் களை உற்பத்தி செய்திருக்கலாம்.

கலைத்திட்டம் தொடர்பாக எழுதப் பட்டுள்ள பல்வேறு நூல்களில் கலைத்திட்டம் என்பது யாது? என விளக்குவதற்கான பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. என ஏற்கனவே அறிந்தோம். அவற்றுள் சில வரைவிலக் கணங்களை தெரிவு செய் ஆராய்வதன் மூலம் தற்கால கல்வி செயன்முறையில் "கலைத்திட்டம்" எனும் பதம் பயன்படுத்தப்படும் விதத்தையும் அதனால் கருதப்படுகின்ற விடயங்களையும் விளங்கிக் கொள்ள முடியும் என்பதில் ஐயமில்லை. வேர்விக் எனவபரது வரைவிலக்கணப்படி கலைத்திட்டத்தை திட்டமிடும் போது

1. மாணவரது உளவியல் தேவைகள்.
2. தற்கால பண்பாட்டுப் போக்குகள்.
3. வசமுள்ள வளங்கள்.

ஆகிய அம்சங்கள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியதன் முக்கியத்துவம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. யாதேனும் கலைத் திட்டத்தை திட்டமிடும் போது அதனைக் குறித்த பாடசாலைக்கு பொருத்தமானவாறும் மாணவர் களுக்கு பொருந்தக் கூடியவாறும் திட்டமிட்டுக் கொள்ள வேண்டியது அவசியம் என ஸேலர் அலெக்ஸ்சாண்டர் வலியுறுத்தியுள்ளார். கலைத் திட்டம் ஒன்றை தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய அடிப்படையான நான்கு வினாக்கள் உள்ளன என டயிலர் எடுத்துக் காட்டி உள்ளார்.

1. பாடசாலையினால் அடைய வேண்டுமென எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் யாவை?
2. அந் நோக்கங்களை அடைவதற்காக வழங்கப் படக் கூடிய கல்வி சார் அனுபவங்கள் யாவை?
3. அக் கல்வி சார் அனுபவங்களைப் பயனுடைய வாறு எவ்வாறு ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம்?
4. எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் எந்த அளவிற்கு அடையப்பட்டுள்ளன என எவ்வாறு தீர்மானிக்கலாம்?

ஆகிய வினாக்கள் டயிலரினால் முன் வைக்கப்பட்டுள்ளன. மேற்படி நான்கு வினாக்கள் மூலம் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்களை மேலும் இலகுபடுத்தி பின்வருமாறு ஆரம்பிக் கலாம்.

1. இலக்குகளும், நோக்கங்களும்
2. உள்ளடக்கம்.
3. ஒழுங்கமைப்பு.
4. மதிப்பீடு.

எனக் காட்டலாம். இங்கு அம்சங்களுக் கிடையே நேர்கோட்டுத் தொடர்பு காணப் படுகின்றது. ஒரு கலைத்திட்டத்தின் முக்கியமான அம்சங்களாக இவற்றைக் கருதலாம்.

இன்று உலகலாவிய ரீதியில் அறிவு, பொருளாதார வளர்ச்சி நவீன தகவல் விஞ்ஞான தொழில் நுட்ப விருத்தி முகாமைத்துவ அபிவிருத்தி என்பவை விரைவாக ஏற்பட்டு வருகின்றன இவற்றைக் கருத்தில் கொண்டு குறித்த நாட்டின் கலைத்திட்டத்தை விருத்தியாக்கு வதற்கான நிபுனத்துவ கருத்தியல்களும் ஆய்வு களும் மேலும் விருத்தியாகி வருகின்றன. இவ்வகையில் மாணவர்களுக்கு சிறந்த தேர்ச்சியை வழங்க எமது நாட்டின் கலைத்திட்டத்தை மேலும் விருத்தி ஆக்க வேண்டியுள்ளது

# வாழ்க்கைப் பயணத்தில் செபத்தின் முக்கியத்துவம்

அருட்சகோதரி. மேரி அனிஸ்ரில்லா
2ம் வருடம், கிறிஸ்தவதுறை.

**செ**பம் இது இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ளஉறவுப் பாலத்தை எடுத்துக் காட்டுக்கின்றது. செபம் இல்லாத வாழ்வு இருண்ட வாழ்வு ஆகவே எம் வாழ்க்கைப் பயணத்தில் துணையாக இருப்பது செபம் ஆகும்

மனித வரலாற்றின் ஆரம்பத்திலிருந்து செபம் முக்கியம் பெறுகின்றது. செப வரலாறு என்று நோக்கும் போது எல்லா நாடுகளிலும் பண்பாடுகளிலும் இருந்து வருகின்றது. இதனால் இவ்வுலகம் பல மகான்களையும் புனிதர்களையும் ஆன்மீக குருக்களையும் பெற்றுள்ளது. எனவே செபத்தின் வல்லமை பலருடைய வாழ்க்கை பயணத்தில் ஏராளமான நன்மைத்தனங்களைப் பெற்றுக்கொடுத்து உள்ளது.

செபம் என்பது.........................
செபம் என்பது ஒரு தேடல்.
செபம் என்பது காத்திருத்தல்.
செபம் என்றால் புகழ்தல்.
செபம் என்றால் நன்றி நவிலல்.
செபம் என்பது வேண்டுதல்.
செபம் என்பது வெறுமையாதல்.
செபம் என்பது உணர்வுடமை.
செபம் என்பது உறவுடமை.
செபம் என்பது பணிவுடமை.
செபம் என்பது மகிழ்வுடைமை.
செபம் என்பது அன்புடமை.
செபம் என்பது இறைமயம்

இவ்வாறாக நாம் செபத்திற்கு வரைவிலக் கணம் கூறிக் கொண்டே போகலாம்.

எம் வாழ்க்கைப் பயணத்தில் எந்தவொரு கட்டத்திலும் செபத்தை முக்கியப்படுத்தும் போது இறைதுணை நம் மத்தியில் இருக்கின்றது. சிறு வயதில் பெற்றோர் பெரியோரிடம் இருந்து பெற்றுக்கொண்ட இறை அனபவத்தை இன்றைய வாழ்க்கை பயணத்தில் அனுபவிக்கின்றோம். இவை அனைத்திற்கும் முதன்மையாக இருப்பது செபம்.

வாழ்க்கையிலே பலவிதமான துன்பங்கள் நேரிடுகின்ற போது செபம் தேவைப்படுகின்றது. பலராலும் புறக்கணிக்கப்பட்டு உள்ளத்தில் வெம்பிப் போனவர்கள் பலர் வெம்பிய மாங்காய் என்று சொல்வார்களே இப்படிப்பட்ட வெம்பிய உள்ளத்துக்கு ஆறுதல் அளிக்கக் கூடிய செபம்.

சில பெற்றோர் தம் பிள்ளைகளை வளர்த்து நல்ல நிலையில் விட்டுள்ளனர். ஆனால் பிள்ளைகள் பெற்றோரை அனாதரவாக விட்டு வாழ்கின்றனர் இவர்களை காத்து ஆறுதல் படுத்துவது செபம்.

எனக்கென்று யாருமில்லை என்ற மன நிலை யோடு வாழும் எத்தனையோ நோயாளர்கள் மத்தியில் நிலைத்திருப்பது செபம். இன்று அகோர மான உறவுப்பிரிவினாலும் உடல் பிரிவினாலும் மன உளைச்சலில் வாழும் ஒவ்வொரு மக்கள் மத்தியில் துணை நிற்பது செபம்.

பெற்றோரின் அன்பின்றி அனாதைகளாக வாழும் ஒவ்வொரு பிள்ளைகளையும் ஆறுதல் படுத்தி நம்பிக்கை ஊட்டுவது செபம். இது தவிர பாவத்தின் சுமையால் பல்லாயிரம் பேர் தகாத செயல்கள் உறவுகளினால் வாழ்க்கை என்பது என்ன என்பதை அறிவது ஏமாற்றத்தில் வாழும் மக்களுக்கு கைகொடுப்பது செபம்.

இவ்வாறு பல பிரச்சனைகளில் மூழ்கி வாழ்பவர்கள் மத்தியில் நம்பிக்கையும் வெளிச்சமு மாய் வாழ்க்கைப்பயணத்தில் துணை நிற்பது செபமே ஆகும்.

எனவே ஆண்டவரை நாடுவதற்கும் அவரை நோக்கிக் கரம் விரிப்பதற்கும் சலிப்படையக்கூடாது சலிப்பின்றி இறைவனை நோக்கி வேண்டும் போது எம் இதயத்தில் ஆறுதல் கிடைக்கும். எம் சிந்தனைக்கு எட்டாத விதத்தில் இறைவனின் கருணையை அனுபவிப்போம்.

"துன்ப நாளில் நான் ஆண்டவரை நாடுவேன்"
*(தி. பா. 46 : 1)*

ஆண்டவர் எந்த வேளையிலும் எந்த துன்பத்திலும் நம்பிக்கையோடு வேண்டு வோரைக் கைவிடுவதில்லை. எனவே இறை அனுபவத்தை செபத்தினூடாக வாழ்க்கையில் அனுபவிக்கும் நாம் இறை அன்பை நாடி அவர் பணி தொடர்வோம்.

இறுதியாக செபத்தின் முக்கியத்துவமானது
நம்பிக்கை, கிறிஸ்து எவ்வாறு செபிக்கக் கற்றுக்கொடுத்தாரோ அந்த கற்றலை நாமும் கடைப்பிடித்து வாழ முயற்சிப்போம். அன்னை மரியாள் காட்டிய அன்புப் பாதையில் வழி நடந்து எம் வாழ்க்கைப் பயணத்தை ஒளிமயமாக்க செபத்தால் அனைத்தையும் வென்றிடுவோம்.

# எல்லோருக்குமான கல்வியின் இலட்சியம் உட்படுத்தல் கல்வி
## Inclusive Education

பாலசுப்பிரமணியம் தனபாலன்
விரிவுரை இணைப்பாளர்,
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.



உலகிலுள்ள அனைத்துச் சமூகத்தினருக்கும் மற்றும் எல்லோருக்கும் கல்வியை உறுதிப் படுத்துவதற்கு சர்வதேச பங்களிப்பைக் குறிக்கும் வகையில் 1990 ஆம் ஆண்டு "ஜோம்தியன் பிரகடனத்த (Jomtien Declaration) எல்லோருக்குமான கல்வி இலக்குகள் உருவாக்கப்பட்டன. இப்பங்களிப்பானது 2000 ஆம் ஆண்டு செனகல் நாட்டின் டாகர் என்னுமிடத்தில் டாகர் செயல் சட்டம் (Dakar frame work of action) என்பதுடன் மீளவும் உறுதி செய்யப்பட்டது. இதன் படி எல்லோருக்குமான கல்வி இலக்கு பின்வரும் மூன்று தேர்ச்சிகளை வரையறை செய்தது. அவை மனிதர்கள் வாழ்வதற்கும், தமது முழு இயலுமையை விருத்தி செய்வதற்கும் தமது வாழ்க்கைத்ததரத்தை மேம்படுத்திக் கொள்வதற்குமானவையாகும். கற்பதற்காகக் கற்றல் (Learning to Learn) என்ற தேர்ச்சியினூடாக பின்வரும் விடயங்களை எல்லோருக்குமான கல்வி எடுத்தியம்புகின்றது.

- வாழ வேண்டுமானால் கற்க வேண்டு. வாழ் நாள் முழுவதற்குமான செயலாகக் கற்றல் விளங்க வேண்டும்.
- கற்றுக் கொண்ட விடயங்களை பயன் பாடடைய செயன்முறை ரீதியான சமூக ரீதியான கல்வி அவசியம்.
- மனித விருத்தியுடனும், மேம்பாடுகளுடனும் ஒன்றிணைந்ததாகக் கற்றல் இருப்பதுடன் அனுபவமும் - அனுபவித்தலாகவும் இருக்க வேண்டும்.


வாழ்க்கைச் செயற்பாடுகளுடன் கற்றலை இணைத்தல் மூலம் உடன் துலங்கல் (Impulsivity) உள்வாங்கித் தெறித்தல் (Reflectivity) ஆகிய வெளியீடுகள் ஏற்பட வேண்டும்.

மனித வாழ்க்கை முழுவதும் கற்பதற்குக் கற்றுக் கொள்ளல் செயன் முறை சுய கற்றலாக விருத்தியடைய வேண்டும். ஆனால் எமது நாடுகளில் பலருடைய கல்வி இடைநடுவில் நின்று விடுகின்றது. இது எவ்வாறு கற்க வேண்டும் என்பதைக் கற்க சந்தர்ப்பம் வழங்காது விட்டமையின் விளைவே ஆகும். இதற்குப் பல காரணங்கள் காணப்படுகின்றன.

1. குடும்பப்பின்னணி - வறுமை, பருவகால உழைப்புக்குச் செல்லல், பெற்றார் விழிப் புணர்வின்மை, குடும்பப்பிளவுகள், நோய், அங்கவீனம்,விசேட தேவைகள், பட்டினி, பாதுகாப்பின்மை.
2. பாடசாலைப் பின்னணி - பரீட்சை அச்சுறுத் தல் பயம், பிள்ளையின் தேவையை அறியாத கவர்ச்சியற்ற கற்பித்தல், பொருத்தமற்ற தண்டனைகள் பௌதீக - ஆசிரியர் வளம் போதாமை அனுமதிப் பிரச்சினைகள்
3. கலைத்திட்டக் குறைபாடுகள் :- பரீட்சை இலகு கல்வி, கல்விக்கும் வேலை உலகிற்கும் தொடர்பின்மை, சுய ஆளுமை விருத்திக்கு முழுமைதராத கல்வி முறை தொழில் நுட்பக் கல்வி வசதிகளின்மை, பொதுப்பரீட்சைகளில் குறைந்த அடைவு மட்டம்.
4. நாட்டு நிலமைகள் :- யுத்த தாக்கங்கள்

பாதுகாப்புப்பற்றிய உளநெருக்கடி சமூக கலாசாரச்சீர்கேடுகள், பொருத்தமில்லா அரசியல் பொருளாதாரக் கொள்கைகள்.

இவ்வாறான காரணங்களால் அங்கவீனப் பிள்ளைகள், தொழில்புரியும் பிள்ளைகள் தெரு வோரச்சிறார்கள் கற்றலில் இடர்பாடுடையவர் கள் மிகவறிய பிள்ளைகள் பின்தங்கிய பிரதேசங் களைச் சார்ந்தோர், மொழி - இன - பண்பாட்டு ரீதியாக சிறுபான்மையினர். HIV தொற்றுடை யோர் இடம்பெயர்ந்தோர் இடைவிலகியோர் ஆகியவர்கள் கல்வியைப் பெறுவதற்கான உரிமையைத் தவற விட்டவர் களாகக் காணப் படுகின்றார்கள்.




**உட்படுத்தல் கல்வி :-**

மேற்குறிப்பிட்ட காரணங்களினால் கற்றலில் பங்குபற்றாமையை நீக்கி அனைவரையும் பாடசாலையில் உட்படுத்துவதுடன் மட்டுமன்றி சம அடிப்படையில் கற்றல் - கற்பித்தல் செயல் ஒழுங்கிலும் அவர்களை உட்படுத்தலே உட்படுத்தல் கல்வியின் வரைவிலக்கணமாக உள்ளது. இது எல்லோருக்கும் கல்வியை வழங்கு வதையும் சகல பிள்ளைகளினதும் தனியாள் வேறுபாடுகள் அல்லது பண்புகளைக் கருத்தில் கொள்ளாமல் பாடசாலையில் சமமாக உட்படுத் தலைக் குறிக்கின்றது. இதனை உள்ளடக்கல் எனவும் கூறுகின்றனர். தனது செயற்படுதன்மை சகல மாணவர்களதும் அவர்களது சுய இருப் பிடத்தில் தரமாக கல்வியைப் (Quality Education) பெறுவதற்கான உரிமையை வழங்குவதாக உள்ளது. மாணவர்களது பல்வகைப்பிரச்சினைகள் தன்மைகளுக்கு ஏற்ப பாடசாலை துலங்கி தனது பண்பாடு கொள்கைகள் நடைமுறைகளைச் சீரமைத்து அனைவரையும் சம உரிமையுடன் பாடசாலைக் கல்வியில் உட்படுத்தல் என்ற இலக்கு கொண்டுள்ளது. இதன் இலட்சியத் தன்மை சகல பிள்ளைகளும் தனியார் வேறு பாடுகள் அல்லது பண்புகளைக் கருத்தில் கொள்ளாமல் பாடசாலையில் உள்ளடக்கப்படல் என்பதாகும். அத்துடன் விசேட கல்வி தேவைப் படும் பிள்ளைகளை அவர்களுக்குத் தனியான பாடசாலை என இல்லாமல் அவர்களையும் சமூகமயமாக்கி சாதாரண பாடசாலைகளில் பயில வைக்கும் அதி உயர் செயற்பாடாகவும் உட்படுத்தல் கல்வி உள்ளது.

சர்வதேச சூழலமைவில் உட்படுத்தல் கல்வி தொடர்பான செயலாற்றுகைகள் முதன்மை நிலையிலுள்ளன. பாடசாலையில் சகல பிள்ளை களும் சேர்க்கப்படுவதுடன் மட்டுமன்றி முழுமை யான பங்குபற்றல் - அடைவினை உறுதி செய்து கல்விக்கான தடைகளை இனம் கண்டு நீக்குதல், மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளை புரிந்து கற்பிப்பதற்கான விசேட செயலாற்றுகைகளைப் பிரயோகிக்கும் அதி நவீன கற்றல் - கற்பித்தல் தந்திரோபாயமாகவும் உட்படுத்தல் கல்வி எண்ணக்கரு விரிவடைந்துள்ளது. அத்துடன் கற்றல் - கற்பித்தலின் தர மேம்பாட்டிற்கான தற்போதைய செயல் ஒழுங்கொன்றின் ஊடாக சகல கற்போரது தேவைகளையும் நிறைவேற்ற நோக்காயிருத்தல். இவ் உட்படுத்தல் கல்வியானது இன்று முன்பள்ளி ஆரம்பக்கல்வி இடைநிலைக் கல்வி, தொழில்சார்கல்வி, மூன்றாம் நிலைக்கல்வி விசேட கல்வி, முறைசாராக்கல்வி, வளர்ந்தோர் கல்வி, ஆசிரியர் கல்வி, கல்வியியலாளர் கல்வி என்பவற்றின் முதன்மை எண்ணக்கருவாகப் பரிணமித்துள்ளது.

**உட்படுத்தல் கல்விக்கான அடிப்படைகள்**

- மனித உரிமைப்பிரகடனம் (1948)
- சிறுவர் உரிமை சமவாயம் (1990)
- சலமன்கா பிரகடனம் (1994)
- புத்தாயிர விருத்தி கல்வியின் உலகப் பிரகடனம் - 1990 - ஜொம்தியன்
- கல்விப்பிரகடனம் - டகார் - 2000
- ஊனமுற்ற நபர்கள் தொடர்பான உரிமை களுக்கான ஐ.நா சமவாயம் (2006)

உட்படுத்தல் கல்வியின் முதன்மைப் பிரயோகம் பாடசாலை வகுப்பறையில் பாது காப்பை ஏற்படுத்தல். இதனூடாக ஒத்துழைக்கும் உறவு முறை ஒன்றினை உருவாக்கவும், ஊக்கங் களை வழங்கவும் கற்றலில் ஆர்வமூட்டவும், அனுபவங்களை பயன்படுத்த வேண்டும் பல் மட்டகற்பித்தல், பரிகாரக்கற்பித்தல், பல்தரக் கற்பித்தல், விசேட தேவை உத்திகளையும் முறைமைகளையும் பலபரிமாணங்களில் பிரயோகிக்க வேண்டும். வேறுபட்ட கவர்ச்சி கரமான வித்தியாசமான கற்பித்தல் முறைகளுக்கு மாணவன் எவ்வாறு துவங்கல் காட்டுகின்றான் அவன் விரும்பும் முறைகள் எவை என்பதை ஆசிரியர்கள் அறிவதன் மூலம் ஆசிரியர்கள் உட்படுத்தல் திறன்களைப் பெறமுடியும்.

**உட்படுத்தல் கல்வி ஆசிரியர் செயலாற்றுகை**

1. மாணவர்களின் அடைவுமட்டத்தினை முறைசாரா முறையில் மதிப்பீடு செய்து தேவையான சந்தர்ப்பங்களில் ஒத்துழைத்தல்
2. ஒவ்வொரு மாணவர ... தேவைப்பாடுகளை கருத்திற் கொண்டு பாடங்களைத் திட்ட மிடல்
3. மாணவர்களின் அடைவுமட்ட எல்லைக்கு பொருந்துகின்ற படிப்படியாக உயர்ந்து செல்கின்ற பொருத்தமான இலக்குகளை நிர்ணயித்தல்.
4. வகுப்பறையில் சகல மாணவர்களதும் பங்கேற்பினை உறுதிப்படுத்தும் வகையில் ஒப்படைகளை மாற்றியமைத்து நடவடிக்கைகளை திட்டமிடுதல்.
5. கற்றலினை நினைவிற்கொள்ளவும் தெளிவாக கிரகித்து கொள்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கும் வகையில் கற்றல் சந்தர்ப்பங்களை திட்டமிடுதல்.
6. மாணவர்கள் பாடசாலைக்கு எடுத்து வருகின்ற அனைத்துவகையான திறமை களையும் கல்வி ரீதியாக மாத்திரமல்லாது உயர்வாகக் கருதுதல்
7. விளைவினை அனுபவிப்பதற்கு அனைத்து மாணவர்களுக்கும் நாளாந்தம் சந்தர்ப் பங்களை வழங்குவர்.
8. ஒவ்வொரு மாணவனும் தனது முழுமையான உள்ளார்ந்த ஆற்றலுக்கு அமைவாக செயற் படுகின்றனர் என்பதை உத்தரவாதப்படுத்து வது.
9. பெற்றோர்களுடன் கூட்டுறவினை விருத்தி செய்வதுடன் பிள்ளைகளின் முன்னேற்றம் பற்றி தனிப்பட்ட ரீதியில் அவர்களுடன் கலந்துரையாடுவர்.
10. அனைத்து மாணவர்களையும் சமமாக மதிப்ப துடன் அவர்களை உயர்வாகவும் கருதுவர்.
11. அனைத்து மாணவர்களும் தாம் வகுப்பறை யின் ஒரு பகுதி என தம்மைத்தாமே இனங் கண்டிருப்பதுடன் அவர்களுக்கு அவர் களின் வெற்றியினை வெளிப்படுத்துவதற்கு சமமான வாய்ப்பு காணப்படுகின்றன. என் பதனையும் உத்தரவாதப்படுத்துவர்.
12. வழமையான வரவினை கண்காணித்து அதனை உறுதிப்படுத்துவார்.
13. கற்றல் செயற்பாட்டினை ஊக்குவிப்பதற்காக உயிர்த்துடிப்பான கல்விக்கு உகந்த சூழல் ஒன்றினை பேணுவர்.
14. விசேட தேவைகள் தொடர்பான நிபுணத்துவ ஆற்றலை ஆசிரியர் பிரயோகிப்பார்.

**உட்படுத்தல், கற்றல் – நேய வகுப்பறையொன்றின் சிறப்பியல்புகள்**

- உயிரோட்டமான உற்சாகமான சூழல்
- அமர்வதில் சிறப்பான ஒழுங்குமுறை, சகல வளங்களையும் கொண்டிருத்தல்.
- பிள்ளைகள் சிந்திப்பதற்கு, கேள்வி கேட்பதற்கு, தேர்ந்தெடுப்பதற்கும் சுதந்திரம் வழங்குகின்ற ஆசிரியர் மாணவர் தொடர்புகள்
- மாணவர்களை தனிநபர்களாக மதித்து ஒழுக்கத்தினைப் பாதுகாத்தல்

- அனுபவமூலம் கற்பதற்கு சந்தர்ப்பமும் செயற்பாடுகளும் வழங்கல்.

- கற்றல் தேர்ச்சி மதிப்பீடு, வகுப்பறை மட்டத்திலான மதிப்பீடுகளின் மூலம் மாணவர் கல்வி இலக்குகளை நோக்கி வழி நடாத்தல் ஆளுமைகளை விருத்தியாக்கல்

**உட்படுத்தல் கல்விக்கான தடைகளைத் தகர்த்தல் :-**

- சம காலக்கல்வி முறையில் பல்வேறுவகையான புதிய மாற்றங்களும் இற்றைப்படுத்தல்களும் நடைமுறைக்கு வந்து கொண்டிருக்கும் போது அவை பற்றி அறியாத நிலையில் கல்விப்புலம் சார்ந்தோர் இருப்பதும் கல்வி முறைமையிலும் கொள்கைப்பிரயோகத்திலும் பல்வேறு முரண்பாடுகள் தெளிவின்மைகள் காணப்படுவதும் அதிபர் - ஆசிரியர் பற்றி சமூகம் ஊடகங்களிடையே பொருத்தமான இடைவினைகள் காணப்படாமை, புறக்கணிப்புக்களால் உட்படுத்தல் கல்வியை விரைவாக நடைமுறைப்படுத்தத் தடைகளாகவுள்ளன. இன்றும் கூட பெரும்பாலான பாடசாலைகள் பிள்ளை நேயப்பாடசாலைகளாக (Child - Friendly School) செயற்படாமை, கல்விச் சமூகத்திடம் மனப்பாங்கு விருத்தி போதாமை கற்றல் பிரச்சினைகள் பின்னடைவுகளைச் சரியாக இனம் காணாமை என்பவற்றுடன்;

- கேட்டலில் கஷ்டம், பார்வைக் கோளாறுகள், செயற்பாடு திறன்கள் அவயவங்களில் போதாமை, கை - பார்வை ஒருங்கிணைப்புப்பிரச்சினைகள் எழுதுதல், வாசித்தல், கிரகித்தல், மொழி - தொடர்பாடல் சிக்கல்கள்,
  
  விசேட தேவை உள்ளவர்களை சாதாரண வகுப்பறைக்குள் உட்படுத்தும் போது தேவையான மனித - பௌதிக - ஏனைய வசதிகள் போதாமை.

- கல்வியில் கவனம் செலுத்தமுடியாத நிலை சமூக - உள்ளார்ந்ததடைகள், மீத்திறன் பிரச்சினை கள், விசேட தேவைகள், அங்கவீனம், உடல் குறைபாடுகள்.


ஆகிய பல காரணிகள் உட்படுத்தல் கல்விப் பிரயோகத்தில் தடைகளை ஏற்படுத்துகின்றன.

இத்தனை தடைகளை நீக்கி இனி விசேட கல்வித்துறைக்கே உரித்தான பாடசாலைகளை விடுத்து எல்லாப்பாடசாலைகளிலும் இவ்வாறான மாணவர்களை உட்படுத்தி அவர்களது அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றும் பொறுப்பு இன்று பாடசாலைகளிடம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான அனசரணைகளை கல்வியமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், அரச சார்பற்ற நிறுவனங்கள் விரிவாக வழங்கத் தொடங்கியுள்ளன. என்றாலும் கூட உட்படுத்தல் கல்வி தொடர்பான விழிப்புணர்வுகள் இன்றும் போதுமானவையாக இல்லை. இதனை நீக்க கல்வித்துறை சார்ந்தவர்களது ஒருங்கிணைந்த பங்களிப்பு அவசிய தேவையாகவுள்ளது.

**உட்படுத்தல் கல்வியின் நடைமுறை**

- தற்போதைய மனப்பாங்குகள் மற்றும் விழுமியங்களைத் தகர்த்தெறிதல், சகலமட்டங்களிலும் விழிப்புணர்வையும் புரிந்துணர்வையும் விருத்தி செய்தல், ஆசிரியருக்கான ஒத்துழைப்பை வழங்குதல் பொருத்தமான கற்றல் மற்றும் பயிற்சி முறைமைகளை அளித்தல், கற்பித்தல் நடைமுறையினுள் பயிற்சி இடமாற்றத்தை உறுதிப்படுத்தல், பெருமளவான நவீன கருவிகள், வளங்கள், உபகரணங்களை வகுப்பறைக்குள் கொண்டு வருதல், நெகிழ்வான கற்போன் சிநேக சூழல் ஒன்றை விருத்தி செய்தல், பாடசாலைகள் தமது 'சுய விருத்திக்கான பொறுப்பினை வகிப்பதுடன் தொடர்ச்சியான மேம்பாட்டுக்கான ஒரு பண்பாட்டையும் விருத்தி செய்தல், சகல பாடசாலைகளுக்குமான தெளிவான நியமங்களை உருவாக்குவதுடன் அவற்றை அடைவதில் பாடசாலைகளை அனுமதிக்கும் வகையில் கருவிகளையும் ஒத்துழைப்பையும் வழங்குதல் என்ற வகையில் விரிவாக்கப்பட வேண்டும். இதற்குத் தேவையான வளங்களையும், பயிர்களையும் முன்னெடுப்பதற்குப் பல அர்ப்பணிப்புக்களை கல்வித் துறையில் நாம் மேற்கொள்ள வேண்டி இருக்கின்றது.

□□□


இயற்கையை சுத்தமாகப் பேணுவோம்.
DRT|09|08.
INTERNSHIP
ART BY:-
VINO MILDANS
J/ MANIPAY MEMORIAL ENGLISH SCHOOL.


## The Rabbit, the Weasel and the Cat

Once upon a time, a rabbit left his home for some time to eat cabbages in the nearby field. But while going, he forgot to lock the door of his house. When the rabbit was away, a weasel entered it and made it his home. When the rabbit returned, he saw the weasel's nose sticking out of his own door.

The rabbit grew very angry. He requested the weasel to come out of his house. But the weasel replied, "Since I am living in this house, it is now my house. You may look for another house, or keep on standing outside!"

A cat heard them fighting over the house. She offered to settle the quarrel for them. "Come very close to me," said the cat, " I have become deaf because of old age." The rabbit and the weasel did as they were told. In a moment, the cat grabbed both of them in her claws. They became her meal for that night. The cat had settled the quarrel for always.

**Moral :** Never trust anyone too quickly and easily.



He had all the comforts - beds to sleep and swings and tree trunks to play. Food was aplenty. But he felt lonely and got bored without work. He missed his master and the lively street shows.

So, he left the cage quietly. He found its master in tears without him. They embraced each other with joy.

**Moral :** Rolling stone gathers on moss.

**S.Siva**
Primary.

Primary - 2009



Drama & Theatre - 2009



Art - 2009



Dance - 2009



Science Tamil Medium - 2009



Maths Tamil Medium - 2009




Science English Medium - 2009



Maths English Medium - 2009



# இந்துமா மன்றம்




போஷகர் : பீடாதிபதி S.K. யோகநாதன்
காப்பாளர் : திரு M. பிரபாகரன்
தலைவர் : இ. கிருஸ்ண
செயலாளர் : S. அகல்யா
பொருளாளர் : T. ஞானகிரி

பரந்ததும், பரமானந்தம் தருவதுமான இந்து மதத்தின் வாழ்வியலை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கடந்த பத்துவருடங்களாக இந்துமா மன்றம் நடைமுறைப்படுத்திவருகின்றது. பீடாதிபதி கல்வியியலாளர்கள் முகிழ்நிலை ஆசிரியர் கல்விசாரா ஊழியர்களின் பூரண ஒத்துழைப்புடன் வித்தக விநாயகர் ஆலயத்தை மையமாக வைத்து இந்துமாமன்றம் தனது செயற்பாடுகளை ஒரு முகப்படுத்தி வருகின்றது. சிவபூமியாகிய ஈழத்திரு நாட்டில் இந்துப்பண்பாட்டின் குறியீடுகளாக எமது முகிழ்நிலை ஆசிரியர்களை உருவாக்கும் எமது பண்பாட்டுச் செயலாற்றுகைகளால் நிறைந்த பயன் கிடைத்திருக்கின்றது. நிறைந்த ஒழுக்கமும் சமய விழுமியங்களைப் பேணும் பண்புகளையும் எம் முகிழ்நிலை ஆசிரியர்கள் உள்வாங்கிச் செயலாற்று வது போற்றுதலுக்குரியதாகும்.

பொங்கல் விழா மிகச்சிறப்பாக கல்லூரி வித்தக விநாயகர் ஆலயத்தில் கொண்டாடப்பட்டது.

உலக சைவப்பேரவையின் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு சமய, சமூகப்பணிக்காக நிதி சேகரிக்கும் பணியில் முகிழ்நிலை ஆசிரியர்கள் இவ்வருடம் வழமைபோல ஈடுபட்டனர்.

சிவராத்திரி விழா கொண்டாடப்பட்டது.

நித்திய பூசையும் நைசித்திய பூசைகளாகிய விநாயகர் சதுர்த்திப்பூசைகள், வெள்ளிக்கிழ மைப் பூசைகள் வழிபாடுகள், சிறப்புப்பூசைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

நகுலேஸ்வரத்தில் திருவிழாவிலும் பாடல் பெற்ற திருத்தலமான திருக்கேதீஸ்சரத்தில் எமது கல்லூரியின் 2ஆம் திருவிழாவிலும் இந்துமா மன்றத்தினர் பீடாதிபதி, கல்வியியலாளர் களும் கலந்து சிறப்பித்தனர்.

முகிழ்நிலை ஆசிரியர்களினால் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் பூசை முடிவில் நற்சிந்தனை உரை நிகழ்த்தப்படுகின்றது. இது முகிழ்நிலை ஆசிரியர்களை மேலும் நன்நெறிப்படுத்தி ஆளுமை களை விருத்தியாக்கும் செயன் முறையாக உள்ளது.

சரஸ்வதி பூசையும் வாணி விழாவும் மிகச்சிறந்த முறையில் அனுஸ்டிக்கப்பட்டது.

இவ்வாறாக இந்துமாமன்றம் முகிழ்நிலை ஆசிரியர்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகாட்டி நிற்கின்றது.

# கிறீஸ்தவ மன்றம்



2000 ஆம் ஆண்டிலிருந்து வைகாசி மாதம் 2ம் திகதி கல்லூரியின் ஸ்தாபனத் தினமாய் இருக்கும் அதே வேளை நல்லாயன் ஆலய வழிபாட்டிற்கென அபிஷேகம் செய்யப்பட்ட நாளாகவும் இருப்பதனால் இந்நாள் கல்லூரியின் கிறீஸ்தவ முகிழ்நிலை ஆசிரியர்களால் வருடாவருடம் நன்றியுடன் சிறப்பாக நினைவு கூரப்படுகிறது. அன்று காலை சிறப்பு நன்றித்திருப்பலி அருட்பணி, சாள்ஸ் கொலின்ஸ் அவர்களால் நிறைவேற்றப்பட்டு சிற்றுண்டிகள் பரிமாறப்பட்டு மகிழ்வுடன் கொண்டாடப்பட்டது.

கிறீஸ்தவ மன்றத்தினருக்கு 2009 ம் வருடம் முக்கியம் பெற்றுக் காணப்படுகிறது. ஏனெனில் கிறீஸ்தவத்துறை கற்கை நெறி வவுனியா தேசிய கல்விக் கல்லூரியில் இருந்து யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளது. இதனால் யாழ்ப்பாணம்தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறீஸ்தவ முகிழ்நிலை ஆசிரியர் எண்ணிக்கை 73 ஆக உயர்வடைந்துள்ளது. கிறீஸ்தவ மாணவர்கள் பல்வேறு கல்விச் சுற்றுலாக்கள் களவேலைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர்.

நல்லாயன் சிற்றாலயத் திருத்த வேலைக்கென நிதி சேகரிக்கும் பணி மன்றத்தின் காப்பாளர் திருமதி. M.E.B. மரியதாசன் தலைமையில் 8 ஆம் ஆணி கிறீஸ்தவ முகிழ்நிலை ஆசிரியர்களால் ஆரம்பிக்கப் பட்டது. 2010 முற்பகுதியில் நல்லாயன் ஆலயம் அமைக்கப்பட்டு புதிய முகப்புடன் அழகுற கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது.

கிறீஸ்தவ மன்றத்தின் செயற்பாட்டில் மற்றுமோர் அங்கமாக கியூடெக் ஹரித்தாஸ் நிறுவனத்திடம் இருந்து வன்னிமாணவர்களின் கல்விக்கென நிதி உதவி பெற்றுக் கொடுக்கப்பட்டது. அருட்தந்தை சி.யோ. ஜெயக்குமார் அவர்கள் நன்றியுடன் நினைவு கூறப்பட வேண்டிய ஒருவராக கல்லூரிக்கு உதவி வழங்கினார்

இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஒன்றான ஒளி விழா நிகழ்வுகள் கிறீஸ்தவ மன்றத்தினரால் மிகச்சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு நடாத்தப்பட்டது.

தவக்கால தியானங்கள், திருப்பாடுகளின் காட்சி ஆகியவை நடாத்தப் பட்டமை கிறீஸ்தவ மன்றத்தின் மேலும் சில செயற்பாடுகளாகும்.ஆண்டு தோறும் ஒளியை நோக்கி எனும் தலைப்பில் கிறீஸ்தவ மன்றத்தினரால் சஞ்சிகை வெளியீடும் இடம் பெற்று வருகின்றது.

| | | |
|---|---|---|
| போஷகர் | : | பீடாதிபதி. S.K. யோகநாதன் |
| காப்பாளர் | : | திருமதி.மே.எ.பப்சி மரியதாசன் |
| தலைவர் | : | ஜெ. கொலின்ஸ்ரன் |
| உபதலைவர் | : | M. ஜோன்சன் மரீஸ் |
| செயலாளர் | : | செல்வி. ஏ.சோபிதா |
| உபசெயலாளர் | : | செல்வி. R. மெலானி |
| பொருளாளர் | : | செல்வி. ஏ.ஜரிஷ் நிலுஷா |
| பத்திராதிபர் | : | திரு. எஸ். திலீபன் |

# கலாச்சார மன்றம்



போசகர் : திரு. S.K. யோகநாதன்
காப்பாளர்கள் : திரு. சி. திவாகரன்
திருமதி பு. வேல்நிதி

தலைவர் : கிருஷ்ணமூர்த்தி வினோதன்
உப தலைவர் : மகாலிங்கம் தனேஸ்வரன்
செயலாளர் : சந்திரலிங்கம் சுகர்ணன்
உபசெயலாளர் : யோகராசா ஹர்சினி
பொருளாளர் : ரவீந்திரன் சுதன்ராஜ்
பத்திராதிபர் : நவரத்தினம் கோபு

## 2009

போசகர் : திரு. S.K. யோகநாதன்
காப்பாளர்கள் : திரு. சி. திவாகரன்
திருமதி. பு. வேல்நிதி
தலைவர் : மகாலிங்கம் தனேஸ்வரன்
செயலாளர் : யோகராசா ஹர்சினி
பொருளாளர் : சிவனேசராஜா வினோதரன்
பத்திராதிபர் : துரைராசா புஷ்பகாந்தன்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கலாசார மன்றமானது மன்றப்போசகரான கல்லூரியின் பீடாதிபதி உயர்திரு S.K. யோகநாதன் அவர்களின் வழிநடைாத்தலின் கீழ் கல்வியலாளர் களான திரு. S. திவாகரன், திருமதி வேல்நிதி புவனேஸ்வரி ஆகியோரை மன்றக்காப்பளர்களாகவும் கல்லூரியில் 1ஆம், 2ஆம் வருட முகிழ்நிலை ஆசிரியர்களை உறுப்பினர்களாகவும் கொண்டுள்ளது.

எமது மன்றமானது கல்லூரியின் முக்கிய விழாக்களான புதுமுக ஆசிரியமாணவர்களை வரவேற்றல், வரவேற்பு விழா ஆசிரியர் தின விழா, நினைவுப் பேருரைகள், பொங்கல் தின விழா, பிரிவுபசார விழா மற்றும் கல்லூரிக்கு வருகை தரும் சிறப்பு விருந்தினர்களை வரவேற்றல் போன்ற பல்வேறு நிகழ்வுகளை நடாத்தி வருகின்றது.

அந்த வகையில் கடந்தவருடம் சமூகநலத்துறை அமைச்சர் கௌரவ டக்ளஸ்தேவானந்தா அவர்களும், கல்வி அமைச்சர் கௌரவ சுசில்பிரேமஜெயந்த அவர்களும், பிரதிக்கல்வி அமைச்சர் கௌரவ சச்சிதானந்தன் அவர்களும் மற்றும் தேசிய கல்வி நிறுவக பணிப்பாளர் லிலானி அமரசிங்க போன்ற பெரியார்களும் கல்லூரிக்கு விஜயம் செய்தார்கள்.

எமது தமிழர் கலாச்சார பாரம்பரிய செழுமைக்கும் அபிவிருத்திக்கும் எமது மன்றம் பல்வேறு செயலாற்றுகைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. கடந்த பத்து வருடங்களாகக் கலாச்சார மன்றம் மிக உன்னதமான சேவையை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆற்றி வருகின்றது.

□□□

# English Union



| | | |
|---|---|---|
| Patron | : | Mr. S.K.Yoganathan |
| Vice Patron | : | Mr. S. Muhunthan |
| Chairman | : | Mr. M. Santhuru |
| Secretary | : | Miss. K. Kirshnashanthy |
| Treasure | : | Miss. S. Barathy |
| Editors | : | Miss. T. Priya |
| | : | Mr. S. John Paul |

**Members of our Uinon**

| | |
|---|---|
| Miss. N. Usha | Mr. T. Pusparajah |
| Miss. A. Vithusiga | Mr. S. Umakaran |
| Mr. J. Johnson | Miss. S. Karthiga |
| Miss. S. Rammieyah | Mr. S. Thushiyanthan |
| Miss. M. Jalini | Miss. S. Ananthinee |
| Miss. A. Hemaluxmy | Mr. Nithersha |
| Miss. N.M. Melani | Miss. M. Vasugi |
| Mr. J.Jeyamathan | |

I have a great pleasure in submitting the annual report of the English union for the 10 th special magazine of our college in 2010.

It's believed that our college history maintains the standard of English. This is another successful year for our English Union. The prospective teachers organized many varieties of programme. The "Life Skill programme" was initiated by our president and our English Teacher Educators. It is usually conducted in the mornings on Monday, Tuesday and Thursday which is commendable.

Our English union Programmers are conducted every Wednesday evenings

Our union has decided to conduct the following Activities in future

01) English Competitions
02) Releasing a hand written magazine
03) Releasing the audio, Video CDS
04) Organizing cultural Programmes
05) The colour ful English day.

I wish to express my sincere gratitude to our president, Teacher educators, 2 nd year, and 1 st year prospective teachers for giving their support.

I owe my sincere thanks to all those who toiled to make English union a successful one. A special word of thanks to my members and our English course for their hard work and help to uplift our union and shine forever.

Thank you very much

M. Santhuru
Chairman.

# விஞ்ஞான மன்றம்



எமது விஞ்ஞான மன்றமானது மிகவும் சிறப்பான முறையில் பல்வேறு நிகழ்வுகளை நடாத்தி வருகின்றது. அந்த வகையில் கடந்த ஆனி 2007 முதல் வைகாசி 2010 வரை எமது மன்றத்தினால் பின்வரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

பௌதிகவியல் ஆய்வு கூடத்தில் செயன்முறைச் செயற்பாடுகளுக்கான மின் இணைப்பு முடிவிடங்கள் (Power Supply) மாணவர்களால் 22.08.2008 அன்று பூர்த்தி செய்யப்பட்டது.

தாவர, விலங்கு பல்வகைமை மற்றும் இரசாயனவியல் சார் செயன்முறைத்திறன்கள் என்பவற்றை உள்ளடக்கிய இரு இறுவட்டுகள் 4.10.2010 வெளியிடப்பட்டது. இது முற்றுமுழுதாக மாணவர்களது கணனித் தொழில்நுட்ப கைவண்ணத்தின் சேர்மானமாக அமைந்தது.

மாணவர்களது வாசிப்புத்திறனையும் படைப்பாற்றல் திறனையும் விருத்திசெய்யும் கையெழுத்துச் சஞ்சிகை Focus (குவியம்) இரு மொழிமூல ஆக்கங் களுடன் படைக்கப்பட்டு 4.10.2010 வெளியிடப்பட்டது.

இடைநிலைக்கல்வி விஞ்ஞான கலைத்திட்டத் திற்கு ஏற்ற இரு களக்கற்கை செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை.

மூலிகைத்தோட்டம் தொடர்ந்து பராமரிக்கப் பட்டமை. என்பவற்றுடன்

மாதாந்த மன்ற செயற்பாடுகள் செவ்வனே மேற்கொள்ளப்பட்டன.

அடுத்து வரும் வருட காலப்பகுதியில் பின்வரும் செயற்பாடுநிறைவேற்றவுள்ளோம்.

- மூலிகைத்தோட்டத்தினை விரிவாக்கல்
- விஞ்ஞான தினத்தை அநுஷ்டித்தல்
- களக்கற்கை
- கண்காட்சி
- இறுவட்டு வெளியிடு

கட்டுரை, கவிதை, விஞ்ஞான ரீதியான துணுக்குகள் விஞ்ஞான விளக்கங்கள், குறுக்கெழுத் துப்போட்டி விண்வெளி சம்பந்தமான விடயங்களை உள்ளடக்கிய குவியம் (Focus) சஞ்சிகை வெளியிடப் படும்.

### விஞ்ஞான மன்றம் – 2008

| | |
|---|---|
| போஷகர் | : பீடாதிபதி S.K. யோகநாதன் |
| காப்பாளர் | : திருமதி C. நாகேந்திரன் |
| தலைவர் | : திரு. A. செந்தூரன் |
| உபதலைவர் | : திரு. M. தினேஷ் |
| செயலாளர் | : திரு. T. யதுர்ஷன் |
| உபசெயலாளர் | : செல்வி N. நங்கீதா |
| பொருளாளர் | : திரு. S. சசிதரன் |
| உபபொருளாளர் | : திரு. S. செல்வபரன் |
| பத்திராதிபர் | : செல்வி A. கனிமொழி |
| உபபத்திராதிபர் | : செல்வி. T. சிந்துயா |

### 2009

| | |
|---|---|
| போஷகர் | : பீடாதிபதி S.K. யோகநாதன் |
| காப்பாளர் | : திருமதி C. நாகேந்திரன் |
| தலைவர் | : திரு. M. தினேஷ் |
| செயலாளர் | : செல்வி N. சங்கீதா |
| பொருளாளர் | : திரு. S. செல்வபரன் |
| பத்திராதிபர் | : செல்வி T. சிந்துயா |

# IT Union



| | | |
|---|---|---|
| Patron | : | President Mr. S.K.Yoganathan |
| Vice Patron | : | Mr. T. Mohan |
| Chairman | : | N. Thivya |
| Secretary | : | L. Nilani |
| Vice president | : | T. Mayuran |
| Vice Secretary | : | Thinesh |
| Treasure | : | S. Priyanthy |
| Sub - Editor | : | S. Nerusia |

I am very pleased in presenting the report of the IT Union of our Jaffna National College of Education. The Union released the annual magazine 'LIT UP' (In Printed form) in September 2009 with many creative items. As usual the 'Library Week' was conducted along with the writing competition On the final day, the winners were awarded with certificates and gifts. The Union members actively participated in the 'Identity Card project' for the new comers.

Our union has planned to conduct the following activities in the future:

1. Releasing Magazine/books.
2. Conducting an exhibition
3. Organizing cultural programme,

The success of the union' s endeavor has been greatly due to the support and guidance by the president, Vice Presidents, Vice Patron and lectures. While thanking them we wish to go on with our future endeavors more successfully as well.

□□□

# உடற்கல்வி மன்றம்




போஷகர் : பீடாதிபதி. S.K. யோகநாதன்
காப்பாளர் : செல்வி கி. கந்தசாமி
: திருமதி ஜா. த[illegible]மஜீலன்

### மன்ற உறுப்பினர்கள் - 2009

தலைவர் : திரு. சுரேன்
செயலாளர் : செல்வி மஞ்சுளா
பொருளாளர் : மோகனரூபி
பத்திராதிபர் : Miss. V. உஷாளினி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முகிழ்நிலை ஆசிரியர்களின் உடல், உள சமூக விருத்தியை நோக்கமாகக் கொண்டு உடற்தகமைப் பயிற்சி, விளையாட்டு என்பன நாளாந்தச் செயற்பாடுகளாக முக்கிய இடம் பெறுகின்றது. இன்றைய தேவையை வலியுறுத்துவதாக கலைத்திட்டத்திலே அமைந்து காணப்படுகின்றது. அத்துடன் எமது மன்றம் வருடாந்தம் நடைபெறும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

கல்லூரியில் வருடா வருடம் இடம்பெற்று வருகின்ற இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் வீரசங்கிலியன் மைதானத்தில் பீடாதிபதி திரு S.K. யோகநாதன் தலைமையில் 2009 ம் ஆண்டிற்கான பிரதமவிருந்தினராக கரவெட்டி பிரதேச செயலாளர் திரு S.சத்தியசீலன் அவர்களும், 2010 ம் ஆண்டின் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி கலாச்சார விளையாட்டுத்துறை செயலாளர் திரு. இ. இளங்கோவன் அவர்களும் சிறப்பு விருந்தினராக E.S.P நாகரத்தினம் (பேரம்பலம் அன்சன்ஸ் உரிமையாளர்) அவர்களும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

இவற்றை விட சித்திரப்புத்தாண்டை முன்னிட்டு பாரம்பரிய விளையாட்டுக்கள் நடைபெற்று வருகின்றன. முகிழ்நிலை ஆசிரியர்களால் "திடம்" கையெழுத்து சஞ்சிகையும் வெளியிடப்பட்டு வருகின்றது.

அத்துடன் சாரணர் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# விசேட கல்வி மன்றம்



போஷகர் : பீடாதிபதி. S.K. யோகநாதன்
காப்பாளர் : திரு. T. சிவகுமார்
தலைவர் : திரு. சி.சிவசங்கர்
செயலாளர் : செல்வி.சி.துஷாந்தி
பொருளாளர் : செல்வி.சி.சிவரூபா

இத்துறை 2004 ம் ஆண்டு இலங்கையிலேயே முதன் முதலாகத் தமிழ் மொழிமூலமான விசேடகல்வி கற்கை நெறி எமது கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இன்றைய சமகாலக்கல்வியில் உட்படுத்தல் கல்வி விசேட கல்வி செயலாற்று கைகளுக்கு முதலிடம் வழங்கப்படுகின்றது. இவ் வகையில் விசேட கல்வி பாடநெறி எமது கல்லூரியின் பல செயலாற்றுகைகளை முன்னெடுப்பதுடன் பாடசாலைகளிலும் இத்துறையை அறிமுகம் செய்து வருகின்றது.

வெள்ளைப்பிரம்பு தினம் மற்றும் விசேட கல்வி விழிப்புணர்வு தினம் கல்லூரியில் கொண்டாடப் பட்டன. கைகடி நபீல்ட் பாடசாலையில் விசேட செயல்திட்டம் நிறைவேற்றப்பட்டது.கல்லூரியில் விசேடகல்வி செயற்பாட்டு அறை பீடாதிபதி S.K. யோகநாதன் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

பாடசாலையைப் புரிந்து கொள்ளுதல் செயற்திட்டத்தினூடாக குறித்த பாடசாலைகளில் விசேட கல்வி மாணவர்கள் மூலம் இனம் காணப்பட்டு அவர்களுக்கான வழிகாட்டல் ஆசிரியர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டன.

விசேட கல்வி வள நிலையம் உருவாக்கப் பட்டதுடன் இந் நிலையத்தை மேலும் வலுவூட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கற்பித்தல் பயிற்சிக்காகச் சென்ற முகிழ்நிலை ஆசிரியர்களைக் கொண்டு விசேட கல்வி தொடர்பான பாடசாலைகள் இனம் காணப்பட்டன. எல்லா முகிழ்நிலை ஆசிரியர்களுக்கும் இவ்விடயம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்த முடிந்தது. அத்துடன் பாடசாலை ஆசிரியர் அதிபர்களுக்கும் உட்படுத்தல் கல்வி மற்றும், விசேட கல்வி தொடர்பான புதிய விடயங்களையும் தெரிவிக்க முடிந்தது.

# Maths Union



As a part of our union activities, we conducted lots of useful activities with the guidance and valuable suggestion of our president. released Vice presidents and teacher educators.

on 7th of April 2008 the new union office bearers were selected from the 1st year maths prospective teachers of this year. Tamil medium maths course was also started in our college. So the union activities have been established.

In this way our u..ion magazine "ORBIT" was released by our honourable president Mr.S.K. Yoganathan and it was received by our course incharge Mr.K.Baskaran on the 10 th of No ember 2008.

The review of magazine was made by our English lecturer Mr. M. Pirabakaran Successfully.

On 'the following day our union opened Boards of management thoughts as the project of 2nd year Maths course. Resource centre for Maths union conducted the exhibition. Above activities were opened by our honourable president Mr.S.K. Yoganathan.

### Name of the office bearers in 2008

| | |
|---|---|
| Vice Part on of Maths union | : Mr. K.Baskaran |
| union President | : Mr. B.Aravinthan |
| union secretary | : Miss. S.Thulasighayini |
| union treasurer | : Mr. A.Subaharan |
| union Editor | : Miss. R.Geerthika |
| union Vice president | : Mr. T.Thusyanthan |
| union Vice Secretary | : Miss. R.Thenuka |
| union Vice treasurer | : Miss. V.Manchula |
| union Sub Editor | : Miss. S.Gowry |

## Maths Union -2009

Our maths union organizes many useful activities to display talents and skill of the prospective teachers with the guidance of our president, Vice presidents, and teacher educators.

On the 2nd July 2009, the new members were elected from our 1 st year prospective teachers.

On the 05th of Nov 2009, our union prepared Magazine "ORBIT" was released by our honourable President Mr. S.K. Yoganathan and it was received by our vice parton of our union Mr. K. Baskaran. It was released in print for the first time. Other activities of our union were, that released of CDS, and Conducting exhibition by Maths and Science Prospective teachers.

The CDS were :- Circle, Angles, Martix and Speed & Velocity

The review of magazine was made by our lecture Mr. K.Kishnayogan

### Name of the office mebers in 2009

| | |
|---|---|
| Vice part on of maths Union | :- Mr. K.Baskaran |
| Union President | : Mr. T. Thusyanthan |
| Union Vice President | : Mr. T.Puspakanthan |
| Union Secretary | : Miss. R.Thenuka |
| Union Vice Secretary | : Miss. S.shanthy |
| Union Editor | : Miss. S.Gowry |
| Union sub Editor | : Miss. S. Rathai |
| Union treasurer | : Miss. V.Manchula |
| Union Vice treasurer | : Mr. T.Mayooran |
| Union Members | : Mr. S.Thavakumar |
| | : Mr. M.Kopimath |
| | : Miss. s.Sangeetha |
| | : Miss. N.Yalini |
| | : Mr. K.Suresh |
| | : Mr. Y.Sajeevan |

# தமிழ் மன்றம்




எமது கல்லூரியின் தமிழ் மன்றம் கல்லூரி ஆரம்பித்ததில் இருந்து இன்று வரை மிகவும் சிறப்பாக இயங்கிவருகின்றது. 2008 ஆம் ஆண்டு செல்வி நி. நல்லையா மன்றக்காப்பளாராக இருந்து சிறந்த முறையில் மன்றச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்றார். 2009 ஆம் திருமதி. வி. நரேந்திரா, திரு. பா.பாலகணேசன் அவர்களும் மன்ற பொறுப் பாசிரியர்களாக மன்றச் செயற்பாடுகளை செவ்வனே வழிநடத்தி சென்றனர். ஒவ்வொரு திங்கட்கிழமை யிலும் தமிழ் மன்றம் ஒழுங்கு செய்யப்பட்டு கவிதை, கட்டுரை கவியரங்கம், ஆய்வு, நாடகம் மூலம் ஆசிரிய மாணவர் பலரின் படைப்பாற்றல் வெளிக் கொணரப்பட்டன. அத்துடன் மாணவரின் ஆக்கங்கள் "புலர்வு" எனும் கையெழுத்து சஞ்சிகையாக வெளிவந்தது. இதன் மற்றொரு சிறப்பம்சமாகும் 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற முத்தமிழ்விழாவின் போது "எழுந்தமிழ்" எனும் மன்ற நூல் வெளி வந்தது. இத்தகைய மன்ற செயற்பாடுகளை சிறந்தமுறையில் இயங்கவைப் பதற்காக மன்றகுழுவினர் சிறந்த முறையில் இயங்கினர். முத்தமிழ் விழாவை ஒட்டி நடைபெற்ற ஆசிரிய மாணவர்களுகிடையிலான பல்துறை திறன்களை வெளிக்கொண்டு வரும் முறையில் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம், இசை, நடனம் ஆகிய போட்டிகள் இடம் பெற்று சிறந்த ஆக்கங்களுக்கு பரிசில்கள் முத்தமிழ் விழாவின் போது வழங்கப்பட்டன. பிரதமவிருந்தினராக எமது கல்லூரியின் முன்னைநாள் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் அவர்களும் பாரியாரும் கலந்து சிறப்பித்தனர். 2009 ஆண்டு முத்தமிழ் விழா அனைவரினதும் ஒத்துழைப்புடன் மிகவும் சிறந்த முறையில் கொண்டாடப்பட்டது.

| | | |
|---|---|---|
| போஷகர் | : | பீடாதிபதி. S.K. யோகநாதன் |
| காப்பாளர் | : | திருமதி. வி. நரேந்திரா |
| | : | திரு. பா. பாலகணேசன் |
| தலைவர் | : | பா.சதிஸ் |
| உபதலைவர் | : | உ. சுஜிதரன் |
| செயலாளர் | : | செல்வி. சி. மஞ்சுளா |
| உபசெயலாளர் | : | செல்வி. இ. விஜயநிதி |
| பொருளாளர் | : | செல்வன். அ. சகிலன் |
| பத்திராதிபர் | : | செல்வி. க. கீர்த்தனா |
| உபபத்திராதிபர் | : | ச. சங்கீதா |

# ஆரம்பக்கல்வி மன்றம்



போசகர் : பீடாதிபதி. S.K. யோகநாதன்
காப்பாளர் : திருமதி. ஜெ. உதயகுமார்
தலைவர் : நா. சுந்தரேசன்
செயலாளர் : ஜெ. சாகிதா
பொருளாளர் : சி. சுகந்தன்
பத்திராதிபர் : எஸ். சசிகலா
உப தலைவர் : மா. மதுரன்

கல்லூரியின் இணைபாட விதான செயற் பாடுகளில் ஆரம்பக்கல்வி மன்றத்தின் பங்களிப்பு முக்கியமானதும், முதன்மையானது மாகும். வருடா வருடம் பல்வேறு வகையான தனித்துவமான நிகழ்வு களை நடாத்தி தனியான முத்திரையினை கல்லூரியில் இம்மன்றம் பதித்திருக்கின்றது. முகிழ்நிலை ஆசிரியர் களாகிய எமக்கு பலதரப்பட்ட தேர்ச்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கேற்ப செயற்பாடுகளை முன்னெடுத்து வருவது மன்றத்தின் தனித்துவமாகும். அந்த வகையில்

7.5.2008 - மரக்கறிகளில் உருவங்களில் உருவங்கள் செய்து காட்சிப்படுத்துதல்.
14.6.2008 - கல்விச் சுற்றுலா சென்றமை.
10.8.2008 - சஞ்சிகை வெளியீடும், செயற்பாட்டறை திறப்புவிழ்வும் நடைபெற்றமை.
14.8.2008 - புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் வெளியிடு.
3.2.2009 - செயற்றிட்ட ஆற்றுகை நிகழ்வு யா/கோப்பாய் மகாவித்தியாலய இடம் பெயந்த மாணவர் களை அபிநயப்பாடல்கள் மூலம் ஆற்றுப் படுத்தியமை.
1.02.2009 - கல்விச் சுற்றுலா சென்றமை.
3.11.2009 - ஆரம்ப அருவி கையெழுத்துச் சஞ்சிகை வெளியீடு.
3.11.2009 - கண்காட்சி - சுற்றாடல்சார் செயற்பாடுகள், பிராணிகள் உலகம், சஞ்சிகை வெளியீடு.

அத்துடன் வித்தகர் விநாயக ஆலயத்தில் பொங்கல் நிகழ்வு மேற்கொண்டமை, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி என எழுதப்பட்ட முன்வரைபு அம்மன்றத்தால் செயற்றிட்டமாக மேற்கொள்ளப்பட்டு திறந்து வைக்கப்படுவதுடன் இந்தியாவில் கலைக்கல்லூரி மாணவர்களால் கழிவுப் பொருட்களில் ஆக்கங்கள் செய்து காட்டுவதற்கு ஒழுங்குகள் மேற்கொண்டு செயற்படுத்தியமை, சிறுவர் பூங்கா புனரமைப்பு போன்றவற்றை சிறப்புற முன்னெடுத்தமை குறிப்பிடத் தக்கனவாகும்.

தொடர்ந்து இவ் வருடமும் முன்னெடுத்துச் செயற்படுத்தப்படவுள்ள செயற்பாடுகளாவன.

- கல்விச் சுற்றுலா
- சஞ்சிகை, கவிதை நூல் வெளியீடு
- பொம்மலாட்டம்
- கண்காட்சி

போன்றவற்றைத் தொடர்ந்து நடைமுறைப் படுத்தத் தீர்மானித்துள்ளோம். இம் மன்றம் சார்பான அனைத்துச் செயற்பாடுகளிற்கும் எமது கல்லூரியின் பீடாதிபதி S.K. யோகநாதன் அவர்களது உயர்ந்த ஆலோசனையும் எமது மன்றக்காப்பாளர் திருமதி. ஜெ. உதயகுமார் அவர்களது வழிகாட்டலும் இணைவு பெற்று எமது மன்றம் வெற்றி நடைபோட்டு வருகின்றது. இனிவரும் காலங்களில் இம்மன்றம் தனது செயற்பாடுகளை இறையாசியுடன் சிறப்பாக முன்னெடுக்கும்.

# நுண்கலை மன்றம்



போஷகர் :- பீடாதிபதி S.K. யோகநாதன்
காப்பாளர் :- திரு. K.R. கமலநாதன்
தலைவர் :- பா. றஜீஸ்
உப தலைவர் :- சி. உமாகரன்
செயலாளர் :- இ.கேதுசா
உப செயலாளர் :- அ. ஜெனனி
பொருளாளர் :- N. ஜெஜினோல்ட்ரோய் (2008)
சி. யாழ்வேந்தன்
பத்திரா அதிபர் :- K. கீர்த்தனா

எமது கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்களின் ஆசிரியத்துவ வகிபங்கில் அழகியல் செயலாற்றுகைத் திறன்கள் முதன்மை பெறவேண்டும் என்ற நோக்கில் நுண்கலைமன்றம் கடந்த பத்துவருடங்களாகச் செயலாற்றி வருகின்றது. மேலும் தம்மிடையே மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொண்டுவர முகிழ்நிலை ஆசிரியர்களுக்கு பல சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. எல்லாப்பாட நெறி முகிழ்நிலை ஆசிரியர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கப்படுகின்றது. தமது ஆளுமைகளை நுண் கலை மன்றத்தின் செயலாற்றுகை மூலம் முகிழ்நிலை ஆசிரியர்கள் வெளிக்காட்டி வருகின்றார்கள்.

இவ்வகையில் முகிழ்நிலை ஆசிரியர் களிடையே நாடக ஆற்றல் திறன் நடிப்புத்திறன் ஆற்றல்களை வெளிக்காட்ட வழிசெய்யும் குழந்தை அரங்க குதூகலிப்பு விழா வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டதுடன், நாடகத்தின் இலக்கியத்தின் பன்முக வெளியீடுகள் தொடர்பான உரைகளும் இடம் பெற்றன. கையெழுத்துச் சஞ்சிகையான "அழகு" வெளியிடப்பட்டது. நவராத்திரி விழாவை முன்னிட்டு சகலகலாவல்லி மாலைப் போட்டிகள், கோலப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக ஒழுங்கமைக் கப்பட்டன. கல்லூரியின் எல்லா முகிழ்நிலை ஆசிரியர்களும் இவற்றில் பங்குபற்றியமை ஒரு விசேட அம்சமாகும். நல்லூர் கந்தசாமி ஆலயத்தில் வருடம் தோறும் நடைபெறும் இசை அர்ச்சனையில் கல்விக் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்கள் பங்கு கொண்டமை போன்ற பல செயற்பாடுகள் நுண்கலை மன்றத்தால் முன்னொடுக்கப் படுகின்றன.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி யில் இருந்து வெளியேறும் அனைத்து முகிழ்நிலை ஆசிரியர்களுக்கும் மிகுந்த ஆளுமையும் - கலைத் துறை ஆற்றலும், அழகியல் நயப்பும் கொண்டவர் களாக நல்லாசிரியர்களாக பணியாற்றும் நடத்தை களை நுண்கலை மன்றச் செயலாற்றுகைகள் தொடர்ச் சியாக ஏற்படுத்தி வருகின்றன.

# SARAVANA Texs
# சரவணா
## புடவையகம்

இந்தியாவில்
இருந்து தருவிக்கப்பட்ட
பட்டுச்சாறிகள், பான்சிசாறிகள்,
கொட்டன்சாறிகள், பஞ்சாபி, பஞ்சாபித் துணிகள்
மற்றும் அனைத்து றெடிமேற் ஆடைகளையும்
பெற்றுக் கொள்ள.....!

**இல. 526, பருத்தித்துறை வீதி,**
நல்லூர் (பின்வீதி சிவன் கோயில் அருகாமை, யாழ்ப்பாணம்.

# மயூரிகா
நகைத்தொழிலகம்
# Mayoorika
Jewel Merchant
## தங்க நகை வியாபாரம்

அழகிய கலைநயம்...
எழில்பூர தொழில் வளம்...
உயர்தரம்மிகு தங்க நகைகளுக்கு...

22 கரட் தங்க நகைகள் குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

**பருத்தித்துறை வீதி,**
இருபாலைச்சந்தி.

## உரும்பிராய் ஸ்ரீசாயி கலைக்கழகம்
T.P: 021 321 0249

- ❖ வாய்ப்பாட்டு
- ❖ வயலின்
- ❖ மிருதங்கம்
- ❖ ஓர்கன்
- ❖ நடனம்

யாழ்ப்பாணத்தின் பிரபல்யமான கலைஞர்களினால் பயிற்றுவிக்கப் படுகின்றது!

ஆகிய வகுப்புக்கள், சனி, ஞாயிறு, தினங்களில் நடைபெறுகின்றன.

**பணிப்பாளர்,**
திருமதி. சிவைகுகநேசன்
உடையார் வளவு,
உரும்பிராய் - வடக்கு.

# G.S. Linganathan & Co.

T.P: 021 222 3139

சகலவிதமான பட்டுப்புடவைகள்,
ஆடைகள், சிறுவர்களுக்கான ஆடைகள்,
அனைத்திற்கும் லிங்கநாதன் அன்கோ.



No. 13-14, Grand Bazaar,
Jaffna, Sri Lanka.

# GURU PRINTERS

39/2, Adiyapatham Road, Thirunelvely.

- கணனி டிசைன்,
- ஸ்கிறீன் பிறிண்டிங்,
- ஒவ்( f )செற் பிறிண்டிங்

- Computer Designing
- Screen Printing and
- Offset Printing

குரு பிறிண்டேர்ஸ்
இல. 39/2, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

# THARAN

Photo and Digital
Video Center





T.P: 6777136184

துல்லியமான ஒளிப்பதிவுக்கு
தரன் போட்டோ
அன்ட்
வீடியோ சென்ரர்

ஆயக்கடவை வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
ஆயக்கடவை.

# பவானி ஸ்ரோர்ஸ்

இராச வீதி, நீர்வேலி. வடக்கு,
நீர்வேலி.

- சகல விதமான விவசாய உள்ளீடுகள்,
- பலசரக்குப் பொருட்கள்,
- கட்டடப் பொருட்கள்,
- இயந்திர சாதனங்கள்,
- டிராக்டர் வகைகள்

என்பனவற்றை ஒரே இடத்தில் தரமாக
பெற்றுக்கொள்ள

பவானி ஸ்ரோர்ஸ்

T.P: 021 2222312

# சிறி நதியா

## நகை மாளிகை

இல. 01, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பே. : 021 2222709

இல. 56, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பே. : 021 2226744

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 10ஆம் ஆண்டு நிறைவில் வெளிவரும்
**கலாசுரபி** மலருக்கு எமது வாழ்த்துக்கள்!

# யசோ மோட்டோஸ்

# YASO MOTORS

Sabaratnam Yasotharan
Proprietor

**Head Office:**
No. 163,
Stanly Road,
Jaffna, Sri Lanka.
Tel: 0094-021-222 2544
Fax: 0094-021-222 7566

**TVS**
ஏக விநியோகஸ்தர்

**Colombo Office:**
No. 50,
K.Cyril C. Perera MW.
Colombo 13, Sri Lanka.
Tel: 0094-011-234 7846
Fax: 0094-011-461 0488

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 10ஆம் ஆண்டு நிறைவில் வெளிவரும் கலாசுரபி மலர்
சிறப்பாக வெளிவர வாழ்த்துக்கள்!

# JAFFNA ELECTRICALS

**Dealers in Quality Electrical & Electronic Items**

**T.P: 021 222 2353**
**Fax: 021 222 4302**

JAFFNA ELECTRICALS
Dealers in Electrical & Electronic
Authorized Dealer For Abans Ltd.
No. 94(6), Stanley Road,
Jaffna, Sri Lanka.

**மின்சாதன உபகரணங்கள் அனைத்தையும் தரமாக மலிவாக ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்!**

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 10ஆம் ஆண்டு நிறைவில் வெளிவரும் கலாசுரபி மலர்
சிறப்பாக வெளிவர வாழ்த்துக்கள்!

# ஐங்கரன் வெதுப்பகம்

# INGARAN BAKERY

அதி உயர்ந்த தரத்திலான பாண், பிஸ்கட், மடத்தல் வகைகளின் உற்பத்தியாளர்கள்

உள்ளூர் உற்பத்திகளினை ஆதரியுங்கள்

## INGARAN BAKERY

Point Pedro Road, Kopay.

# Vimalas
# விமலாஸ்

- ✈ பாதணிகள்
- ✈ அழகுசாதனப் பொருட்கள்
- ✈ அன்பளிப்புப் பொருட்கள்

அனைத்தையும் ஒரே கூரையின்கீழ்
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்!

இல. 02, நவீனசந்தை,
சாவகச்சேரி.

---

## சாவகச்சேரியில்......

- ◆ குளிர்பாணம்
- ◆ சோடா வகைகள்
- ◆ சிற்றுண்டி வகைகள்
- ◆ உணவு வகைகள்

அனைத்தையும் உண்டு மகிழ.....

# செல்வம்
## கூல்பார்

இல. 07, கண்டிவீதி,
சாவகச்சேரி.

---

# NEW R.S.K.FARM

Man'ns School Lane,
Uduvil

T.P: 0213214741

புறோயிலா, கல்பெட் கோழிகள், முட்டை,
கோழிதீன், கோழிக்குஞ்சுகள்
நியாயமான தரமான விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.

நியூ. ஆர். எஸ். கே பாம்
மான்ஸ் ஸ்கூல் லேன்,
உடுவில்

---

# PAPER HOUSE

Agent for Atlas Products & Sole Agent for BOSS Products




300, Hospital Road, Jaffna
Tel: 021 2225343


BOC Infinity
Retirement Plan
Planning for a successful retirement starts here - no matter where you are. Bank of Ceylon now offers you BOC Infinity, a retirement plan to save little by little to make your life secure and comfortable.
BOC infinity
Retirement Plan
SUSTAIN YOUR LIFESTYLE
இலங்கை வங்கி
BOC
BANK OF CEYLON
தேசத்தின் வங்கியாளர்
இன்றைய மழலைச் செல்வங்களுக்கான
சிறந்த பரிசு
ரன் கெகுளு
சிறுவர் சேமிப்புக் கணக்கு
இலங்கை வங்கி
BOC
BANK OF CEYLON
தேசத்தின் வங்கியாளர்

# PC House PRIVATE LIMITED

**#1K, Stanley Road, Jaffna, Sri Lanka**

T.P : +94 21 222 4039
Fax : +94 21 222 6671
Mobile : +94 77 7555855
Website: WWW.pchouse.lk

**சகலவிதமான கணணிகளுக்கும்**
**உபகரணங்களுக்கும்**
**நாடவேண்டிய ஒரே இடம்!**

# செல்வா எலக்றிக்கல்ஸ்

# SELVAH ELECTRICALS

**மின்சாரப் பொருட்கள், எஸ்லோன் பைப் வகைகள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்**

**இல. 21. பலாலி வீதி. திருநெல்வேலி.**
**தொ. பே. 021 3218617, 021 4 9024**

**No. 21 Palaly Road, Thirunelvely**
**Tel: 021 3218617, 021 4590524**

*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கலாசுரபி மலர் 10ஆம் ஆண்டு நிறைவில்*
*சிறப்பாக வெளிவர வாழ்த்துகிறோம்!*

**பலசரக்குப் பொருட்களை மலிவாகவும், தரமாகவும் பெற்றுக்கொள்ள**

**நாட வேண்டிய ஒரே இடம்!**

# நியூ கண்ணன் ஸ்ரோர்ஸ்

## பலசரக்கு வாணிபம்

**கண்டிவீதி,** **கொடிகாமம்.**

**உரிமையாளர்:** *திரு. யோ. சஜீவன்* (யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரி)




யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கலாசுரபி மலர் 10ஆம் ஆண்டு நிறைவில்

சிறப்பாக வெளிவர வாழ்த்துகிறோம்!

# வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கம்

- நீர்வேலி

- சகலவிதமான பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள கூட்டுறவுநகர் (Co - Op City) – உரும்பிராய் சந்திக்கு அருகாமையில்.
- சகலவிதமான நுகர்ச்சித் தேவைகளுக்கும் சில்லறை விற்பனை நிலையங்கள் – நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய், ஊரெழு, அச்செழு
- சகல விதமான நுகர்ச்சித் தேவைகளுக்கும் மொத்த விற்பனை நிலையம் – அச்செழு
- சகல விதமான கட்டிடப் பொருட்களுக்கும் இரும்பு விற்பனை நிலையம் – நீர்வேலி
- சிறுவர், ஆடவர், பெண்களுக்கான துணிவகைகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் அழகுசாதனப் பொருட்களுக்கும் மாதிரி விற்பனை நிலையம் – நீர்வேலி
- வங்கிச் சேவைகளுக்கு இன்றே நாடுங்கள் – கோப்பாய், நீர்வேலி, உரும்பிராய் கிராமிய வங்கிகள்
- நிலையான வைப்புக்களுக்கு அதிக வட்டி!
- சிறுதொழில் செய்வோருக்கு சுயமுயற்சிக்கடன்!
- விவசாயிகளுக்கு உற்பத்திக்கடன் ஓய்வூதியம் பெறுவோருக்கான சேவை!

"கூட்டுறவே நாட்டுயர்வு"



SMS
yes!
yes!
இளம் தலைமுறையினரின்
கனவுகளை நனவாக்கும்
மக்கள் வங்கி
Bank Service
From:
People's Bank
PEOPLE'S BANK
சின்னச் சின்ன மழலைகளின்
வண்ண வண்ணக் கனவுகளை
எண்ணம்போல் நிஜமாக்கிடும்
மக்கள் வங்கியின்
இசுறு உதான
சேமிப்புக்கணக்கு!
Isuru Udana
சிறகடிக்கும் வண்ணத்துப் பூச்சிகளாம்
மாணவச் செல்வங்களின்
வண்ணமான எண்ணங்களை
உரமூட்டி கரம்கோத்திட
சிசு உதான
சேமிப்புக் கணக்கு!
A mother
was blessed with
a baby
Children, the future of Our nation
Sisu Udana
PEOPLE'S BANK
THE PULSE OF THE PEOPLE
Little dreams do
come true
Isuru Udana

With best Wishes

From

(Authorized Business Partner of Dialog Telecom PLC)

**BRANCHES:**
- Kandy,
- Kurunagala,
- Galle,
- Negombo,
- Anuradhapura.

**PRODUCTS:**
- Mobile Phones
- PRE PAID
- POST PAID
- HSPA
- CDMA
- DNET
- DTV

# CELL WORLD (PVT) Ltd.

## No.566A, Galle Road, Ratmalana.

T.P: 0112390160,Fax - 011- 4213451, Hot line- 0777-885885

Email: cellworld@dialsltnet

a,

ரபி

GURU Printers No. 39/2, Adiyapatham Road, Thirunelvely. Tel: 021 2228266, 077 79175 42.